
பனிப் பகல்
காஞ்சனா ஜெயதிலகர்

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : பனிப் பகல் |
| ஆசிரியர் | : காஞ்சனா ஜெயதிலகர் |
| முதல் பதிப்பு | : நவம்பர் 2004 |
| மொழி | : தமிழ் |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| தாள் | : 11.6 Kg வெள்ளைத்தாள் |
| நூலின் அளவு | : 1 X 8 கிரவுன் |
| எழுத்து | : 10 புள்ளி |
| பக்கங்கள் | : 212 |
| வெளியீடு | : அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை<br>சென்னை - 600 014. |

**விலை: ரூ. 60-00**

| | |
|---|---|
| ஒளி அச்சு | : ஸ்ரீ விக்னேஷ் கிராபிக்ஸ்,<br>சென்னை-14 9444282378 |
| அச்சிட்டோர் | : ஜீஎம். கிராபிக்ஸ்<br>சென்னை-14 |


# பனிப் பகல்

# பனிப் பகல்

## 1

அதற்கென்று ஒதுக்கப்பட்ட இடத்தில் கச்சிதமாய் நுழைந்து நின்றது அந்த மாருதி ஸென்.

வெள்ளி ரதமாய்க் குலுங்கி நின்ற அதன் கதவைத் திறக்க ஓடினார் அலுவலகக் காவலாளி.

'வணக்கம்மா!'

'வணக்கம்!' - சின்னச் சிரிப்புடன் இறங்கினாள் நிர்மலா. காவலாளிக்கு இது மிகவும் பிடித்த வேலை. அப்ஸரஸ் போன்ற முதலாளியம்மாள், அதுவும் பெருமையோ பகட்டோ காட்டாத குணவதி; ஒவ்வொரு நாளும் எளிமையாக என்றாலும் கண்களை நிறைக்கும் வகையில் விதவிதமாய் வந்து இறங்கும் நாகரீகவல்லி - அவளைக் கண்நிறையப் பார்த்தபடி, கார் கதவைத் திறந்து விடுவது சுகமான வேலைதானே.

நிர்மலா அன்று ஆகாய நீல ஆர்கண்டி கட்டியிருந்தாள். அவளது மெல்லிய உடலைச் சேலை புளுபுளுவென்று சுற்றிக் கிடந்தது. கொசுவங்கள் சீராய் இருந்தாலும் படியாத செல்லப் பிள்ளை போன்ற விரைப்புடன் நின்றன. அதே வண்ணத்தில் முக்கால் கை ரவிக்கை. காதிலும் கழுத்திலும் சன்ன கிரிஸ்டல்கள் ஜொலித்தன.

அப்பா ஆஸ்ட்ரியாவிலிருந்து அவளுக்காக வாங்கி வந்திருந்த பளபளப்பான பரிசு. ஆனால் எந்தப் பளபளப்பும் நிர்மலா சிரித்தால் அடங்கி ஒதுங்கித்தான் போக வேணும். சிரிக்கையில் அவள் பற்களும், கண்களும், கன்னமுகடுகளும் சேர்ந்து மின்னும் அழகில் வேறெதின் சால்ஜாப்பும் செல்லாது.

ஆனால் நிர்மலா இப்போதெல்லாம் அதிகம் சிரிப்பதில்லை.

புன்னகைக்கு முழுக்க பஞ்சம் வரவில்லை... ஆனால் குழந்தை போலக் குமிழிட்டுப் பொங்கும் ஆனந்தச் சிரிப்பு... இல்லவே இல்லை.

அவள் கடையின் படியேற அங்கிருந்த சிப்பந்திகள் முகமன் கூறினார்கள்.

கடையின் வலது புறத்தில் ஒடுங்க மேலேறிய படிகளில் ஏறினாள். அங்குதான் அவளது அலுவலக அறை.

வெளிர் சாம்பல் வர்ணச் சுவர்களும் கரும்சிவப்புக் கம்பளமுமாய்க் குளிரூட்டப்பட்ட அளவான அறை.

இரு சுவர்களில் எதிரும் புதிருமாய் இரு ஓவியங்கள். 'நீ அழகா இல்லை நானா?' என்ற சவாலுடன் தொங்கிக் கொண்டிருந்தன.

கீழ்த்தளத்தில் இருந்த கடை புகழ்பெற்ற 'க்ராக்கரி ஷாப்.' அதாவது அலங்கார, அத்தியாவசியப் பீங்கான், கண்ணாடிப் பொருட்களுக்கான அங்காடி. சமையலறை, சாப்பாட்டு அறைக்கான தட்டுமுட்டுகளே அங்கு பிரதானம். ஆனால் அவை பணக்காரர்கள் மட்டுமே புழங்கக் கூடிய தட்டுமுட்டுகள்!

'போன் - சைனா', 'மெலமைன்', கிறிஸ்டல்' திணுசுகளில் உருவாக்கப்பட்ட காபிக் கோப்பை, தட்டு, பாத்திரங்கள், வரவேற்பறையில் அலங்காரத்திற்காய் வைக்கக்கூடிய பூஜாடிகளும் பொம்மைகளும் ஏராளம்.



அவளது தந்தை இளைஞனாய் இத்தொழிலை ஆரம்பித்த போது வெகு விரைவில் விருத்தியடைந்தது - பிரபல்யம் கிடைத்தது.

காரணம் 35 வருடங்களுக்கு முன்பு போட்டி கம்மி. பணம் சம்பாதித்தவர்கள் அதைச் செலவழிக்கவும் கற்றுக் கொண்டிருந்த நேரம். ஆசாரமான குடும்பங்களின் வரவேற்பறையிலும் கூட குஷன் சோபாக்களும், சாப்பாட்டு அறையில் தேக்கு மர மேஜையோடு கடைந்த நாற்காலிகளும் புகுந்த சமயம்.

பல ஆயிரங்களைப் போட்டு வாங்கிய மேஜையில் வெள்ளியோடு கூடச் சில நூறுகள் மதிப்புக் கொண்ட கண்ணாடிப் பாத்திரங்களும் புழங்க வேண்டியதிருந்ததும்.

அவள் அப்பா சத்தியநாதன் வெளிநாட்டிலிருந்து சில மாதிரிகளை வரவழைத்து மும்பைக் கலைஞர்களைக்கொண்டு அதே திணுசுகளை இந்தியாவிலும் தயாரித்துத் தர, விற்பனை பிய்த்தடித்தது.

இந்த வியாபார விளையாட்டிலிருந்த வெறியில் அவர் வெகு காலம் கழித்தே திருமணம் செய்து கொண்டார். வந்தவள் இவரோடு வாழ்ந்ததும் சில காலம்தான்.

அவர்களுக்கு நிர்மலா ஒரே பெண் - ஒரே வாரிசு.

பத்து வருடங்களுக்கு முன்பு சத்தியநாதன் மகளிடம் பாதி உண்மையாகவும் மீதிக் கேலியாகவும் சலித்திருக்கிறார்.

'நீ பையனாப் பிறந்திருக்கணும் நிம்மி.'

'போங்கப்பா - எனக்கு இப்படியிருக்கத்தான் பிடிக்குது.'

'இப்படி கிளி மாதிரியிருக்கிற பொண்ணைக் கொஞ்சலாம்... ஆனா அதோடு சரி...'

'வேறென்ன செய்யணும் நானு?'

'என் வியாபாரத்தைக் கவனிக்கணும்.'

'ஓ... என்னால முடியாதாக்கும்!'

பத்து வயதுச் சிறுமியாய் வீராப்புப் பேசியதுண்டு.

'போம்மா - உனக்குக் கணக்கு சுத்தமாய் வரலை. நீ ஸ்கூல் படிப்பு முடிக்கறதே சந்தேகம்!' - கண் சிமிட்டுவார்.

'கணக்கு கொஞ்சம் தகராறுதான். அதுக்கென்ன. எல்லா சப்ஜெக்ட்டிலும் தகராறு பண்ணியும் நீங்க ஜெயிக்கலை?'

இரட்டைச் சடை ஆடப் பழிப்புக் காட்டியதுண்டு.

அப்போதே இந்த அரட்டைகளில் கலந்து மகிழ அம்மா இருக்கவில்லை... இரண்டு குறைப் பிரசவங்களில் நலிந்த உடம்பு... தேறாமலேயே நிரந்தர ஓய்வுக்காய்க் கண்களை மூடிக்கொண்டது.

இப்போது இவள் கீழேதான் இந்த அலுவலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது.

'பத்ரி, ஏதேனும் ஃபோன் வந்ததா?'

'வாணி, லெட்டர்ஸ் பிரிச்சாச்சன்னா கொண்டு வாங்க!'

வழக்கமான பேச்சு. வேலைகள் முடித்த பின் நாற்காலியில் நன்கு சரிந்தாள்.

'பாப்பா...'

சத்தமில்லாமல் கதவைத் திறந்து, அழைத்தார் தயாநிதி.

'வாங்க அங்கிள், குட் மார்னிங்.'

'குட் மார்னிங், பாப்பா.'

தொளதொளத்த கால் சட்டையும், தொய்ந்த முழுக்கைச் சட்டையுமாய்ப் பணிவுடன் நின்றார்.

அப்பா சொல்வதுண்டு.

'நம்ப ஊழியர்கள் தான் உன்னை முதல்ல 'விஷ்'. செய்யணும்டா. நிஷி. நீயேன் முந்திக்கறே?'



'அப்பா, தயாநிதி அங்கிள் வயசானவர் இல்லியா? அவருக்கு நான்தான் முதலில் 'விஷ்' பண்ணணும்.'

'இங்க வயசு பார்க்கக் கூடாதும்மா. பரிவு, பழக்கம் எல்லாம் பார்க்கத் தேவையில்லை - இது தொழில்.'

'தொழில் நல்ல முறையில் நடத்துவோமேப்பா!'

'நல்ல முறைங்கறது நிறைய லாபந்தான். மேலும் பத்துப் பேரை வேலைக்கு அமர்த்தித் தொழிலை விஸ்தரிக்கறது.'

இவள் நிர்வாகம் மேற்கொண்ட இந்த நான்கைந்து மாதங்களில் லாபம் கூடியிருக்கிறதா.....? மேலும் ஒரு எட்டு எடுத்து வைத்திருக்கிறாளா?

ம்ஹூம்... இல்லை.

அப்பா முன்பு கணித்தது போலத் தனக்குக் கணக்கு வழக்கிற்கான திறமை அத்தனை இல்லை என்பது உண்மை தானோ?

ஏதோ ஓடுகிறது.

தயாநிதி தன் முன் வைக்கும் கோப்புகளில் மேலாக விழி ஓட்டிக் கையெழுத்திடுவதோடு சரி.

ஓரளவு வியாபாரம் பிடிபட்டிருக்கிறது. ஆனால் முழுதுமாய்க் கிரகித்துக்கொண்டு ஆர்வமாய் மோதி முன்னேற முடியவில்லை.

மூளைக்குள் சதா வண்டாகக் குடையும் அந்தத் துன்ப நினைவுகள்...! அவற்றை மீறிப் புத்தி எதிலும் லயிக்கவில்லையே.

"க்ளப் இண்டியா' விற்கு இன்னைக்கு சரக்கு அனுப்பியிருக்கணுமே அங்கிள்... பார்த்திடுங்க."

கோப்புகளை மூடியபடி சொன்னாள்.

"பார்த்துட்டேம்மா. ஐந்நூறு கப் அண்ட் சாசர், முன்னூறு ப்ளேட். அவங்க முத்திரைச் சின்னம் போடப்பட்டுத் தயாராய் இருக்குது."

"பேச்சில் நடக்குதில்ல...?"

"ஆமாம்மா இன்னைக்கு லாரியில ஏத்திடுவாங்க."

"கண்டிப்பா போயிடணும். அவங்ககிட்ட ரொம்ப கெஞ்சி வாங்கின ஆர்டர் இது."

"போன முறை அவங்க ஆர்டரிலே தாமதம் நேர்ந்திடுச்சு. ஆனா அதுக்காக அவங்க இத்தனை வீம்பு பிடிச்சிருக்க வேணாம்."

"சொன்ன சமயத்துக்கு 'எம்பளம்' போட்டு அனுப்பாதது நம்ப தப்புதானே அங்கிள்."

"அந்த நீ நூறு முறை சொன்ன பிறகுதானே சமாதானமானாங்க? பப்பா இப்போ பீங்கான் வியாபாரத்தை விட முத்திரை போட்டுத் தர்றதிலேதான் இப்போ லாபம்..."

"'ஆதித்யா'விலேருந்து 'செக்' வந்திருக்கணுமே?"

"இன்னும் காணலியேம்மா. சொன்ன கெடு தாண்டாம நாம நம்ப வேலையை முடிக்கணும்னு எதிர்பார்க்கிறவங்க, பணத்தையும் கையோடு தந்தாலில்ல...?"

"பொறுத்துத்தான் போகணும்."

"ஒரு 'ரிமைண்டர்' போட்டு விடலாம்மா?"

"அவங்க நம்ப நெடுநாள் வாடிக்கையாளர் - நாசூக்காய்த்தான் போகணும். இன்னும் ரெண்டு வாரம் போகட்டும்."

"சரி..."

மனசில்லாமல் நகர்ந்தவரைப் பரிவோடு பார்த்தாள் - முதலாளி நோயில் விழுந்த பிறகு அவரது மகளுக்காக அத்தனையையும் தன் தலையின் மீது இழுத்துப் போட்டுக்கொண்டு தடுமாறும் நல்லவர்... என்று.

ஒரு மணி நேரத்திலேயே அலுவலகத்தின் ஆரம்ப கட்ட வேலைகள் முடிந்து விட்டன.



கீழே போய் விற்பனைக் கூடத்தை ஒரு சுற்றுச் சுற்றி விட்டு மறுபடி வந்தாள்.

மேஜையில் சின்ன ஃப்ளாஸ்க் நின்றது.

வாணி வைத்திருக்க வேண்டும்.

மேஜை இழுப்பறையின் உள்ளேயிருந்து ஒரு கோப்பையை எடுத்துச் சூடான காப்பியை ஊற்றிக் கொண்டாள்.

'நாதன்ஸ்' என்ற பொன் எழுத்துக்கள் வெள்ளைக் கோப்பையில் பளபளத்தன. அப்பாவின் பாதிப் பெயரே இக்கடையின் பெயரும்.

கடந்த ஐந்தாறு வருடங்களில் வியாபாரம் மங்கிவிட்டது.

போட்டிக் கடைகள் தவிர, பர்மா பஜாரிலும் வெளிநாட்டுப் பொருட்கள் குவிந்து கிடந்தனவே.

'மேட் இன் சைனா', 'மேட் இன் இங்லண்ட்' என்ற எழுத்துக்களில் மயங்கிச் சில நூறுகளைக் கூடவே போட்டு வாங்குகின்றனர் மக்கள். வியாபாரத்தை நிமிர்த்தத்தான் நாதன் பீங்கானில் எழுத்துக்களை முத்திரைகளை அச்சிடும் நிறுவனத்தை ஆரம்பித்தார்.

பிரபல ஹோட்டல்களும், நிறுவனங்களும் தங்கள் பயனுக்கான பாத்திரங்களில் தங்கள் பெயரையோ சின்னத்தையோ பொறிக்க வேண்டியிருக்க, வியாபாரம் சூடுபிடித்தது. தமிழ்நாடு போக, ஆந்திரா, கேரளா என்று பல இடங்களிலிருந்தும் ஆர்டர்கள் வந்து குவிந்தன.

நீலாங்கரையில் ஆரம்பிக்கப்பட்ட சிறு தொழிற்சாலை நிலைப்பட்டது. அதன் அருகேயே நாதன் தனக்காகப் பங்களா ஒன்றையும் கட்டிக்கொண்டார். சென்னையின் நெரிசலும், இரைச்சலும் சீக்கிரம் சலித்துத்தானே போகும்! கடற்கரை ஓரம் நின்று வீட்டிலிருந்தே அனுபவித்த உப்புக் காற்றும் அலைகளின் தூரத்து இரைச்சலும் சுகம்தான்... நொந்த மனங்களுக்கு மருந்தாகவும் இருக்கும் என்று அவர் எண்ணியிருக்க வேண்டும்...

ஆனால் பல நாட்கள், இரவின் தனிமையில்.... அந்தப் பிய்த்தடிக்கும் ஈரக் காற்றும், புரண்டு குதூகலிக்கும் அலை ஓசையும் அவளது ரணங்களைக் குடைந்திருக்கின்றன..!

ஆனால் எதையும் வெளிக்காட்டிக் கொள்ள முடியாது.

ஏனெனில் இது அவளாக எடுத்த முடிவு.

'நிச்சயமாய் என்னால முடியாதுப்பா..'

'பின்னால் வருத்தப்படுவேம்மா.'

'மாட்டேம்ப்பா.'

'சரி- ஒரு மாசம் போகட்டும்.'

'பிறகு இல்லைப்பா. இந்த விஷயத்தைப் பத்தி நாம இனி பேசவே வேணாம்.. ப்ளீஸ்..'

பல நேரங்களில் குமுறுகிறது... உள்ளேயே போட்டு அமுக்கி விடுவாள்.

அப்பாவும் நெஞ்சிலேயே வைத்து உழன்றுதான் இந்நிலைக்கு ஆளாகி விட்டார்.

ஆக, அவரது நோய்க்கு இவள்தான் காரணம்.

குற்ற உணர்வு முள்ளாக இதயப்பூவை நெருடியது.

உடனே அப்பாவுடன் பேச வேண்டும் போலிருந்தது.

பக்கவாதம் தாக்கிச் சதா படுக்கையில் என்றான பின், அப்பா தொலைபேசியில் செலவிடும் நேரம் இரு மடங்கு... ம்ஹூம்... மும்மடங்காகி விட்டது.

நினைத்தது போலத் தொடர்பு 'என்கேஜ்ட்' என்றது.

மெல்லிய முறுவலுடன் சற்று நேரம் கழித்து முயன்றதில் தொலைபேசி கிணுகிணுத்தது.



'ஹலோ..'

'நிம்மிம்மா, இப்போ என்ன சந்தேகம்?'

மறுமுனையில் தகப்பனது குரல் சிரித்தது.

வேலைக்குப் போன புதிதில் இவளுக்குக் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போலிருக்க நிமிஷத்திற்கு ஒரு முறை அப்பாவின் எண்களைச் சுழற்றுவாள். இப்போது நிலைமை மாறிவிட்டாலும் அப்பா சீண்டுகிறார்!

"நீங்க ஆரஞ்ச் ஜூஸ் குடிச்சீங்களாங்கற சந்தேகம்."

"ம்ம்.. தேவலை.. வேலையில இப்ப சின்ன முதலாளியம்மா தேறியாச்சுன்னு சொல்லு.."

"ஒரே வேலைதானப்பா - பழகிடுச்சு."

"அதற்காக மெத்தனமாய் இருந்திடக் கூடாதுடா." "இன்னைக்கு அனுப்ப வேண்டிய சரக்கை..."

"கேட்டேன். தயாநிதி அங்க்கிள் தயாராய் இருக்குதுன்னாங்க."

இரு விநாடிகள் பேசவில்லை.

"பொருள் லாரியிலே ஏறும்வரை நாம நின்னு கண்காணிக்கணும்மா."

"சரிப்பா... நான் பத்து நிமிஷம் முன்னே உங்க நம்பர் போட்டேன். லைன் கிடைக்கல. யார் கூடப் பேசிட்டிருந்தீங்க..?"

மறுபடி ஓரிரு விநாடிகளுக்குப் பேச்சில்லை.

"ம்ம்.. வந்து காலைல உன் சிநேகிதி ஹேமா போன்ல கூப்பிட்டா.."

"எப்போ..?"

"அப்பத்தான் உன் கார் வாசலைத் தாண்டிச்சு."

"என்னவாம்?"

"அரட்டை அரங்கத்துக்காகத்தான்."

இவருக்கு அரட்டை அடிக்கக்கூடிய சிநேகிதிகள் யாருமில்லை. இப்போது கல்யாணம், வேலை என்று நெருங்கியவர்கள் பிரிந்து போயாயிற்று.

"நீங்க இப்போ அரட்டையடிச்சு யார் கூடன்னு கேட்டேன்ப்பா"

"அ.. போனஸ் பணம் தயாராம்மா? அடுத்த மாசச் சம்பளத் தோடு சேர்த்துத் தாறும் தீபாவளி சமயம்..."

"பேமெண்ட் எதுவும் வரலைப்பா. வந்தால் சரிக்கட்டிடலாம்."

"ஏன் இன்னும் வரலைன்னு எழுதிக் கேளும்மா.."

இப்படியாக வளர்ந்த பேச்சு முடிந்த போது அவள் யோசனையுடன் ரிசீவரை வைக்கப் போனாள்.

சற்று முன் உங்களுடன் ஃபோனில் பேசியது யார் என்ற தனது கேள்விக்கு அப்பா பதில் சொல்லவில்லை என்பது நெருடியது...

வேண்டுமென்று தட்டிக் கழித்ததாய்த்தான் தோன்றியது.

ரிசீவரை வைக்க சற்று எம்ப வேண்டியதிருந்தது. தொலை பேசியின் வயர் இணைப்பு பட்டு மேசை மீதிருந்த காப்பிக் கோப்பை நிலை தடுமாற. அதில் எஞ்சியிருந்த காப்பி தரை விரிப்பில் கொட்டி விடக் கூடாதே என்ற பதைப்பில் இவள் மேலும் எக்கினாள்.

கோப்பையை விரல்கள் பற்றி விட்டன.

ஆனால் மார்பில் 'சுருக்' கென்றது.

'ஸ்... ஆ..'

மேசை விளிம்பு நெஞ்சை அழுத்தியதில் ரவிக்கையின் உள்ளே கிடந்த அந்த உலோக முனை நடுநெஞ்சில் முள்ளாய்க் குத்தி



விட்டது. உறுத்திய கழுத்துச் சங்கிலியைத் தளர்த்தி வெளியே எடுத்தாள்.

பளபளவென்ற தாலி.

கட்டின நாளிலிருந்தே இதனால் வலிதான்.

---

## 2

ஓட்டப் பந்தயத்தில் முனைப்பும் துடிப்புமாய் ஓடிக் கொண்டிருந்த குதிரையைக் காலில் சுட்டது போன்ற அனுபவம் அது.

துள்ளத் துடிக்க விழுந்தாயிற்று.

எதிர்பாராத அந்த அதிர்ச்சி அவரைக் கட்டிலில் கிடத்தி விட்டது.

சத்தியநாதன் முதுமையை எட்டி விட்டாலும், வேலையில் மும்முரமாய் இருந்தவர்.... ஆக, முதுமையை அவர் உணரவில்லை.

இப்போது நோயின் வசப்பட்ட முதுமையை அணு அணுவாய் அனுபவிக்கும் கொடுமை.

ஒவ்வொரு காலையும் நோயின் பிடியிலிருந்தபடி கண் விழிக்கும் போதுதான், நோயற்ற நாட்களின் அருமை புரிகின்றது.

'ஆரோக்கியத் துடிப்புடன் இன்று நான் கண் விழிக்கிறேன். நன்றி ஆண்டவா! - இந்த நாளை நான் சிறப்பாக்கப் பிறருக்கும்

நன்மையாய்க் கழிக்க வேண்டும்!' என்ற பிரார்த்தனையோடு வாழ்ந்திருக்க வேண்டிய நாட்கள் அவை..

ஆனால் அதற்குச் சிந்தனைகள் இன்றி வேலை, வியாபாரம் என்றே கழித்தாகி விட்டது. இப்போது ஒரு நாளையேனும் அப்படி இயல்பாய் எழுந்து தன் வேலைகளையேனும் தானே கவனிக்க முடியுமானால்..

ஏக்கம் அவரைச் சம்மட்டியாய்க் கொத்தியது.

இப்போது சாப்பிட, கழிப்பறைக்குப் போக, ஏன் - புத்தகத்தை எடுத்துப் புரட்டவும் வேற்றாளின் உதவி தேவைப்படுகிறது.

அருமை மகனுக்கு ஒத்தாசையாய் இருக்க வேண்டிய நேரத்தில் அவனுக்குப் பாரமாய்..

"வேலு!"

சுய பச்சாதாபத்தை அடக்க வேலையாளை அழைத்தார். மூன்றாம் முறை இவர் குரல் கொடுத்த பிறகே அடித்துப் பிடித்து வந்தான். வேலு இன்னும் சற்றே ஈரம் பசைத்திருந்த கைகளை ஒன்றோடு ஒன்று சேர்த்துத் தேய்த்தபடி ஓடி வந்தான்.

இடுப்பில் ஒரு ஈரத்த துண்டைக் கட்டியிருந்தான் - அது நனைந்திருந்தது.

"ஜூஸ் குடிக்க ஏதாச்சும் எடுத்தாரவாய்யா?"

"வீல் சேரில் உட்கார வை, வேலு... ஹால் வரை போகலாம்..."

"இதோய்யா"

ஏதேனும் பேச வேண்டும் போலிருந்தது - இன்று உடலில் ஒரு கஷ்டம் இருக்கிறது என்று நல்ல சுகமும் வராததில் தனிமை மிக அழுத்துகிறது.

"என்ன பண்ணிட்டிருந்தே?"



"நாய்களைக் குளிப்பாட்டி விட்டேங்கய்யா..."

"அதுங்க உன்னைக் குளிக்க வச்சிருக்க போல..! இப்ப உனக்கு என்னைக் குளிப்பாட்டும் வேலை வேறு.."

"எத்தனை நாளைக்கய்யா? - சரியானதும் நீங்களே முன்னைப் போல.."

விரக்தியாய்ப் புன்னகைத்தார்.

"வேலை முடிஞ்சாச்சா?"

"ஆச்சுங்கய்யா - ஈரத் துண்டை அவிழ்த்துட்டு வரேங்க.. நாம தேய்க்க தண்ணிய ஊத்த ஊத்த முள்ளம்பன்னியாட்டம் நாய்ங்க ரெண்டும் சிலிர்த்து, ஈரத்தை நம் மேல விசிறி விடுதுங்க..!"

"காய விட்டு, அதுங்களையும் இங்கே கூட்டிட்டு வா.."

வாலை விசிறியபடி இவரைச் சுற்றி அவை குழைவாய் ஆட்டம் போடும் போது இவருக்குள்ளும் உற்சாகம் கிளம்பும்.

ஈரத் துணியை மாற்றி வந்த வேலு, கட்டிலில் இவரைப் போர்த்தியிருந்த போர்வையை மெள்ள விலக்கி அவர் கால்களை வாகுவாய்ச் சரித்துக் கட்டிலுக்கு வெளியே கொண்டு வந்தான்.

வலது கையை இவர் ஊன்றிக் கொள்ள, இடது புறத்தைத் தாங்கிக் கவனமாய் அவரைச் சக்கர நாற்காலிக்கு மாற்றினான்.

"பாப்பா கூட ஃபோனில பேசிட்டிருந்தீங்க, ஐயா.. அதான் மற்ற வேலையைப் பார்க்கப் போனேன்."

"ம்ம்... தம்பி ஆபீஸ் போக ஆரம்பிக்க அந்த மாசமாக்க ஏறக்குறைய அரை வருஷம்."

வேலு எதையோ சொல்ல முயன்று, தயங்கி விழுங்கினான்.

" என்ன - சொல்லு."

"பாப்பாக்கு கல்யாணமாகியே ஒரு வருஷமாச்சு. இதுல பாதி சமயம் இங்க கழிஞ்சிருக்கு..."

"ம்ம்... குணசீலனோட நம்ப நிம்மி வாழ்ந்தது ஒரு வருடங்கூட இல்லை. அதுக்குள்ள என்ன கோபம், பிரச்னைன்னு புரியலையே..!"

"அதுவும் நல்லதுக்குன்னு நினைக்கணுமய்யா..."

'உளறாதே' என்பதாய் அவனை முறைத்தார், சத்தியநாதன்.

"இல்லை... உடம்புக்கு முடியாத உங்க கூடவே பாப்பா இருக்க முடியுதேன்னு..."

"புருஷனை விட்டுட்டு வந்து மகள் எனக்கு ஒத்தாசை பண்ணணும்னு நான்... ஏன், எந்தப் புத்தியுள்ள தகப்பனுமே எதிர்பார்க்க மாட்டானே!"

"ஐயாக்கு ஆண் வாரிசு இல்லை... நிம்மிப் பாப்பாதானே தொழிலையும் பொறுப்பா கவனிச்சுக்கறாங்க. இல்லைன்னா..."

"எல்லாத்தையும் விற்றுத் தொலைச்சிருப்பேன்!" என்றார் முகம் கடுக்க.

"அப்படிப் பேசாதீங்கய்யா - எத்தனை பேருக்குப் படியளக்கறீங்க! சின்னம்மா பொறுப்பு எடுத்ததால்தான..."

"அவள் முதலில் தன் குடும்பத்தைக் கவனிக்கட்டும், வேலு..."

"நம்ப பாப்பாவுக்குத் தங்க குணம்... ஆக, அதோட சேர்ந்து வாழ முடியலைன்னா மாப்பிள்ளைத் தம்பிட்டதான் ஏதோ கோளாறுய்யா..." யென்று தயங்கி ஆனால் சொல்லிவிட்டான், வேலு.

"கண்டிப்பா... நீதான் போய்ப் பார்த்தே..."

"நம்ப பிள்ளையை நமக்குத் தெரியாதுங்களாய்யா?"

வேலு இந்த வீட்டில் வேலைக்குச் சேர்ந்த போது நிர்மலாவிற்கு ஆறேழு வயதுதான். கொழுகொழுவென வீடு முழுக்கச் சுற்றி



வருவாள். எல்லாரும் தன்னிடம் சிரித்துப் பேச வேண்டுமென்ற எதிர்பார்ப்பு.

ஒருநாள் வேலுவின் வாடிய முகம் பார்த்து விசாரித்தாள்- "ஏன் வேலுண்ணா - என்னாச்சு? தலை வலிக்குதா?"

"எனக்கு ஒண்ணுமில்ல பாப்பா... என் சம்சாரத்துக்கு இது மாசம் - அதாவது வந்து பாப்பா பிறக்கப் போவுது."

"குட்... அப்ப ஏன் உம்முனு இருக்கீங்க?"

"கையில காசு இல்லியேப்பா - அரசாங்க ஆஸ்பத்திரியில கூட காசில்லாம காரியம் ஆவாதே?"

"ஓஹோ..!"

அன்று மாலையே இவன் கையில் மொறுமொறுவென ரூபாய் நோட்டுக்களைத் திணித்து விட்டாள், குழந்தை!

இவன் பதறி மறுக்க,

"அப்பா எனக்குன்னு தந்த காசு - உங்களுக்குத் தர்றேன் -" என்று வற்புறுத்திக் கையில் தந்து, தன் தந்தையிடமும் சிபாரிசு செய்த தேவதை அவள்.

நேரத்திற்குதவிய அந்தச் சின்ன எஜமானியை அவளது தகப்பனிடம் கூட விட்டுத் தரக் கூடுமா?

"நம்ம நிம்மி தங்கம்தான் - ஆனா புருஷனை அனுசரிக்கப் போக வேண்டாமா?"

"பாப்பாக்கும் மாப்பிள்ளைக்கும் பத்து வயசுக்க வித்தியாசமுங்க - இது குழந்தை. ஏன்... அவருதான் வந்து நயந்து கூட்டிட்டுப் போவட்டுமே!"

புன்னகைத்த சத்தியநாதன் தலையசைத்தார்.

"ஆண்பிள்ளை ரொம்ப இறங்கி வர முடியாது, வேலு. அந்தப் படைப்பே அப்படி. கடவுள் முதல் மனுஷனான ஆதாமை உருவாக்கி, அவனுக்கு ஏற்ற துணைன்னு ஏவாளையும் படைத்தார். ஏவாள் கடவுளின் எச்சரிப்பை மீறி விலக்கப்பட்ட கனியைச் சாப்பிட்டு, வாங்கிக் கொண்ட சாபம் இது—"

"எதுங்கய்யா?"

"அவன் உன்னை ஆண்டு கொள்வான் - உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும்னுட்டார். ஆக, ஆண் கெத்தாய் ஆள நினைக்கிறான்."

"ஆண்டுக்கட்டும்யா.. நல்லா ஆளட்டும். கட்டினவளை அன்பாலே ஆளட்டுமேய்யா. அந்த அன்பு இருந்தா இப்படிச் சின்னப் பூவாட்டம் இருக்கற பெண்டாட்டியை விட்டுட்டு இருக்க முடியுமா?"

ஆச்சரியம் கலந்த மதிப்புடன் வேலுவை ஏறிட்டார்.

"எங்க வேதம் அப்படித்தான் சொல்லுதுய்யா. 'உன் மனைவியை நேசி - உன்னைப் போலவே உன்னவளை நேசி' ன்னு."

"அது பழைய எம்.ஜி.ஆர். படப் பாட்டுங்க.. பானுமதி பாடிட்டே ஆடுவாங்க."

வேலு வெட்கத்துடன் விளக்கினான்.

அவருக்கும் நினைவிருந்தது.

'என்னை அன்பினாலே ஆளவந்த அழகு பூபதி!

அழகு பூபதி ஓ அழகு பூபதி...'

என்று நடிகை பானுமதி தன் கம்பீரமும் கறாருமான குரலில் பாடிய அக்காதல் பாட்டு மனதுள் ஒலிக்க, புன்னகைத்தார்.

"ஏதோ விரிசல்.. மனசு திறந்து சொல்ல மாட்டேங்கறாக- இங்கே கிடைச்ச செல்லம், சலுகையை நம்பி அங்கேயும் எதிர்



பார்க்கக் கூடாது... ஆனா கடவுள் கிருபையில் எல்லாம் சரியாயிடும்னும் படும்..."

டெலிபோன் மணி குறுக்கிட்டு ஒலித்தது.

"சத்தியமான பேச்சுங்க!" என்றபடி, வேலு சந்தோஷமாய் ரிஸீவரை எடுத்து முதலாளியிடம் தந்தான்.

ஆனால் பேசியது யார் என்று தெரிந்ததும், சத்தியநாதனின் முகம் இறுகியது.

"தெரியலை பிரசாத்... சரி."

"........"

"அப்ப வச்சிடட்டுமா?" என்று சீக்கிரமே தொடர்பைத் துண்டித்தார்.

❖ ❖ ❖

மேலுக்குக் குளித்து இரவு உடைக்குள் நுழைந்த நிர்மலா முந்தின இரவு வாசித்து நிறுத்தியிருந்த நாவலைத் தொடருவதற்காகப் பிரித்தாள்.

'என்னைக் கவனி' என்பது போலத் தொலைபேசி கிறீச்சிட்டது. இக்கருவி வெகு உபயோகம்தான் என்றாலும், அதனால் வஞ்சகமில்லா உபத்திரவமும் உண்டு. சதா அழைத்து நேரத்தைக் கரைத்து விடுகிறதே - சற்று அலுப்புடனே எடுத்தாள்.

"நிர்மலா ஹியர்..."

"அப்பாடா.. கிடைச்சியா! பிரசாத் பேசறேன்."

"சொல்லு, பிரசாத்."

"காலைல ரெண்டு தரம் அழைச்சதை உங்க அப்பா சொன்னாரா?"

"இல்லையே.. மறந்துட்டாங்க போல."

"வேலை அதிகமா, நிம்மி? நாளெல்லாம் வேலை பார்த்ததில் உன் குரலும் கூடச் சோர்ந்திருக்குது..."

"இத்தனை நாள் சொகுசு பழகிய உடம்பில்லையா! - சீக்கிரம் சோர்ந்திடுது."

சிரிக்க முயன்றாள்.

"ஆங்... அங்கேதான் வீக் - எண்டின் மகத்துவம் வருது. வேண்டிய ஓய்வும், மாற்றமும் கிடைச்சால், மறுவாரத்திற்கான தெம்பு ஊறிடும்."

"ம்ம்... சரி, பாஸ்."

"நாளைக்கு ஞாயிறு - ஞாபகமிருக்குல்ல?"

ஐந்து மாதங்களுக்கு முன்பான அந்த ஞாயிறின் நினைப்பு 'குபுக்' என எம்பியது.

அன்று காலை ஆலய ஆராதனைக்காகத் தயாராகிக் கொண்டிருந்தனர் - குளித்து முடித்த நாதன் நனைத்த துவாலையைப் போலவே துவண்டு விழ, வீடு பதறியது.

வேலுவும் கார் ஓட்டுனருமாய் முதலாளியைத் தூக்கி நிறுத்திய போதும், சத்தியநாதனால் நடக்க முடியவில்லை.

காலை அசைக்கக் கூட இயலாததில் மருத்துவர்கள் அழைக்கப் பட்டனர்.

பல பரிசோதனைகளுக்குப் பின், ஒரு வார்த்தையில் உதடு பிதுக்கினர்.

'ஸ்ட்ரோக்.'

அன்றிருந்து அப்பா படுக்கையில்தான்.

'அப்பாவிற்கு ஏற்கெனவே ஹை பி.பி. இப்போது கவலையும் சேர, உடலைப் பாதிச்சிடுச்சு...'



'பிஸியோதெரபி பண்ணணும்... மெள்ளச் சரியாகும்.' ஆனால் சோர்ந்து போகுமளவு மரத்துப் போன கால் கைகளை பயிற்சிகளைச் செய்த பிறகும் முன்னேற்றமில்லை.

குடும்ப வைத்தியரிடம் வருந்தினாள்.

"பல வாரங்கள் ஆகியும் இத்தனை மருந்து, பயிற்சிகளுக்குப் பிறகும் அப்பா நிலை மாறலையே டாக்டர்."

"அவர் மனசும்மா... அதில் நிறைய வேதனை..."

"அப்ப இது மனோவியாதியோட சேர்ந்ததா?"

"இல்லைம்மா.... ஆனா மனசு வாங்கின அடியில் உடம்பு சுருண்டுக்குது..."

"என்ன நிம்மி, தூங்கிட்டியா?"

பிரசாத்தின் குரல் அவளை உலுக்கியது...

"ம்ம்... நாளைக்கு ஸன்டே... கோயிலுக்குப் போவோம்."

"அது காலைல... ஈவ்னிங்... ப்ரோக்ராம் என்ன?"

"தினம் ஆபீஸ் போறதால் அப்பாவோடு வீட்ல அக்கடான்னு இருக்கலாம்னு..."

"உனக்கு அக்கடா வயசில்லை, நிம்மி. துக்கடா அதாவது துள்ற வயசு."

சிரித்தபடி கேட்டாள்.

"சரி, இப்ப என்ன ப்ரோக்ராம் போட்டிருக்கே - சொல்லு."

பிரசாத் அவளுடன் ஒரே கல்லூரியில் பயின்றவன் என்பதோடு இருவரது குடும்பங்களும் ஞாயிறுதோறும் ஒரே ஆலயத்திற்குப் போனதில் இளையவர்களின் பழக்கம் இறுகிவிட்டது.

பத்தாம் வகுப்பில் சறுக்கியதால் நிர்மலாவை விட ஓரிரு வருடங்கள் மூத்தவன் என்ற தெம்பில் இவளைச் சற்று ஏவுவான்.

உரிமையாய் அதிகாரம் செய்வாள் - ஆனால் அதே போல நிறையப் பிரியமும் கிடைக்கும்.

"ஆஸ்ட்ரியாவிலிருந்து ஒரு இசைக் குழு வந்திருக்குது."

"ஓஹோ? மேதை மொஸார்ட்டின் நாடில்லையா?"

"எஸ்.. அவர் உருவாக்கிய இசையை இவங்க நமக்கிங்கே தரப் போறாங்க."

"ஆக, பாரம்பரிய கான்ஸர்ட் - அந்தளவு எனக்கு இசையில் ரசனை, ஞானமெல்லாம் கிடையாதே, பிரசாத்..."

"தப்பா புரிஞ்சுக்கிட்டே நிம்மி - உன்னை நான் பாட அழைக்கலை - கேட்க மட்டும்தான்."

"என் மனநிலைக்கு மெல்லிசைதான் சரி - பிரசாத்..."

"சரி - விட்டுடு. இந்த டிக்கெட்டை வேறு யாருக்கேனும் தந்துடறேன் - வேற எங்க போகலாம் - நீ சொல்லு..."

இந்தப் பிரியம் தாங்காது அவளது விழிகள் நிரம்பின - வேண்டிய இடத்திலிருந்து கிடைக்காத பிரியம்.... வேறு இடத்திலிருந்து வர, நெருடுகிறது.. மனதைப் பிழிகின்றது.

"ம்ம்... கான்ஸர்ட்டுக்கே போவோம் - இத்தனை தூரம் அவங்க வந்து இசைக்கும் போது, ஏன் நாம அதைத் தவற விடணும்?"

"க்ரேட்..." பிரசாத் உற்சாகமானான் - "நாலு மணிக்கு உன்னைக் கூட்டிட்டுப் போக வரேன்."

"கான்ஸர்ட் எத்தனை மணிக்கு?"

"ஆறுக்குத்தான் - போய்ச் சேர முக்கால் மணி நேரமாகும்... உன்னுடன் கொஞ்ச நேரமாவது பேசிட்டிருக்கலாமேன்னுதான்..."

"சரி, வா.."



வருபவனை வராதே என்பது எப்படி?

பிரியமாய் அழைத்துப் பேசுபவனை, இவளுக்கு ஒரு மாற்றம் வேண்டுமென அழைத்துப் போக மெனக்கெடுபவனை, எப்படித் தடுக்க? வேண்டுமென அழைத்துப் போக நட்பு தேவைதான்..

ஆனால்.. பிரசாத் இதை வெறும் நட்பாகத்தான் கருதுகிறானா?

அவனது ஆர்வமும் ஆவலும் சற்று அளவிற்கு அதிகமோ? இவர்கள் சேர்ந்து போவது பலர் கண்களை உறுத்தக் கூடும்...

ஏன் அப்பா கூட இவர்களின் நெருக்கத்தை வரவேற்கவில்லை - அப்படியிருக்க பிரசாத்தை ஊக்குவிப்பது தப்போ?

சற்று அவனை எட்டியே நிறுத்த வேண்டுமோ...?

புத்தகத்தைக் கையில் வைத்தபடி கவலைப்பட ஆரம்பித்தாள், அவள்.

---

## 3

படுத்தது நள்ளிரவைத் தாண்டித்தான் என்றாலும், விடியலிலேயே முழிப்புத் தட்டி விட்டது.

கட்டிலின் தலைமாட்டிலிருந்த விளக்கைத் தட்டி எரிய விட்டவள், எழுந்து முகம் கழுவித் துடைத்தாள்.

இனித் தூக்கம் பிடிக்காது.

தவிர இன்று ஞாயிற்றுக் கிழமை.

தேவைப்பட்டால் மதியம் உறங்கி எழலாம்.

பறவைகள் கறுகறுப்பாய்ப் பேசின.

நேற்றிரவு படுத்த போது அவளை அலைக்கழித்த சிந்தனைகள் மறு அத்தியாயம் போல இப்போது கோர்த்துத் தொடர்ந்தன.

பிரசாத் உடன் படித்தவன் என்ற உரிமையில் நெருங்கிப் பழகுகிறான்... ஆனால் தன் நிலைமை வேறு..

கணவனை விட்டுப் பிரிந்திருக்கும் வாழாவெட்டி...!

அவ் வார்த்தையில் மனம் புளித்தது.

ஆனாலும் அதுதானே நிஜம்?

சமுதாயப் பார்வையில் அவள் அப்படித்தான்.

சிலர் பச்சாதாபத்துடனும் பலர் குதர்க்கமாயும் தன்னைப் பார்க்கும் பார்வை அப்படித்தான் சொல்கிறது.

அப்பாவின் முகக்களை சுத்தமாய்த் துடைக்கப்பட்டு விட்டது. ஒரே மகள். தாயற்றுப் போனாலும் தானே போற்றி வளர்த்த குழந்தை என்று கர்வமாய் நின்றவர் இப்போது குன்றி நிற்கிறார்.

அதுவும் குணசீலனை மாப்பிள்ளையாய் அடைந்தபோது, அவரது பெருமைக்கு அளவில்லை.

வருவோர் போவோரிடமெல்லாம் பெருமை பேசினார்.

'மாப்பிள்ளைப் பையன் யார்னு தெரியுமில்லே?'

'சொல்லுங்க நாதன் - 'டக்'ன்னு நிச்சயம் பண்ணிட்டீங்க போல இன்னும் வெளியே செய்தி பரவலை....'

'குணசீலன்...'

'பு மீன்...?'

'அதே மீன்தான்'

'பெரிய மீனாச்சே...''

''திமிங்கலம்!''



எதிரே இருப்பவரின் ஆச்சரியத்தை ஆனந்தமாய் ரசிப்பார், அப்பா.

'வயசிருக்குமே - முப்பதுக்கு மேலே?'

'அதாச்சு 32. விவரம் தெரிஞ்சதிலேருந்து கஷ்டப்பட்ட பிள்ளை. உழைச்சு உசந்தவர்...'

'பாறங்கல்லில் கையாலேயே படிகட்டி வெட்டி ஏறினவர்னு அந்தத் தம்பியைப் பற்றிச் சொல்லக் கேள்வி...'

'அது மிகையில்லை. கோவாவில் போய் செட்டிலான நம்ம தமிழ்க் குடும்பம்தான் - கலிங்கோட் பீச் பக்கத்தில் ஓரளவு நிலமிருந்திருக்கு - அதுதான் சீலனுக்கு மூலதனம். அதிலே சின்ன தாய்க் கடை போட்டு மீன் - பட்டுத் துணி ஸ்கார்ஃப் ஆரம்பித்த வியாபாரம் பெருகிடுச்சு.'

'கூடப் பிறந்தவங்க?'

'ஒரு தம்பி, ஒரு தங்கை - அவங்களுக்கு முன்னமே கல்யாணம் செய்து வச்சிட்டார். அம்மா இருக்காங்க... அப்பா இறந்தப்போ சீலனுக்குப் பதினாறே வயசு... தடுமாறின குடும்பத்தைப் பொறுப் பேத்து நிமிர்த்தின பையன்ங்கறதில் எனக்குப் பெருமை.'

'உங்களுக்கு ஒரே பொண்ணு - செல்லமாய் வளர்த்துட்டா- பொருந்திப் போகுமான்னு யோசிக்கக்கோங்க...'

'ம்ம்...'

'பையனோட அப்பா எப்படி இறந்தாராம்? குடும்பம் எப்படி? அதெல்லாம் சரியாய் விசாரிச்சாச்சா?''

இப்படி நண்பர்கள் சந்தேகம் எழுப்ப, சத்திய நாதனுக்கு எரிச்சல் வந்தது. தனக்குக் கோடீஸ்வர மாப்பிள்ளை தேடி வந்ததில் பொறாமை என்று அதைப் புறம்பே தள்ளினார்.

அதிலும் உண்மை இருக்கத்தான் செய்தது.

நண்பர்களில் பலரின் மகள்களுக்கு வேண்டிய சீர், கார், நகைகள், ஏன் - புடவைகள் கூடத் தயாராய் இருக்க, பொருத்தமான மாப்பிள்ளைக்குத்தான் பஞ்சம்.

பணம், பகட்டான குடும்பமெனில் குணம் குறைவு படும்.

அதுவும் இருப்பது போதும் என்றால், படிப்பு இடிக்கும். ஆக அவனவன் மாப்பிள்ளை வேட்டையில் செருப்புத் தேய்த்துக் கொண்டிருக்க, இவருக்குப் பாலில் பழமாய் அல்லவா நழுவி விழுந்திருந்தான் குணசீலன்..!

ஆனால் பெண் ஒரே வருடத் தாம்பத்தியத்தில் சிறுத்துத் திரும்பிய போது அவரது பெருமையெல்லாம் பொய்யாய்ப் போனது.

'நீ சொல்ற காரணமெல்லாம் எனக்குப் புரியலைம்மா. கண்டிக்கத் தகப்பன் இல்லாமலேயே கூட குணா வழிதப்பாதவன்.. குடி, ஏன், புகைகூட கிடையாது. சுற்றிலும் வேண்டாத ஜால்ராவை வச்சிக்கற ரகமுமில்லை. அருமையான மாமியார், குடும்பம் - அள்ளித் தெளிக்கிற அளவுக்குப் பணம், பவுசு, பேர்... எல்லாம் பார்த்து புரிக்கத்தானேடா உன்னை அனுப்பி வைச்சேன்...'

அப்பா இப்படிப் புலம்பிய அன்று ஒரு காகிதத்தை நீட்டினாள் மகள்.

'இது சாபியினுடைய கவிதைப்பா - பிடிச்சதுன்னு எழுதி வச்சேன் - இதுதான் என் பதில்...'

முல்லைக் கொடிகளே

பாரியின் ஒசித் தேரில்

படர்ந்து விடாதீர்கள்

உங்களுக்கு முக்கியம்



தேர் அல்ல

வெறும் நீரும்தான்!'

'அப்படின்னா...?'

'பணம், பவுசெல்லாம் பார்த்து ஏமாறக் கூடாதுப்பா..'

நிர்மலாவின் முகம் சுடுக்க, தகப்பன் பயந்து மெள்ளக் கேட்டார்.

'ஆண்.. ஆண்மையில்லைன்னு சொல்றியாம்மா?'

'ஐயோ..' பட்டென்று நிமிர்ந்தாள் - 'இல்லைப்பா - அப்படியெல்லாம் இல்லை.... காதலும் கனிவும் தாம்பத்தியத்திற்கு-காசை விட -அவசியம்னு சொல்ல வந்தேன்...'

தகப்பனின் முக வருத்தம் சற்றுத் தளர்ந்தது.

'அறியாப் பிள்ளையாய் இருக்கிறே நிம்மி - பார்த்ததும், ஒரே வார்த்தை பேசியதும் வர்ர காதல் எனக்குப் புரியலை.. தம்பதிகளுக்கிடையே கூட காதலின் உண்மையான அழுத்தம், அருமை புரியச் சில பல வருஷங்கள் தேவைன்னு நினைக்கறவன் நான் - புரிதலும் பெருந்தன்மையுமான நேசமுமாய்க் காலத்தால் கனியறது தான் காதல்..'

இவள் சலிப்புடன் ஜன்னல் வழியே தொலைவில் கிடந்த நீலக்கடலையே வெறித்தபடி நின்றாள்.

'தாம்பத்தியம் இணை அலைகள் போல நிம்மியம்மா - இணைந்த அலைகள் ஒன்றையொன்று தட்டிக் கொடுத்து அழகாய்க் கரையை வந்து எட்டும் - எதிரலையாய்ப் புரளுபவை பாதியிலேயே வலு இழந்திடும். கொஞ்சம் இணைஞ்சு போகணும்டா..'

'இதை உங்க மாப்பிள்ளையைக் கூப்பிட்டுச் சொல்லுங்கப்பா-பெற்றவர்களை, வளர்ந்த சூழலை விட்டுப் பெண்கள் புருஷன் வீடு போவதே ஒரு சரணாகதி போலத்தான் - அதுவே நேசத்தோடு செய்யப்படுமானால் சமர்ப்பணம்னு கூட ஆகும். இதைவிட

இசைஞ்சு போகனும்னால் எப்படிப்பா? ஆண்களின் பக்கத்திலிருந்து எந்த முனைப்பும் முயற்சியுமே கிடையாதா?'

'பேசறேம்மா- இன்னின்னது இப்படின்னு தெளிவாய்ச் சொன்னியானால் குணாட்ட பேசறது சுலபம் - பொதுவாய்க் காதலில்லை, கனிவில்லைன்னா எப்படி?'

இப்போது தகப்பனின் குரலில் சற்று அலுப்பிருந்தது.

'மொத்த வாழ்க்கையே அப்படித்தாம்ப்பா இருக்குது - அதில் எதை, எப்படிச் சொல்லன்னு எனக்குத் தெரியலை...'

மகள் குழம்பினாள்.

அப்பா தன் கணவனின் ஆண்மையைப் பற்றிக் கேட்டது மீண்டும் நிரடியது. குணாவின் ஆசை... அதாவது படுக்கை நேரத்தில் முகிழ்க்கும் ஆண்மையில் வேகமிருந்தது... ஆனால் அதில் நிறைய விநோதங்கள் - ஆண்கள் நேரங் காலமின்றிப் புது மனைவியிடம் இழைந்து குழைவார்கள் என்று கதைகளும், திரைக்காவியங்களும் அவளுக்குக் கற்றுத் தந்திருந்தன.

குணாவிற்குக் காமத்தை விட நேரம் காலமே குறி!

ஆண் பெண் உடலில் கிளர்ச்சியூட்டும் சமாச்சாரங்கள்-

'டேப்பமைன், நைட்ரிக் ஆக்ஸைட், ஆக்ஸிடோஸின், டெஸ்டோஸ்ட்ரான்' என்று அவள் கற்றதுண்டு. அந்த ஹார்மோன்களின் வீச்சையெல்லாம் அடக்கி ஆளுமளவு கணவனுக்கு வியாபார வெறியோ?

'என்னம்மா?'

'ஏதோ ரோபோ போலச் சதா உழைப்பார் - வீடு வந்த பிறகாவது பேச்சு, சிரிப்பு சேர்ந்து டி.வி பார்ப்பதில் நாட்டமிருக்கா - ஷாப்பிங் போகலாமான்னு கேட்டால்...'

'போ - பவுச்சில் பணம் எடுத்துக்கோ' ன்றதுதான் பதில்.'



'அதைத்தானே பெண்கள் எதிர்பார்க்கறாங்க?' கண் சிமிட்டினார்.

'தப்புப்பா - பட்ஜெட் போட்டுக் கவனமாய்ச் செலவழிக்கப் பெண்கள் அஞ்ச மாட்டாங்க. ஆனா அப்பப்ப தன் புருஷன் தன்னோடு வரணும்னு ஆசைப்படுவோம். வாடிக்கையாய்ப் பூ விக்கிறவளிடம் தினம் பத்து ரூபாய்க்குப் பூ தந்திடுங்கலாம்... ஆனா வாரத்துக்கு ரெண்டு நாளேனும் அவர் பூ வாங்கிட்டு வீடு வந்தால் அது தனியில்லையா?'

பெருமூச்சுடன் கேட்டார் - 'குணாவிடம் உன் எதிர்பார்ப்பைச் சொன்னியா?'

'இடக்காய்ச் சிரிப்பார் - பதில் கூட வராது.'

'அவன் வளர்ந்த சூழல் அப்படிம்மா - மீன் வெள்ளைக்காரங்களுக்கு விற்றவன். இப்போது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்றான் - பெரிய ஃபாக்டரி, எக்ஸ்போர்ட் இப்படி... பதினாறு வருஷங்களில் இது அசாத்திய வளர்ச்சி...'

'ம்ம்...'

'சதா வியாபாரத்தைப் பெருக்கன்னு முனைந்த சிந்தனை... இப்ப குடும்பத்தில் பதிய மாட்டேங்குது... மெள்ள நீதான் அவனை அதற்குப் பழக்கனும்...'

'அவரென்ன கிளியா கரடியாப்பா ...? ஏதோ வித்தை காட்றது போலப் பழக்கி விட?'

'ஆண்கள் பலர் இறுகித்தான் கிடப்பாங்க - ஒரு பெண்ணின் அன்னமையும் அன்பும் தான் அவங்களை இளக்கும், பண்படுத்தும்...'

'எனக்குப் பொறுமை இல்லைப்பா...'

'ஆங்... அப்படிச் சொல்லு...'

'நோ. பிரச்சனையைத் திசை திருப்பாதீங்கப்பா- அவர் குடும்பத்தினரே கூட அவரிடம் சகஜமாயில்லை. அவர் தம்பி மனைவி கர்ப்பமாய் இருக்கறது தெரிஞ்சதும் கோபப் பட்டாராம்.

'என் அதுக்குள்ளே பிள்ளை?' ன்னு... அவ... அதான் அம்ருதா வேணும்னே இப்ப இரண்டாவது குழந்தையையும் பெத்துக்கிட்டா. தம்பி குடும்பத்தையும் இவர் தன் கட்டு திட்டத்திற்குள் வைக்கறது அவங்களுக்குப் பிடிக்கலை... அவர் தங்கை புருஷனும் அதிகம் இங்கே. அதாவது கோவாவிற்கு வர்றதில்லை... இவரும் வருந்தி அழைக்க மாட்டார்...'

'ஒன்று சொல்லட்டுமா, நிம்மி?' பாசத்துடன் மகளின் தலையை நீவியபடி ஆரம்பித்தார் - 'உன்னிடம் இருப்பது போல உன் அம்மாவிடம் கூட நான் பிரியங்காட்டினதில்லை... அது வேறு மாதிரியான ஒரு நெருக்கம் - அந்த உரிமையில் நான் 'வெடுக்' குனு அவளிடம் பேசுவேன் - ஆரம்பித்த வியாபாரம் துளிர்த்த சமயங்களில் என் சிந்தையெல்லாம் அதைப் பலப்படுத்திப் பெருக்குறதில்தான். என் அலட்சியம் தாளாமல் உங்கம்மா கண்ணைக் கசக்கினால் அவளுக்கு நான் ஆறுதலாய்ப் பேசியதில்லை... ஆத்திரமே தாளாமல் ஒரிரு சமயம் அடிக்கக் கூட நேர்ந்திருக்குது...'

அவர் தலை குனிந்து தன் கைகளைப் பார்க்க, இவளால் அவர் சொன்னதை நம்பத்தான் கூடவில்லை.

அப்பாவின் நெஞ்சைப் போலக் கரங்களும் மிருதுவானவை... அவற்றை மிருகத்தனமாய்ப் பயன்படுத்தினாரா?... இல்லை, இதெல்லாம் தன்னைக் குணாவுடன் இணைப்பதற்கான கற்பனைப் பேச்சு. கட்டுக் கதை முயற்சி!

மகளின் முகபாவனையைப் படித்தவரிடம் புன்னகை...



'பொய்யில்லைடா... நிஜம்... உங்கம்மா போனபிறகு உனக்காகத் தான் நான் மறு கல்யாணம் செய்துக்கலைன்றது உண்மையானாலும் அவ இடத்தில் வேறு ஒருத்தியை என்னால் கற்பனையிலும் கூட நேர... முடியலை... கைப்பொருள் போன பிறகுதானே அதன் அருமை பெருமை புரியுது... ஒரு வருஷத்தை ஏக்கமும் துக்கமுமாய்க் கழிச்சேன்... அதுக்குள்ளே நீயும் என்னிடம் பாசமாய் ஒட்டிக்கிட்டியா... நீ போதும்னு தோணிடுச்சு.'

'நாம அப்படியே இருந்திருக்கலாம்ப்பா... ஏன் எனக்குக் கல்யாணம் பண்ணி அனுப்பினீங்க?'

''அனுப்பலைன்னா என்னை நீ ரொம்பத் திட்டியிருப்பம்மா' கேலி செய்து சிரித்தார்.

அவர் சொன்னது முழுக்கப் பொய்யில்லை.

❖ ❖ ❖

19 வயது வரை வண்ணத்துப்பூச்சி போல உலகில் சுற்றித் திரிந்தவளின் மனம் எந்த மலரின் மீதும் அமர்ந்து வசித்ததில்லை. ஒதுக்க ஒதுக்க, எவர் நினைப்பும் வந்தும் அவளை ஆக்கிரமிக்க வில்லை. இவளைச் சற்று நெருங்கிப் பார்த்து, பழகி, பேச மாட்டாரோ என்று எந்த ஒரு இளைஞனிடமும் ஏற்பில்லை...

குணசீலனைக் காணும்வரை...!

அவர்களின் சந்திப்பு நேர்ந்தது ஒரு திருமண வைபவத்தில். பத்தொன்பது வயதைப் பூர்த்தி செய்திருந்த நிர்மலாவிற்கு இன்னும் குழந்தை முகமிருந்தது... ஆனால் வளர்ப்பான உருவம்.

சும்மாவே வெள்ளி விளக்குப் போலிருந்த அவள் அலங்கரித்ததும், தங்க முலாமிட்டு நெய்யூற்றிச் சுடர் ஏற்றியது போல ஜொலித்தாள்.

அது பெரிய இடத்துத் திருமணம்.

'நீயும் வரவேண்டாம் நிம்மி. தடபுடலான கல்யாணம். நாம சேர்ந்து வேடிக்கை பார்க்கலாம்...' என்றுதான் அப்பா அவளை அழைத்திருந்தார்.

'என்ன போட்டுக்கட்டும்ப்பா?'

'ம்ம்... அம்மாவோட நகை, புடவைகளைப் பார்க்கறியாடா?'

சாவிக் கொத்தை நீட்டினார்.

வாங்கிப் போனவள் ஒரு மணி நேரத்தை அக் கண்ணாடி பீரோவின் முன்னே கழித்தாள்.

ஒவ்வொரு புடவையையும் பிரித்துப் பார்த்துப் பிரமித்தாள்.

அதை மேலாக்காகத் தன் தோளில் இட்ட போதே அசத்தியது. ஜீன்ஸ், சல்வார், மிடிக்கே பழகிய அவள் தோற்றத்தில் பெண்மையின் பொலிவு.

இனி ஏற்ற ஆவசத்திற்கேனும் இவைகளை ஒவ்வொன்றாய்ப் பிரித்துக் கட்ட வேணுமென நிச்சயித்துக் கொண்டாள்.

அப்பா தன்னைச் சிறுவயதிலேயே சீண்டியது கொஞ்சியது என்ற பல சந்தர்ப்பங்கள் நினைவிலுண்டு. ஆனால் தாயின் உருவமோ மங்கலாய்... புகை போலத்தான்...

ஏன்?

எப்போதுமே அப்பா தன் மனதில் வியாபித்திருந்ததால் அம்மா அங்கு சித்திரமாய்ப் பதியவில்லையோ?

பாவம், அம்மா...

அவள் உடைமைகளையேனும் அடிக்கடி எடுத்துப் பயன் படுத்த வேணும்.



நகை லாக்கரைத் திறக்க, மேலும் ஒரு மணி நேரம் பிரமிப்பில் கரைந்தது.

பிளாஸா, மால்களில் அவள் தேடித் தேடி வாங்கும் காஸ்ட்யூம் நகைகள் இவற்றின் கால் ஜொலிப்பிற்குத் தேறாதே!

எத்தனை நுண்ணிய வேலைப்பாடு! கம்பீரமான அழகு...!

முத்தும் மாணிக்கமும் கலந்து கட்டிய ஒரு சரத்தை எடுத்தாள். கூடவே பொருத்தமான கம்மல், மாட்டலுடன்.

இதற்கு எந்தப் புடவை தோது?

ஒரே பார்வை வீச்சில் முடிவு செய்தாள்- அந்த வெங்காய நிறக் காஞ்சிபுர டிஷ்யு.

அதை உருவிப் பிரிக்க, ஜரிகை தகதகத்தது.

மேலாகப் போர்த்தினாள்.

பாலில் குங்குமப் பூவைக் கலந்து கண்ட வைத்தது போன்ற அவள் சரும நிறத்திற்கு அந்நிறம் அமர்க்களமாய்ப் பொருந்தியது.

அதன் மேலாய் முத்து மாணிக்க ஆரத்தை வைத்தபோது, அவள் விழிகள் இமைப்பதை மறந்தன.

மறுநாள் மாலை மிதமான ஒப்பனை, உயரே தூக்கிக் கட்டிய தலை சீவலில் அவள் அந்தப் புடவை நகையுடன் தயாராகி நின்ற போது, சத்தியநாதனுமே கண்ணிமைக்காமல் பார்த்தார்... மறுநிமிடம் அவர் பார்வை கண்ணீர்த் தழும்பலில் மங்கியது.

“அட்டே... பெரிய பொண்ணாட்டம் இருக்கேடா, ராஜாத்தி...”

குரல் தழுதழுத்தது.

“நான் பெரிய பெண்தானேப்பா!”

“ஆ... மம்மா, உன்னைக் குழந்தைன்னே நான் நினைச்சிட்டு இருப்பது தப்பு - அது இப்ப புரியுது...”

'ஹோ - உங்களுக்கு நான் எப்பவும் குழந்தைதானப்பா!' - கொஞ்சினாள் மகள்.

ஆனால் அப்பா எப்போதும் போல 'ஆமாடா' என்று அவளைத் தலை வருடிக் கொஞ்சி ஆமோதிக்கவில்லை.

ஏதோ யோசனையுடன் தலையசைத்தார்.

நகரை விட்டுச் சற்று ஒதுங்கி நின்ற ஐந்து நட்சத்திர ஹோட்டலில்தான் கல்யாண வரவேற்பு வைபவம். ஆலயத்தில் தாலி முடிந்த பின் பெண்ணும் மாப்பிள்ளையும் 'ஜாய் - ரைட்' கிளம்பி விட்டார்கள். அவர்கள் இருபது நிமிடங்கள் கழித்து வரவேற்பு அரங்கில் நுழையும் போது, அரங்கில் குழுமியுள்ள விருந்தினர்கள் மொத்தமாய் எழுந்து நின்று மணமக்களை வரவேற்பதே மரபு.

ஆடம்பரமான அரங்கில் நிர்மலா தன் தந்தையுடன் நுழைந்த போது அவர்களை வரவேற்ற மணப்பெண்ணின் தாய்க்கு வியந்து மாளவில்லை.

'அடடே... ஃபிராக்கில் துறுதுறுன்னு அலைஞ்ச நிம்மிக்குட்டி எப்படிப்பா வளர்ந்தே?... நான் யாரோ மாடல்னு நினைச்சுட்டேன். அப்பாவோடு வந்ததால்தான் இனம் தெரிஞ்சுது - வா-உனக்கொரு வேலை - இந்தச் சந்தனக் கும்பாவைப் பிடிச்சுட்டு வாசல்ல நில்லு. வர்றவங்களுக்கு நீட்டு... இல்லைன்னா அந்த ஹேமா குட்டி துருத்தின பல்லோட வந்து இங்கே நின்னிடும்!' என்றவள் கையில் தங்க முலாம் பூசிய சந்தனக் கும்பாவைத் தர, இவளும் ஆவலாய் வாங்கிக் கொண்டாள்.

கைகளில் பட்டாய்ப் பொதியப்பட்ட பரிசுகளோடு பெரும் புள்ளிகள் வந்தபடி இருந்தனர் - திடீரென வாசலில் தனிச் சலசலப்பு சேர, மணமக்கள்தான் வந்து விட்டார்களோ என்ற ஆவலும்



எதிர்பார்ப்புமாய் நிர்மலாவும் வாசலில் விழிகளைப் பதிக்க, நுழைந்தது ஒரு ஆண்.

மஷ்ரூம் நிற சூட்டில் அவன் தோற்றம் தனித்துத் தெரிந்தது.

'ஹலோ... வாங்க... வாங்க...' என்று பலர் உற்சாகமாய் வரவேற்க, கம்பீரமாய் அரங்கினுள் வந்தவனின் பார்வை ஏனோ விழி மலர நின்ற நிர்மலாவிடமே பதிந்திருந்தது.

இவளுக்குள் விசித்திரமான ஒரு படபடப்பு.

ஆனால் அவனது பார்வை அசராமல் அலுங்காமல் அவள் மேலேயே நிற்க, நெருங்கி வந்தான்.

'எடு... எடுத்துக்கோங்க...' - சலங்கை ஆடிய சந்தனக் கும்பாவை நீட்டினாள்.

'ஷ்யூர் - வித் ப்ளஷர்!' - அவனது ஆண்மையான குரல் அவளை வருடியது.

சந்தனத்தை அவனது விரல் தொட... இவளுக்குச் சிலிர்த்தது!

---

## 4

ஞாயிறு மதியத் தூக்கத்திற்குப் பின் முகத்தின் பிரகாசம் கூடித் தெரிந்தது. மேலுக்குக் குளிர்ந்துப் பெரிய பூக்கள் இறைத்த ஒரு டஸர் பட்டைக் கட்டினாள்.

வாடாமல்லிப் பூக்களின் அதே வண்ணத்தில் கிளிப், கம்மல், கையை நிறைக்கும் வளையல்கள், ஏன்... செருப்புக் கூட உண்டு. பொருத்தம் அழகாய்த்தான் இருக்கும்...

ஆனால் ஒரு வாழாவெட்டிக்கு அந்த அலங்காரம் ஒவ்வாது.

அதுவும் ஒரு ஆண் நண்பனுடன் போகும்போது. ஆக, எளிமையாகவே நிறுத்திக் கொண்டாள்.

மணி நாலரை... பிரசாந் வந்து விடுவான்.

வழக்கமாய் ஞாயிறு மாலைகளை அவள் தந்தையுடன் கழிக்கும் பொழுது.

அன்று கமலம்மாவிற்கு ஓய்வு.

வாரத்தின் அத்தனை நாட்களும் காலையே வந்து சத்திய நாதனை அந்த நாளிற்காகத் தயாராக்கி, வேண்டிய மருந்துகளுடன் உடலுக்கான பிஸியோதெரபி பயிற்சிகளையும் செய்பவைக்கும் கமலம்மா ஒரு நர்ஸ்.

வயது ஐம்பதுகளில் இருக்கும்.

நடிகை பண்டரிபாய் போன்ற கனிவான முகம். பரிவான பார்வை.

நோயாளிக்கான எண்ணெய், மசாலா மிகக் குறைந்த உணவைத் தயாரிப்பதும் கூட அவர்தான்.

சதா ஒரு பெண் தன் அறையிலிருப்பதைச் சத்தியநாதன் அசௌகர்யமாய் உணர்ந்ததால், பெரும்பாலும் அவரை வேறு வேலை சொல்லி அல்லது 'டிவி. பாரும்மா, நல்ல பழைய படம் வருதாம்' - என்று கூறி நாசுக்காய் நகர்த்தி விடுவார்-

கமலமும் புரிந்து ஒதுங்கிக் கொள்வார். எனினும் பிஸியோ தெரபி பயிற்சி வேளைகளில் குரல் சற்றுக் கடுமையாய் உயர்ந்தே ஒலிக்கும்.

'இன்னும் ஆறு முறை இடது காலை ஆட்டணும் ஸர்'

'கை தலைக்கு மேலே போகணும் - இன்னும் உயர்த்துங்க..' என்று கண்டிப்புடன்.



என்றாவது அவர் வராத நாட்களில் வேலு சகலமும் பார்த்துக் கொள்வான் எனினும் வீட்டில் பொறுப்பாய் ஒரு பெண் இருந்தது நிர்மலாவிற்கு வசதி.

அவள் அலுவலக வேலைக்கென வெளியே சென்ற பின், வீடு சற்றுக் கலைந்துதான் கிடந்தது.

கமலம்மா ஆர்வமாய்ப் பொறுப்பேற்று நடத்தினார்.

வாரத்திற்கு ஒரு முறை வீட்டிற்குத் தேவையான பொருட்களைப் பட்டியலிட்டு, வாங்கி அடுக்கி, சமையலுக்கான 'மெனு' சொல்லி, வீட்டின் சுத்தம் காத்து... பேருதவிதான்.

அது தவிர,

'நிர்மலாம்மா, கண் சிவந்து கிடக்குதே - தலைக்கு எண்ணெய் வைக்கட்டுமா?' எனும் கரிசனை வேறு.

'என்ன கமலாம்மா, எனக்கென்ன... ஒருமையிலேயே கூப்பிடுங்களேன்.'

'சம்பளம் தரும் முதலாளியம்மா நீங்க... அதற்குரிய மரியாதையை நான் பதிலுக்குத் தர வேண்டாமா?'

பேச்சோடு நல்லெண்ணெய்க் கிண்ணத்தை எடுத்து இவள் உச்சந்தலையில் எண்ணெயையும் தடவி விடுவார்.

'பேச்சுக் கொடுத்தபடி குழந்தைக்கு ஊசி போடும் வித்தையை என்னிடமும் காட்டறீங்களோ' இவள் சிரிப்பாள்.

'உலகில் எதுக்கு இத்தனை கோடி மனுஷர்னு நினைக்கறீங்க நிர்மலாம்மா... ஒருத்தருக்கொருவர் அனுசரணையாய் உதவத்தான்.. நீங்க தரும் சம்பளத்தில்தான் எங்க வீட்டில் உலை கொதிக்குது....'

'பிரஷர் குக்கர் விசிலடிக்குதுன்னுங்க..!'

'ம்ம்... பதிலுக்கு உங்களை நான் பராமரிக்கணும்.. தேவைகள் இல்லைன்னாலும் மனுஷனுக்கு மனுஷன் கரிசனை காட்டணும்

இதமாய்ப் பேசிக்கணும் அது வேருக்கான மண் மாதிரி ஊன்றி நிற்கும்...

நிர்மலா ஆச்சரியமாய்க் கேட்டுக் கொள்வாள். இப்படியெல்லாம் தத்துவம் பேசக் கூட வருமா கமலம்மாவிற்கு என்று.

'அப்பாவை, கடையின் அத்தனை வேலையாட்களையும் கவனிக்கும் உங்களுக்கு ஏகப் பொறுப்பு... நம்ப கம்பெனியில் யாருக்கேனும் மேலுக்கு முடியலைன்னால் பழம் வாங்கி அனுப்பி விசாரிக்க வரச்சொல்லிங்களாம்... கல்யாணமென்றால் உங்க பரிசுப் பணமும் புடவையும்தான் முதல் வரவாம்...'

'நம்மை நம்பியிருக்கறவங்களுக்கு ஏதோ நம்மாலானது...' விஷயம் வீடு வரை வந்து விட்டதா என்று சற்றுக் கூச்சத்துடனேயே நினைத்துக் கொண்டாள்.

'இத்தனை செய்யும் உங்களை யார் கவனிப்பது...? அதுதான் உரிமையாய் எடுத்துச் செய்றேன்' எனும் கமலம்மா குளித்த ஈரக் கூந்தலையும் கோதிச் சாம்பிராணி காட்டி விடுவார்.

அந்த அக்கறை மனதிற்கு மணமூட்டியது.

'ஞாயிறு ஒரு நாளேனும் லீவ் எடுத்துக்கோங்க, கமலம்மா!'

'முழு நாள் வேணாம்மா... பாதி நாள் விடுப்பு போதும்...'

'தாராளமாய் - உங்களுக்கும் குடும்பம்னு ஒன்றுண்டே!' அப்படிச் சொன்னதை நினைத்த போதும் கூட குணசீலனின், தன் புருஷனின் நினைப்புதான் வந்தது... வாரத்தில் அரை நாளும் கூட மனைவிக்காய்த் தனியே ஒதுக்காத புருஷன் இவன். கெஞ்சலாய் வற்புறுத்திக் கணவனை வீட்டில் இருத்திக் கொண்டாலும் ஃபோன்கள் விடாமல் அலறும்... பேசி மாளாமல் வேலைத் தளத்திற்குக் கிளம்பி விடுவான்.



பதப்படுத்தப்பட்ட மீன்கள் ஏற்றுமதி செய்யும் வியாபாரத்தில் கொள்ளை லாபம்தான் - ஆனால் ஒரு முறை அனுப்பிய சரக்கு, அதாவது 'லாட்' மறுக்கப்பட்டு விட்டால் பெரும் நஷ்டம்.

'ரிஜெக்ட்' எனும் அந்த மறுப்பு வார்த்தை ஏற்றுமதி வியாபாரிகளுக்குப் பெரிய அடி. ஆக மிகக் கவனமான உழைப்புத் தேவை.

அவளுக்கு அது புரிந்தது.

ஆனால் திருமணம் என்பதும் வாழ்வில் ஒரே முறை நேரும் அனுபவம். புதுமண வாழ்வென்பதின் இனிப்பும் கூட அப்படித்தான் - ஒரே முறை வாய்க்கும் சுவை.

அவனுக்கேன் அது புரியவில்லை?

ஏனித்தனை அலட்சியம் என்று உள்ளம் குமுறும்.

'நான்கூடச் செத்த மீனாய் இருந்திருக்கலாம் - இதை விட அதிகக் கவனிப்புக் கிடைக்கும்...'

என்று சண்டைக்கு ஆயத்தமாவாள்.

'இருந்திருக்கலாமே - பேசாமல் சுருண்டு அல்லது விரைத்துக் கிடந்திருப்பாய்...' சிரித்தபடி அவனும் ஏதேனும் ஒரு ஃபோனைக் கையிலெடுப்பான்.

மனிதன் தனியே இருப்பது நல்லதல்ல என்று நினைத்த கடவுளே ஆதாமிற்காய்ப் படைத்த துணைதானே ஏவாள்!

ஆனால் குணாவிற்கு ஏன் பெண் துணை அவசியமாயில்லை?

ஓடி ஓடிப் பணம் குவிப்பது ஒன்றேதானா குறி?

புதுப் பணக்காரர்களுக்கே உள்ள அற்ப புத்தி!

ஒரு வருடம் கழித்து இப்போது நினைத்தாலும்... ச்சே... பல்லை இறுகக் கடித்தபடி அப்பாவின் அறையுள் நுழைந்தாள்.

"அடடே... என்ன ஒரு புவனமே என்னைத் தேடி வந்திருக்குது!" சந்திரமோகன் வாசித்துக்கொண்டிருந்த புத்தகத்தை மூடி வைத்தார்.

வயிற்றின் குறுக்காய்ப் புத்தகம் வைப்பதற்கென்றே ஒரு மர ஸ்டான்ட். பிடிக்க வேண்டிய அவசியமில்லாததால் வலக் கையால் அவரே பக்கங்களைத் திருப்பிக் கொள்வார்.

"என்ன புத்தகம்ப்பா..?"

"சர்ச்சிலுடையது இரண்டாம் உலக யுத்தம் பற்றிய புத்தகம்..."

குடும்பத்தில் நடக்கும் யுத்தம் போதாதா!' என்ற அலுப்புடன், "கனமான புத்தகமாய்த் தெரியுது!" என்றாள் -

'ஏகப்பட்ட விவரங்கள், விளக்கங்கள் - நோபெல் பரிசு பெற்றவரின் எழுத்தில்லையாம்மா?"

"ம்ம் - இங்கிலாந்த் ரொம்ப பாதிப்பிற்கு ஆளாகாமல், உலக யுத்தத்தைச் சீக்கிரமாய் ஒரு முடிவிற்குக் கொண்டு வந்த சாதனையாளரு தெரியும்..."

"இது போன்ற சாதனைகளை எல்லாராலும் செய்ய முடியாது - வாசிக்கவாவது செய்வோமேன்றுதான்.. ரொம்ப நாளாய் ஆசை.. கால் முடங்கின பிறகுதான் அது நிறைவேறுது... பிரசாத்தோடு கன்னாட் போவதாய்..."

"ஆமப்பா இப்ப வந்திடுவான்..."

"ஆமடா... ஆளைப் பாரு..."

அவள் தொடரும் முன் அந்த உற்சாகக் குரல் நுழைந்தது. "குட் ஈவினிங் அங்கிள்... ஹாய் நிம்மி..."

இடப்பக் அறையில் மூலையில் கிடந்த பிரம்பு நாற்காலியைத் தூக்கித் தனக்கு வேண்டிய இடத்தில் இட்டு அமர்ந்தான்.

"எப்படியிருக்கீங்க அங்கிள்?"



"இருக்கேன் - இருந்த இடத்திலேயே என்னென்ன செய்ய முடியுமோ. அதை யெல்லாம் செய்திட்டிருக்கேன்."

வீட்டில் அடைபட்ட பின் அப்பாவிற்கு வெளிநபர்கள் தன்னைத் தேடி வந்து விட்டால் உற்சாகம்தான்... ஆனால் இப்போது அந்த வழக்கமான மகிழ்வு தெரியவில்லை...

ஏதோ சொல்ல ஆரம்பித்தாரே...

பிரசாத்தைப் பற்றிய நெருடலோ?

ஏற்கெனவே அப்பாவிடம் அதற்கான விளக்கத்தை அவள் தந்ததுண்டு.

'பிரசாத் நல்ல நண்பன்ப்பா - காலேஜில் படிச்சபோது எப்படியோ அப்படியேதான் இன்று வரைக்கும். என் கல்யாணத் தப்ப எப்படி ஓடி ஓடிச் செய்தான் - முந்தின இரவு முழுக்க சர்ச்சில் இருந்து பூ அலங்காரம் செய்தது நினைப்பில்லை? கோயிலின் ஒவ்வொரு தூணையும் பெங்களூர் ரோஸஸ் ஊட்டி ஆஸ்பாரகஸ் இலை கொண்டு கட்டி அமர்க்களமாய்... அன்று தன் சிநேகிதி தன் வாழ்க்கைத் துணையுடன் இணையும் சந்தோஷம்... இன்றோ அவளின் வாழ்வு திருப்தியாய் அமையவில்லையே என்ற ஆற்றாமை... அதனால் ஆறுதல் தரத் தேடி வருகிறான்... அவ்வளவு தான்!' என்ற ரீதியில் தகப்பனைத் தேற்றியதுண்டு.

ஆனால் அவ்விளக்கம் அப்பாவிற்கு மட்டும்தான்-

ஏனெனில் பிரசாத் முன்னைப் போலில்லை...

ஆற்றாமை, ஆறுதல் எல்லாம் இவள் குணாளனைப் பிரிந்து வந்த ஆரம்ப வாரங்களுக்குத்தான் தாக்குப் பிடித்தது. இப்போது தோழமையின் எல்லையைச் சற்றுத் தாண்டுகிறானோ... மேலும் நெருங்க முயற்சிக்கிறானோ என்ற நெருடல்...

ஆனால் இவளுக்குப் பிரசாத் மட்டுமல்ல, வேறு எந்த ஆணிடமும் தன்னையே தருமளவான ஈர்ப்பு ஏற்படப் போவதில்லை...

மறக்க ஒதுக்க முயன்றும் இன்னும் குணா தன்னைத் திருமண வீட்டில் பார்த்த அந்தப் பார்வையே இதயத்துள் வந்து நின்று குடைகின்றது.

மலரைக் குடையும் வண்டாய்...

அன்று கிடைத்த அதே பரவசப் படபடப்பை இன்றும் மனம் உணருகிறதே...

'சிறகுகள் இருந்தென்ன?

பறக்க மறந்தன

விழி வண்டுகள்!'

சமீபத்தில் வாசித்து ரசித்த புதுக் கவிதை.

சிறகுகளாய் இமைகள் இருந்தும் அன்று இமைக்க மறந்தனவே, வண்டு விழிகள்!

சந்தனத்தை நாசுக்காய்த் தொட்டு இரு கைகளையும் குணசீலன் தேய்த்துக் கொண்ட போது பரவிய நறுமணம் கூட விசேஷமாய்த் தோன்றியது!

19 வயது நிர்மலாவிற்கு இந்தக் கிறக்கம் புதியது.

'இதென்ன அர்த்தமற்ற பரவசம்!' என்றவள் தன்னையே அதட்டிய பிறகும் மனம் அலைபாய்ந்தது!

அவன் எங்கே போய் உட்காருகிறான்... யார் யாரிடம் பேசுகிறான் என்பதை எல்லாம் நோட்டமிட்டது.

எப்படி நிற்கிறான்... அம்பு போல எத்தனை நேரான விரைவு நடை என்று வியந்தது.



அலட்டாத பேச்சு... ஆழமான குரல்...

பிறர் பேசும் போது சற்றே தலை சாய்த்து உன்னிப்பாய்க் கவனிக்கும் நேர்த்தி.

வாய்விட்டுச் சிரிக்கும் போது தெறித்த கவர்ச்சியில் மாய்ந்தே போனாள்..!

இது தான்தானா?

இப்படி நிலாவைப் பார்த்துப் பிரமிப்பில் பால் சாதத்திற்காய் வாய் திறக்கும் பாப்பாவைப் போலாகிப் போனது தான்தானா என்ற குழப்ப நிலை.

சிந்திய துளி தேனில் போய் அமர்ந்து மீள முடியாமல் ஒட்டிக் கொண்ட ஈயைப் போல...

இனிப்பான துன்பம்... இனிய பதட்டம்.

---

# 5

இது சரியில்லையே...

அப்படியொன்றும் வெகு இளைஞனில்லை.

முக்கியமாய்ப் பிரம்மசாரியாய் இருக்க வாய்ப்பில்லை... அப்படியிருக்க இப்படித் தான் வாய்பிளப்பது சரியேயில்லை!

தான் மட்டுமல்ல, அங்கிருந்த அத்தனை பேரின் விழிகளும் அவனையே மொய்த்தெடுத்தனவே...

பெரிய மனிதர்களும் எழுந்து வாயெல்லாம் பல்லாக வரவேற்று மனதில் சாதித்தவனை.. இத்தனை காலம் தனிக்கட்டையாக இருக்க விடுவார்களா?

இவர்களில் திருமணம் பேசி முடிக்கப்படும் முறையை வெட்கப் புன்னகையுடன் நினைவு படுத்திக் கொண்டாள்.

ஞாயிறு காலை ஆராதனை முடிந்ததும், வெளியே அனைவருக்கும் தேநீர் உண்டு. வருபவர்கள் ஆளுக்கொரு திசையில் பறந்து விடாமல் ஒருவருக்கொருவர் பேசிப் பரிச்சயப்பட்டுக் கொள்ளவே அந்தத் தேநீர்.

அதற்கு நல்ல பலனுமுண்டு.

முன் பின் அறியாதவர்களும் கூட ஒரே ஆலயத்திற்கு வழிபட வருகிறோம் என்ற சிநேகித்தோடு புன்னகைத்துப், பேசிக் கொள்வார்கள்.

வேலை பற்றி, தங்கள் பிள்ளைகள் - அவர்களின் படிப்பு, விளையாட்டு என்று பேச்சு வளரும்.

பிறகு 'இன்று ஈவ்னிங் டீக்கு வீட்டிற்கு வாங்களேன். ரெண்டு தெரு தள்ளித்தான் இருக்கோம்.' என்று நெருங்கி விரைவில் ஒரே குடும்பம் போலாகி விடுவார்கள்.

தேநீர் நேரப் பேச்சு மேலும் உற்சாகமாய், உறவோடு இருக்கும். நிர்மலா கவனித்ததில் பேச்சு பெரும்பாலும் பெண்ணிற்கு மாப்பிள்ளை, பையனுக்குப் பெண் தேடும் படலம்தான்.

'எங்க திலீப் இப்ப எம். எஸ். பண்ணிட்டிருக்கான். வயது இருபத்தெட்டாச்சு - ஆகச் சீக்கிரம் நல்ல பெண்ணாய்ப் பார்க்கணும்.. உங்களுக்குத் தெரிஞ்சால் சொல்லுங்க.'

'என் நம்ப பிரிட்டி பெண் இருக்காளே', 'ஆன்ட்டி...'

'யாரு? கொயர்ல பாடுமே.. அதுவா?'



'என்ன இழுக்கறே? பாடுவதோடு சமைப்பா, பத்தீக் போடுவா, பார்க்கவும் ஸ்மார்ட்.. பிறகென்ன?'

'கொஞ்சம் அலட்டுமென்னு...'

'இந்தக் காலப் பட்டணத்துக் குட்டிகள் எல்லாம் அலட்டல்தான். அதில் இவ கொஞ்சமாய் அலட்டறான்னு நீயே சொல்லிட்டே.. பிறகென்ன?'

இப்படி எடுத்துக் கொடுத்த சம்பந்தம் மும்முரப்படும். சற்று அழகாய் ஒரு பெண்ணும் ஆற்றலாய் ஒரு ஆணும் தெரிந்து விட்டால், முடிச்சுப் போடப் பெரியவர்கள் ஆயத்தமாகி விடுவார்கள்.

அழகு, ஆற்றல் இல்லாமலே போனாலும் கூடக் கல்யாண வயதை எட்டி விட்டால் மெனக்கெடுவார்கள்.

இவர்.... இந்தக் கம்பீரமான ஆணை இதற்கு முன்பு சென்னையில் எங்குமே பார்த்ததில்லை.

ஆனால் எங்கேயிருப்பினும் அந்த ஊர்ப் பெருசுகள் இவனைத் தனியே விட்டு விடுவார்களா - என்ன?

அப்படிக் கால்கட்டுப் போடப்பட்டவன் இங்கு தனியாய் ஏன் வரவேணும்?

மனைவி கர்ப்பிணியோ... அல்லது சிறு குழந்தைகளுடன் வர முடியாத நிலையா?

ஓர விழிகள் அவனையே படித்தாலும், மனதைக் கட்டுப்படுத்த முயன்றாள்.

'கண் போகும் பாதையில்

கால் போகலாமா?

கால் போகும் பாதையில்

மனம் பேசுமா?'

பழம் பாட்டுக்களின் தத்துவம் லேசானதல்லவே!

ஆனால் மனம் கட்டுப்படுவதாயில்லை!

ஒரு மாதத்திற்குப் பிறகு தன் முதலாளியைக் கண்டு விட்ட நாயைப் போல ஏகத்திற்குத் துள்ளியது அது...

கண்ணை இழுத்து விலக்க, காது விடைத்துக் கொண்டது.

அவனைப் பற்றிப் பிறர் பேச, மேனி முழுவதும் செவியானது போலக் கவனித்தாள்.

பெயர் - குணசீலன்.

வியாபாரத்தில் இள வயதிலேயே நிறையச் சாதித்தவன்.

இருப்பது மும்பையிலும் கோவாவிலுமாய்.

அண்மையில் சிங்கப்பூர்த் தமிழர்கள் அவனை அங்கு அழைத்துப் பாராட்டு விழா நடத்தினார்களாம்.

ஆனால் எல்லாவற்றையும் விட அதி முக்கியம்...

அவர்... அவன்... பிரம்மசாரி. தேனில் அமிழ்ந்த ஈயானாள்!

'சாப்பிடலாமாடா, நிம்மி? விருந்து ஆச்சன்னா கிளம்பிடலாம்...' என்று அழைத்த அப்பாவிடம்.

'இல்லப்பா... கல்... கல்யாணம் சுவாரஸ்யமாயிருக்குது.' மகளின் உற்சாகம் தகப்பனையும் தொற்றிக்கொண்டது. தாயிருந்தால் மகளை வா விசேஷங்களுக்கு விதவிதமாய் அலங்கரித்துக் கூட்டிப் போயிருப்பாள் - இவர் திருமணங்களில் கடனே என்று தலை காட்டிவிட்டுக் கிளம்பியதில், மகளையும் உடன் அழைத்துப் போய் ஊரோடு உறவாட விட வேணும், விசேஷ வழிமுறைகளை அவள் கண்டு பழக வேணும் என்பதெல்லாம் உறைக்காமலேயே போனது.



நிர்மலா அரங்கில் அங்கும் இங்குமாய் ஓடித் திரிந்ததை ஆனந்தமாய்ப் பார்த்திருந்தார்.

தாயின் புடவை, நகைகளில் எத்தனை அம்சமாய் இருக்கிறாள் குழந்தை...

அதே சமயம் அவள் முழுதாய்க் குழந்தையும் அல்ல என்ற எச்சரிக்கை மணியும் கூடவே ஒலித்தது.

விரைவில் தன் வீட்டிலும் இப்படிப் பிரம்மாண்டமான கல்யாண வைபவம் நடக்க வேணும்.

மாப்பிள்ளைக்காக... நண்பர்களிடம் சொல்லி வைப்பது நல்லது.

அன்றிரவு அவர்கள் வீடு திரும்ப வெகு நேரமானது.

மறுநாள் சனிக்கிழமை.

கல்லூரி இல்லை.

முந்தின இரவு படுத்து வெகு நேரம் உறக்கம் பிடிக்காமல் படுக்கையில் புரண்டு நிர்மலா விடிந்த பிறகும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள்.

கதவைத் தட்டி வேலு அவளை எழுப்பியபோது எரிச்சலாய் உருண்டாள்... மசமசப்பாய் நினைவிற்கு வந்த இரவின் கனவுகளில் திளைத்துத் தலையணையைக் கட்டிக் கொண்டாள்.

'பாப்பா... கீழே வருவீங்களாம்...'

'நோ, வேலு... எனக்குப் பசிக்கலை.'

'சாப்பிடறதுக்கில்லைம்மா. வீட்டுக்கு விருந்தாளி வந்திருக்காங்க!'

வேலு முடிந்தளவு குரலைத் தணித்துச் சொல்ல, இவளுக்குத் தான் எழ வேண்டியதின் அவசியம் புரிந்தது. எழுந்து, உடம்பை உதறி விட்டு, கதவைக் கால்வாசி திறந்து வினவினாள்.

"யாரு... வேலு?"

சுழித்த அவளது முகம் பதிலைக் கேட்டதும் திகைத்துப் பின் மலர்ந்தது.

"புது ஆளுங்க... பேரு... சீலன்... குணசீலனுங்களாம்..."

பன்னீரில் குளித்தது போல இவளுக்கு முழு விழிப்பு வந்தது..!

❖ ❖ ❖

**கா**ரில் பயணித்த அரை மணி நேரமும் இவள் தன் நினைவுகளிலேயே அமிழ்ந்திருந்தாள்.

'இந்த வடாமல்லி கலர் உனக்குப் பிரமாதமாய் சூட் ஆகுது நிம்மி' என்ற பிரசாத்திற்கு ஒப்பிற்கு ஒரு நன்றி சொன்னவள், தன் கணவனைச் சந்தித்த அந்த நிகழ்வை அசைபோட்டு ஆழ்ந்து போனாள்.

கண்களையும் மூடிக்கொண்டதால் இவளைப் பிரசாத் மேலும் பேசித் தொல்லைப் படுத்தவில்லை.

அந்த நவீன அரங்கம் நிரம்பியிருந்தது. மேற்கத்திய பாரம்பரிய இசை பற்றி அதில் எத்தனை பேருக்குத் தெரியுமோ அல்லது அதற்கான ரசனை உண்டோ... தெரியவில்லை.

'நேற்று ஆஸ்ட்ரியன் கான்சர்ட் போனேன்.' என்று அலட்டிக் கொள்ளவே பலர் அங்கு வந்திருக்கக் கூடும்!

நிம்மிக்கு ஓரளவு ரசனை உண்டு எனினும் இன்று உயர் இசைக்கான மனோநிலை இல்லை. தலை கனத்தது.

கணவனைப் பற்றி நினைத்தாலே இப்படி இறுகிக் கனத்துத்தான் போகிறது.

நாசியின் அருகே காபி மணம்...



'ஒரு தூக்கம் போட்டியே. காபி குடி. பிரஷ்ஷாய் இருக்கும்!' நீட்டியது பிரசாத்.

நன்றியோடு வாங்கிக் கொண்டாள்.

ஆனால் பருகிய காபி சுவையாய் இல்லை. அன்றைய சந்தர்ப்பத்திற்காய் 20 ரூபாயில் விற்கப்பட்ட அது மீண்டும் மீண்டுமாய்ச் சூடுபடுத்தப்பட்டதில் சுவை வேறுபட்டிருந்தது. அழகிய மெல்லிய சைனா கப் - ஆனால் அதிலிருந்த பானம் படு மோசம்.

இரண்டாவது வாய்க்கு மேல் இறங்க மறுத்தது.

பிரசாத்தின் கோப்பை முக்கால்வாசி காலி!

"காபி சரியில்லையே...?"

"சூடாய் இருந்தால் எனக்குப் போதும், நிம்மி!"- என்றபடி கோப்பையைக் காலி செய்தான்.

"இருபது ரூபாய் வேஸ்ட்... ஸாரி... என்னால் குடிக்க முடியலை..."

"விடு. விலை கூடுதல் என்பதால் தரமும் கூடத்தான் இருக்க வேண்டும் என்பதில்லையே..." - கண் சிமிட்டலுடன் இவளது கோப்பையையும் வாங்கிக் கொண்டு நகர்ந்தான்.

இளம் வயதிலேயே அதிகம் சாதித்தவன் - கடல் கடந்து வியாபாரத்தில் பணத்தைக் குவித்தவன் என்பதால் குணசீலன் இதமான புருஷனாய் இருக்க முடிந்ததா?

இல்லையே.. அதைப் போலத்தான் என்று பெருமூச்சு விட்டாள். மனைவியின் மனம், ரசனை அறிந்து, அதற்கேற்றாற் போல ஒரு நாள், நேரம் நடந்ததில்லையே...

தேடி வந்து பெண் கேட்டவன்.

"நீ இல்லாவிட்டால் என் வாழ்வே சூன்யமாகிப் போயிருக்கும்!" என்று பேத்திப் பெண்டாட்டியைக் கொண்டாடியதில்லை!

கொண்டாடிய குணசீலன் ஒரு நல்ல... ஏன், ஒரு சராசரிக் கணவனாய்க் கூட இருக்க முடியவில்லை. கோடிகளைக் குவித்த அவனுக்கு ஒரு பெண்ணின் மனதை வெற்றி கொள்ள முடியவில்லையே.

இதுவே வெற்றிதானோ?

பிரிந்து பல மாதங்களாகியும் சதா கொண்டவன் பற்றிய நினைப்பு பேசிப் பேசியே நின்று மருகுவது அவனுக்கு ஒரு வெற்றிதானோ?

சாந்த மனதை வேறு திசைக்கு நகர்த்த முயன்றாள்.

அதற்குள் இசை நிகழ்ச்சியும் ஆரம்பித்தது.

மேடையில் ஜூடே போர்தான்.

பிரதானக் கலைஞர் வயலினில் காட்டிய வேகமும் நளினமும் அசாத்தியமாய் இருந்தன.

கலை சற்று நேரம் அனைவரையும் கட்டிப் போட்டது. நிகழ்ச்சியின் இடைவேளையின் போது ஏறக்குறைய சிறுமி போலத் தோன்றிய அக் குழுவின் பெண், தன்னை விடப் பெரிதான செலோ வாத்தியத்தை இழைத்த சாமர்த்தியத்தைப் பலர் சிலாகித்துப் பேசினார்கள்.

ஆனால் பிரசாத் இவளிடம் கேட்டதென்னவோ,

"ஐஸ் க்ரீம் வேணுமா, நிம்மி?" என்பதுதான்.

"ஒன்றும் வேணாம்ப்பா..."

பிரசாத் மறுபேச்சின்றி வெளியே போனான்.

ஐஸ்க்ரீம் சாப்பிடுவதற்காகத்தான் இருக்கும்!



அவனது ஐந்தடி எட்டங்குல உயரத்திற்குத் தொண்ணூறு கிலோ எடை அதிகம்தான். ஆனால் பருமனைப் பற்றிய கவலையே இன்றிச் சதா எதையாகிலும் மென்றபடியே இருப்பான். எல்லாருடைய பேரன்களையும் போல அவனுக்குக் குழந்தைத்தனமான உப்பிய கன்னங்களும், வெளித்தள்ளும் இளந்தொந்தியும் உண்டு. நண்பன் சதா எதையாவது வாயிலிட்டு அரைத்துத் தள்ளுவதில் இவளுக்குத் தான் அலுப்பு.

"என்ன பிரசாத் இது - வயிறு என்னத்திற்காகும்..?" என்று புத்தி சொன்னால், கண்களை உருட்டுவான்.

"பட்டினி கிடந்தால் மட்டும் என்னத்திற்காகும்?"

குணசீலன் அநாவசியமாய் ஒரு பருக்கையை வாயில் இட்டுவிட மாட்டான்.

பார்ப்பவர்களைச் சற்றே பொறாமைப்பட வைக்குமளவில் கச்சிதமான உடல்வாகு. வீட்டில் செய்யும் இருபது நிமிட உடற்பயிற்சியும் அளவு மீறாத உணவும்தான் காரணங்கள்.

கணவனின் உடற்பயிற்சியை முதன் முதலில் அருகிருந்து கண்டவள்-

"நீங்கள் ரெகுலராய் ஜிம் போவீங்களென்று நினைச்சேன்..." என்று இழுத்தாள்.

"அவசியமில்லை... இதோ இந்த எக்ஸர்ஸைஸை நீயும் செய்யலாம். வயிறு பருக்காது - ஜிம்மிற்குப் போய் உடை மாற்றி, வியர்த்து பின் துடைத்து வீடு திரும்பக் குறைந்தது ஒரு மணி நேரமாகும் - உபகரணங்களில் எனக்கு ஈடுபாடு இல்லை.. தவிர நேர விரயம்..."

திருமணத்தன்று ஆக்ஸ்ஃபர்ட் நீல சூட்டில் எத்தனை கம்பீரமாய் நின்றான்!

வெளிர் ரோஜா வர்ண டிஷ்யு சேலையில் இவள் கொடி போலிருந்தாளாம்... கணவனின் அருகே தேரில் சுற்றிய பூங்கொடி போலிருந்தாய்ப் பாராட்டு வந்தது - அனிதா ஆண்ட்டியிடமிருந்து அதாவது பிரசாத்தின் தாயிடமிருந்து. ஆனால் விரைவில் கொடி தேர்க்காலில் நசுங்கிப் போனது...!

---

## 6

“என்ன, நீ... சதா ஏதோ யோசனையிலேயே இருக்கே...! பிஸினெஸ் பிரச்னைகளை ஆபிஸோட விட்டுப் பூட்டிட்டு வந்திடணும் நிம்மி” என்றான் பிரசாத் - கோனின் எஞ்சிய பகுதியை ஒரே வாயில் அமுக்கியபடி.

பாவம், தான் வியாபாரச் சிக்கல்களில் குழம்பிக் கொண்டிருப்பதாய் நினைக்கும் நண்பன்.

இதுவே ஒரு தோழியாக இருந்திருந்தால் 'பொட்'டென்று அடித்திருப்பாள்.

'வேண்டாம்னு பிரிஞ்சு வந்துட்டே... இனி அவரையே நினைச்சு ஆகப் போவதென்ன - விடு!' - என்று

நினைவு விருந்தாளிகள் இதயச் சத்திரத்திற்குள் இஷ்டம் போல வந்து போகின்றனர்... தாழ் போட முடியவில்லை.

“நீ சொல்லு, பிரசாத் - உங்க வியாபாரம் எப்படிப் போகுது? உன் கடை விளம்பரம் டி.வியில் அடிக்கடி வருதே...”

“ம்... புதுக்கடை இல்லையா? கடையின் பெயர் மக்கள் மனதில் பதியணுமே... அதுவரையில் காசு இப்படிக் கரையணும்தான்.”



பிரசாத்தின் குடும்பத்தினர் பல காலமாய்ச் சிங்கப்பூரில் தொழில் செய்து வந்தவர்கள். அங்கு ஆரம்பித்த புடவைக் கடையின் மூலம் பெண்களின் புடவை மோகத்தை நாடி பிடித்துப் பார்த்த அவனது தந்தை சென்னையிலும் ஒரு விசாலமான ஷோ ரூமை ஆரம்பித்தார். சிங்கப்பூர்க் கடைகளை மாப்பிள்ளைகள் பொறுப்பேற்றுக் கொள்ள, இனியேனும் தான் தன் மனைவி கடைக்குட்டி மகன் பிரசாத்துடன் தமிழ்நாட்டில் தங்கிவிட வேணும் என்ற நியாயமான ஆசையில் இங்கு துவங்கிய வியாபாரம். கடை முழுவதுமாய் நிமிரும் வரை தான் தோள் தந்தால் போதும், மீதி மகனின் பொறுப்பு என்பது அவர் கணிப்பு.

பிரசாத் தன் கடைக்குப் போவது தவறினாலும், நிர்மலாவிற்கு ஃபோன் போடுவதும் இவளை நேரில் பார்த்து, வெளியே எங்கேனும் அழைத்துப் போவதும் தடைப்படாது.

“உனக்கு என்ன பிரச்னைன்னாலும் நான் இருக்கேன், நிம்மி. தயங்காதே - என்ன?” - உரிமையாய் அதட்டுவான்.

ஆனால் இவளுக்கு அப்பா போதுமாய் இருந்தார்.

சின்னச் சின்னச் சந்தேகங்களுக்குக்கூட உடனே அவரிடம் தொலைபேசி மூலம் விளக்கம் கேட்டுத் தெளிவாள்.

சற்று நேரமானாலும் தந்தையுடன் பேசிய திருப்தியும் கூட...

இசை நிகழ்ச்சியின் நிறைவுப் பாடலாய் 'நீல டான்யூப்' என்ற பிரபல பாட்டின் இசை.

“இதை எங்கள் நாட்டில் இசைக்க, அனைவரும் எழுந்து வால்ட்ஸ் நடனம் ஆடுவோம்!” என்றார் குழுவின் தலைவர்.

மிக மென்மையான நதி ஓட்டம் போன்று உற்பத்தியான இசை, ஆடிவெள்ளத்தின் இரைச்சல் போன்ற கரவொலியுடன் நிறைவு பெற்றது.

யாரும் ஆடவில்லையானாலும், பலர் எழுந்து நின்று ஜோடியாய்க் கைகோர்த்தபடி அப்பாடலை ரசித்தார்கள்.

நிகழ்ச்சி முடிந்து கலைந்த கூட்டத்தில் பல பரிச்சயமான முகங்கள் இருப்பினும், யாரிடமும் நின்று பேசும் மனநிலையில் அவளில்லை-பேச்சுத் தந்தாலும்,

'ஓ.. நீ பிரசாந்தோடு வந்தாயா?' என்று இழுக்கக் கூடும்.

இவளுக்கு இப்போது எல்லாமே அனர்த்தமாய்ப் படும் நிலை. ஆக விரைவாய்க் காரை நோக்கி நடந்தாள்.

பூட்டிய அறைக்குள்ளும் தூசு சேர்ந்தானே செய்கிறது...?

இருந்தும் சாத்திய மனக் கதவையும் மீறிக் கணவன் பற்றிய நினைவுகளே மண்டி, நிறைந்து மூச்சடைக்க வைத்தது.

பிரசாந்தின் பிரச்னை வேறு.

“எங்கே சாப்பிடலாம், நிம்மி?” கேட்டான்!

“சதா ஏதோ மென்னுட்டிருந்தே?” பதிலுக்குக் கேட்டாள்.

“அது நான் - நீ ஏதும் சாப்பிடலையே - உனக்குக் கம்பெனி தருவதற்காய் நான் ஏதேனும் பிரியாணி, பரோட்டான்னு லைட்டாக் கொறிக்கறேன்...”

தன்னையும் மீறிச் சிரித்தாள்.

“நீ சாப்பிடலைன்னாலும் பரவாயில்லை - அடிக்கடி சிரி. ரொம்ப உம்மணாம் மூஞ்சியாய் ஆயிட்டு வர்றே...”

“ப்ச்.. இப்ப சிரிக்கிறது போல என் வாழ்வில் என்ன இருக்குது பிரசாந்.. வலியச் சிரிச்சால்.. அது இளிப்பு.. நல்லாயிருக்காது - அப்பாக்கு ஸ்ட்ரோக் வந்த பிறகு எனக்கு ஆபீஸ் பிரச்னை வேறு... ஏதோ சமாளிக்கறேன்...”

சன்னக் குலுக்கலுடன் சிக்னலில் கார் நின்றது.



சிக்னலின் சிவப்பு ஒளியில் ஒரு மாயத் தேவதை போலத் தெரிந்தவளை உற்றுப் பார்த்தான்.

“ரிலாக்ஸ், நிம்மி - நீ அடிக்கடி இப்படி வெளியே வரணும் - சிரிச்சுப் பேசணும்...”

“அது வம்பாய் முடியும்.... இப்படியே வண்டி போனால் போதும்.”

“எதை வம்புன்ற? பிறரோடு பழகுறதையா? ஆனா, நீ எப்படி இருந்தாலும் நான் உன்னை ரசிக்கிறேன்...”

மாறிய நிறம் கண்டு வாகனங்கள் சீறிக் கிளம்பின - பேச்சின் போக்கை மாற்ற விரும்பினாள்.

“சரவணாவ்ல சாப்பிடலாமா? நான் காரிலேயே இருந்துக்கறேன் - இடியாப்பம் போதும்...”

“உன்னிஷ்டம்-அப்ப நான் ரொம்ப லைட்டாய் பூரி, நெய் ரோஸ்ட் புட்டுன்னுதான் கொறிக்க முடியும்...” பெரிய தோள்களைக் குலுக்கியபடி இறங்கினான்.

சாப்பிட்டு, நகரின் நெரிசலைத் தாண்டும் வரையில், சின்னச் சின்னப் பேச்சுக்கள்.

எப்படி ஆரம்பிப்பது என்று யோசித்திருப்பான் போலும். எப்படிக் குளத்தில் குதிப்பது எனத் தயங்கி, பின், ஒரே வீச்சாய்ப் பாய்வது போலத் ‘திடுதிப்’ எனக் கேட்டான்.

“நீ... நீங்க பிரிஞ்சு அரை வருஷமாயாச்சு இல்ல.. நிம்மி?”

“ம்ம்...”

இதுவரை இவன் தன் கணவனைப் பிரிந்தது பற்றி அதிகம் பேசியவனில்லை. காரணங்களைத் துருவாதவன்...

“விவாகரத்திற்கு முயற்சி பண்ணலாமே...”

இவளுக்கு மூச்சு சற்றுத் திணறியது. படபடத்தது. இன்றும் பலர் அவன் கொண்டவளுடன் சேர்ந்து வாழ்வாள் என்று கனாக் காண இவன் என்ன இப்படிப் பேசுகிறான்..!

"இல்லை. வேணாம்..."

"ஏன்?"

"நம்மில் விவாகரத்து சகஜமில்லை. சாத்தியமேயில்லையென்று கூட அப்பா சொல்வாங்க..."

பதிலைத் தகப்பன் மீது இட்டாள்.

திருமணத்தன்று ஆண்டவன் சந்நிதியில் நின்று,

'வாழ்விலும் தாழ்விலும் மரணம் நம்மைப் பிரிக்கும்வரை பிரிவதில்லை' என்று ஒருவருக்கொருவர் வாக்குக் கொடுத்தது மறக்குமா?

ஆனால் மரணம் பிரிக்கும்வரை குணாவின் அலட்சியத்தை, அன்புக் குறைவைச் சகிக்க வேண்டுமா?

அவரிடம்... ஆழம் அறியாத குளத்திலின்று குமிழ்கள் கிளம்பி மேற்பரப்பில் வெடிப்பது போல, பிறரிடம் பகிர முடியாத வேறு காரணம் ஒன்றும் குமிழிட்டது.

யாரோடும் பகிராமல் தன்னுள்ளேயே பொத்தி வைத்துப் புண்ணாய்ப் போன காரணம்..!

"நம்ப இந்திய கல்யாண சிஸ்டமே சரியில்லை, நிம்மி!" - சிடுசிடுத்தான். "பெற்றோர் பார்த்து இவன் நம் பெண்ணிற்குப் பொருத்தமானவன் என்று நினைப்பவனை மாப்பிள்ளையாக்கி விடுவது. பழகிய பிறகு பல வேண்டாத விவரங்கள் வெளிவர, "ஐயோ போச்சே.. அம்மா நோகுதேன்னு புலம்பறது..." நண்பன் சொன்னதை இவளால் முழுக்க ஆமோதிக்க முடியவில்லை.

இவள்தான் குணாவைப் பார்த்த முதல் பார்வையிலேயே இதழோரம் தெரிந்த அச்சிறு சிரிப்பில் மதிமயங்கிப் போயிருந்தாளே.



பிறகு மறுநாள் காலை கனவில் வந்தவன் வீடு தேடி வந்தபோது என்னவொரு பரபரப்பு.. குதூகலம்..!

நைட்டியின் மேலேயே சாட்டின் ஹவுஸ் - கோட்டைப் போர்த்தியபடி, தோற்றத்தைச் சற்றுச் சீராக்கிக் கொண்டு எத்தனை ஆர்வத்துடன் கீழே பறந்தாள்.

போய்க் குணசீலனின் முன் நின்று முகமெல்லாம் பரவசமாய் அவனைப் பார்வையால் விழுங்கியது நேற்று நடந்தது போலுண்டு..

'வாங்க.. எங்க வீடு எப்படித் தெரிஞ்சது?'

இயல்பாகப் பேசுவதாய்க் காட்டிக் கொள்ள முயன்றவளின் முழங்கால்கள் உதறி நடுங்கின.

'விசாரித்தேன்!' - மொட்டையாய்ப் பதில் வந்தது.

அதிகம் பேசுவதில்லை போலும், என்று நினைத்தாலும், வேல் போலக் கூர்மையாய்த் தன்னைக் கூறு போட்ட அவனது பார்வையைத் தாள முடியாமல் தலை குனிந்தாள்.

அப்பா முன்தின திருமண வைபவத்தைப் பற்றி ஏதோ பேச-

'ம்ம்... நேற்றைக்கும் இன்று பார்ப்பதற்கும் ஏக வித்தியாசம்!' என்றவனை மெள்ள நிமிர்ந்து பார்த்தாள்.

பளபளவென்ற அவன் பார்வை தீயாய்த் தகித்தது.

'நேற்று படுக்க லேட்.. அதான் எழவும் நேரமாயிடுச்சு. என்ன சாப்பிட்டீங்க?'

அவனது இடது புருவம் சற்றே உயர்ந்தது.

'சாப்பிட்டாச்சு,' என்று காலிக் கோப்பைகளைச் சுட்டினான். சில நிமிடங்களில் 'விருட்'டெனக் கிளம்பிவிட்டான்.

வாசல் வரை உடன் நடந்த இவளது தந்தையிடம் தாழ்ந்த குரலில் ஏதோ சொன்னவன், இவள் புறமாய்த் திரும்பவுமில்லை.

அவளது பென்ஸ் வாசலை விட்டு வழுக்கி மறைந்த பின், கண்டதெல்லாம் கனவென்றே தோன்றியது.

உடம்பு வெலவெலத்திருந்தது.

அப்பாவை ஒட்டி நின்று கொண்டாள்.

'என்னப்பா..? திடீர்னு வந்தார்.. சட்டுனு கிளம்பிட்டார்!'

'எனக்குப் புரியலைடா.. அவர் கேட்ட விஷயமும் அப்படித் தான்..'

'வியாபாரம் சம்பந்தமாய் வந்தாரா?'

'இல்லைடா - சம்பந்தியாகணும்னு...' சொன்னவர், சொன்னது தப்பு என்பதாய் விழித்தார்.

'அப்படின்னா?... ப்ளீஸ்.. விஷயத்தைச் சொல்லுங்கப்பா!' தந்தையின் கையை ஆட்டிக் குழந்தை போல் வினவினாள்.

"உன்னைப் பெண் கேட்டார்... தனக்கு மனைவியாய் நீ வரணும்னு பிரியப்பட்டது போலப் பேசினார்... யோசிக்கக் கொஞ்சம் அவகாசம் தேவைன்னு கேட்டுக்கிட்டேன்.. உன்னைப் பார்க்கப் பிரியப்பட்டது போலப் பட்டதினால் வேலுவை உன்னைக் கூட்டி வர அனுப்பினேன்... ஆனா..."

'முழுசாய்.. சீக்கிரம் சொல்லுங்கப்பா...'

தன் முகம் சூடாகிச் சிவந்திருந்தது அவளுக்கே தெரிந்தது. 'திரும்பிப் போனபோது.. நான் கேட்டதை மறந்திடுங்க - அது சரி வரும்னு தோணலைன்னுட்டார்..'

உப்பித் திரண்ட பலூன் குத்துப்பட்ட கதை!

உடைந்த குரலில் மிக மெள்ளக் கேட்டாள் - 'என்னவாம்?'

'காரணம் ஏதும் சொல்லலைடா.. வார்த்தைகளை எண்ணி, அளவாப் பேசறார்.. நினைப்பில் நானும் ஏதும் கேட்டுக்கலை...'



இப்போது அவளுக்குள் கோபம் கிளர்ந்தது.

'இதென்னப்பா வம்பு? நேற்றுதான் நம்மை முதன்முறையாய்ப் பார்த்தார் - மறுநாள் தூங்கி விழிக்கறதற்குள் பெண் கேட்டு வீட்டிற்கே வந்துடறது - ஐஞ்சாம் நிமிஷம் வேணாம்னு கிளம்பறது - ஏம்ப்பா.. ஆள் கொஞ்சம் பைத்தியமோ!'

ஆத்திரத்தில் வெடித்தாள்.

'ச்சேச்சே... குணசீலனுக்குப் பெரிய பேரம்மா - குணத்திலும், சீலன்னுதான் கேள்விப்பட்டேன்.. ஆனாலும் இப்படி வீடு தேடி வருவாருன்றது எதிர்பாராதது - என்ன, ஏதுன்னு புதிராய்த்தான் இருக்குது.... உன்னிடம் விஷயத்தை இப்படி நான் உடைச்சுச் சொல்லியிருக்கக் கூடாதுதான்... நானே அசந்து போனதில்... அறியாமல் உளறிட்டேன்.. விடுடா..'

விட முடியவில்லை...

யோசிக்க யோசிக்க அவ்விஷயம் விவகாரமானது!

ராட்சச வண்டாகிப் புத்தியைக் குடைந்தெடுத்தது.

பெண் பார்ப்பது போல இப்படிப் படியேறி வந்து.. பின், 'சரக்கு திருப்தியில்லை!' என்பது போல உதாசீனம் செய்து விட்டுக் கிளம்புவது எந்த நாகரீகத்தில் சேர்த்தி?

இவர்களில் மாப்பிள்ளை வீட்டார் பலராய் வந்து பஜ்ஜி, சொஜ்ஜி சாப்பிடுவது அரிது.. இல்லை என்றே சொல்லலாம்.

இரு குடும்பங்களுக்கும் ஒத்து வரும் என்று தோன்றினால், பரஸ்பர நண்பர்கள் மூலம் தூது விட்டுப் புகைப்படங்களைப் பரிமாறிக் கொள்வார்கள்.

தோற்றமும் மனதிற்குப் பிரியப்பட்டால், பொது இடத்தில் இரு வீட்டாரும் தங்கள் பையன், பெண்ணுடன் சந்திப்பதுண்டு. பெரும் பாலும் அது ஆலயமாகவும் சில நேரம் விசேஷ வீடாகவும் அமையும்.

அறிமுக வார்த்தைகளையும் மீறி நெருங்கிப் பேசி ஓசைப் படாமல் பெண்ணின் அலுவலகத்திலோ, வீட்டிலோ போய்ப் பேசுவதுண்டு அப்போது மரியாதை நிமித்தம் பலகாரமும் பானமும் பரிமாறப்படும்தான்.

ஆனால் மறுமுறை சந்திப்பதென்றால் இருமனமும் கூடி விட்டதாகத்தான் பொருள்! ஆனால் சரிவராவிட்டாலும் பேசித் தெளிந்த திருப்தியுடன் விலகி விடுவார்கள்.

இப்படித் 'திடுதிப்'பென வீடு புகுந்து பின் காரணம் ஏதும் சொல்லும் கரிசனையற்று ஓடிப் போனவனை நினைத்தால் சீற்றம் மிகுந்தது.

நேற்றுக் குணசீலன் நின்ற இடங்களை ஒட்டியே தான் பூனைக் குட்டியாய் உரசி நடந்தது நினைவிற்கு வந்தது.

இன்று பூனை கோப மிகுதியில் பிராண்டியது.

வெறும் மனப்பிராண்டலோடு போராடிப் பயனென்ன..? பேசித் தெளிந்து விடுவது

அவன் தங்கியிருப்பது 'சோழா' என்று அப்பா பேச்சின் போக்கில் சொல்லியிருந்தார்.

இந்நேரம் அறைக்குப் போய்ச் சேர்ந்திருப்பான். தன் அறைக்குள் புகுந்தவள், டைரக்டரியில் ஹோட்டலின் தொலை பேசி எண்ணைத் தேடிப் பிடித்தாள்.

மறுயோசனையின்றி அந்த எண்களைத் தன் தொலைபேசியில் அழுத்தினாள்.

'குட் மார்னிங்.. சோழா ரிசப்ஷன்'

இனிய பெண் குரல் அறிவித்தது.

'ம்ம்.. இண்டர்கனெக்ட் குணசீலன் ப்ளீஸ்..'



'யெஸ் மேம்.. ரூம் நம்பர் 270..'

குயிலோசை போன்ற இசையைத் தொடர்ந்து அவனது 'கணீர்'க் குரல்.

'யெஸ்..'

இவளது தொண்டை கணத்தில் வரண்டது.

ஏதோ விறுவிறுவெனத் தொடர்பு கொண்டாயிற்று.. இனி என்ன பேசுவது?

'யெஸ்..?' இம்முறை அக்குரல் மேலும் அழுத்தியது.

'நா.. நான் நிர்மலா.'

இரு நொடிகள் மௌனமாய் உறைந்தன.

'எஸ்.. என்ன விஷயம்?'

துணிவைத் திரட்டி நாக்கைப் புரட்டினாள்.

'நீ... நீங்க கொஞ்ச நேரத்துக்கு முன்னே எங்க வீட்டிற்கு வந்தீங்க... அது... அது என்ன விஷயமாய்னு நான் தெரிஞ்சுக் கணும்..'

தயக்கமின்றிப் பதில் கிடைத்தது.

'சின்னப் பெண்ணிற்கு அது வேண்டாத சமாச்சாரம்..'

'அத்தனை சின்னவளைப் பெண் மட்டும் கேட்கலாமா?' சற்றுக் கோபத்துடன் ஒரு 'ம்ப்ச்..' அதைத் தொடர்ந்து சொன்னான்: 'அதுதான் தப்புன்னு புரிஞ்சு திரும்பிட்டேன்..'

'எனக்குப் புரியலை.. புரிஞ்சு கொள்ளத்தான் இந்த ஃபோன்.'

'___'

'ப்ளீஸ்..?' குரல் வெட்கமின்றிக் கெஞ்சியது.

'நேற்றுக் கல்யாண வீட்டில் உன்னைப் பற்றி விசாரித்தேன், நிர்மலா... இரண்டாம் ஆண்டு படிப்பதாய்ச் சொல்லவும், எம்.ஏ., எம்.எஸ்.சி. யின் இறுதி ஆண்டுன்னு யூகிச்சேன்... தவிர நேற்று நீ புடவை நகையில் பெரியவளாய்த் தெரிஞ்சே... கொண்டை வேறு... இன்று காலையில் ஒப்பனையில்லாமல் நைட் கவுனில்... நீ தளிர்னு புரிஞ்சது...'

'அது போக நானிருப்பது இளங்கலை இரண்டாம் ஆண்டின்னு அப்பா சொல்லியிருப்பார்...'

மெலிதாய்ச் சிரித்தாள்.

அந்த ஒலி அவனை இன்பமாய்ச் சிலிர்ப்பூட்டியது.

'நீங்க நினைத்ததை விட எனக்கு மூணு வயசு கம்மி. ஆனால் அது நமக்கிடையே வர வேண்டாம்னு நினைக்கிறேன்... எனக்கு உங்களை ரொம்பப் பிடிச்சிருக்குது...'

வெட்கத்தில் குரல் இடித்தது - மேலே பேச முடியாமல் ரிசீவரை வைத்து விட்டாள்...

முகம் முழுக்கச் சூடாகிச் சிவந்திருக்க... அதைத் தனிக்க விழி ஓரம் நீர்ப்பூக்கள் பூத்திருந்தன.

---

## 7

"நீ உன் கணவனைப் பிரிந்து பல மாசமாச்சு... இனியேனும் விவாகரத்து பற்றி யோசித்தால் என்ன?"

கேள்வி எளிமையாய்த் தோன்றினாலும், பிரசாத் அதைப் பலத்த யோசனைக்குப் பின்பே கேட்டிருப்பான் என்பது புரிந்தது.



'நம்மில் விவாகரத்து சுலபமில்லை... சாத்தியம்கூட இல்லைன்னு கேள்விப்பட்டிருக்கேன்...' பதிலை முனகினாள்.

அது பற்றி யோசிக்கவும் தான் விரும்பவில்லை என்பதுதானே நிஜம்?

அக்கேள்வி அமுக்கி வைத்திருந்த பல நினைவுகளைக் கிளறிக் கொடுத்தது...

திருமணமான கையோடு இவர்களுக்குக் குழந்தை பாக்கியம் கிட்டியிருந்தால் இந்தப் பிரிவு நேர்ந்திருக்காது - தன்னுள் உருவாகும் தங்களின் குழந்தையுடன் பேசியபடி, கொஞ்சியபடி இவளது நாட்கள் நழுவியிருக்கும்.

கணவரின் அலட்சியம் ஒரு பொருட்டில்லாமல் போயிருக்கும்.

ஆனால் கர்ப்பம், குழந்தைகள் என்ற பேச்சுக் கிளம்பினாலே குணாவின் முகம் மாறிப் போகும்... பேச்சை அறுத்து விட்டு நகருவான் - தம்பிக்குக் குழந்தைகள் அடுத்து அடுத்துப் பிறந்ததில், பிறக்கவிருப்பதில் அவனுக்கு மகிழ்வில்லை.

'பெப்பா பெப்பா' என்று குட்டி விக்ரம் தன் பிஞ்சுக் கைகளால் இவன் முட்டியைக் கட்டி இழையும் போது கூடப் பெரியப்பனின் முகம் இளகாது.

குழந்தையை அள்ளித் தூக்கிக் கொஞ்சியதில்லை.

பயலை ஒரு யோசனையோடு குனிந்து பார்த்துவிட்டு, பிஞ்சுத் தலையைக் கோதி விட்டு நகர்ந்து போவான்.

புருஷனைப் புரியவில்லையே என்று மருகினாலும் குணசீலனைக் கணவனாய் அடைந்ததற்கு அவள் யாரையும் குற்றம் சாட்ட முடியாது.

நிர்மலாவைக் கண்டதும் கவரப்பட்டு நேரில் வந்து பெண் கேட்டவன், தங்களுக்கிடையே வயது வித்தியாசம் அதிகம்-பன்னி

ரண்டு வருடங்கள் - என்று அறிந்து உதற நினைத்தும், இவனே விடாது பேசிக் கெஞ்சிக் கை கோர்த்துக் கொண்டே உறவல்லவா?

இருவரும் ஒரே மதம், சமூக அந்தஸ்தில் இருந்தவர்கள் என்பதால் மற்றது எல்லாம் எளிதாகிப் போனது.

இருவரின் இடையே உடனே பற்றிக் கொண்ட ஈர்ப்பு நெருப்பு - இது சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்ட பந்தம்தான் என்ற பிரமிப்பை ஏற்படுத்தியிருந்தது.

"இந்த அரேஞ்ச்ட் மேரேஜல்ல இதுதான் கோளாறு. பெரியவங்க தங்கள் வசதி, திருப்திக்குச் சேர்த்து வச்சுடறாங்க. ம்ப்ச்... சேர்ந்து வாழ முடியலைங்கறபோது இப்படிப்பட்ட பிரிவுகள்..."

"இல்லை, பிரசாத் - நான் அப்பாவைப் பழி சொல்ல முடியாது... ஐ லைக்ட் ஹிம்... பரஸ்பரம் பிடித்து நடந்த கல்யாணம்தான் எங்களது..."

"அப்புறம் எப்படிப் பிடிக்காமல் போச்சு?"

"அதுக்கு நீ கல்யாணம் பண்ணிக்கணும்! உன் மனைவியிடம் முன்பு உனக்குப் பிடிச்ச விஷயமே கல்யாணத்திற்குப் பிறகு உனக்குப் பிடிக்காமல் போகலாம்..."

"அதென்ன?" - சிறுபையனின் ஆச்சரியத்துடன் கேட்டான்.

இருபத்திரண்டு வயதில் பெண் முழுமையான பெண்.

ஆனால் அதே வயது ஆண் முழு முதிர்ச்சி பெற்றவனில்லை. அதற்கு மேலும் ஐந்து, ஆறு ஆண்டுகளின் அனுபவம் அவனுக்குத் தேவை!

நிர்மலா பல விஷயங்களில் நண்பனுக்கு விளக்கம் சொல்லுவதுண்டு - இப்போதும் அப்படி ஒரு நிலை.

"அவள் கலகலன்னு சிரித்துப் பேசறது ஆரம்பத்தில் உனக்கு ரொம்ப இனிக்கும்..."



"யாரு?" - அப்பாவியாய்க் கேட்டான்.

"ஐயோ, பிரசாத்... ஏதோ ஒரு பெண் - அதாவது முதலில் உன்னைக் கவர்பவள்..."

"ஓ? சரி சரி - ஓட்டுவதில் கவனமாயிருந்தேனா... அதான் கோ ஆன்."

"அவள் உனக்கு மனைவி ஆகிட்டான்னு வை. அவள் சிரிச்சுப் பேச, 'ஏன் சதா பல்லைக் காட்டறே - பைத்தியமாட்டம்!' னுவே."

"சேச்சே... நோப்பா..." தலையை வேகமாய் அசைத்தான்.

"யெஸ்ப்பா! ஆரம்பத்தில் அவ சுத்தத்தை, நேர்த்தியை மெச்சின நீ, பிறகு 'இதென்ன வீடா... இல்லை ஷோ ரூமா? இயல்பாய் இருக்கட்டுமே!' ன்னு சலிச்சுக்குவே..."

" நல்ல குணங்களுக்கே இந்த நிலைமைன்னா, நம் குறைகள் குடித்தனத்தில் பயங்கரமாய், பிரம்மாண்டமாய்த் தெரியும்லவா?"

"ம்ம்..."

"அப்ப இந்தப் பிரச்னைக்குப் பிரிஞ்சு வந்துடறதுதான் தீர்வா, நிம்மி?"

நெற்றிப் பொட்டில் அடித்தது கேள்வி!

தெளிந்தான் - வெளியே பார்த்தான்... நெருங்கியிருந்த கடற்காற்றை ஆழச் சுவாசித்தான்.

"தீர்வில்லை, பிரசாத்... என்னால் தாக்குப் பிடிக்க முடியலை... அவர் சொன்னது போல இருவருக்கிடையே வயசு வித்தியாசம் அத்தனை அகலமாய் இருந்திருக்கக் கூடாதுதான் போல...! ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே ஐந்து வயது போல இடைவெளி இருந்தால் அவங்க மனப்பக்குவம் ஒரே அலை வரிசையில் இருக்கக்கூடும்..."

"எங்கம்மா புருஷன் மனைவிக்குள்ளே, மற்றது எப்படி இருந்தாலும், ஈகோதான் இருக்கக் கூடாதும்பாங்க..."

இவள் சற்று வியப்புடன் பிரசாந்தைப் பார்த்தாள்.

அவனுக்கும் உலகம் தன் பாடங்களைக் கற்றுத் தர ஆரம்பித்து விட்டது.

"உண்மைதான். எங்களுக்கிடையில் வெறும் வயசு வித்தியாசம்ன்னு முடியாது - அவருடையது வேறு விதமான முதிர்ச்சி... இறுக்கம். அப்பா இறந்ததும் தடுமாறிய குடும்பத்தை நிற்க வைக்க வெறியாய் உழைச்சவர்... மன உரம் ஜாஸ்தி... அது அவரைப் பாதித்து விட்டதுன்னலாம்..."

அவளுக்குத் தங்களின் முதல் இரவு ஞாபகம் வந்தது - யாருக்குமே மறக்க முடியாத ஒரு மோகப் பொழுதல்லவா அது! உணர்வுகளைப் பற்றி உருகும் உன்னத ராத்திரி!

அறை அதற்கேற்றபடி ரம்யமாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஜாதிமல்லியும் சிவப்பு ரோஜாக்களும் கலந்து கட்டிய வாசனை. பார்ட்லி 'ரெட் ரோஸஸ்ஸின்' ஸ்ப்ரே வேறு தூக்கியது.

கேஸட்டில் கழன்று வெளிப்பட்ட வீணையின் மீட்டல்.

ரோஜாச் சிவப்பு ஷிபான் புடவையில் மினுங்கிய வெள்ளி சம்கிகள் இவளது ஆர்வத்தைப் பிரதிபலித்தன.

அவன் இருந்தது சில்க் பைஜாமாவில்.

தலை முதல் பாதம் வரை அவளை நிதானமாய்ப் பார்த்து அவன் புன்னகைக்க, இவளுக்குச் சிலிர்த்தது. தலை கவிழ்ந்தாள்.

மோதிரம் போட்ட தாலி முடிய என்ற சந்தர்ப்பங்களில் நேர்ந்த மிக மேம்போக்கான தீண்டல்களே அவளைக் கட்டிருந்தன. சிலிர்ப்பான தீண்டல்கள்...!



இனி நேரப்போகும் நெருக்கத்தின் பூரிப்பு எப்படியிருக்கும் என்ற யூகத்திலேயே பரவசமாய்ப் படபடத்தது. அடிவயிற்றில் பட்டாம்பூச்சிகள் கிளுகிளுவெனச் சிறகசைத்தன. நெருங்கியவன் புதுமனைவியின் முகம் நிமிர்த்திக் கேட்ட அந்த முதல் கேள்வி அவளை வெட்கத்தில் வெட்டிச் சரித்தது...

தலை மேலும் கவிழ.

'என்ன... ஏன்... இதை ஏன் கேட்கறீங்க...?' குழறினாள். அவளது மாதாந்திர நாட்களைப் பற்றி அப்பா கூட விசாரித்ததில்லையே...

'நிமிர்ந்து என்னைப் பார்த்துப் பேசு, நிம்மா!' - அது கெஞ்சலில்லை. குழைவான கெஞ்சலுமில்லை.

உத்தரவுதான்!

அவசரமாய்த் தலை நிமிர்ந்தாள்.

ஊடுருவும் அவன் விழிகளைச் சந்திக்கக் கூசியது... வியர்த்தது. அது வெட்கமா அச்சமா ஆசையா என்பதைப் பகுத்தறிய முடியவில்லை.

கால்கள் வேறு துவண்டன.

அவன் தோளோடு சாய்ந்து கொண்டால் தேவலை - ஆனால் அவர் விசாரணையில் அல்லவா இருக்கிறார்...

'ஏன் உடம்பு இப்படி நடுங்குது, நிம்மி? - ரிலாக்ஸ்...'

அவன் குனிந்து இவள் கன்னத்தில் முத்தமிட, அதுவரை சன்னமாய் இழைந்து கொண்டிருந்த மூச்சும் நின்றே போனது...!

'நான் கேட்ட கேள்விக்கு இன்னும் பதில் வரலையே?'

'இப்பதான் - மூன்று நாள் முன்னே...'

'குட்!' என்றவன் மோகத்துடன் இவளை இறுக அணைத்துக் கொண்டான். தொடர்ந்த முத்தங்களும் தழுவல்களும் அவர்களை மூச்சிரைக்க வைத்தன.

மறுநாள் காலை மயக்கமான நினைவுகளின் ஊடாய் அவளது வேள்வி உறக்கத்தான் செய்தது.

'இவள் வயிறு வலிக்குதப்பா!' என்றால் அப்பா பதறி, 'முதல்ல படுடா' என்று விட்டு, வேலுவின் மனைவியை ஒத்தாசைக்கு அனுப்புவதோடு சரி.

முதலில் இவளைக் கேட்டதிலிருந்து மனதில் அந்த நாட்களைக் குறித்தும் வைத்திருந்தான் போலும். மறுமாத ஆரம்பத்தில் இவளை உன்னிப்பாய்க் கவனித்தவன், கரிசனையுடன்,

'அலுப்பாயிருந்தால் நீ படு நிம்மா - நான் பார்த்துக்கறேன்' என, இவளுக்கு எதும் புரியவில்லை.

'ஏன்... எதுக்கு?'

'உனக்கு வயிறு வலிக்கலாம் -சோர்வோடு இப்படி அலைய வேண்டாம்...'

என்றதும் லேசாகப் புரிய.

'ம்ஹூம்... எதும் கஷ்டமில்லை...சில நேரம் முடியாதப்ப மாத்திரை போட்டுக்குவேன்.' என்றாள்.

ஆனால் நான்கைந்து மாதங்களுக்குப் பின், அந்த மாதாந்திர நாட்கள் அவனுக்கு ஏமாற்றத்தை, எரிச்சலைத் தந்தன - கண்ணில் பட்ட பாப்பா படங்களை ஏக்கத்துடன் தடவிப் பார்த்தான்.

குணசீலனுக்கு வியாபாரம்தான் எல்லாம் என்பது புரிய, தனக்கென்று ஒரு ஜீவன் வேணும் என்ற உத்வேகத்துடன் தன் சூழ்நிலையை எதிர்பார்க்கலானாள்.

வாகன நெருக்கடியிலிருந்து அவர்கள் விடுபட, பேச்சுத் தொடர்ந்தது.

"ம்ம்... குணசீலன் வயதிற்கு மீறிய முதிர்ச்சி உடையவர்னா, நீ அந்த நேர்மையுதான் நிம்மி பணக்கார அப்பாவின் ஒரே செல்லப்



பெண் - நிறைய அழகு... உலகை அறிய, விரும்பாத சொகுசு வாழ்க்கை உன்னுது..."

"ம்ம்..."

"ஆனால் அது உங்க தப்பில்லையே... இருவரும் சேர்ந்து வாழ முடியாத ஒரு குறைபாடில்லையே, அது..."

பிரசாத் சொல்வதைக் கேட்க இதமாய்த்தான் இருந்தது. கட்ட புண்ணிற்கு என்னெய்யை விட்டு மயிலிறகால் வருடுவது போல... நல்ல சிநேகிதன்தான்...

அவன் சொல்வதும் வாஸ்தவம்...

தம்பதிகளின் வாழ்வில், வளர்ப்பிலிருந்த வித்தியாசங்களுக்காய் முறுக்கிப் பிரிந்து வாழ்வது தீர்வில்லை.

திருமணத்தன்று தானும் குணாவும் ஆண்டவன் சந்நிதியில் பரஸ்பரம் கொடுத்துக் கொண்ட வாக்குறுதிகளை எந்தக் காற்றில் பறக்க விடுவது?

'சுகத்திலும் துக்கத்திலும் வாழ்விலும் தாழ்விலும் மரணம் நம்மைப் பிரிக்கும் வரை உன்னை நான் பிரிவதில்லை!' என்ற அந்த அழகான, அழுத்தமான சத்தியத்தை... சொல்லும்போது ஆனந்த மிகுதியில் கண்களைக் கரித்ததே...!

ஆனால் குணாவோடு வாழ்ந்த பல மாதங்கள் ஆனந்தமாய்க் கழியவில்லை.

சந்தோஷமாய், சகஜமாய்ச் சேர்ந்து கழியாத நாட்கள். பல பொழுதுகளில் இவளது பெண் மனம் குன்றிக் குறுகியது. இவருக்கு நான் தேவையே இல்லையோ...? உபத்திரவம்தானோ என்று சஞ்சலித்தது.

இப்படி உருகி, மருகி மணவாழ்வைக் கழிப்பது வீணல்லவா?

இவளது கலங்கிய விழிகளை வைத்துப் பிரசாத் வேறு மாதிரி அனுமானித்து விட்டான்.

"விவாக ரத்துப் பெறணும்னா அதற்கு ஒரே காரணம்தான் இருக்கக்கூடும் நிம்மி... அவர் துரோகம் பண்ணியிருக்கணும்... அதாவது வேறு ஒருத்தியோடு தொடர்பு..."

'இல்லை!' என்று உடனடியாய் மறுக்க வாய் வரவில்லை.

மயூராவின் அழகுதான் கண்ணுக்குள் ஆடியது.

முதன் முதலில் மயூராவை மும்பையில் பார்த்தபோது, அயர்ந்தே போனாள்.

சீவிநிறுத்திய மெல்லிய மெழுகுச் சிலை போன்ற அசாத்திய நேர்த்தி - அந்த இளம் பெண்ணிற்கு.

முழங்காலை எட்டியும் எட்டாமலும் நின்ற ட்யூப் ஸ்கர்ட் - பட்டுச் சட்டையின் மேல் பொருத்தமான பிளினல் கோட். கலைமாய்ச் செம்பட்டை ஏற்றிப் பராமரிக்கப்பட்ட கூந்தல்!

சாம்பல் வர்ண உடைக்கு ஏற்ப மின்னிய கண்கள். மறுநாளின் நீல லிப்ஸ்டிக்கு ஏற்ப அவை நீலமாய்ச் சிரித்த போதுதான் கலர்லாப் லென்ஸ்களை அவள் விழிகளுக்குள் பொருத்திக் கொள்வது புரிந்தது.

அயல்நாட்டுப் பத்திரிகை அட்டைப் பெண்களின் அளவில் உயர்ரக ஒப்பனை.

ஆக்ஸிடைஸ்ட் வெள்ளி நகை.

பொருத்தமான காலணிகள்.

அசாத்திய உயரம், நிறம்... இவை போதாது என்பது போலக் கூரிய புத்தி - அதை வெளிப்படுத்தும் பேச்சு.

மயூரா கார்ப்பரேட் செக்ரட்டரிஷிப் கோர்ஸ் படித்தவள். குடும்ப வியாபாரத்தை நடத்திய அண்ணன்மார் அதில் இவளைச் சேர்த்துக் கொள்ளவில்லை.



'நாங்களே எங்களுக்குள் இசைஞ்சு போறது சிரமம் - இதில் பெண்ணான உன்னை, பிறகு உன் பேரைச் சொல்லிட்டு நுழையும் உன் புருஷனையும் சேர்த்து மேலும் சிக்கல்களைக் கொண்டு வரப் போவதில்லை - நீ துணிகளில் டிசைனிங், மாடலிங்னு தனியே ஏதேனும் செய்!' என்று வெட்டி விட, அவர்களது குடும்ப நண்பனான சீலனிடமே வேலைக்கு, உதவிக்கு என்று இணைந்து விட்டவளாம் மயூரா.

மும்பையில் அவளுக்குப் பல வியாபாரப் புள்ளிகளைப் பரிச்சயம்.

ஆக யார் யார் எப்படி என்பதைக் குணசீலனுக்கு எடுத்துச் சொன்னாள். எவரிடம் எப்படிப் பழகுவது என்பதோடு, அவர்களிடையே ஆரம்ப பாலமும் போட்டுத் தந்தாள்.

கோவாவில் தன் தொழில் ஆரம்பித்துப் பெருக்கிய குணாவிற்கு மும்பையில் காலூன்ற இப்படி ஒரு உதவி தேவைப்பட்ட காலம் - நன்றியோடு பயன்படுத்திக் கொண்டான்.

'துக்கராமிடம் டீல் பேசிக் கையெழுத்தாகும் முன், எல்லா விவரங்களையும் நீங்க வெளிப்படுத்தாதீங்க, குணா. உங்க விவரங்களைக் கொண்டே புதுப் போட்டிக் கம்பெனியை ஆரம்பிச்சிடுவார், மனுஷர்!'

'நாகுல் சொன்னால் அதன்படி பணம் வந்திடும் - தயங்காமல் மேற்கொண்டு வேலையைத் தொடருங்க...' என்று அருகிருந்து ஆலோசனை, ஊக்கம் தந்தவளிடம் அவனுக்குத் தனி பாசம் - மரியாதை.

இந்த இத்தனை விவரங்களும் கூட மயூரா நிர்மலாவிடம் தெரிவித்தவைதான்.

தனிமையில், லுங்கி கட்டிய குணா தன்னவளை மார்போடு சாய்த்தபடி இவற்றைச் சொல்லியிருந்தால் திருப்தியாய் இருந்திருக்கும்.

புத்திசாலியான மயூரா இத்தனை விவரங்களையும் குணாவின் புது மனைவியிடம் சொன்ன கையோடு,

'இப்ப எங்களுக்கிடையே உள்ள உறவு எப்படின்னு உனக்குத் தெரியாமி இருக்கும். நிம்மி - நட்ஸ் ஆல் - தம்பட்டம் அடிச்சென்னு நினைச்சிடாதே - ஸாட்?' என்று கண் சிமிட்டி விட்டுப் போனாள்!

இருந்தாலும் கணவனுடன் மயூரா இழைந்து பேசுவதை, ஒன்றி வேலையில் இணைவதைக் காண மனம் எரிந்தது.

பொறாமைத் தீதான்..!

---

# 8

அது மற்றொருத்தி தன்னவருடன் நெருங்கிப் பழகுவதால் மட்டுமல்ல, படுக்கையைத் தவிர்க் குணா தன்னிடம் இப்படி வேறு ஒரு போதும் இழைந்ததில்லையே என்பதால்.

'அவ அவருக்கு வேலையில் காரியதரிசி - ரொம்பக் கெட்டிக்காரி - அவருக்கு வலது கை மாதிரி' என்று ஒரு மனைவி பெருந்தன்மையாய்ப் பெருமையடித்துக் கொள்ளக் கூடும்தான் - தான் தன் கணவனின் இதயமாய் இருக்கும் பட்சத்தில். ஆனால் தன்னை வெறும் படுக்கையறைப் பாவையாய், மற்றேதும் அறியாத நிருபமாய் ஒதுக்கி, மற்றொருத்தியைக் கொண்டாட, மனம் வேகிக்கிறது.

குணா வார்த்தைகளால் மயூராவைக் கொண்டாடிக் கேட்டதில்லை - ஆனால் அவர்கள் பரிமாறிக் கொள்ளும் பார்வைகளே போதுமான சாட்சி. பொது நிகழ்ச்சிகளிலும் இவருவரும் தொழில்



தொடர்பான பேச்சுகளில் மூழ்கியிருப்பார்கள் - அல்லது பிறர் பேசும் பேச்சுகளுக்குப் பார்வையால் விளக்கம் பரிமாறிக் கொள்வார்கள் - அந்த மும்முரத்தில் ஒரு விழாவிற்குத் தன் மனைவியை அழைத்து வந்ததே மறந்து போனது குணாவிற்கு! குணசீலன் கிளம்பி விட்டது அறிந்ததும் வெட்கி, வெகுண்டு வேறு ஒருவருடன் வீடு வந்து சேர்ந்தாள்.

மூச்சுப் பிடித்து அதற்காகச் சண்டையிடலாம் என்றால், குணா வீட்டில் இருந்தால்தானே...!

மறுநாள் இவள் அதற்காய்ச் சிலிர்த்துக் கொள்ள, அவன் தனது அகண்ட தோளைக் குலுக்கிக் கொண்டதோடு சரி.

இவளது பெருமூச்சு பிரசாத்தின் மனதை இளக்கியது போலும். மேலும் கனிவாகக் கேட்டான்.

"என்ன நிம்மி, குணாவிற்குப் பிற பெண்களிடம் ஈடுபாடு உண்டா என்ன?"

மெள்ளத் தலையசைத்தாள்.

"நீ கேட்கும் அர்த்தத்தில் இல்லை, பிரசாத். அவருக்குத் தன் வேலைதான் பிரதானம். அதில் அவருக்கு ஈடு தரும் மயூரா இல்லாமல் அவருக்கு முடியாது..."

"...அது வேற...... நீ வேற."

"தாம்பத்யம் இழைக்கோலம் மாதிரிப்பா - எல்லா உணர்வுகளும் ஒன்றோடு ஒன்று பிணைஞ்சு ஒன்றனும். எதும் தனிச்சு நின்னால் அம்சமாயிருக்காது... ஒரு கணவனுக்குத் தன்னை விட மற்றொருத்தி முக்கியமாய் இருக்கறது, ஒதுக்கப்பட்ட மனைவியால் தாங்க முடியாத கொடுமை. பிரசாத் - தன்னை ராணியாய் வைத்துக் கொண்டாடுபவர், மந்திரியிடமும் ராஜாங்கம் நிமித்தம் நெருக்கமாய் இருப்பதை அவள் பொருட்படுத்த மாட்டாள்!"

"யப்பா... ஏதேதோ பேசறே... உன் மாமியார் எப்படி?"

"நல்லவங்க. கோவா ஏறக்குறைய கேரளா போலவே இருக்கும். அவங்க தமிழ் நாட்டுக்காரங்க என்றாலும் வெகு காலமாய்க் கோவாவில் இருந்ததால் எப்பவும் சந்தன. இல்லை... வெள்ளைப் புடவைதான்-லேசாப் பஃப் வைத்த ரவிக்கை-தழைஞ்ச கொண்டை அன்பாய்ப் பழகுவாங்க-ஆனால் பேச்சு மகளைப் போல அளந்து தான்.

"அவங்க வந்து பேசி உங்களுக்கிடையே சமரசம் செய்து வைக்கக் கூடாதா?"

"அவங்களுக்குக் குணாவை நல்லாத் தெரியுமே - அவர் தானே தான் என்னைத் தேர்ந்தெடுத்தார் - மறுபேச்சில்லாமல் என்னை மருமகளாய் ஏற்றுக்கலையா? அதே போல இப்பவும்... அப்பாவுக்கும் இதே கவலைதான். பிரசாத் - அவரை அமைதிப் படுத்தணும்னா நானாய்த்தான் மறுபடி மும்பை அல்லது கோவா போகணும் - போய் மறுபடி அதே உதாசீனத்தில் வாழணும் - எந்த மாற்றத்தையும் நான் எதிர்பார்க்கக் கூடாது..."

"ஓ... அப்ப நீ மறுபடி போனால் ஏற்றுக் கொள்வாங்கறா?" ஆச்சரியமாய்க் கேட்டான்.

இவளுக்குப் பொட்டில் மறு அடி!

ஒதுக்கித் தள்ளுவானோ?

இத்தனை மாதங்களின் பிரிவு உறவை முழுக்கப் பிரித்துப் போட்டிருக்குமோ?

பெரும் கௌரவமாய் நிமிர்ந்து நின்றவளைத் தனது பிரிவு ஊனப்படுத்தியதில் களித்திருப்பானோ?

இதுவரை, 'நான் அங்கே போவதாயில்லை!' என்ற வீம்பிலிருந்தவளுக்கு இனித் தான் அங்கு போக முடியுமா?



போனால் புகுந்த வீட்டின் வாசல் திறக்குமா என்ற ஐயம்! திகைத்திருந்தவளைப் பிரசாத்தின் குரல் உலுக்கியது.

"உங்க அத்தையைப் பற்றிச் சொல்லிட்டிருந்தே..."

"ம்ம்... முதலில் வீட்டருகே சின்னதாய் ஒரு கடை போட்டப்ப, அத்தைதான் எல்லா வேலைகளையும் செய்திருக்காங்க - மகளின் படிப்புக் கெட வேண்டாம்னு அவளைக் கூடச் சேர்த்துக்கறதில்லையாம்.

"அவங்களின் கட்ட மீனிற்கு ஏகப்பட்ட வெளிநாட்டுக்கார ரசிகர்களாம்-கடை விசாலமாக, அத்தைக்குத் துணிகளின் மீது கவனம் போச்சாம்... என்னா வரும் வெளிநாட்டுக்காரங்க தலைக்கும் இடுப்பிற்கும் கலர்ஃபுல் பிரிண்ட்டெட் பருத்தி, பட்டுத் துணிகளை அதிகமாய் விடுமுறைகளில் பயன்படுத்துவாங்க..."

"ம்ம்... கவனிச்சிருக்கேன். இப்பவும் பத்திக் பிரிண்ட் போட்டு ஏற்றுமதி செய்யறீங்க இல்லையா?"

"இப்ப ஸில்க், ஷிஃபான், பருத்தின்னு விதவிதமாய்ப் போகுது - முதலில் ஒரு குஜராத்திப் பெண் இதைச் செய்து பார்த்தாங்களாம் - மெழுகைச் சூடேற்றித் துணியில் அச்சிடும் முறையை அத்தை கற்றுகிட்டு அவங்களும் செய்து, அவங்க கடை வாசலிலேயே கட்டிவிட, உடனே விலை போயிடுச்சாம்."

"வெள்ளைக்காரங்களுக்குக் கைவேலைன்னா தனி ஆர்வம்."

"ஒரு ஜெர்மன்காரருடன் பரிச்சயம் ஏற்பட்டு, பின் ஒப்பந்தமும் செய்து... ஏற்றுமதி ஆரம்பமாச்சு - கூடவே மீனும் - இவர் தங்கையை 'டெக்ஸ்டைல் பிரிண்டிங்' படிக்க வச்சார் - அவ அஜந்தா, எலிஃபெண்டா எல்லாம் போய்ப் பார்த்து, புது 'எத்னிக்' டிஸைன்ஸ்னு வடிவமைக்க, விற்பனை தூக்கிடுச்சு."

"எல்லாவற்றையும் விடக் குணசீலனின் நாணயம் பிரசித்தம்!"

இவளது மனம் கறுவியது.

வாழ்விற்கு நானாயுந்தை விட நேசம் அவசியம்...

அவ்விற்கு முதலிடம் தா. அது பிறவற்றை ஒழுங்குப் படுத்திக் கொண்டு போகும். அன்பற்றவனுக்கு ஏன் திருமண பந்தம்...?

காலை நாடகம் மற்றும் ஒரு மனைவி?

❖ ❖ ❖

அவர்களது புதுக்குடித்தனம் ஆரம்பித்தது மும்பையில். சேலையில் கடற்கரையில் வீடு அவனுக்கிருந்தது. ஆனால் வார நாட்களில் வேலை அதிகமிருந்ததோ மும்பையில். ஆக, 'மெரீன் டிரைவில்' நவீன அடுக்கு மாடி வீடு ஒன்று இவர்களின் குடித்தனத்திற்கென ஒதுக்கப்பட்டது.

வசதியான வீடு - சுத்தமான சின்ன வேலைக்கார தமிழ் பேசும் பெண்ணை, மாமியார் வேலைக்குப் பழக்குவித்து உடன் அனுப்பியிருந்தார்.

ஆக்கபூர்வமாய் ஆரம்பித்த வாழ்க்கைதான்.

தனக்கு முன்பே குணசீலன் தன் தங்கைக்கு மட்டுமல்ல, தம்பிக்கும் திருமணத்தை முடித்து விட்டான் - தம்பியின் மனைவி அம்ருதா அவனோடு நிர்வாகம் பயின்றவள் - பரிச்சயம் பிரியமாகித் திருமண பந்தத்தில் முடிந்திருந்தது - அந்த இணைப்பில் குணசீலனுக்குத் திருப்திதான் - அலுவலக நிர்வாகத்தின் பெரும் பகுதியை அவர்களின் பொறுப்பில் விட்டான்.

ஆனால் ஒரே வருடத்தில் குழந்தை விக்கி பிறந்து விட அம்ருதாவிற்குப் பிள்ளையைப் பேணுவதே பிரதானமானது.

எட்டுப் படுக்கையறைகளைத் தவிர்த்துப் பல சின்ன அறைகளும், பால்கனிகளும், இரு அகண்ட வரவேற்பு ஹால்களுடன், உணவு அறை, சமையல், ஸ்டோர் என்று விரிந்த வீட்டை, சுற்றிலுமிருந்த தோட்டத்தை, பிஞ்சுக் குழந்தையைச்



சிறப்பாகப் பராமரிப்பது முழு நேர வேலை என்பது நிஜம். உடம்பிலும் சற்றுச் சதை சேர்ந்து விட, சோர்வாக உணர்ந்தவள் மேலும் சற்றுச் சுருண்டு உறங்கினாள் - அதில் அலுவலகத்தின் அலுவல்களுக்கு நேரம் ஒதுக்க முடியாமல் போக, அதில் குணசீலனுக்குக் குறைதான்.

ஆனால் அம்ருதா சிடுசிடுத்தாள் -

'என்ன சொல்றார் உங்கண்ணன்? வாரந்தவறாமல் வீட்டிற்குத் தொழில் சம்பந்தப்பட்ட விருந்தாளிகள் நாலைந்து பேரேனும் வாராங்க- அவங்களுக்குப் பிடித்த முறையில் விருந்து தயார் பண்ணி, பரிமாறி, பேசிச் சந்தோஷப்படுத்தி அனுப்பறதே பெரும் வேலை.'

மனைவி சொன்னதைத் தம்பி ஜெயசீலன் கணக்காய் மூத்தவனிடம் ஒப்பிக்க,

'வீட்டில் சமையலுக்கு ரெண்டு குக்ஸ் உண்டு. மேற்பார்வைக்கு அம்மா போதும் - அம்ருதாவைப் பாதிப் பொழுதாவது ஆபீஸிற்கு வரச் சொல்.'

கறாராய்ப் பதில் வரும்!

அம்ருதாவும் சளைத்தவளில்லை.

'ஜெய், ஒரு உறையில் ரெண்டு வாளே இருக்கிறது உபத்திரவம். மூணாவதாய் என்னையும் ஏன் நுழைக்கப் பார்க்கிறார். குணா அத்தான் தவிர உங்க பிஸினஸ் ஒன்றும் தத்தித்தடுமாறும் நிலையில் இல்லை - இட்ஸ் ஸ்டெடி. தனிராய்த் தவழ்வது நம்ம குழந்தைதான் - அவனுக்கு இப்ப நான் தேவை.'

முற்றுப்புள்ளி வைத்தாள்.

இதையெல்லாம் தன்னிடம் மனம் விட்டுப் பேசிய ஓரகத்தியை நிர்மலாவிற்கு ஆரம்பம் முதலே பிடித்துப் போனது. வாய்ப்பிருந்தும் நிர்வாகத்தில் தலையிட்டுக் கோலோச்ச விரும்பாமல் வீடு

குழந்தை என்ற சாபனியைப் நின்று விட்டவளிடம் இலகுவாய்ப் பழக முடிந்தது.

ஆனாலும் இருவரும் ஓரளவு தொழிலுக்கு உதவினார்கள். தயாராகும் தொழிலாளர்களின் உணவுத் தயாரிப்பை மேற்பார்வை இட்டதில் உணவின் தரம் சிறப்பாக அமைந்தது.

அந்த எதிலும் அத்தனை ஈடுபாடு காட்டவில்லை.

'இத்தனை காலம் என் கையும் தோளும் வேண்டியிருந்தது. இனி அப்படியில்லையே - வலுவான இளம் தோள்கள் வந்தாச்சு - நிம்மதியாய் பைபிள் படிக்கிறேன். கோவில் சேரிட்டி கிளப்பும் போகலாம். அது போதும்.' என்று ஒதுங்கி நின்றார்கள்.

பல வார இறுதிகளைக் கோவாவில் கழித்தது மட்டுமே நிம்மதியிற்குச் சற்று இனிமையான பொழுதுகள்.

அம்ருதாவுடன் சேர்ந்து புதிது புதிதாய்ச் சமைப்பாள். குட்டி விக்ரமை மாறி மாறிச் சுமந்தபடி காவாரக் கடற்கரையில் நடப்பார்கள் - அதற்குள் அம்ருதாவிற்கு மறு குழந்தை தரித்து விட, விக்கியைக் களைக்காமல் தூக்கிக் கொஞ்சுவாள். கவனிப்பாள் இவள். கொழு கொழுவென்றிருக்கும் அந்தக் குட்டிப் பயல் அலைந்து சுடாமல் பேசுபவர்கள் முகத்தை வெகு உன்னிப்பாய்க் கவனிக்கும் பாங்கு தன் கணவனை நினைப்பூட்டியதாலோ என்னவோ.. சதா விக்கியை இடுப்பில் வைத்தபடியே அலைவாள் - ஒவ்வொரு முறையும் மும்பையிலிருந்து அவனுக்கு விசேஷ பரிசுப் பொருளை வாங்கிப் போவாள். படங்களைக் காட்டி நீளக் கதைகளைச் சொல்லுவாள்.

விக்கியின் அண்மை அவளது பிள்ளை ஏக்கத்தைக் கூட்டியது. ஆனால் அது பற்றிப் பேசினாலே குணாவிற்கு ஆகவில்லை - கோவாவிற்கு அவளைக் கூட்டிச் செல்வதைத் தட்டிக் கழித்தான்.



ஆனால் மும்பையில் கழிந்த நாட்கள் வர வரக் கசந்தன. பொழுது நகராமல் அடம் பண்ண, அதை நகர்த்த இவள் தன் கணவனைச் சார்ந்து, அவன் தோளில் கிளியாய்ச் சவாரி செய்ய நினைக்க... அதுவும் அவனுக்குப் பிடிக்கவில்லை!

"நிம்மி, அந்தக் கார் நம்மையே தொடருதா என்ன? வீடு வந்ததும், அது அங்கேயே நின்னுடுச்சு பார்..."

பிரசாத் சொல்ல, அவள் நிகழ்காலத்திற்கு இறங்கித் தலை திருப்பிப் பார்த்தாள்.

சற்றுத் தொலைவில் நின்ற அக்காரின் விளக்குகள் இரண்டும் அதே நேரம் கண் மூடிக் கொண்டன!

---

## 9

அப்பாவின் அறைக் கதவை மெள்ளத் திறந்து நோட்டமிட்டாள் - நல்ல அயர்ச்சியில் உறங்கிக் கொண்டிருந்தார். உணவிற்குப் பின்பு பிற மாத்திரைகளுடன் ஒரு தூக்க மாத்திரையும் எடுப்பார் என்பதால் ஒன்பதுக்கெல்லாம் தூங்கி விடுவார், சத்திய நாதன்.

இந்தச் சன்ன அரவத்திலும் உடன் படுத்திருந்த வேலு விழித்துக் கொள்ள, சைகையால் 'ஒன்றுமில்லை' என்று காட்டிவிட்டு நகர்ந்தாள். இன்று குணசீலனைப் பற்றி அதிகம் பேசியாயிற்று. யோசிக்கவும் நேர்ந்தது.

ஏன் பிரசாத் விவாகரத்துப் பற்றிய பேச்செடுத்தான்?

எடுத்ததும் ஒரு வகையில் நல்லதே.. அதனால்தானே அது பற்றித் தான் பேசிக்கவும் விரும்பாதது தெரிய வந்தது.

வீம்பிற்காய்க் கட்டியவனைப் பிரிந்து வந்து விட்டோமோ என்ற நெருடல். இளமையில் பிறர் தயவின்றி வாழ்வில் மிக உயர்ந்து விட்டவனுக்கு ஒரு 20 வயதுப் பெண் மீது மரியாதையோ, அந்தப் பிரியமோ பொங்குவது சாத்தியமில்லைதான். சிறு பெண்ணொன்று அலட்சியப் படுத்துவது கூட இயல்பானதுதானோ? ஒரு பக்க மனம் அப்பாவியாய்க் கேட்க, மறுபுறப் புத்தி சிலிர்த்து எழுந்தது.

'உன்னை மட்டுமா துச்சமாய் நினைத்தார்? பல முறை உன் அப்பாவையும் குறை கூறி மட்டந்தட்டவில்லை? இத்தனை பாசமாய் வளர்த்தவரை பெண்ணை அதிகச் செல்லம் கொடுத்து வளர்த்ததாய்ப் பரிகாசம் செய்யவில்லை?'

நோயுற்ற தந்தையைக் கண்டதும், இப்படிப்பட்ட ஏடாகங்களும் வர, நிர்மலாவின் மனம் சுருண்டது - கசப்பினால் கற்பாறையானது.

குணசீலனுக்குத் தான் மட்டுமே சிறந்தவன் - சாதனையாளன் என்ற கர்வம்! பிறர் தன்னைவிட சாதனைகளைச் செய்யக் கூடுமா என்ற மமதை!

ஆக அவனுக்கு இது தேவைதான்.

'குணசீலனுடைய மனைவி அவரோடு இல்லையாமே!' என்ற ஏளனப் பேச்சு

ஆனால் அவனை அதுவும் கூடச் சுடாது.

வியாபாரத்தில் வெற்றியும் பணமும் வரும்வரை எதுவும் அவனைத் திருத்தாது.

திருமணமான சில வருடங்களிலேயே குணாவிற்குத் தொழிலில் ஒரு புதுச் சவால் முளைத்தது. போட்டி கம்பெனி ஒன்று இவன்



ஏற்றுமதியை இடறிவிட முயற்சிக்க, இவன் சீண்டப்பட்ட புலி போலானான்! அவனுள் பொங்கிய ஆக்ரோஷத்தை விழிகளின் தணலிலேயே உணர முடிந்தது.. கணவனைச் சற்றுச் சாந்தப்படுத்த விரும்பினாள்.

'வாங்களேன் குணா, வெளியே போய்ச் சாப்பிடலாம்!' என்றால், 'ஏன், சமைக்கலையா?' சுள்ளென்று கேட்பான். 'செய்.... செய்திருக்கேன்ங்க - புலவு, பெப்பர் சிக்கன், சாலட்..'

'அப்ப அதையெல்லாம் ரிஜெக்ட் செய்துட்டு ஹோட்டலுக்குப் போய்க் காசையும் கரியாக்கணுமா?'

ஏற்றுமதிக்கான பொருட்கள் 'ரிஜெக்ட்' ஆகிவிடுமோ எனும் குறுகுறுப்பு இப்படிப் பேச்சில் வெடிக்கும் போலும்.

ஆனால் இவள் நொந்து போவாள்.

'உங்களுக்கு ஒரு மாற்றமாய் இருக்குமேன்னு கேட்டது என் தப்பு!' - வெடுக்கென உள்ளே போவாள்- அன்றோ மறுநாளோ அவன் அவளைத் 'தாஜா' செய்வதில்லை.

'ஏதோ கோபம் - அப்படிப் பிடுங்கிட்டேன் - இன்னைக்கு எங்கே போகலாம் - சொல்லு.' என்று சமாதானக் கொடி ஆட்டும் கலை கல்லாதவன்!

இவள் இப்படியே கிடந்தால் 'நொக்க' இல்லை என்று கூட கணக்குப் போட்டுப் பாராமுகம் காட்டினானோ என்னவோ? ஆனால் அதுவே வழக்கமாகிவிட, புருஷனோடு பேசிச் சிரிக்க, வெளியே போய் வர இருக்க வேணுமென்று, நிர்மலா ஆசைப் பட்டால், அவள்தான் இறங்கி, நயந்து பேச வேணும்.

இது அவள் பெண்மைக்கு விழுந்த குட்டு.

குணா தன்னைக் காயப்படுத்தினாலும் தானாய்ப் போய்ப் பேசி ஒப்புரவாக வேணுமென்ற 'நச்' குட்டு ஒவ்வொரு முறையும் நடு நெஞ்சைப் புண்ணாக்கியது.

ஒரு நாள் காலை ஏதும் சாப்பிடாமலேயே வேலைக்குக் கிளம்பியவனை மறித்தாள்.

'காலைக்கும் பகலுக்கும் இப்படி ஓடணும் - கம்பெனியின் எம்டியா? மஷ்ரும் ஆம்லெட் போட எல்லாம் தயார் - ரெண்டே நிமிஷம் சாப்பிட்டுட்டுப் போங்க..'

'பசிக்கலை..'

'ப்ளீஸ்..'

'மூணு வேளையும் நான் வித விதமாய்ச் சாப்பிட ஆரம்பிச்சேன்னா, பிஸினெஸ் காய்ஞ்சிடும்.'

இதுவே ஒரு புன்னகையுடன் சொல்லப் பட்டிருந்தால் புண் படுத்தாது. அவனது கடுமையான பாவனை காயப்படுத்தும்.

நூடுல்ஸ் அவித்த முட்டைக் கலவை, வறுத்த காளான்களை ஃப்ரிட்ஜில் வைத்து விட்டாள். தனியே ருசிக்க மனமில்லை.

வெறும் வயிறுடன் போனவன் மதியமாவது சாப்பிட வருவானா என்று மருகியது ரோஷமற்ற மனம்!

ஆக மதியம் அவள் மும்பை அலுவலகத்திற்குப் 'போன்' மூலம் அழைத்த போது

'போர்ட் மீட்டிங் இன் ஆன் மேம்.' என்று பணிவாய்ப் பதில் வந்தது.

அட. இன்று முக்கிய முடிவுகள் எடுக்கப்படப் போகின்றனவா? அதனால்தான் தனது செல் ஃபோன் தொடர்பையும் வெட்டி விட்டு மும்முரமாய் கம்ப்யூட்டரில் நுழைவதும் குறிப்பெடுப்பதுமாய் இருந்தானா? ஏற்றுமதியில் எப்போதும், எதுவும் நேரலாம் என்பதால் சங்கிலித் தொடர் திட்டங்களும் முக்கிய கடும் முயற்சிகள் தேவையாய் இருக்கின்றன.



ஆனால் வெறும் வயிறோடு எதிரிகளுடன் மல்லுக் கட்டுவானேன்?

அவனது செல்ஃபோன் மூலமும் தொடர்பு கொள்ள முடியாததால், மறுபடி குணாவின் உதவியாளரை அழைத்து,

கணவன் தன்னை ஒரே நிமிடம் தொடர்பு கொள்ள வைக்க முடியுமா எனக் கேட்டாள்.

'ஏதும் பிரச்னையா, மேம்?'

'இல்லை... சும்மாதான்...' இவளுக்கே அசட்டுத்தனமான பதிலாய்ப் பட்டது.

சில நிமிடங்களில் மறுபடி இவளிடம் தொடர்பு கொண்ட உதவியாளர்,

'மன்னிக்கணும், மேம்... பாஸ் இஸ் பிஸி... எழுந்து வர முடியாத நிலைமை...'

இவளுக்குள் பதட்டம் - கடவுளே! ஏதேனும் இக்கட்டான நிலைமையா? மனமுருக ஜெபித்தாள் - வேறென்ன செய்ய என்பது புரியாமல் வீட்டினுள் குறுக்கும் மறுக்குமாய் நடந்தாள்.

இதே பதட்டத்தைத் தன் தகப்பனுக்கும் ஏன் தர வேண்டும் என்ற அக்கறையால் இங்கு நடப்பதை எல்லாம் அப்பாவிடம் கொண்டு போவதில்லை அவள்.

கணவனது மௌனம், அலட்சியம் கலவரமூட்டியது. அப்பாவும்தான் தொழிலதிபர் - சதா யாரேனும் அவருடன் வியாபார சம்பந்தமாய்ப் பேசுவதும் உண்டுதான்.

ஆனால் அலுவலக அறைக்குள் மகள் நுழைந்தால் அப்பா வாஞ்சையுடன் புன்னகைத்து இவளை அருகே அமர்த்திக் கொள்வார். கால் கடுத்தால் சற்று உயர்த்தி வைத்துக் கொள்ள ஒரு தணிந்த முக்காலி அப்பாவின் அருகே இருக்கும் - இவள்

அதிலமர்ந்து பத்திரிகை புரட்டியபடியோ, பாப்கார்ன் கொறித்தபடியோ, வியாபார விவாதங்களைச் சுரத்தின்றிக் கேட்டதுண்டு.

அப்பாவின் தொழிலும் ஏறி இறங்கியிருக்கும் - ஆனால் அவர் இவளை ஒதுக்கி நிறுத்தியதில்லை.

கண்ணைக் கட்டி விட்டுக் கலவரப்படுத்தியதில்லை.

அன்று மதியமும் நிர்மலா சாப்பிடவில்லை.

'மெரைன் ட்ரைவ்' ரம்மியமான பகுதி.

ஒரு புறம் மக்கள் வசிக்கும் நகர்ப்புறம் - மறுபுறம் முழுக்க வளைந்து கிடக்கும் கடல்! உடன் வளைந்து போகும் சாலையில் காலை ஏழு மணி வரை அத்தனை கூட்டமிருக்காது. அதன்பிறகு குடுமிப்பிடிச் சண்டை போல உச்சகட்ட இரைச்சலும் புகையுமாகிப் போகும் மாலைப் பொழுதிலோ குளித்து அலங்கரித்த பெண்ணாகிப் போகும் அச்சாலை!

சாலை முழுக்கத் தங்க சோடிய ஒளியும், பேசிச் சிரித்துப் போகும் பாதசாரிகளுமாய்... பழங்கால சாரியட் வண்டிகளை மணிகுலுங்க இழுத்துப் போகும் ஜோடிக் குதிரைகள் - அதன் வெல்வெட் இருக்கையில் அமர்ந்து மும்பையின் மாலை அழகைப் பார்வையிடும் சற்று வசதியான பயணிகள்.

இதற்கு மேலும் அழகு சேர்ப்பது பாதையோரம் அலையும் புறாக் கூட்டம்தான். தத்தி நடக்கும் அந்தக் குண்டுப் பறவைகளுக்குப் பலர் தானியம் வாங்கிப் போடுவார்கள்.

இவளுக்கும் அப்படி இறைத்தபடி மஞ்சள் ஒளியில் கடலைப் பார்த்தபடி நடக்க ஆசைதான்.

வாயிலருகே கம்பு விற்ற ஒரு மூதாட்டியிடம் ஒரு பொட்டலம் தானியம் வாங்கிக் கொண்டு நடந்தாள்.



பலர் ஜோடிகளாகவும், முதியவர்கள் நாயுடனும், நடந்து கொண்டிருக்கத் தான் தனியாய் நடப்பது நெருடியது.

மோர், காபி என்றே குடித்ததில் வயிறு வற்றியிருந்தாலும், பருத்த கல்சுவரின் அப்பால் பொங்கிக் குதிக்கும் கடலை, சிரித்த மனித முகங்களை, சாரியட் புறாக்களை அருகே கண்டதில் மனம் நிரம்பியது.

தானியத்தை அள்ளி விசிறினாள்.

அடிக்கடி இரை கிடைப்பதாலோ என்னவோ, புறாக்கள் அலட்டிக் கொள்ளாமல், சாவகாசமாய்க் கொத்தித் தின்றன.

இப்படித் தினம் வெளியே ஒரு மணி நேரமேனும் வந்து விட வேணும். வீட்டிலேயே அடைபட்டுக் கிடப்பதால், குணா வீடு திரும்பியதும் ஏதேனும் பேசி வாங்கிக் கட்ட நேருகிறது.

'ஏன் இன்னைக்கும் லேட்?'

'எனக்கு ஒரே போர் - சாப்பிடக் கூடப் பிடிக்கலை!'

'அப்பா... ஃபோன் செய்தாங்க.. ஒரு நேரங்கூட மாப்பிள்ளை வீட்டில் இருக்கிறதில்லை - அவரோடு பேச முடியலையேன்னு குறைப்பட்டாங்க.'

இது எதற்கும் பதில் வராது.

'சாப்பாடு எடுத்து வை,' என்பது மட்டும்தான்!

மயூராவிடம் எப்படி ஆழ்ந்து, அலுக்காமல் பேசுகிறான்!

பிறர் அறியக்கூடாததைக்கூட அவர்களின் விழிகளே பேசி முடித்து விடுவதை இவள் கவனித்ததுண்டு.

அப்பாவுடன் இவளும் இப்படிப் பார்வையால் பல விஷயங்களைப் பரிமாறிக் கொண்டதுண்டு.

இரு வருடங்களுக்கு முன் பரமசிவம் அங்கிளின் கிரகப் பிரவேசத்தின் போது பெருகிய சிரிப்பை அடக்க இருவரும் எப்படிச் சிரமப்பட்டார்கள்!

அங்கு போகும் முன்னமே அப்பா சொல்லிவிட்டார் - 'பரமேஷும் நானும் பள்ளித் தோழர்கள் டா - அப்பமே அவன் பேர் ஃபாரின் பரமேஸ்தான் - தன் ரப்பர், பென்சில், செருப்பு எல்லாம் காட்டி-

"இது ஃபாரின்டா - இப்படியெல்லாம் நம்மூரில சாமான் செய்ய இன்னும் அம்பது வருஷமாகும்" பான்.

'பணக்காரப் பையனாப்பா?'

'நடுத்தரந்தான் - கையில உள்ளது நம்மூர்ப் பொருளாப்புத்தான் இருக்கும் - சும்மா ஒரு பத்தா ஒரு நாள் இவன் தப்பாய்க் கணக்குப் போட வாத்தியார் காதை நல்லா திருகிட்டார்.

'பயல் 'காது ஐயோ எங்காது' என்று அலற, அதுக்கு, 'ஏன்டா, அதுவும் ஃபாரினா?' கேட்க எங்களுக்குச் சிரிப்புத் தாங்கலை.'

'ஆக எல்லாருக்கும் அவரு அலட்டல் தெரிஞ்சிருக்குது'

'பின்னே?'

நண்பரின் புது வீட்டைச் சுற்றிப் பார்த்தவர்களுக்கு, அவர் வார்த்தைக்கு வார்த்தை-

'இந்த டைல்லை நீங்கே எங்கேயும் பார்த்திருக்க முடியாது - ஃபாரின் - இந்த லைட் ஃபிட்டிங்ஸெலாம் சைனா, கர்ட்டன்ஸ் கூட சிங்கப்பூர்' என்று பரமேஸ் பல்லுக்குத்தும் குச்சி வரை அளந்து விட இவர்களுக்கும் சிரிப்பு முட்டியது!

'சொல்லேன்டா?'

'ஷ். இப்ப சிரிக்கடாதே!'



'கிளம்பலாமா?'

என்று தந்தை மகளுக்கிடையேயான பார்வைப் பரிமாற்றங்களுக்கு வெவ்வேறு அர்த்தங்கள் - அவர்களுக்கு மட்டுமே புரியும் சங்கேத விழி வார்த்தைகள்!

ஒத்த மனமும் பேச்சும் இருந்தால்தானே இது சாத்தியம்.

இவள் தாம்பத்தியத்தில்தான் சாதாரணப் பேச்சும் கூட அபூர்வமாய்ப் போனதே!

அவள் வீடு திரும்பிய போது, புலம்பித் தீர்த்த மனம் லேசாகி விருப்பது போல ஒரு ஆசுவாசம்.

காலை குளிர்பதனப் பெட்டியுள் வைத்த முட்டையை அடையாக வார்த்தாள்.

சூடான குழம்புச் சாதத்துடன் திருப்தியாய் உண்டாள். வயிறு நிறைந்ததும் சிந்தனைகளும் சற்றுச் சாந்தப்பட்டன.

'என்ன இப்ப - மீட்டிங் முடிந்து அவர் வந்ததும் என்ன, ஏதாச்சுன்னு மொத்தமாய்க் கேட்டுக்கலாம்,' என்று தன்னையே சமாதானப்படுத்தியவள், பரபரப்பாய் ஓடிய ஒரு தமிழ்ப் படத்தை வீடியோவில் ஓட விட்டு அமர்ந்தாள். வேலைக்காரப் பெண் ரசியா ஓரமாய் உட்கார, இருவரும் ரசித்துப் படத்தைப் பார்க்கலானார்கள். ஆனால் படம் முடிந்து, தூக்கம் கண்களைக் சுழற்றி செருகும்வரை அன்றிரவு குணசீலன் வீடு திரும்பவேயில்லை.

❖ ❖ ❖

## 10

இரவைத் தாண்டிட்ட போது மீண்டும் ஆத்திரம் முட்டியது.

பொறுப்பான கணவனாய் ஃபோன் மூலம் தகவலேனும் தெரிவிக்கக் கூடாதா?

காலையில் இவள் அழைத்தது அறிந்த பின்பேனும் அழைத்து ரெண்டு வார்த்தை பேசியிருக்கலாம்.

படுத்தவளுக்கு எந்நேரமும் கணவன் வரலாம் என நினைப்பிருந்ததால் அரைகுறை உறக்கம்தான். சிறு சப்தங்களுக்குக் கூட உலுக்கியது போல எழுந்தாள்.

காலையில் பத்திரிகை, பாலுக்காக வாசலைத் திறந்தபோது அழுகை அடைத்தது.

அன்றாட வேலைகளில் காலை நகர, ஒன்பதுக்கு மீண்டும் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டாள்.

'பாஸ் கோவா போயாச்சே மேடம்.'

'என்ன...? அங்கே என்னாச்சு?'

'பெரியம்மாவிற்கு உடம்பு சரியில்லையென்று தகவல் வந்தது.'

'என்ன... எப்போது?'

'மாலை ஐந்து மணியிருக்கும் - உடனே கிளம்பிட்டார் - மயூரா மேடமும் கூடவே போயிருக்காங்க. நாளை திரும்பிடுவார்னு நினைக்கிறேன் மேம்.'

'நல்லது.'



முகத்தில் உதை வாங்கியது போலிருந்தது!

அலுவலக, தொழில் விஷயங்களில் தான் கில்லாடி அல்ல-சரி-மயூரா அதில் அவரை ஆக்கிரமித்துக் கொள்ளட்டும் - வீட்டு விஷயங்களிலுமா தனக்கு முதலிடம் கிடையாது? தாய்க்கு ஒன்று என்றால் குணா தாரத்தை அல்லவா அழைத்துப் போயிருக்க வேணும்? தகவல் கூடச் சொல்லவில்லையே...?

இந்த அனுபவங்கள் எல்லாம் அவள் மனைவியான ஓரிரு மாதங்களுக்குள்ளேயே. தொடர்ந்த நாட்களில் இதே ரீதியில் அனுபவங்கள் தொடர்ந்தன!

மறுநாள் கணவன் வீடு நுழையவுமே கேட்டாள்.

'ஒரு ஃபோன் பண்ணக் கூடாதா?'

'அம்மாவுக்கு இப்ப பரவாயில்லை...'

மடக்கி விட்டான்! சுகவீனமாய்க் கிடக்கும் மாமியைப் பற்றி விசாரிக்காமல் கொண்டவனைக் குற்றம் சாட்டுகிறாளாம்!

'என்னாச்சு?' குறைந்த சுருதியில் கேட்டாள்.

'எப்பவாவது ஆஸ்த்மா தாக்கும் - ஜெபாவும் ஊரில் இல்லாததால் அம்ரிதா பயந்து என்னை வரச் சொன்னா.'

'என்னையும் கூட்டிட்டுப் போயிருக்கலாம்.'

'அங்கே அம்ருதா உண்டு... டாக்டர் கமாலும் இருக்கார் - பிறகென்ன...?'

'பிறகேன் மயூரா?' என்று துடித்த கேள்வியை அடக்கியவள்-

'எனக்குத் திருப்தியாய் இருந்திருக்கும்!' என்று மட்டும் சொன்னாள்.

'நீ கிளம்ப ஒரு மணி நேரமேனும் வேணும் - நேரம்தான் பிரச்னை...'

இனி பாயின்ட்டிற்கு வரவேண்டியதுதான் என்பது போல மறுபடி முதல் கேள்வியைப் பிடித்தாள்.

'எனக்கு ஒரு ஃபோன் போட்டிருக்கலாம்.'

'பண்ணினேன் - ஐந்துக்கு, மறுபடி ஐந்தரைக்கு. யாரும் எடுக்கலை. வெளியே போயிருந்தாய் போல..'

'மறுநாளேனும்..?'

'காலையில் ஆபீஸுக்குப் போட்டேன். நீ அங்கே பேசித் தகவலை அறிஞ்சுக்கிட்டதாய்ச் சொன்னாங்க - பிறகென்ன?'

'உங்க செல்லையும் ஆஃப் பண்ணிட்டீங்க - அன்றுதான் மனம் சரியில்லைன்னு வெளியே நடந்துட்டு வந்தேன்.. புறாக்களுக்குத் தானியம் போட்டுட்டு..'

அவன் 'எங்கு போனாய்?' என்று கேட்காமலேயே, தான் விளக்கம் அளிப்பது அர்த்தமில்லாமல் பட நிறுத்தினாள்.

'சாப்பிட்டீங்களா?'

'ம்ம்.. ஏதோ புது ஆம்லெட் போடறதாய்ச் சொன்னே.. இப்ப காளான் எக்ஸ்போர்ட் நல்லாப் போகுதாம்..'

இவளுக்குச் சிரிக்கவா அழவா என்றே புரியவில்லை.

அடுத்த முட்டையோடு வறுத்த காளான் மூன்று நாட்களாய்க் காத்திருக்குமா என்ன?

வெறுமே, 'நான் சாப்பிட்டுட்டேன்!' என்றவளைச் சற்று ஆச்சரியமாய் ஏறிட்டான்.

இனிக் கணவனைப் போலவே வார்த்தைகளை எண்ணி எண்ணிப் பேசுவதே போதும் என்று நினைத்தாள்.

சதா இவன் பின்னே தொங்கித் திரிவதால்தானே இத்தனை உதாசீனம்!



ஆனால் தனியே 24 மணி நேரத்தை என்னதாய்ச் செய்வது? கோவாவில் அடிக்கடி ஃபோன்கள் தொடர்பற்றுப் போகும் என்பதால் அவ்வப்போது அத்தை, அம்ருதாவோடு பேசுவாள். அவர்கள் புது மணப் பெண்ணைத் தொந்தரவு செய்யக் கூடாது என்ற நல்லெண்ணத்தில் இவளை அவசியம் இருந்தாலன்றி அழைப்பதேயில்லை.

ஒரு வாரம் சற்றுப் பாராமுகமாய்த்தான் குணாவிடம் நடந்து கொண்டாள் - ஆனால் மறுவாரமும் அவன் இரவு வீடு திரும்பாமல் போக, எகிறினாள்.

'அதான் ஃபோன் செய்தேனே!' என்றான் புரியாமல்.

'சொன்னால் ஆச்சா? எதற்காகப் போறீங்க.. எங்கேன்னு? மொட்டையாய் ராத்திரி வீடு வரமாட்டேன்னா?'

'இதற்கு மேல் யாருக்கும் விளக்கம் தந்து எனக்குப் பழக்கமில்லை, நிம்மி - தருவதாயுமில்லை.'

விலுக்கென நிமிர்ந்தவளை, அவன் குரல் மடக்கியது. 'நான் சிறு பையனில்லை. நிறையப் பொறுப்புகளைச் சுமப்பவன். நினைவிலே வை.'

ஆத்திரம் இவளுக்குள் பொங்கிப் புரண்டது. ஆனால் அதைக் கொண்டு என்ன செய்வது என்பதுதான் புரியவில்லை!

❖ ❖ ❖

இத்தகு நினைவுகளின் உளைச்சலுடன் உறங்கினாள் என்பதால் மறுநாள் கண்விழித்தவளுக்குச் சோர்வாய் இருந்தது. ஒரு புது நாளின் தெளிவு, உற்சாகமில்லை.

தயாராகி அப்பாவின் அறைக்கு விரைந்த போது மணி ஒன்பதைத் தாண்டி விட்டது - இனி அதிக நேரம் தந்தையுடன்

செலவழிக்க முடியாது வழக்கமாய் எட்டரைக்குத் தயாராகிக் காலை உணவைத் தந்தையோடு பேசியபடியே உண்ணுவாள்.

இங்கு அப்பாவும் காலை உணவை முடித்து பேஸினில் கை கழுவிக் கொண்டிருந்தார்.

கமலம்மா கை துடைக்கத் துண்டுடன் நிற்க, அப்பா மிகச் சோர்ந்து தெரிந்தார்.

மகளைக் கண்டதும் சிரிப்பு மட்டும் பிரகாசமாய் விரிந்தது.

"வாடா.."

"ஏழு லேட்டாயிடுச்சப்பா - இந்த வீக் - எண்ட் நான் எங்கேயும் போகப் போறதில்லை - முழுக்க உங்களோடுதான்."

"வியாதியஸ்தனோடு ரொம்ப மல்லாடக் கூடாதுடா. நீ வாழ வேண்டிய இளங் குருத்து"

"உங்களை விட எனக்கு வேறேதும் முக்கியமில்லைப்பா. கமலம்மா, மாத்திரை ஏதும் தேவைப்படுதா?"

"இந்த வாரத்திற்குப் போதும்.."

"பிறகு பார்த்துக்கலாம்மா" என்றார் சத்தியநாதன்-அயர்வுடன்.

"வரட்டுமாப்பா?"

'இங்கே வா,' என்பதாய்ச் சைகை செய்தார்.

நெருங்கிக் குனிந்தாள்.

மகளின் தலையை வருடியவர் நெற்றியில் கை வைத்துச் சற்று நேரம் கண் மூடினார்.

"கடவுளின் ஆசீர்வாதம் உனக்கு எப்போதும் உண்டுடா!"

நிர்மலாவிற்குத் தொண்டையை அடைத்தது.



விசேஷ நாட்களின் போது இப்படி ஆசி கூறி, வகிட்டில் முத்தமிடுவதுண்டுதான்.. அன்று கைக்கு ஒரு புது ஆயிரம் ரூபாய் நோட்டும் கூட வரும்..

இன்று என்ன?

இவளின் குழப்பம் புரிந்தது போல,

"ஒன்றுமில்லை.. சும்மாதான்!"- புன்னகைத்தார். ஆயினும் உள்ளே ஆறுதலை மிஞ்சி அழுகை கிளம்ப, அதை அடக்கியபடி தந்தையின் நெற்றியில் முத்தமிட்டாள்.

"வரேம்ப்பா.."

"நல்லதுடா.."

அலுவலகத்திற்குப் போய்ச் சேரும் அந்த அரைமணி நேரப் பயணம் முள்ளின் அவஸ்தையாயிருந்தது- 'பேசாமல் திரும்பி விட்டால் என்ன' என்றும் யோசித்தாள். ஆனால் திங்கட் கிழமையன்று அலுவலக வேலைகளைத் தவிர்க்கவே முடியாது.

வார இறுதியில் தேங்கிய வங்கி வேலைகள் எல்லாம் அன்று தான் நடக்கும். வந்து குவியும் கடிதங்களுக்கும் உடனுக்குடன் பதில் போட்டு விட்டால் நல்லது.

அலுவலகத்தில் நுழைந்து வேலையில் மூழ்கிப் போனதும், கலக்கம் மறந்து போனது.

மதிய உணவை எதிரே இருக்கும் கிளப்பிலிருந்து தினம் வரவழைப்பாள். உணவிற்காய் கார் மறுபடி வீடு வரை போவதோ அல்லது காலையிலேயே உணவைக் கட்டிக் கொண்டு கிளம்புவதோ உசிதமாய்ப்படவில்லை ஹாட்-கேஸை அனுப்பினால் சர்மா சுடச்சுடப் பொங்கல், வடையைச் சட்னி வகைகளுடன் அனுப்பி வைப்பார்.

மதியம் ஸ்பூனால் பால் பொங்கலை வாயிலிடும்போதுதான், மறுபடி அப்பாவின் நினைப்பு வந்தது. பெரும்பாலான வேலைகள் முடிந்து விட்டதால் விரைவிலேயே வீடு திரும்பி விடுவது என்று முடிவெடுத்தவள் சொச்ச வேலையையும் இழுத்துப் போட்டுப் பார்த்தாள்.

வாடிக்கையாளர்கள் சிலரையும் சந்தித்த பின், வீடு திரும்பத் தன் வாக்கரை முடிய போது, ஃபோன் அலறியது.

ஏனோ எடுக்கப் பிடிக்கவில்லை... ஆனாலும் எடுத்தாள்.

அது தந்த தகவலைக் கேட்டவளின் உடம்பும் புத்தியும் மரத்துக் கனத்தன.

தனக்குமே பக்கவாதம் வந்து விட்டதோ எனத் தோன்றுமளவு அவயவங்கள் இயங்காது இறுகிப் போயின.

அப்பா இறந்து விட்டாராம்!

இனி அவள் யாருக்காகவும் இப்படிப் பறந்தடித்து வீடு திரும்ப வேண்டாம்.

சிறு சந்தேகங்களைச் சாக்கிட்டு அவரை அழைத்து நீளப் பேச முடியாது.

இன்னும் சிறிது நேரம் அப்பாவின் அறையிலேயே இருக்க வேணும் என்று குழந்தைத்தனமாய் ஏங்க நேராது.

தந்தையின் விரல்கள் காலையில் வருடிய தன் நெற்றியை நடுங்கும் விரல்களால் நீவினாள்-

அலுவலக ஃபோன் மூலமும் தகவல் எட்டியிருந்தது போலும். தயாநிதி மூச்சிரைக்க ஓடி வந்தார்.

அவரைத் தொடர்ந்து வாணியோடு இன்னும் சிலர்...



"ஸாரிம்மா குழந்தை.. நீ கிளம்பு. இனி நம்மெல்லாருக்கும் ஆண்டவன்தான் துணை..!"

வாணி இவள் மேஜையைப் பூட்டிச் சாவியை இவளின் கைப்பையில் போட்டுக் கைப்பற்றி அழைத்து நடக்க, கீழே கடையில் ஒரு இறுக்கமான பரபரப்புத் தெரிந்தது-

"வேற யாருக்கெல்லாம் ஃபோன் பண்ணணும், வாணி? பிரசாத்திற்கு?"

"இதோ மேடம்..!"- போனவள், இரண்டாம் நிமிடம் திரும்பி, "அவங்களுக்கு விவரம் தெரியும் போலங்க- பிரசாத் சாரின் அம்மா உங்க வீட்டில்தான் இருக்காங்களாம்- நம்மைப் பதறாம வரச் சொன்னாங்களாம்."

வீடு திரும்பிய அப் பயணம் வெகு நூதனமாயிருந்தது. ஒரு யுகம் போலவும் அதே சமயம் ஒரு நொடி போலவுமான மாயக் குழப்பம்.

## 11

வீட்டில் சடலமாய் கிடக்கும் தந்தையைக் காணும் துணிவில்லை என்று தோன்றினாலும், இன்னும் சில மணி நேரம் மட்டுமே அப்பாவைப் பார்த்திருக்கக் கூடும் என்ற வெறியும் சேர்ந்து கொண்டது- வாசலில் இவளுக்காய்க் காத்திருந்த பிரசாத்தும், அவனதும் தாயும் அவளை அழைத்துப் போனார்கள் - அவர்களது

அண்மை ஓரளவு பலம் தந்தது - தூங்குவது போலவே தோன்றிய அப்பாவின் தலைமாட்டில் கிடந்த நாற்காலியில் சரிந்தாள் - உடம்பும் உள்ளமும் மரத்தாற் போலாகி, அக்கொடும் சந்தர்ப்பத்தைச் சகிக்கும், தாங்கும் நிலைக்கும் அவளைத் தயாராக்கியிருந்தது.

ஆட்கள் மலர்வளையம், மாலைகளுடன் வர ஆரம்பித்தனர். ஆனால் யாரும் அவளது கண்ணில் கருத்தில் பதியவில்லை. இனி வாழ்நாள் முழுக்கத் தொடரப் போகும் தனிமையை இப்போதே முழுக்க உணர்ந்த நடுக்கம்.

பிரசாத்தின் தாய் அனிதா இவளை விட்டு விலகவில்லை, மறுநாள் அதிகாலையில்.

'நிம்மி, உள்ளே வந்துட்டுப் போம்மா!' என, இவள் இயந்திரமாய் அறைக்குள் போனாள்.

கட்டிலின் மீது கறுப்பு நிறப் பருத்திப் புடவை.

“காலை பத்து மணிக்கு இறுதிச் சடங்கும்மா. ஃப்யூனரல். ஏதேனும் குடி - தயாராகிப் புடவையும் மாற்றிக்கோடா.”

“ஃப்யூனரலுக்கான ஏற்பாடுகள் எல்லாம்..?”

“எந்தப் பிரச்சனையுமில்லை - பாலா.. ஜூலியா?”

மறுப்பாய்த் தலையசைத்தவளின் கன்னங்களில் நீர் உருண்டது. அழுதழுது வீங்கிய கன்னங்கள் உப்பு நீரில் காந்தின.

“முகம் கழுவிக்கோம்மா, நிம்மி- என்று கமலாம்மாவும் சொல்ல, தன் தோற்றத்தைச் சீர் செய்து புடவை மாற்றினாள்.

இரு பெண்களும் வெளியேறியிருந்ததால், மிக அவசரமாகவே மாற்றினாள் - தனிமை மிக அச்சுறுத்தியது.

கதவு தட்டப்பட.. ஒரு நிம்மதியோடு.

“வாங்க.. வரலாம்!” குரல் தந்தாள்.



சேலைக் கொசுவங்களைச் செருகி, விரைத்து நின்ற புடவையை அயர்வுடன் அழுத்தியவள், அந்த வேறுபாடு உணர்ந்து திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

தளிர் உடல் மேலும் விரைத்தது.

இவர்.. இவன் எப்படி இங்கே?

அதற்கு மேல் யோசிக்க முடியாத களைப்பு..

“ஐயம் ஸாரி, நிம்மி!” - வருத்தம் தெரிவித்தது குணசீலனின் ஆழ்ந்த குரல்.

அனிதா ஆன்ட்டியின் அணைப்பில் ஆறுதல் கண்ட அவளுக்கு இந்தச் சம்பிரதாய ஆறுதல் வார்த்தை பசப்பாகப்பட்டது - ஆத்திரம் கிளர்ந்தது.

“உங்களுக்கு எப்படித் தெரியும்..?”

ஏன் வந்தீர்கள் என்ற மறு கேள்வியைக் கேட்காமல் விழுங்கினாள். “நான் ஒரே மருமகன் - எனக்குச் சொல்லாமலா?”

ஆழ மூச்செடுத்துச் சம்பிரதாயமாகவே பதிலளித்தாள் - 'வந்ததிற்கு நன்றி.”

“மாமா தன் முடிவை எதிர்பார்த்தாங்கன்னு தோணுது. ரெண்டு நாட்களுக்கு முன்னே என்னை வரச்சொன்னது அவங்கதான். ஆக, எல்லாக் காரியங்களையும் இருந்து பார்க்கவும் முடிஞ்சது..”

இவளது அதிர்ச்சி அதிகமானது-

“உங்க உதவி ஏதும் இங்கே தேவை.. தேவையில்லை..”

“உதவ உன் உத்தரவு எனக்குத் தேவையில்லை, நிம்மி. நீ இன்னும் அதே சிறுபிள்ளைத்தனத்தோடு இருக்கே.. ம்ம்?”

இவள் பதிலளிக்கும் முன்பு அவ்விடத்தை விட்டு விலகி விட.. இவள் எரிச்சலுடன் நின்றிருந்தாள் -

திறந்த கதவு வழியே எட்டிப் பார்த்த வேலு மறுநிமிடம் பிஸ்கெட் பழரசத்துடன் வந்து:

"பத்து நிமிஷம் இப்படி உக்காந்து சாப்பிடுங்கம்மா!" உபசரித்தான்.

"வேண்டாம், வேலுண்ணா..."

"சாப்பிடாட்டி ஐயா திட்டுவாரே..."

இவளுக்கு அழுகை பீறிட்டது - "ஐயா... அவர்தான் போயாச்சே..."

"சின்னய்யாங்கம்மா. அத்தனையும் பொறுப்பா கவனிச்சுச் செய்றாரும்மா" - என்றபடி இவள் கையில் வைத்த கிளாஸை மேலும் மறுக்கத் திராணியின்றிப் பருகினாள்.

வேலுவின் மீதும் கோபம்தான்.

"இவர் முன்னமே இங்கே வந்துட்டாராம்... அப்பாதான் வரவழைச்சாங்களாம்!"

"அப்படித்தான் போலம்மா - நீங்க பாட்டுக் கேக்க பிரசாத் தம்பியோட வெளியே போயிருந்தன்னைக்கு வந்து, கொள்ளை நேரம் பேசிட்டிருந்தாங்க - நான் பூரி போட்டுப் பரிமாறுனதோட சரி."

"ஓஹோ!"

"இப்ப எல்லா ஏற்பாடும் சின்னவர் பொறுப்பிலதான் - பிள்ளையாப் நின்னு செய்றாரு - வந்த உறவுக்காரங்களுக்குத் தங்க ஏற்பாடு செய்து..."

இவள் இடை மறித்து, ஏற்கெனவே பலமுறை கேட்ட கேள்வியை மீண்டும் கேட்டாள்.

"அப்பா கடைசியா என்ன சொன்னார், வேலுண்ணா?"



"சின்னவர்ட்ட என்ன பேசினாங்கன்னு தெரியலையம்மா - சோர்ந்து தெரிஞ்சாங்க - தவிர வேறேதுமில்ல... உங்களைப் பத்தின கவலைதாம்மா... ஆனா இனி எல்லாஞ் சரியாயிடும்..."

வேலு காலித் தட்டுடன் வெளியேறினான்.

வீடு வழக்கமாய் அமைதியாய்த்தான் இருக்கும். ஆனால் இன்று வெறுமையாய்க் கிடந்தது. இறுதி ஆலய ஆராதனையின் போது குணசீலனும் அவன் குடும்பத்தாரும் இவளைச் சுற்றி அமர்ந்திருந்தனர் - பெட்டியில் படுத்திருந்த அப்பாவைக் குழியில் இறக்கும் போது மாமியார் இவளைத் தன் தோளோடு சாய்த்துக் கொள்ள, குணாவின் தம்பி, தம்பி மனைவி, தங்கை அனைவரும் அன்று முழுக்க இவளை விட்டு நகரவேயில்லை.

தம்பி மனைவி அம்ருதாவைப் போன முறை கர்ப்பிணியாய்ப் பார்த்தது.

அவளுக்குப் பெண் பிறந்திருப்பதாய் அப்பா இவளிடம் தெரிவித்திருந்தார் - 'யாரோ தனக்குத் தகவல் தெரிவித்ததாய்' அப்பா சொன்னது பொய்யா?

குணாவின் குடும்பத்தார் தன்னிடம் பாராமுகம் காட்டித், தன் தந்தையிடம் சொந்தம் பாராட்டி வந்தார்களா என்ன?

ஏன்..? எதற்காக?

குட்டி பகை என்றான பின், ஆட்டை மட்டும் ஏன் கட்டிக் கொண்டாடினார்கள்?

குழப்பமாய் இருந்தாலும் அவர்களின் அண்மையும் அன்பும் அவளுக்கு அந்நேரம் தேவைப்பட்டது.

"குழந்தை எங்கே, அம்ருதா?"

"விக்கி ஸ்கூலுக்குப் போறானே - அவனை அலைக்க வேண்டாம்னு வீட்டிலேயே விட்டுட்டேன். இப்ப பிறந்திருக்கறவ

விதுபாலா - விதுன்னு கூப்பிடறோம் - ஹோட்டலில் விட்டுட்டு வந்திருக்கேன் - நிறையப் புதுமுகங்களாய் இருக்க, அழுவா..."

"எனக்கு அவளைப் பார்க்கணுமே..."

"உடனே ஃபோன் பண்ணி ஆயாவை இங்கே கொண்டு வரச் சொன்னாப் போச்சு..."

சற்றைக்கெல்லாம் வந்த குழந்தையை ஆவலுடன் அள்ளினாள்.

சருகு ஒன்று உதிர்ந்ததைக் கண்டதாலோ என்னவோ, தளிரைக் காணும் கொஞ்சம் ஆர்வம் மிகுந்திருந்தது.

மூன்றாம் நாளின் பிரார்த்தனை, விருந்து வரை அனைவரும் இவளுடனேயே தங்கியிருந்தார்கள்.

இத்தனை அனுசரணையான இவர்கள் இத்தனை மாதங்கள் இவளைக் கண்டு கொள்ளாதது ஏன்?

கணவனோடு கோபித்து முறுக்கிக் கொண்டு வந்தவள் இவள்- 'நீங்கள் ஏன் என்னைத் தொங்கித் தொடரவில்லை?' என்று புகுந்த வீட்டாரிடம் விசாரணை வைக்கவா முடியும்?

நான்காம் நாள் அனைவரும் கிளம்பிய பின், குணா மட்டும் இவளது வீட்டிலேயே இருந்தான் - அவன் பெட்டி பைகள் இருந்தது விருந்தினர் அறையில்.

இவளது திருமணத்திற்கென வாங்கிய அகண்ட தேக்கு மரக் கட்டிலில் ஆறங்குல மெத்தையில் இவள் மட்டும் அட்டை போலச் சுருண்டு கிடந்தது இவளுக்கே உறுத்தியது.

தனக்கு அப்பா உண்டு என்ற துணிவில் சில மாதங்களுக்கு முன் கட்டியவனை மறந்து வந்து விட்டாள்.

இனித் தன் நிலைமை என்ன?



அநாதையான பின் மறுபடி குணாவிடம்தான் சரணாகதி அடைய வேண்டுமோ?

சும்மாவே அவன் தன்னை ஒரு காசிற்கும் மதிக்கவில்லை. படுக்கைக்கும் கூட மனைவி அவனுக்கு வேண்டிய பொழுதுக்கு மட்டுமாய் நியமிக்கப்பட்ட ஒரு இணை!

அந்தஸ்திற்காய்த் தேடிக்கொண்ட பத்தினி!

தனக்குத் தேவை எனும்போது மோகமும் தாபமுமாய்த் தன்னைத் தழுவுபவன், இவள் என்றேனும் அவனில் கொடியாய்ப் படர முயற்சிக்க, படு வேகமாய் வெறுப்பாய் இவளைப் பிய்த்து விசிறியிருக்கிறான்-மற்ற அலட்சியங்களை விட, இந்த அவமானமே உச்ச வேதனை! இவளது பெண்மையின் மேன்மையில் துப்பப்பட்டதாய்க் குன்றிய தருணங்கள்... ஏன் அப்படி?

இடியும் மழையுமான ஒரு இரவில் இவள் ஒரு குழந்தைபோலக் கணவனிடம் ஒண்டிக் கொள்ள,

'இதற்கெல்லாமா பயம்... சேச்சே!'- என்று இவளை வலிய விலக்கியவன், திரும்பிப் படுத்தது எதனால்?

வெறுமே தன்னை அணைத்துத் தலையைக் கோதி விட்டிருந்தால் நிம்மதியாய் உறங்கியிருப்பாள் - எதிர்பார்த்ததும் அதைத்தானே!

இப்படி உதறி எறிபவன், தானாய் இவளை இழுத்து இறுக்கும் போதில் இவள் முந்தைய அவமானங்களைச் சுத்தமாய் மறந்து அவன் தழுவல்களுக்கும் முத்தங்களுக்கும் ஈடும் பதிலும் தர வேண்டும்!

இந்தப் புதிரான நடத்தையை அவள் யாரிடம் பகிருவது?

புருஷனிடமே மனம் விட்டுப் பேசக் கூசியதே..!

அவளை விட்டுப் பிரிந்த அன்றும் இதே போலொரு நிகழ்வில்தான் - அது தன்னுள்ளே ஊற்றிய திராவகத்தினால் தான்!

இல்லத் தாம்பத்தியம் பற்றி ஒரு புத்தகத்தை வாங்கி, அது கூறிய ஆலோசனைகளை எல்லாம் ரசித்து வாசித்துக்கொண்டிருந்தாள் - 'சகலமும் அறிந்த' தோழிகளோ, தாய், சகோதரியோ இல்லாததால் நிர்மலாவிற்கு இலை மறைவு காயாய்க் கூட 'ரகசியங்களை' யாரும் காட்டித் தரவில்லை. தன் அறியாமைதான் கணவனுக்குச் சமயங்களில் வெறுப்பூட்டுகிறதோ என்று அஞ்சிய பேதை முழு மூச்சாய்ப் புத்தகத்தைக் கரைத்துக் குடித்துக் கொண்டிருந்தாள்.

மாறுபட்ட சூழல், ரம்மியமான இசை, கவர்ச்சியான உடை, கிளர்ச்சியூட்டும் வாசனை எல்லாம் ஒரு ஆணை வெட்டிச் சாய்த்துவிடும் என்று அப் புத்தகம் அடித்துச் சொல்ல, இதையெல்லாம் திருமணமான ஒரு வருஷத்திற்குள் உபயோகப் படுத்த வேண்டியிருக்கிறதே என்று வெட்கத்துடன் சிரித்தபடி, நிர்மலாவும் காரியத்தில் இறங்கினாள்.

குணா உலகத்தை அதன் கவர்ச்சியைப் பார்த்தவர். அவரைத் தன்னிடம் தக்க வைப்பதும் சொக்க வைப்பதும் லேசில்லை என்ற சமாதானத்துடன் தங்களின் படுக்கை அறையை அலங்காரம் செய்தாள் - காதலின் நிறம் இளம் சிவப்பு என்று புத்தகம் அறிவுறுத்தியதால், பல்ப் ரோஜா நிறத்திற்கு மாறியது. அதே நிற சாட்டின் படுக்கை விரிப்பில் நட்சத்திரங்களாய் முல்லை மொட்டுக்கள் - இதற்காகத் தாராவி ஸ்டேஷன் வரை ஆள் அனுப்பியிருந்தாள்! - ஜாடியில் ரோஜாக் கொத்துக்கள் - நளினமான இசை - ரோஜா நிற நைட்டியில் அவள் - அறை முழுக்க ரோஸ் ஸ்ப்ரே... சூழல் இவளையே மயக்கியது! மறுநாள் குணா சிங்கப்பூர் போய் திரும்ப ஐந்து நாட்களாகும் - இன்று பெட்டி [illegible] எல்லாம் தயாராக்க, சற்றுச் சீக்கிரமாகவே வந்து விடுவதாய்த் தகவல்.



ஆக, மோகத்துடன் முகரப்படுவதற்கு அந்த மலர் தயாராகிக் காத்திருந்தது!

வீடு திரும்பியவன் படுக்கை அறையைத் திறக்க, தாக்கப்பட்டது போலத் திகைத்து நின்றான்.

நிறமும் மணமும் இசையும் அத்தனையையும் விட அவற்றில் விழுந்த இவளது மோகமும் அவனை நிலை தடுமாற வைத்தது போல...

ஆனால் கண்கள் கனிவதற்குப் பதிலாய்க் கடுமையாயின. தாடையை அழுந்தக் கடித்தான்.

'உன் வேலையா? உயர்தர ரெட் லைட் ஏரியா போல, வீட்டை மாற்றிட்டே... இது பிங்க் - லைட் ஏரியா... இதில் ஒத்துழைச்சா எனக்குப் பணம் கூட உண்டா?'

என்றவன் மறு அறைக்குப் போய்ப் படுத்துக் கொள்ள, இவள் நிலை குலைந்து போனாள்.

வேலைக்காரப் பெண்ணிடம்,

'ஐயா வெளிநாடு போகும்போது நீ ஏதும் லீவ் எடுத்துடாதே - இப்பவே வேணும்னா ஒரு நாள் உங்கம்மாவைப் பார்த்துட்டு வந்திடு!' என்று வலிய விடுமுறை தந்து அனுப்பியிருந்தது மானம் காத்தது!

ஆனால் இரண்டாம் நாளே அந்தப் பெண்ணிடம் மட்டுமே சொல்லிவிட்டுத் தனியே ரயிலேறி விட்டாள் - சென்னைக்கு!

அன்றிரவின் அனுபவத்தில் மனம் மரத்து கசந்து போனது - மானம் அவமானம் பற்றியெல்லாம் கவலைப்பட மறந்தது. ஒரு மாதமேனும் அவனைக் காண்பதில்லை என்ற வீம்பும் வெறுப்பும் கணவனது பாராமுகத்தில் உரம் பெற்றன. அப்போது தஞ்சம் புகப் பிறந்த வீடிருந்தது - இனி... தன் நிலை என்ன...?

---

மூன்று நாட்களாய்க் கவனிப்பாரற்றுக் காய்ந்து கிடந்த தோட்டத்திற்கு நீர் பாய்ச்ச ஆரம்பித்தான், வேலு.

ஈரமண்ணில் தெரிந்த களைகளைப் பிடுங்கியவன், அதே கை கொண்டு முகத்தையும் துடைப்பதைக் கண்ட மனைவி சங்கு கடிந்தாள்.

"எளிப்படித் தேய்க்கற? விரலுல மண்டின மண்ணு, கண்ணுல புகுந்துடாது?"

"ப்ச்..."

"என்னாச்சு? அழுவறியா என்ன?"

"பின்ன? இந்நேரம் நான் இப்படி இங்கன உக்கார முடியுமா? துயா குரல் தருவாகன்னு வீட்டுலல்ல கிடப்பேன்..."

"இப்படி நிம்மிம்மா முன்னே அழுது வைக்காதே..."

"இல்லல்ல.. இப்பதான் சின்னவரு வந்தாச்சே..."

"எப்படி? சமுகமாப் பேசிக்கறாங்களா?" ஆவலாய் விசாரித்தாள். "புருஷம் பெண்டாட்டின்னா கோபதாபம் சகஜந்தான்."

"இப்ப மாப்பிள்ளை தேவையான சமயத்துல வந்து காரியங்களை நின்னு நடத்துனதை நம்ப பாப்பா கவனிச்சிருக்குமில்ல... ஆனா..."

"சொல்லுய்யா..."

"சாமர்த்தியக்கார நம்ம மாப்பிள்ளைக்கு நம்ப பாப்பா மனச மட்டும் ஏன் புரியலைங்கறதுதாம் பிள்ளை எனக்குப் புரியல..."

"அடடா..." கைகளைத் தட்டி மோவாயில் வைத்து அதிசயங் காட்டினாள் சங்கு. "ஊரு உலகத்துல எல்லா ஆம்பிளைகளும் அப்படியே கட்டினவ மனச புரிஞ்சு அது கொண்டுதான் நடக்கறாங்களா? அது ஏன்.. துயா போனதுல அழுது கரையற நீனு



எங்கப்பா போனப்ப வந்து நின்னு, 'உங்கப்பன் நிலத்துல நம்ப பங்கு எம்புட்டு?' ன்னு சட்டமில்ல பேசின!"

"போ, புள்ள..."- சலித்தான் வேலு. "அதுக்கப்புறம் உணர்ந்து திருந்திடலை?"

"நாடி நரம்பு அடங்கறப்ப வேற வழி?" காரியமாய் மடக்கினாள். "சரி, விடு - பாப்பாவும் தம்பியும் தனிச்சப் பேசுதுங்களா?"

"ம்ம்..." இனியும் பேச்சு வளர்த்தால் வம்பு என்பது உணர்ந்த வேலு, தொலைவிலுள்ள செடிகளிடமாய்ப் போனான்.

---

## 12

கணவன் செய்த உதவிகளை எல்லாம் கவனித்தாள் - என்றாலும் அதில் மனம் இளகிப் பழசெல்லாம் மறந்து போக வில்லை.

இன்னும் ரணங்களில் சீழ் கசிந்தது.

அப்பா மகளின் நிலையறிந்து சொன்னது இது.

'எரியும் நெருப்புன்னா அதில் புகை உண்டுடா, நிம்மி. எப்பேர்ப்பட்ட ஆளிடமும் குறை இருக்கும் - நமக்குத் தேவை நெருப்பு - புகையில்லையே. புத்திசாலிப் பொண்ணு நீ - புகையை விட்டுடு. நெருப்பைப் பயன்படுத்திக்கோ...'

நெருப்பு பயன்பட்டிருக்கிறதுதான்.

ஆனால் புகை கண்ணைக் கரிக்கின்றதே..!

ஆக, காலை உணவிற்குக் குணசீலன் வந்தபோது நன் நட்டபே பார்த்தபடி.

"நீங்க செய்த உதவிகளுக்கு... நன்றி!" என்றாள் முடிவாக.

"நன்றியை எதிர்பார்த்து நான் மாமாவின் இறுதிச் சடங்கைக் குறையில்லாமல் நடத்தலை, நிம்மி... ஆனால் இது நான் எதிர்பாராதது!" என்றான் குரலை அழுத்தி.

'எது?' என்பதாய் இவளது விழிகள் நிமிர்ந்தன.

"பல மாதங்களாய்... ஏறக்குறைய முக்கால் வருடமாய் நீ என்னைப் பிரிந்து வாழ்வாய்னு நினைக்கவேயில்லை - நீயும் என்னை விரும்பியதால், வற்புறுத்தியதால்தான் நம்ப கல்யாணம் நடந்தது."

அவன் சொன்னது பொய்யல்ல என்பதால் மௌனமாய் அமர்ந்திருந்தாள்.

"உனக்குக் கோபம் வந்தது சரி. அதை ஆற்ற, நீ சொல்லிக்காமல் இங்கே வந்தது சரியில்லை... தவிர தொடர்ந்து இங்கேயே தங்க முடிவெடுத்தது முழுத் தப்பு, நிம்மா..."

இவளுக்குள் வளர்ந்து நின்ற வீம்பு 'மளுக்'கென முறிந்தது - அது அவன் இவளை அழைத்த விதத்தால்...

மிக நெருக்கமான வேளைகளில், ஓருயிர் ஓருடலாய்ப் பிணைந்து மயங்கிய தருணங்களில் அவன் அவள் பெயரை அழைப்பது அப்படித்தான்... அவன் மிக உணர்ச்சிவயப் பட்டிருப்பது புரிந்தது.

கொண்டவனை நிமிர்ந்து பார்க்கும் திராணியில்லை.

அழைத்தது போலவே இழுத்தும் அணைத்துக் கொள்ள மாட்டானா என்ற தாபத்தில் நடுங்கியது அவளது மெல்லிய உடல். அந்த அணைப்பில் பிறர் யாரும் தர முடியாத ஆறுதல் கிட்டுமே. ஆனால் அவன் இட்லி, வடையைப் பரிமாறிக் கொண்டு சாப்பிட ஆரம்பித்திருந்தான்.



"வேலையில் உன்னை ஈடுபடுத்திக் கொண்டாய் போல?"

அவன் பேச்சை மாற்றியது சற்று நிம்மதி தர-

"ம்ம்..." என்று முனகினாள்.

"வாரக் கடைசிகளில் பிரசாத்தோடு பொழுது கழியும்... ம்ம்?"

'வேவு பார்க்கிறீர்களா?' என்பதாய் இவளது பார்வை குற்றம் சாட்டியது.

"மாமா சொல்லித்தான் தெரியும். மாமா என்னைப் பேசணும்னு அழைச்சதும் வந்தேன் - நீ பிரசாத்தோடு ம்யூஸிக் கான்ஸர்ட் போயிருந்ததாய்ச் சொன்னாங்க..."

அன்றுதானே ஒரு கார் தங்களைப் பின்தொடர்ந்ததாய்ப் பிரசாத் சொன்னான்?

"நீ இசை நிகழ்ச்சிக்குப் போயிருந்த நேரம், நாங்க இங்கே சற்று வியாபார சம்பந்தமாய்ப் பேசினோம்."

இந்த நெருப்பில் விளைந்த புகை மிகக் காட்டமாயிருந்தது. நெஞ்சை வாட்டியது. முன்பே காதில் விழுந்த விஷயம் என்றாலும், அப்பா ஏன் தன்னிடம் இந்த விஷயத்தைக் கூறவில்லை?

மாப்பிள்ளையை வரவழைத்தவர் தனியே பேச வேண்டிய காரணம்? வீடு திரும்பிய தன்னிடம் அது பற்றிப் பேச விரும்பாமல் தான் தூங்கியது போல நடித்தாரா?

மறுநாள் அத்தனை அயர்வாய்த் தெரிந்ததின் காரணம் மாப்பிள்ளையுடனான அந்தப் பேச்சு... விவாதம்தானோ?

"ஓ... அதான் மறுநாள் அப்பா அசதியாய் இருந்தாங்க..." என்றாள், குற்றம் சுமத்தும் தொனியில்.

"ஆக மாமாவின் மரணத்தைத் துரிதப்படுத்தினதற்கு நான் காரணம் என்கிறாயா, நிம்மி?" இவளையே பார்த்து மென்மைத்

தலையசைத்தான். "நீ இன்னும் பக்குவப்படாத குழந்தை போலவே இருக்கறே... நீ சறுக்கினதற்குச் சாக்குச் சொல்ல வேறு நொண்டிக் குதிரைகளைத் தேடறே..."

என்ன விஷயமாய்க் கலந்து பேசினீர்கள் என்று கேட்காமல் இப்படிக் குற்றம் சாட்டுவது முறையல்ல என்பது அவளுக்கும் புரிந்தது.

அப்பா தன் குறைகளை இப்படி உடனுக்குடன் சுட்டிக் காட்டிச் சரி செய்ததில்லை. அதனாலேயே கணவனது கண்டிப்பு தன்னைக் கலவரப்படுத்தியதோ?

இல்லை, கண்டிப்பை மீறி அவன் குணத்தில், நடத்தையில் பல களங்கங்களும் இருந்தனவே.

"வியாபார விஷயம்தான் பேசினோம் - உன்னையும் பார்த்து விடலாம்னு தோன்றியதால் பாதியில் பார்த்த உன் காரைத் தொடர்ந்தேன் - ஆனால் மாமா ரொம்ப அசதியாய் இருக்குதுன்னு படுத்துட்டதால் அவரைத் தொந்தரவு பண்ண வேண்டாமேன்னு திரும்பிட்டேன்..."

அளைந்து கொண்டிருந்த இட்லியும் வடையும் குளிர்ந்து போயிருந்தன.

"ரொம்ப மெலிஞ்சுட்டே... நிம்மி... சரியாச் சாப்பிடு," என்றவன் வேறு ஒரு தட்டில் சூடான தோசையை வைத்து நீட்ட இவளுக்கு அழுகை முட்டியது.

இந்தக் கனிவு, கரிசனைக்காகத்தானே காத்துக் கிடந்தாள் - ஆனால் முழுக்க நனைந்தபின் முக்காடு தேவையற்றது போல மனம் முழுக்கக் காய்ந்து கருத்த பின் கிடைக்கும் கனிவிற்கும் அர்த்தமில்லையே!

கடந்த மூன்று நாட்களும் அத்தையும், புகுந்த வீட்டாரும் இங்கேயே தங்கியிருந்தது அக்கடினக் கசப்பைச் சற்றுக் கழுவி விட்டிருந்ததுதான்.



மாமியார் கிளம்பும் முன், இவள் முதுகை நீவியபடி, 'போனது போகட்டும்மா, நிம்மி - நீ இங்கே சில மாதங்கள் தங்கினதும் கூட நல்லதுக்குன்னே வை. அப்பாவோடு கழிக்கக் கிடைச்ச ஒரு சந்தர்ப்பம். பெட்டி அடுக்கத் துணைக்கு அம்ருதா உன்னோடு இருக்கட்டுமா?'' என்றபோது இவள் விழித்தாள்.

'கண்டிப்பாய் வேண்டியவற்றை மட்டும் எடுத்துட்டு வா. வேறு மற்றதைப் பார்த்துக்கட்டும்.'

என்றபோது இவளுக்குள் கோபம் துளிர்த்ததுதான்.

'கோவாவிற்குத்தான் - இனித் தனியே மும்பையில் எதற்கு? எங்களோடு, முக்கியமாகக் குழந்தைகளோடு இருந்தால் மனசு ஆறும்மா...'

'இத்தனை நாள் என்னை யாரும் கூப்பிடலை... ஏன்னு கூடக் கேட்கலை...'

'குணாட்ட எடுத்துச் சொன்னேன்டா - 'நிம்மி தானாப் புரிஞ்சு வரட்டும் - அதுதான் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு - என்னால இப்படி கண்ணாமூச்சி ஆட்டமெல்லாம் ஆட முடியாது!'ன்னு எங்களைத் தடுத்திட்டான்...'

பெரியவள் மெல்லிய குரலில் எடுத்துச் சொல்ல, இவளுக்குப் புரிந்தது.

'குணாவிற்குத் தெரியாமல் உனக்கு ஃபோன் பண்ணியிருக்கலாம் - ஆனால் பிரச்னை என்னன்னு புரியாமல்... உன்னிடம் என்ன, எப்படிப் பேசறதுன்னு கூட எனக்குத் தெரியலே. அம்ருதா நேரே போறேன்னு நின்னா - வயிற்றுப் பிள்ளையோட... அவளுக்கு ரத்த அழுத்தம் வேற - டாக்டர் கமால் அவ பயணப்படவே கூடாதுன்னுட்டார்...'

'ஓ... அதுதான் அம்ருதா சதா அசதின்னு படுத்துப் படுத்துக் கிடந்தா போல...' என்றாள் இவள். கர்ப்பிணியான அம்ருதா சேர்ந்து படுக்கதற்கும் குணா குறை சொன்னதுண்டு.

'அவளுக்கு எல்லாரும் வெறியாய் உழைக்கனும்- தன்னைப் போல - பெண்களின் பிரச்னை அவனுக்குப் புரியலை...'

மகன் சார்பில் விளக்கினார் அந்தத் தாய்.

"செல்வின்னியும் எனக்குத் தினம் ஃபோன் செய்து விளிச்சாங்க அத்தை."

செல்வீவி குணாவின் ஒரே தங்கை.

திருமணமாகிப் பரோடாவில் குடும்பம் நடத்துபவள். படிக்கும் காலத்தில், தோழியின் அண்ணனுடன் பழகி அவனை விரும்பியவள், தாயிடம் விவரம் சொல்ல, குணாசீலனிற்குத் திருமணம் என்ற பேச்சே பிடிக்கவில்லையாம் - அவர்களின் குடும்ப வைத்தியர் டாக்டர் கமலநாதன் நயமாய்ப் பேசி அவனைச் சம்மதிக்க வைத்தது என்று கேள்விப்பட்டதுண்டு. குணாசீலனின் மறுப்பு ஆர்ப்பாட்டம் அறிந்த மாப்பிள்ளை சற்று ஒதுங்கியே நின்றுவிட, செல்வி அதிகம் தாய்வீட்டுச் சீராட்டுக்கு வருவதில்லை. குழந்தை பிறந்தால் நேயம் கூடும் என்பதற்கு மாறாகக் குணாவிற்குக் கோபம்தான் கூடுகின்றது!

'அவளும் மாசமாய் இருக்காம்மா, நிம்மி.'

இவளுக்கு இத்தகவல் மனதிற்கு இதமாகவே இருந்தது. 'குணாதான் படுட்டாய் இருக்கான் - இப்ப அம்ருதாவுக்கு பி.பி. என்றதும் இவனுக்குப் பொறுக்கலை - தாயின் ரத்த அழுத்தம் எப்படியெல்லாம் சிசுவைப் பாதிக்கும். அதனால் குழந்தைக்கு சேஃபா, டிப்ரஷன் வருமென்று டாக்டரையே ஒரு வழி பண்ணிட்டான்.'

நிம்மா புன்னகைத்தாள்.



வழக்கமாய் அத்தை இத்தனை பேசுபவரில்லை - தன்னை இலகுவாக்கப் பேசும் பேச்சு அது என்பது புரிந்த இன்பம்.

ஆனால் அன்றிரவு படுக்கையில் அதே சம்பாஷணையை அசை போட்டவளுக்கு, குணாவிற்கு 'வொர்க்கஹாலிக்' அதாவது வேலையெனும் போதைக்கு அடிமைப்பட்ட புத்தியை விட அவனை அலைக்கழிக்கும் மனநோய் ஏதும் இருக்குமோ என்று பட்டது.

தன்னை விபசாரப் பெண் என்று குற்றஞ்சாட்டிய அன்றிரவு... சராசரிக் கணவனைக் குஷிப்படுத்தியிருக்கக் கூடிய அந்நிகழ்வு... அவனை ஏன் அத்தனை வெறுப்பூட்டி, விஷ வார்த்தைகளை உமிழவும் வைத்தது?

வியாபாரத்தில் மிகுந்த கெட்டிக்காரன் என்று பெயர். அப்பாவின் இறுதிச் சடங்கில் கூடப் பலர் மருமகனைப் புகழ்ந்து தள்ளினார்களே!

அப்படிப்பட்டவனுக்கா மனக் கோளாறு?

இருக்க முடியாதென நினைத்தபடியே உறங்கிப் போனாள்.

❖ ❖ ❖

மறுநாள் காலையே ராமையா மாமாவின் குரல் கேட்க, குளித்துத் தயாராக இருந்தவள், அவரை வரவேற்க முன் அறைக்கு நடந்தாள்.

அப்பாவை விடச் சற்று மூத்தவர் என்றாலும், தேக்கு மரத்தில் கடைந்த ஒரு நடை கம்புடன் மிடுக்காக நடந்து, வாரம் ஒரு தரமேனும் தன் நண்பனைப் பார்க்க வீடு தேடி வருவார் மாமா - அப்பா உற்சாகமாகி 'வேலு' என்று குரல் தருவார். கூடவே காபியும் கடலையும் பரிமாறப்படும்.

அன்று வந்த காபியை ஒதுக்கினார் ராமையா.

"ஏதும் தொண்டையில் இறங்காதுப்பா"- என்று பொதுவாய் நகர்ந்த பேச்சு குணசீலனில் வந்து முட்டியது.

"நீ அவரோட போறதுதாம்மா நல்லது..."

இவள் மௌனமாய் நின்றாள்.

"இன்னுமா உங்கோபம் ஆறலை? தேவை. அசந்தப்பம்னாலும் மாப்பிள்ளை வந்துட்டாருல்ல?"

"அதனால... எல்லாம் சரியாயிடுமா?"

"குணா முன்னமே வந்து அழைச்சிருந்தால் நீ கிளம்பி இருப்பியா?"

தெரியவில்லை என்பதாய்த் தலையசைத்தாள் - "தவிர அப்பா இறந்ததை நீங்கதான் உடனே அவருக்குத் தெரிவிச்சீங்களாம். மாமா... அது அவசியமில்லைன்னு நான் நினைக்கறேன்..."

"சிறு பிள்ளைத்தனமாப் பேசறே... ம்ம்? இந்த வீம்பு பிரிவைக் கூட்டும்மா - தாம்பத்தியத்துக்கு ஆகாது... தவிர இப்ப குணா மாப்பிள்ளை மட்டுமல்ல - உங்க கம்பெனியில் பாகஸ்தர்..."

உச்சந் தலை முடி குலுக்கப்பட்டது போலக் குலைந்தாள்.

"பிங்கான் பொருட்கள் சிலதை இம்போர்ட் பண்ண சத்தியா. அதான் உங்கப்பா. ஒரு திட்டம் போட்டிருந்தான் - அதற்கு முதலாய்ப் பெரும்பணம் தேவைப்பட்டது - பாதி வேலையில் ஸ்ட்ரோக் வந்து படுத்துட்டான் - உடனே வங்கிகள் பணம் தர முடியாதுன்னு கைவிரிக்க, இவனுக்கு இக்கட்டான நிலைமை-"

"ச்சே... இப்படியா துரோகம் பண்றது?"

"அது அவங்களுக்கான நீதி நியாயம்மா - அவங்களை நம்பி பாங்கல பணம் போட்டவங்க ஏமாறக் கூடாதே - ஆக சத்தியா ஷேர் மார்க்கெட் மூலம் பணத்தைப் புரட்டப் பார்த்தான். தேர்தல்



சமயங்கறதால் பங்குச் சந்தையும் நிலை குலைய, அவன் அந்த ப்ராஜெக்டை விட்டுட்டான் - ஆனால் வாக்குத் தந்த பணத்தை அயல்நாட்டுக் கம்பெனிக்குக் கட்ட வேண்டிய கட்டாயம் - நம்மால முடிஞ்ச தொகைதான்.... ஆனா திரட்ட முயன்றபோதுதான் வேறு சில குளறுபடிகள் தெரிய வர, சத்தியா மாப்பிள்ளைட்ட பேசினான்.."

"எங்கிட்ட ஏதும் சொல்லாமலா?"

"அப்பதான் நீ கம்பெனிக்குப் போக ஆரம்பிக்கற - அரிச்சுவடி படிக்கற குழந்தைக்கு அல்ஜீப்ரா எதுக்குன்னு உன்னிடம் ஏதும் சொல்லலை.

"குணா உடனடியாய் உதவினார் - புது ப்ராஜெக்டிலிருந்து முழுசாய்க் கழண்டாலும் நம்ப கம்பெனியே நஷ்டத்தில் ஓடுதுங்கறது சத்தியாக்கு ஒரு அதிர்ச்சி. வங்கிக் கணக்கில் லட்சக்கணக்கில் பணம் கிடக்குதுன்னு நினைச்சவனுக்கு அங்கிருந்த சொற்பத் தொகை பெரிய அதிர்ச்சி... குணா உதவினார்... அதனால அவரையும் கம்பெனியில் பார்ட்னராக்கி..."

"பாகஸ்தர்னா... எத்தனை சதவீதம் குணா கையில்?" படபடப்பாய்க் கேட்டாள்.

"51 சதவீதம்!" - வந்த பதிலில் விக்கித்தாள்.

ஆகத் தற்போது அப்பாவின் நிறுவனம் கூடத் தனதில்லை!

"ஆக... எல்... எல்லாத்தையும் எடுத்துக்கிட்டார்..."

"கப்பலை மூழ்காமல் காப்பாத்தினார்னு வைம்மா...."

தன் வாழ்க்கைக் கப்பலை ஓட்டையாக்கினவரா நிறுவனத்தைக் காப்பாற்றுகிறவர்? - உள்ளே பொருமியது.

---

## 13

என்ன பொருமி என்ன... கோவாவிற்குக் கிளம்ப எல்லாம் தயார்! பெரிய பெட்டிகளில் இவளது உடைகளும் அடிக்கடி பயன்படுத்தும் நகைகளும். மற்றவை வங்கிப் பெட்டகத்துள் வைக்கப் பட்டன. உபரியாய் இருந்த பல பொருட்கள் வேலைக் காரர்களிடம் தரப்பட தேவைப்படும் என அவள் கருதியவை ஒரு அறையில் வைத்துப் பூட்டப்பட்டன.

மாமியார் பாசத்திற்கும், ராஜையா மாமாவின் அறிவுரைக்கும் பணிந்து போக நேர்ந்து விட்டது.

இவள் வருவதாய்ச் சொன்னதும் குணாவின் முகத்தில் கூடத்தான் ஒரு வெளிச்சம்.

எல்லாவற்றிற்கும் மேல் அப்பா ஆசைப்பட்டது இதற்குத்தான் என்ற எண்ணம்.

மகள் மாப்பிள்ளையுடன் சேர்ந்து வாழ்வதைப் பார்த்திருந்தால் சற்று நிம்மதியாகவே கண் மூடியிருப்பார்...

ஆனால் அடிப்படைக் காரணம் தனக்கு இன்னும் கணவன் மீதிருந்த காதல்?

ஆம் என்பதாய்த் தொலைபேசி கிணுகிணுத்தது.

அழைத்தது அம்ருதா.

"என்ன, வரத் தயாரானே. நாங்க ஆர்வமாய்க் காத்திருக்கோம்."

"ம்ம்... வீடு பரவாயில்லை... ஆபீஸ்தான் எப்படி நடக்குமோன்னு..."



"குணாதான் பொறுப்பேற்ற பிறகு என்ன கவலை?"

இவள் முகம் இறுகியது.

மற்ற விவரங்களைப் பேசித் தொடர்பு துண்டிக்கப்பட்ட பிறகு மனம் மறுநாள் வக்கீல் வந்து வாசிக்கப் போகும் உயிலுக்குத் தாவியது.

அதே இருண்ட முகத்தைப் பார்த்த குணாவின் முகத்தில் கனக்கம்.

"ஏன்... என்னாச்சு?" விசாரித்தான்.

"இன்னைக்கு உயிலை வாசிக்கப் போறாங்க..."

"ஆமா."

"அப்பா... எங்க கம்பெனி இப்ப உங்களுடையதுன்னு..."

"நான் அதில் முக்கிய பங்குதாரர் - அவ்வளவுதான். உனக்கு அது பிடிக்கலைன்னால் வேறு யாருக்கேனும், அதாவது... வாங்க முன்வரும் தகுதியானவருக்கு என் பங்குகளை விற்கவும் நான் தயார்."

"மற்ற சொத்துக்களை, நகை, இந்த வீட்டைக் கூட விற்றுட்டா நானே அந்த 51 சதவிகிதத்தை மீட்டுட முடியாதா?"

"அபத்தம் - அது நம்மில் யார் பேரில் இருந்தாலும் ஒன்றுதானே."

தோள் குலுக்கியபடி நடந்து போயே விட்டான்.

விண்டேஜ் கார், அதாவது 50 வருடத்துக்கு முந்திய கார்கள் கூட அப்பாவிடம் உண்டு.

அதிலும் அந்த டாட்ஜ் விக்டரைச் சமீபத்தில் கூடக் கோயம்புத்தூர் மில் முதலாளி ஒருவர் விலை பேசினார். வேலைப்பாடு மிகுந்த அந்த வாகனம் இன்றும் நாற்பது மைல் வேகத்தில் ஒரு அமர்த்தலான கம்பீரத்துடன் போகும் - அமெரிக்காவில் உள்ள

கம்பெனிக்கு எழுதிக் கேட்டால் இன்றும் உதிரிப் பாகங்கள் கிடைக்கும் - ஆகக் கால் கோடி பெறுமானமுள்ளது அது.

இவை எல்லாவற்றையும் விற்று அந்த பாதிப் பங்கை மீட்டு விடலாமா? ஆனால் அப்பா ஏன் இதைச் செய்யவில்லை? தொழிலை மீட்க மாப்பிள்ளையிடம் ஏன் ஓடினார்?

மகளை மீண்டும் சேர்த்து வைக்க அப்பா கையாண்ட ஒரு சதி தந்திரமோ அது?

காலை உணவிற்கு முன்னும் பின்னுமாய் மூன்று முறை குணா இவர்களது அலுவலகத்திற்குத் தொடர்பு கொண்டு கேட்டது ஒரே கேள்வியைத்தான்.

'தயாநிதி கிளம்பிட்டாரா?'

'இன்னும் ஆபீஸிற்கு வரலையா? மொத்த அக்கௌண்ட்ஸோடன் இங்கே வரச் சொல்லியிருந்தேன்-வந்ததும் என்னைக் கூப்பிடுங்க.'

ஆனால் அழைப்பு வரவில்லை.

தன் கீழ்ப் பணியாற்றுபவரிடம் பயன்படுத்தும் அதே கறாரத் தொனியைத்தான் தன்னிடமும்... படுக்கையிலும் கூடப் பயன் படுத்தினான் என்று எரிச்சலாய் நினைத்தாள்.

அவன் அழைக்கும் நேரங்களில் மட்டும் ஓடி ஒத்துழைத்து ற்றப் பொழுதில் இருக்கும் இடம் கூடத் தெரியாதபடி பம்மிக் டக்க வேணும்!

இன்றைய பெண் அப்படிப்பட்ட படுக்கைப் பதுமையாக ருக்க இணங்குவாளா?

சொன்ன நேரத்திற்கு மிடுக்காய் வந்து சேர்ந்தார் வக்கீல் திரசேகர் - மாப்பிள்ளையிடம் பாதி கம்பெனியும் விண்டேஜ் ம் ஒப்படைக்கப்பட்டன. நல்லவேளையாய் ராஜமையா மாமா ற்றி முன்னமே சொல்லியிருந்ததால் இவள் அதிக அதிர்ச்சியில்



துவளவில்லை. மற்றதெல்லாம் மகள் பேரில் இருந்தாலும், தந்தை தன்னை விட்டுக் கொடுத்து விட்டது போலத்தான் பட்டது. தவிர வியாபாரம் மாப்பிள்ளையின் பொறுப்பில் மேற்பார்வையில் நடத்தப்படவேண்டும் என்ற வரியும் இடித்தது.

அடுத்த இடி தயாநிதி வரவேயில்லை என்பது.

விசாரிப்பில் தெரிய வந்தது. அவர் இருக்கும் இடம் தெரியவில்லை என்பதும், அவர் குடும்பத்தினர் தங்கள் ஊரான தஞ்சைக்குக் குடிமாறி விட்டார்கள் என்பதும்தான்.

பேயறைந்ததாய் வெளிறியிருந்த இவள் முகத்தைப் பார்த்ததும் குணா விளக்கினான்.

"ஏதோ சரியில்லை என்று மாமா சந்தேகித்ததால்தான் என்னை வரவழைச்சாங்க... நீ உழைச்சுப் பல ஆர்டர்களை எடுத்து, உற்பத்தியைப் பெருக்கியும் நிறுவனம் நஷ்டமே காட்டியிருக்கிறது."

"ந...நஷ்டமா?"

"சொன்னால் சோர்ந்துடுவேன்னு மாமா கம்பெனி பண விஷயத்தை உன்னிடம் பகிர்ந்துக்கலை... தயாநிதி தலைமையில் சில கூட்டுக் கள்ளர்கள் இருந்து லாபத்தை எல்லாம் சுரண்டிச் சாப்பிட்டாச்சு."

கடும் ஏமாற்றத்தில் இவளது உதடுகள் துடித்தன.

"அவர் இப்படித் தலைமறைவாகிட்டதால் நாம் போலீஸிற்குப் போவதுதான் சரி..."

"கையாடல் நடந்திருக்கு?"

தனக்குத் தானே கேட்டுக் கொண்டாள். இது தலைக்கு மேல் போய்விட்ட வெள்ளம்!

தன் நம்பிக்கையும் அறியாமையும் எவ்வளவு பெரிய மோசடிக்கு ஆபத்திற்குத் துணை போயிருக்கிறது...!

'செக்கின் தொகை மாறினால் இன்னுமொரு கையெழுத்து இடணுமில்லையா அங்கிள்?'

என்று குழந்தைத்தனமாய்த் தயாநிதியிடம் கேட்டதுண்டு.

அவர் நீட்டிய பல கோப்புகளில் ஏதோ யோசனையில், முழு நம்பிக்கையில் கையொப்பம் இட்டிருக்கிறாள்.

நினைப்பில் முதுகுத் தண்டு சில்லிட்டது!

'பாப்பா' எனும் அவரது பாச அழைப்பில் எத்தனை பசப்பு பதுங்கியிருந்திருக்கிறது!

விஷம் தடவிய மிட்டாய் போல...

"அவர்... அவருக்கு என் மேல் பிரியமுண்டுன்னு நினைச்சேன்..."

வருத்தத்துடன் முனகினாள்.

"காசின் மேல் அதிகப் பிரியம்!" சிறு தோள் குலுக்கலுடன் விளக்கம் வந்தது.

இம்முறை கணவனுடன் வீட்டின் வாசற்படி இறங்கி நடக்க, துக்கம் தொண்டையை நெரித்தது.

இனி இங்கு வந்தாலும், 'வாடா... வாடா நிம்மி!' என்று அழைத்து உச்சி முகர அப்பா இருக்க மாட்டார்.

அந்தப் பாசத் தந்தையும் கூட மகள் அறியாமல் பல முடிவுகளை எடுத்திருந்தது கூடுதல் வருத்தம்.

இனித் தன் வாழ்வு குணசீலனோடுதான் என்று அனைவரும் அறிவுறுத்தி வேறு போக்கிடம் இல்லாதது போன்ற நிலைமையை உருவாக்கி விட்டார்கள். போதாததற்குத் தயாநிதி ஏமாற்றி சொத்தையும் இவளிடமிருந்து உருவி, நழுவச் செய்தாயிற்று.



அத்தனையையும் விற்றுத் தொலைத்து, குணாவிற்கான பாதிப் பணத்தைக் கொடுத்து எஞ்சியதை வங்கியில் போட்டு விட்டு வாழ்ந்து விடலாம்...

ஒரு விதத்தில் அதுவும் தோல்விதான்...

என்ன செய்வது - எல்லாப் பெண்களும் மயூரி போலத் தகுதி திறமை கொண்டவர்களாய் இருப்பதில்லையே.

முன்பு ஒரு முறை குணசீலன் வீட்டில் இல்லாத நேரம் வந்த மயூரி, ஒரு முக்கிய கோப்பை எடுத்துத் தருமாறு கேட்டுப் பரபரக்க, இவள் மிதப்பாய்–

'குணா ஒரு ஃபோன் கால் போட்டிருந்தால் போதுமே - நானே அனுப்பி வச்சிருப்பேனே...' என்றாள்.

'அந்தரங்கமான ஃபைல் அது - பிறரிடம் கொடுத்தனுப்ப முடியாது, நிர்மலா - அதான் நானே நேரில் வந்தேன்.'

'அப்ப... அப்படீன்னா அதை நான் உங்களிடம் எப்படி ஒப்படைக்க?'

'சரி... குணாட்ட கேட்டுட்டு பிறகு கொடுங்க... ஆனா இது அவசரமாய்த் தேவை - குணா அந்த ஜெர்மனியர்களுடன் விமான நிலையத்தில் இருக்கார் - இந்த ஃபைலைக் காட்டினால் வியாபாரம் முடிவாயிடும் - அவங்க பிளைட்டிற்கு இன்னும் ஒரு மணி நேரந் தான் இருக்குது - இங்கேயிருந்து நான் சான்டா - க்ரூஸ் போகவே முக்கால் மணி நேரமாயிடும்... ஸோ... சீக்கிரம்...'

தொலைபேசி மூலம் குணாவைத் தொடர்பு கொள்ள முடிய வில்லை.

மயூரா எத்தனை எடுத்துச் சொல்லியும், கெஞ்சியும்கூட இவள் மசியவில்லை.

மயூராவை மட்டம் தட்டி விட்டதாய் ஒரு மமதையில் திளைத்தாள். ஆனால் சற்று நேரத்தில் வீட்டிற்கு வந்த கணவனின் ரௌத்திரம் நடுங்க வைத்தது.

அறைந்தே தன்னைக் கொன்று விடுவாரோ என்னுமளவில் பீதி. ஆனால் முஷ்டியை இறுக்கி பல்லையும் கடித்துத் தன்னை அடக்கிக் கொண்டான்.

'உன்னால் உதவி இல்லைன்னாலும்... உபத்திரவம்... எளிதாய் முடிஞ்சிருக்க வேண்டிய ஒப்பந்தம் இப்ப கை நழுவி... ச்சே...'

தான் ஒன்றுக்கும் உதவாதவள்தானோ?

தன் நிறுவனமும் நஷ்டத்தில் கிடக்க, இவளின் சுயபச்சாதாபம் கூடியது.

மயூரா, தன்னைப் போல, நாலு நிறுவனங்களை நிர்வகித்து விடுவாள்.

தன்னால் குணாவைக் கூடக் கட்டிக் காக்க முடியவில்லை... மயூராவைக் குணா திருமணம் செய்திருந்தால் எந்தப் பிரச்னையும் குழப்பமுமின்றி அமோகமாய் வாழ்ந்திருப்பான்...

நினைப்பே அமிலமாய் நெஞ்சைச் சுட்டது...

---

## 14

ஒரு நடுத்தரக் குடும்பத்தின் வீடு போலச் சாதாரணமாய் இருந்தது கோவாவின் விமான நிலையம். சர்வதேச விமான நிலையங்களுடன் ஒப்பிடவே முடியாத எளிமை. எஸ்கலேட்டர்களும் பளிங்குப் பிரமாண்டங்களும் அற்றிருந்தாலும் எளிமைக்கே உரிய எழில் அங்கிருந்தது.



முதல் முறை மணப்பெண்ணாய்க் கனவில் மிதந்த கண்களோடு தான் இங்கு வந்து இறங்கிய ஞாபகம் வந்தது.

பொன்மஞ்சள் புடவையில் சரஞ்சரமான பொன் நகைகளுடன் போய் அன்று இறங்கினாள் - வரவேற்கத்தான் எத்தனை பேர்... கூட்டமாய்க் கையில் மலர்க் கொத்துக்களுடன்!

இவளைக் கண்ட விழிகள் வியந்து ஆனந்தித்தன.

'ஆஹா... இந்த தேவதைதான் உன் பிரமசரிய விரதத்தைத் தகர்த்தவளா?'

'கல்யாணத்தப்ப பார்த்ததை விடப் பெண்ணின் அழகு கூடியிருச்சே! என்ன செய்தே குணா?'

'கோவாவின் இளவரசியே, வருக வருக!'

பல மலர்க்கொத்துக்கள், கைகுலுக்கல்கள்.

போர்த்துகீசியக் கலாசாரம் முழுக்க அந்தக் கடற்கரை நகரை விட்டுக் கலையாததால், பல தழுவல்கள்... முத்தங்களும் கூடக் கிடைத்தன.

திக்கு முக்காடிப் போனாள்.

முன்னும் பின்னும் கார்களின் அணிவகுப்போடு ஒரு அரசி போல ஊர்கோலமாய்ப் புகுந்த வீட்டிற்குச் சென்றாள்.

அங்கு சென்னையைப் போன்ற அகல, ஆரவாரமான தெருக்களில்லை. ஆனால் ஒடுங்கிய சாலைகளின் இருமருங்கும் அம்சமான வீடுகள் - நுணுக்கமாய்ச் செதுக்கப்பட்ட நகை போன்ற நேர்த்தியில் நின்றன. ஒவ்வொரு வீட்டையும் சுற்றி மரகதக் கற்கள் பதிக்கப்பட்டது போலப் பசிய தோட்டம். கழுத்தைச் சுளுக்கச் செய்யும் அடுக்கு மாடிகளே இல்லை. நெருக்கமாய்த் தொடுக்கப்பட்ட மதுரை மல்லிச்சரம் போல ஆளை மயக்கும் சின்ன வெள்ளை

வீடுகள் - அவற்றிலிருந்து நேயமுடன் எட்டிப் பார்த்த இனிய முகங்கள் - போக்குவரத்து நெரிசலற்ற வீதியில் சைக்கிளில் போன பலரும் கையாட்டியபடி சென்றார்கள்.

பயணம் மேலும் தொடர, வீதி சற்று விசாலமாகி, வீடுகளின் அடர்த்தி குறைந்தது - ஒரு புறம் நீலக் கடல், மறுபுறம் அதன் காற்றுக்குத் தலையசைக்கும் தென்னைகள். இடதுபுறம் கார் திரும்பி விரைய, பிரம்மாண்டமாய் நின்றது அவ்வீடு. இதுவரை மல்லிகை மொட்டாய்த் தோன்றிய சிறு வீடுகளைக் கண்டு ரசித்த அவளது கண்கள் விரிந்த வெண்தாமரை போன்ற இதைக் கண்டு விரிந்தன.

வரிசைத் தூண்களும் அவற்றை இணைக்கும் வளைவுகளுடனான நீண்ட தாழ்வாரத்துடன் தொடங்கிய மாளிகை அது.

கடலின் ஒரு பிரம்மாண்டச் சிப்பியை விரித்து வைத்தது போலக் கரையில் நின்றது.

'என்ன பார்க்கறே?' குணா கேட்க.

'ரொம்ப அழகு... எல்லா வீடுகளுமே வெள்ளையாய் இருக்குதே?' இவளும் பதிலுக்கு விசாரித்தாள்.

'பச்சை, நீலம், காவி, மஞ்சள்னு நிறங்களில் வீடுகள் இருந்தால் ...த்தனை கிராமமாய் இருக்காது. தவிர இங்குள்ள மக்களின் ரசனை ...ா எளிமையானது...

இவளுக்குத் தன் அலங்காரம் கூச்சமாய்ப் போனது. 'ம்ம்... கடல் ...த்திற்கும், கரையின் பசுமைக்கும் வெள்ளைதான் எடுப்பும் கூட...' ...த்துக் கொண்டாள்.

பலர் வாழ்த்துக்கள், வரவேற்போடு உள்ளே நுழைந்தவள் ...ர்த்து நின்றாள்.



அந்த வெள்ளை மாளிகையின் உள்ளே அத்தனை நிறங்களிலும் மலர்க் கொத்துக்கள்- திரும்பிய பக்கமெல்லாம் வெள்ளி, பீங்கான், கண்ணாடி ஜாடிகளில்!

கிறங்கடிக்கும் நறுமணம்.

நிஜமாகவே ஒரு ராணியைப் போல உணர்ந்தாள்- தன்னை ஆர்வமாய்ப் பார்த்த அத்தனை முகங்களையும் நேசித்தாள்...

ஆனால் இன்று... கணவனும் கூட அந்நியன் என்பது போன்ற கலக்கம்.

விமானத்தில் தன்னருகே அமர்ந்து உறங்கிய குணசீலனையே பார்த்தாள்- உறக்கத்திலும் கூடக் கலையாத கம்பீரம்! அடிக்கடி இவர்களைக் கடந்த விமானப் பணிப்பெண் ஒவ்வொரு முறையும் ஓரக்கண்ணால் குணசீலனை வருடியும், அவனருகே போசனையில் விழித்திருந்த இவளைச் சற்றே பொறாமையுடன் சுட்டும் கொண்டிருந்தாள்-

அது தாளாமல் இவள் மறுபுறம் திரும்பிக் கீழே வெள்ளைக் கரை வைத்த நீலப்புடவையாய்ப் பரந்திருந்த கடலையே பார்க்கலானாள்.

அந்த இளநீலம் மனதை இதப்படுத்தியது. நரப்பட்ட வாசனையான ஈரத் துவாலையால் முகம், கழுத்தை அழுந்தத் துடைத்து மிதமான ஒப்பனையுடன் நிர்மலா விமான நிலையத்தில் நுழைய, இவர்களை வரவேற்க நின்றது இரு எளிய உருவங்கள் மட்டும்தான். பருத்திப் புடவையில் தன் பேரனைப் பிடித்தபடி சருகு போல நின்றது குணாவின் தாய். மலரும் மகிழ்வுமாய்த் தடபுடல் பட்ட முதல் வரவேற்பு நினைவிலாடியது.

குட்டி விக்கியை ஆர்வமாய்ப் பார்த்தாள் - பராதிருந்த பல மாதங்களில் இந்தப் 'பெரியம்மா'வை மறந்திருப்பானோ?

கண்ணில் படாதவர்கள் கருத்தில் பதிவதில்லை என்று முதுமொழி உண்டே! அந்தக் குட்டிப் பயல் பாட்டியின் பின்னே மறைந்து கொண்டு ஆசை போல அவ்வப்போது தலையை மட்டும் நீட்டிய [illegible] அழகில் மயங்கியவள், விமானத்தில் தரப்பட்ட இனிப்பை அவனுக்கு நீட்டினாள்.

பாட்டி அனுமதித்த பின்பு வாங்கிக் கொண்டான். கார் பயணத்தின் போது பேசத் தந்து சாதுர்யமாய் விக்ரமைத் தன் மடியில் இருத்திக் கொள்ள, குணசீலனின் முகம் கடுத்தது.

பருத்த வீட்டு உறவுகளிடம் கூட மனைவி பாசம் காட்டுவதை விரும்பாத கணவனை என்னவென்று நினைக்க... எந்த ரகத்தில் சேர்க்க!

ஆகச் சின்ன விக்கியிடம் மட்டுமே பேசினாள்-

"பெரியம்மாவை கூப்பிடுவியே; விக்கி செல்லம்... என்னை ஞாபகமிருக்கா?"

சிறுவன் வெட்கத்தில் நெளிந்தான்.

"தங்கச்சியை-விது பாப்பாவைக் கூட்டிட்டு வந்திருக்கலாம்லே?"

"பாப்பாக்கு காச்சல்."

"அச்சச்சோ.. அம்மா உனக்குக் காய்ச்சல் சரியாச்சுன்னு சொல்லலையே!"

"ஹூம்- எனக்கு வந்ததை அவளுக்குக் கொடுத்திட்டேன்."

சிரித்து முத்தமிட்டாள்-

குணசீலனின் முகம் மேலும் இறுகிக் கிடந்தது. இவனுக்குள் அழுப்பு. ஒவ்வொரு ஆண் தனக்கு வாழ்க்கைப்பட்டவள் தன் [illegible] ஐக்கியமாயிருக்க, புரிந்து போனவனோ!



மனைவியைப் பிறருடன் பகிர மனமில்லையா? அப்படி 'என் மனைவி எனக்கு மட்டுந்தான்' என்று தன்னைத் தலையில் வைத்துக் கொண்டாடியதுமில்லை!

மறுபடி ஒண்ட வந்து விட்டாளே என்ற அலுப்பா?

அழைத்ததும் ஒட்டிக் கொண்டாளே என்ற கடுப்பா? ஆக இனியும் தன் வாழ்வு மலர்ந்து விடாது. அப்படிப்பட்ட கனவுகளைக் கலைத்து விடுவதே சரி.

"அலுத்துத் தெரியுதேம்மா- போனதும் சாப்பிட்டுட்டுப் படு." அத்தை பரிவு காட்ட முயன்று முறுவலித்தாள்-

குளிர் பதனப்பட்ட வாகனத்திலிருந்து இறங்க, உப்புக் கலந்த வெப்பக் காற்று அவர்களைப் பிய்த்துக் கலைத்தது.

தொலைவில் அலைகள் ஆக்ரோஷமாய் எம்பி இரைந்தன. ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் அயல்நாட்டுப் பயணிகள் இந்த வீச்சிற்கு அஞ்சி வருவதில்லை.

செப்டம்பரிலிருந்து சார்ட்டெட் விமானங்களும் சேர்ந்து உல்லாசப் பயணிகளை அள்ளியெடுத்து வந்து கோவாவில் கொட்டும்.

"மெலிஞ்சிட்டீங்க அண்ணி - இந்தக் காற்றில் பறந்துடாதீங்க." கொழுந்தன் ஆர்ப்பாட்டமாய்த் தன்னை வரவேற்றது சற்று ஆறுதல் தந்தது.

"அமிர்தா எங்கே ஜெஃப்?"

"விதுக்கு காய்ச்சல்.. ஆக இவளும் சேர்ந்து வயிறு காயுறா."

"ஏன், குழந்தையைக் கவனிக்கத் தெம்பு வேணாமா?"

"விதுக்குப் பாலூட்டறதால் பத்தியமாய் இருக்கணுமாம். வருவா."

தன்னுடைய தனியறைக்குப் பேசப் படபடப்புடன் திரும்பிய போது அம்ருதா உணவு மேஜையில் மாம்பழம் அரிந்து கொண்டிருந்தாள்-

"வாங்கக்கா உட்காருங்க.. யப்பா! இப்பதான் இந்த மேஜை முழுமையடைந்தாற் போல இருக்குது... சதா விருந்தாளிகள் வந்தாலும் நீங்க இல்லாததில் ஒரு வெறுமை."

"சரி சரி.. கண்டதையும் பேசாமல் உன் அக்காக்குப் பரிமாறு.." ஜெயசீலன் சொல்ல, சூழல் இலகுவானது. அம்ருதாவை விட இளையவள் நிர்மலா- ஆனாலும் மூத்தவன் மனைவி என்பதால் எப்போதேனும் அம்ருதா அவளை அக்கா என்றழைப்பதுண்டு. மற்றப்படி மற்றவர்களைப் போல 'நிம்மி'தான்.

தேங்காய்ப் பாலில் சமைத்த மீன் குழம்பு பரிமாறப்பட்டது. ரசித்து உண்டவளின் உள்ளமும் நிறைந்து கொண்டிருந்தது- குணா எப்படியோ. இந்தக் குடும்பத்தினர் தன்னிடம் பாசத்தில் குறை வைத்ததில்லை.. தவிர தன் தந்தை தனக்காய்த் தேர்ந்தெடுத்த குடும்பம் இது.

கொந்தளிக்கும் கடலில் அலைபாயும் தோணியாய்த் தன் எண்ணங்கள் நிமிஷத்திற்கு நிமிஷம் மாறித் தடுமாறுவது புரிந்தது. ஆனால் தடுக்கத்தான் வழியில்லை.

அம்ருதா வெறும் ரசம் துவையல் என்று சாப்பிட்டது சற்றுச் சங்கடம் தர.

"பாவம். அம்ரு குழந்தையைச் சுமந்து பெறுவது ஒரு கஷ்டமென்றால் அதைப் பக்குவமாய் வளர்த்தெடுப்பதும் பெரிய சவால்தான்.. இல்லையா?" பரிந்து பேசினாள்.

"இது கூடப் பரவாயில்லை நிம்மி - மசக்கைதான் பயங்கரப் படுத்தல் - படுத்தால் எழவே முடியாத அசதி - சதா குமட்டல். பசி



பிராண்டினாலும் சாப்பிட முடியாது... மீறிச் சாப்பிட்டால் வாந்தின்னு.."

"போதும். அம்ரு அண்ணியைப் பயமுறுத்தாதே - அவங்க குறைஞ்சது ரெண்டு தரமேனும் மசக்கையை அனுபவிக்கணுமே.."

கொழுந்தனின் கேலியில் வெட்கத்துடன் குனிந்தவள் ஓரக் கண்ணால் தன் கணவனைப் பார்த்தாள்.

குணசீலனின் முகம் போன போக்கு... சகிக்கவில்லை! திடும்மென இவளுக்குள்ளே சிறு பூகம்பம்.. ஒருவேளை குணாவால் ஒரு குழந்தைக்குத் தகப்பனாக முடியாதோ..?

உறவுக்கு ஒத்துழைக்கும் உடல், மற்றொரு உயிரை உருவாக்க முடியாதென்பது தெரிந்து கொண்டுதான் இப்படி மறுக்கிறாரா?

பயம் அவளைக் கொத்தியது..

அப்படியே இருந்தாலும் தன்னிடம் சொல்லி விடலாமே.. இந்தக் கடுமை, ஆணவமான அலட்சியம்.. இதைத்தானே தாங்க முடியவில்லை!

"நான் கையாலாகாதவன்!" என்று ஒத்துக் கொள்ள எந்த ஆணால் முடியும்?

அதிலும் வியாபாரத்தால் செல்வம் செல்வாக்கைக் குவித்து ஒரு சின்ன சாம்ராஜ்யத்தை உருவாக்கிய குணாவால் முடியவே முடியாது தான்.

அந்தக் குறையை மறைப்பதற்கான வேடம்தான் இந்த அலட்சியம், ஆணவம் எல்லாமா?

இவளது பேச்சையைக் குணாவின் குரல் எகத்தாளமாய்க் குத்திக் குறுக்கிட்டது.

"நம் மீன் சுத்தப்படுத்தும் ஆலையில் வேலை பார்க்கும் பெண்களில் பலர் கர்ப்பமாறாங்க. பிள்ளையும் பிறக்குது. அவங்க இப்படி மயக்கம், மசக்கையென்று அலட்டறதில்லை. சம்பாதித்தால் தான் அடுத்த வேளைச் சாப்பாடுன்ற நிலையில் இந்த 'பந்தல்'லெல்லாம்... கிடையாது."

இதையே ஒரு புன்னகையுடன் சொல்லியிருந்தால் பரவாயில்லை. கடுகடுவென்று சொன்னதில் சுட்டது.

"மேல் தட்டு வர்க்கப் பெண்களுக்கு மட்டுமே ஆன அலட்டல் நோயை-அது ஒரு வித மனநோய்னு நினைக்கறேன் - குடும்பத்தினர் வளர்க்கக் கூடாதுன்னு நினைக்கிறேன்." மேலும் பேசிமுடித்தான்.

அம்ருதாவின் முகத்தில் வாட்டம்.

மாமியாரின் கண்களில் கலவரம்.

தன் குடும்ப மகிழ்வைக் குதறிப் போட்டது போதாதது போல, தம்பியின் குடும்பத்திலும் ஏன் ஏறி மிதிக்கிறான் - நிர்மலாவின் உள்ளும் குமுறல்.

ஆனால் வெறுமே விட மனமில்லை.

"இதற்கு விடை ஒரு கதை மூலம் கிடைக்கும்னு நினைக்கிறேன்." என்றாள் அமர்த்தலாய்.

"ஆஹா... இலக்கியத்தைக் கொண்டு வர்றியா?"

"வாழ்வின் இலக்கை இயம்புவதுதானே இலக்கியம் - ஆக அதன் மூலம் வாழ்வைச் சுலபமாய்ப் புரிந்து கொள்ளலாம்." என்றாள் இவள் விடாமல்.



"நீ சொல்லு நிம்மிம்மா!" - மாமியார் ஊக்குவிக்க, இவளும் தொடர்ந்தாள் - "ஒரு ராஜா வேட்டைக்குப் போனார் - காட்டில் ஒரு சிறுத்தையின் மறைவிடத்தைக் கண்டு பிடிப்பதற்காய் மரத்தில் ஏறினவருக்குக் கிடைத்தது வேறொரு காட்சி. சுள்ளி பொறுக்க வந்த ஒரு நிறைமாதக் கர்ப்பிணி வேறொரு மரத்தினடியில் பிரசவித்ததை! அருகிருந்த ஊற்று நீரில் தன்னையும் சிசுவையும் கழுவியெடுத்து அந்தப் பெண் கிளம்பியதைக் கண்டவருக்குத் திகைப்பான வியப்பு! அரண்மனைக்குத் திரும்பியவர் அங்கு கர்ப்பிணியான தன் மனைவிக்கு நடந்த சிசுருஷைகளை நிறுத்தினார். "உன் காரியங்களை நீயே கவனிக்கலாம்!" என்று அரசர் உத்தரவிட, துவண்டு கிடந்த ராணி மேலும் அயர்ந்து போனாள்.

"நடந்ததெல்லாம் கவனித்தார் மந்திரி. மூன்றாம் நாள் அரண்மனை நந்தவனத்தில் மந்திரியோடு பேசியபடி நடந்த அரசரின் பார்வை வறண்ட விருட்சங்களில் பட,

"ஒழுங்காய் நீர்பாய்ச்சுவதில்லையா - இதையெல்லாமா நான் கவனிக்கணும்?" கடிந்து கொண்டார்.

"வேண்டுமென்றேதான் காய விட்டோம் வேந்தே!' - பவ்யமாய் வந்த பதில் - 'அதுவும் அரசரின் சித்தத்திற்கு ஒப்ப எடுத்த முடிவேதான்.'

"ராஜாவிற்குப் புரியவில்லை-

"மந்திரி விளக்கினார் - 'வேட்டைக்குப் போன தாங்கள் காட்டின் அடர்ந்த மரம், செடி, கொடிகளைப் பார்த்திருப்பீர்கள் - அதையெல்லாம் நீரூற்றியா பராமரிக்கிறார்கள் யாரும்? அது தன்னைப் போலச் செழித்திருப்பது போல நம் நந்தவனமும்.'

"அரசருக்குப் புத்தி தெளிந்தது - ராணிக்கும் பழைய கவனிப்பு மீண்டது.." கதையை முடித்தவள் மறுபடி கணவனை ஓரக்கண்ணால் நோட்டமிட...

அங்கு ஏதும் தெளிந்ததாய்த் தெரியவில்லை... கோளாறு அதிகமானது போலவே பட்டது!

---

## 15

வீட்டின் மொட்டை மாடியில் நின்றபடி கடலின் காற்றையும் கூச்சலையும் அனுபவிக்க முடியும் என்பதே விசேஷம். தவிர அவற்றின் பின்னணியில் உப்பற்ற தூய நீரில் நீராட முடியும் என்பது அதைவிட விசேஷம்!

காரணம் அங்கு குணா ஒரு நீச்சல் குளத்தை அமைத்திருந்தது தான். மாங்காய் வடிவில் அளவான குளம். ஒரு முனையில் மூன்றடி ஆழத்தில் தொடங்கிச் சரிவாய்ப் போய் ஆறடியில் முடிந்த நீல நிற டைல்ஸ் பொருத்தப்பட்டது.

இளங்காலைச் சூரியக் கதிர் பட்டு அதன் நீர் வெள்ளியாய் மின்னித் தெறித்தது. கடந்த நான்கு நாட்களாய் நிர்மலாவும் விக்கியும் காலைக் கடன் முடித்ததும் இங்கே வந்து விடுவார்கள். விக்ரமின் பெற்றோர் அம்ருதாவின் குடும்ப வைபவத்திற்காக வெளியூர் போக, பொடியன் தன் பெரியம்மாவுடனேயே இருந்து விடுவதாய்த் தீர்மானித்ததில் இவளுக்கு மிகப் பெருமை.

எழுந்ததுமே அம்மாவுடன் ஃபோனில் பேசி விட்டு, பட்டியோடு அமர்ந்து பால் குடித்து விட்டு இங்கே வந்து விட வேண்டியது. குட்டிப் பயலோடு நீரில் நீந்துவதும், விளையாடிப்



பிஞ்சுக் கைகள் தன்னைக் கட்டிக் கொள்ள, தந்தையை இழந்த இவள் மனப்புண்ணிற்குப் புனுகு தடவிய இதம்!

இவள் தங்கியது குணாவின் பகுதியில்தான் - வரவேற்பறை, படிக்க, எழுதத் தோதான இணைப்பு, உடுத்த, கழிவறை போக விசாலமான படுக்கையறை எல்லாம் இணைந்த ஒரு வீடு என்றே அதைச் சொல்லலாம் - சென்னையிலிருந்த வீட்டில் குணா இவளை நெருங்கவில்லை... அது ஆறுதலே என்றாலும், இங்கும் கணவன் வரவேற்பறையின் அகன்ட திவானில் தனித்துப் படுத்துக் கொண்டது இவளை உறுத்தியது.

தன்னை அவமானப்படுத்த என்றே காட்டிய அலட்சியம் என்று உணர்ந்தாள்.

தனிமையைப் பெரும் கொடுமையாய் உணரும் இந்நேரத்தில் புறக்கணிக்கப்பட்டது பெரிய அடி.

கெட்ட கனவுகளில் புரட்டப்பட்டு விழிப்பவளுக்கு அப்பெரிய அறையில் தனித்திருப்பதில் மேலும் அஞ்சிச் சுருளுவாள்.

பயங்கரக் கனவுகள்...

முதலைகள் வாய் பிளந்து சூழ்ந்த ஒரு மண் திட்டில் தான் தனித்து நிற்பது போல.

கதவற்ற ஒரு அறையில் நீரளவு பெருகிப் பெருகித் தான் மூழ்குவது போல...

முகம் தெரியாத மனிதர்களும் கோர முகத்தோடு மிருகங்களும் தன்னைத் துரத்துவதாயும்...

பயந்து புரண்டவளின் கண்களின் கீழே கருவளையங்கள் - 'என்னம்மா - இப்படி ஒரு அற்புதமான இடத்தில் தங்கும் உனக்கு ஏன் இப்படி ஒரு சோகைத் தோற்றம்..?' என்று கடிந்த குடும்ப மருத்துவரிடம்.

'சரியா தூக்கம் வரலை டாக்டர்.. அதற்கு ஏதேனும் மாத்திரை தர்றீங்களா?' ஏறக்குறைய கெஞ்சினாள். டாக்டர் கமால் அடிக்கடி இவர்களின் வீட்டிற்கு வந்து சாப்பிட்டுத் தன் உடலைத் தேற்றிக் கொண்டு போகும் குடும்ப மருத்துவர் என்பது கொழுந்தனின் கேலி!

"விக்கியோடு ஓடி ஆடம்மா. தினம் காலையில் நீந்தலாம். தவிர.." அவர் கண்கள் சிறு கண்டிப்போடு குணசீலனை உறுத்தன.

'பெண்டாட்டியை நல்லா கவனிச்சிக்கோப்பா!' என்றவர், இவளது நரம்புகளைச் சமன்படுத்த என்று ஒரு மாத்திரைப் பட்டையும் தந்து தினம் பாலுடன் அதை விழுங்குமாறு சொல்லிவிட்டுக் கிளம்பினார்.

விக்ரமிற்கு ஈடு கொடுத்து ஓடி நீந்தியதே அந்த மாத்திரையின் மாயம்தானோ.. அதுவரை இரும்பால் அடித்தது போலக் கனத்த உள்ளமும் உடலும் சற்று லேசாயின.

கணவனின் புறக்கணிப்பை நினையாதிருக்க முயன்றாள். ஆனால் மாமியாரோடு அமர்ந்து தெரிந்து கொண்ட விஷயங்கள் சற்று ஆசுவாசப்படுத்தின.

"குணாவின் அப்பா தவறிய போது பிள்ளைக்கு விடலைப் பருவம்மா - பதினாறு வயசிருக்குமா? ஆனா குடும்பத்துக்கு மூத்தவன் - ஜெய் ரெண்டு வயசும் செல்வி நாலு வயசும் இளையதுங்க.. இதுகளோடு நான் நிர்கதியாய்த் தடுமாறிய நேரம். குடும்பப் படகின் துடுப்பெடுத்து வெறியாய்த் துழாவ ஆரம்பிச்சான் பிள்ளை. சாப்பாட்டைக் கூட நின்னபடியே விழுங்குவான்.. 'ஸ்டாம்பீட்'னு கேள்விப்பட்டிருப்பே.. நீதான் இலக்கியம் படிச்ச பொண்ணாச்சே.. பெருங் கூட்டத்தில் ஏதோ அசம்பாவிதம் நேர. அத்தனை பேரும் தப்பி வெளியேறத் தவிப்பாங்க.."

"ஆமாத்தை.."



"பாரேன்.. தெரிஞ்சதை உனக்கு விளக்கவும் செய்றேன். குணா எனக்கு இப்படித்தான் விளக்கினான் - அப்படி ஓடும் போது தவறி விழுறவங்க எழவே முடியாது.. பின்னாடி வர்ற கூட்டம் இவங்களை ஏறி மிதிச்சு ஓடிடும்.. தான் தப்பும் ஆவேசத்தில் விழுந்தவங்களை நசுக்கும்."

பெரியவள் தன் கண்களை வேதனையுடன் மூடினாள் - "அதே போல வாழ்க்கையில் நாம தவறிட்டோம்னா யாரும் நம்மை நின்று தூக்கி விட மாட்டாங்க - ஏறி மிதிச்சு ஓடணும் அவங்க.. ஆக நாமதான் கவனமாய் ஓடணுமாம்.. ரொம்பக் கருத்தாய்க் கடினமாய் உழைச்சாம்மா பிள்ளை - யாரையும் ஏமாற்றினதில்லை. ஏறி மிதிச்சதில்லை... எல்லாவத்துக்கும் மேலே கடவுளின் அனுக்கிரகம்.." கைகுவித்தவர் மருமகளைப் பரிவுடன் பார்த்தார்.

"ஆனா மனசில் உள்ளதை வெளியே காட்டறதில்லை.. குடும்பத்துக்கு அந்தக் குணம் ஏற்காதுதான்.. நான் அவனைச் சரியாய் வளர்க்கலைன்னு நினைப்பேடா.. ஆனா எங்களை வளர்த்து விட்டது அவன்தான்.. உழைச்சு நிமிர்ந்தவன் என்பதால் யாரும் அவனை எதிர் பேசக் கூடாது.. மாறாய் நடந்துடக் கூடாது.."

இவளுக்கா அது தெரியாது? படுக்கையறையிலும் கூட இதே விதிமுறைகள்தானே! அவன் தொட்டால் துவள வேணும்.. அல்லது எட்டவே நிற்கணும்.. இப்படி முகம் சிவக்க யோசித்தாள்.

"ஆனால் பாசமுள்ளவன்மா.. உள்ளே குழந்தை மனசு!"

மருமகளால் ஒத்துக் கொள்ள முடியவில்லை.

ஆனால் மறுத்துப் பேசவுமில்லை. வாழ்வில் அடிபட்டவரை மேலும் வார்த்தைகளால் நோகடிப்பானேன்?

பேச்சின் திசை திருப்பினாள்-

"மாமாவைப் பற்றிச் சொல்லுங்கத்தை - இவர்கூட அவங்கப் பாவைப் பற்றிப் பேசினதில்லை."

மூத்தவளின் முகம் வெளிறியது.. விழிகள் வறண்டே இருந்தாலும், அதில் சோகம் ததும்ப இவள் பதறினாள்.

"மன்னிச்சிருங்க அத்தை.. நீங்க ஏதும் சொல்ல வேணாம்.."

"நினைப்பே கஷ்டமாய்.." திணறினாள் பெரியவள்-

திருமணமான புதிதில் அவன் தந்தையைப் பற்றிப் பேச்சு எழும் போது அவன் முகமுமே மாறித்தான் போகும்.

'இல்லை. நான் சதா எங்கப்பா பற்றிப் பேசறது போல, நீங்க உங்க அப்பா அம்மா பற்றி.."

'இது பேச்சுக்கான நேரமா? பேச்சைக் குறைத்துச் செயலில் சிறக்கணும்ங்கற என் சித்தாந்தம்தான் தேனிலவிற்கும் சரி.'

'ஐயோ! மூச்சு முட்டுதுங்க. எனக்குப் பேச்சும் இருந்தால் தான் செயலில் சிறிதேனும் வேகம் வரும். ஸோ... பேசுங்க..' ஊடுவாள்.

'என்ன சொல்லணும்? அதுவும் அம்மணிக்கு வேகம் வருவது போல..?' என்று இவள் கழுத்தில் தன் முகம் பதித்து அவன் கேட்ட போது எழுந்த குறுகுறுப்பு இப்போதும் அவளுள் கிளர்ந்தது.

'உங்கப்பா பற்றி ஏதேனும் சொல்லுங்க.'

வெடுக்கென விலகினான்.

'என்னாச்சு?'

'என் வேகமெல்லாம் போச்சு. குட்-நைட்!' ஒதுங்கிப் படுத்தவனை அண்டிப் படுக்கக் கூட அஞ்சி விழித்தே கிடந்தாள் இவள்!

❖ ❖ ❖



விக்ரமின் குரல் பழம் நினைவுகளைக் கலைத்தது. 'பெரிம்மா, நீங்களும் நீந்தணும்.''

வர்ண வளையம் ஒன்றில் புகுந்து மீனாய்க் குளத்தை வலம் வந்து கொண்டிருந்த சிறுவனின் உத்தரவு.

இங்கிருந்த சிறு அறையில் குளிக்கத் தோதான சில உடைகளை அம்ருதா வைத்திருந்தாள்.

முழங்கால் வரை எட்டும் டைட்ஸ், மேலேயும் இறுகிய கையற்ற பனியன் போன்ற வடிவில் அதிகம் உடலையும் வெளிப்படுத்தாத, நீந்தத் தோதுவான உடை.

ஷவரில் உடலைக் கழுவியவள் உடை மாற்றி நீருள் இறங்கினாள். வெதுவெதுப்பான சுகம் தந்த நீர் - கடந்த நான்கு நாட்களாய்க் குணா இவர்களோடு ஒரே படுக்கையில்தான் -

இவளது கண்களின் கேள்விக்கு விளக்கம் தந்தான் - 'பொடியன் போய் நாம வெவ்வேறு அறைகளில் தூங்குவதாய்ச் சொன்னால் வேறு வினையே வேண்டாம்..' என்று. அப்படி இருப்பது தவறு என்று தெரிந்தும் பிறகேன் விலகியிருக்க வேண்டும்?

குணகோணலன் என்று பெயரிட்டிருந்தால் பொருத்தமாய் இருந்திருக்கும்..

என்னவாய் நினைத்தாலும், தான் சதா அவனைப் பற்றியே சிந்திப்பது உறைத்தது... இறந்த அன்பு அப்பாவையும் விட அதிகமாய்!

"பலத்த யோசனையா?"

என்று குணாவின் குரல் மிக அருகே கேட்க விதிர்த்தாள் -

"என்னைப் பற்றித்தானே?" அடுத்து சல்லாபமாய் வந்த கேள்வியில் விக்கித்தவள்-

"இல்லை.. விக்கி.. விக்கியைப் பற்றி.." புலம்பினாள்.

"என்னடா போடியா - உன் பெரியம்மாக்கு சதா உன் நினைப்புதான் போல - நீ உங்கப்பா அம்மாவோட போக வேண்டியதுதானே"

"ம்ஹூம்.. அம்மா விது பாப்பாவையே கவனிப்பாங்க. பெரியம்மாதான் நிறைய கதை சொல்வாங்க.."

"ஓ.. ராஜா மாத்திவேறி.. ஆங்.. கண்டதையும் பார்த்ததாய் ஒரு கதை சொன்னாங்களே.. அது போலவா?"

இவளுக்குக் கோபமும் வெட்கமுமாய்க் கலந்து முகத்தைச் சிவப்படுத்த

"இல்லை - அது விதண்டாவாதம் பண்றவங்களுக்கான கதை. விக்கிக்கு வேற கதை.."

"அது சுமாராய் இருக்கும்னு நம்பறேன்.." என்றவன் இவளையே பார்த்தான்- 'வந்து இப்படி உட்கார் நிம்மி - உன்னோட பேசணும்." என்று குளத்தின் விளிம்பைக் காட்ட, இவள் கூசித் தயங்கினாள்.'

"இல்லை.. இங்கேயே இருக்கேன்"

"நீ நீருக்குள்ளே இருந்தாலும் தெளிவாய்த்தான் தெரியறே - வா-" என்றவன் அவளைப் பற்றி மீனைப் போலத் தூக்கித் தன்னருகே அமர்த்தினான் - பற்றிய கைகளில் இளஞ்சூடு - மேலும் மிக நெருங்கி அமர்ந்தவனின் உடலின் வெப்பத்தையும் இவளால் உணர முடிந்தது.

"ஒரு ஸ்பெஷல் விருந்தாளி வரப் போறார்.."

"யாரு?"

"இந்தக் கடிதத்தை வாசித்தால் தெரியும்." - நீட்டினான்.



கூடவே தன் கைக்குட்டையையும்.

கைகளின் மிச்ச ஈரத்தைத் துடைத்த பின், கடிதத்தைப் பிரித்து வாசிக்க ஆரம்பித்தாள் - வெளிநாட்டுத் தபால்தலையும், கிறுக்கலான ஆங்கில எழுத்தும் அது வெளிநாட்டிலிருந்து என்றன.

"மெர்வின்.. வியாபாரம் மூலம் பரிச்சயமானவர் போல!" என்றாள் வாசித்த படி.

"ஜெர்மானியர் - பல வருஷங்களுக்கு முன்னே முதன் முறையாய்க் கோவா வந்தவருக்கு இந்தியா பற்றி ஏதும் தெரியலை. இருபது ரூபாய் ஃபென்னியை 20 டாலர்னு தலையில் கட்டிட்டான் கடைக்காரன்!" -

"அதாவது ஏறக்குறைய எண்ணூறு ரூபாய்!"

"சாதாரண ஒரு அறையில் நாளுக்கு ஐம்பது டாலர் வாடகைக்குத் தங்கியிருந்தார்.. அதே வாடகைக்கு 'டாஜ்' காட்டேஜில் தங்கலாம்கறதைச் சொல்லி அங்கே கொண்டு போய்ச் சேர்த்தேன்-"

"அவரை.. மெர்வினை எப்படிச் சந்திச்சீங்க?"

"அம்மாவின் மிளகு மீன் வறுவல் அவருக்கும் அவர் மனைவிக்கும் பிடிச்சுப் போச்சு - செவன் அப்புடன் ஃபென்னி கலந்து கூடவே பரிமாறினேன்.. பில் நாற்பதே ரூபாய்ன்னதும் அவருக்குக் குழப்பம்! பிறகுதான் அவருக்குக் காரியதரிசியாகி அவர் ஜெர்மனி திரும்பும் வரை அத்தனையும் பொறுப்பாய்ப் பார்த்துகிட்டேன்.. அப்படி ஆரம்பித்த பழக்கம்.. போன கிறிஸ்துமஸிற்கு நம் பட்டு ஸ்கார்ஃப்பை அவருக்குப் பரிசாய் அனுப்பினோம் - அதே போலக் கழுத்து டைகளைத் தயாரித்தால் ஜெர்மனியில் நல்லா விற்கும்ன்னார்.. அது பற்றியும் பேசத்தான் வர்றார்.. தவிர உன்னையும் பார்க்க அவருக்கு ரொம்ப ஆசை.."

இத்தனை விலாவாரியாய்க் கணவன் தன்னிடம் பேசியதை வியந்து கேட்டிருந்தாள்..

கடிதம் ஒரு கவிதையுடன் முடிந்திருந்தது -

மனைவியின் பெருமை பற்றிய ஆங்கிலக் கவிதை

'மனைவி சரியாக இருந்தால்
உன் வாழ்வில் சரிவுகள் இல்லை
மனைவிக்குச் சிரிக்கத் தெரிந்தால்
புண்கள் இல்லை உன் வாழ்வில்
வந்தவருக்குச் சிக்கனம் தெரிந்தால்
வட்டிக் கடை ரசீது உனக்கு வராது
வேண்டிய சரசமும் தெரிந்தால்
வேசியருக்கு விலை பேச மாட்டாய் நீ..'

இதெல்லாம் கொண்டவளா தான்.. குற்ற உணர்வு உள்ளே குடைந்தது கூடவே கணவனைக் குற்றஞ்சாட்டாமலிருக்கவும் முடியவில்லை. குணா பாசங்காட்டியிருந்தால்.. தான் நிச்சயம் இப்படிப்பட்ட ஒரு மனைவியாய்ப் பரிமளித்திருக்கக் கூடும்.

இவள் எண்ணப் போக்கு அறியாமல் தொடர்ந்து பேசினான் -

"மோர்வின் மனைவி தாசன்- மனைவி விவியனைத் தாங்குவார்.. இப்ப அவங்க இறந்தாச்சு - எனக்கு மனைவி வந்தது தெரிஞ்சதிலிருந்து அவருக்கு இந்தியா வந்து உன்னைச் சந்திக்க ரொம்ப ஆவல்."

மோர்வின் மீது மதிப்பு அதிகம் போல.. கடிதத்தைக் கண்டதும் பேசப் பறக்கிறதே



"வரும் வாரம் கோவாவில் இருப்பார்.. வியாபார சம்பந்தமாயும் ஒரு புது டீல் கொண்டு வர்ரார்.. ஆண்களுக்கான கழுத்து 'டை'களைப் பட்டியல் செய்து ஏற்றுமதி செய்யக் கூடுமா என்பது பற்றி.. முக்கியமாய் நம்மை.. சேர்ந்து பார்க்கப் பிரியப் படுவார்.."

"ஓஹோ?"

ஆக இந்தப் பேச்சு, இணக்கம் எல்லாம் வியாபாரத்திற்காக- இவர்களது கல்யாண வாழ்வு கந்தலாகிப் போனது தெரியாத ஒரு ஜெர்மானியருக்காய்..

"ஆக ஒரு நாடகம் இங்கே நடக்கணும்... அது உங்க வியாபாரத்திற்கு உதவியாயிருக்கும்."

வார்த்தையால் இவள் கண்டிவிட.. அவன் முகம் கடுத்தது -

"அதுவும் மனைவியின் கடமைதான்!" - என்றபடி எழுந்தான். அதுவரை கிடைத்த வெட்டம் விலகியதில் இவள் உடம்பு நடுங்கியது - விலகிப் போனவனையே வெறித்திருந்தாள்..

"ஏம் பெரிம்மா அழறீங்க?"

"தண்ணிதான் முகத்தில் தெளிச்சிருக்க போல.. நிறைய நேரம் குளிச்சாச்சே விக்கி.. வா.. துவட்டி விடறேன்."

துவாலையால் தன் ஈரக் கண்களை முதலில் துடைத்துக் கொண்டாள்.

## 16

நிலைக்கண்ணாடியின் முன் நின்று இப்படியும் அப்படியுமாய், ஏன்... சற்றே குனிந்தும் கூடப் பார்த்துக் கொண்டாள். உச்சியில் கிரீடம் போல விளக்குகள் அமைந்த கண்ணாடி நிர்மலாவின் சௌந்தர்யத்தை அவளது உடையின் கச்சிதத்தை வெளிச்சமிட்டது.

கழுத்துப் பக்கம் மிக இறங்கியிருக்கிறதோ?

வழக்கமாய் இத்தனை இறுக்கமாய் உடை அணியாததால் கூச்சமாயிருக்கிறது கடந்த பல மாதங்களாய்ப் புடவைதான். இந்த நவீன ஸல்வார் குணாவின் பரிசு... முதல் பரிசும் கூட! இப்படிக் கடைக்கு அவளோடு வந்து அவனுக்குப் பிடித்ததாய்த் தேர்ந்தெடுத்து.

பசும் மஞ்சளில் அதே நிற சம்கிகளாலும் பொடிப் பாசி மணிகளாலும் முழுக்க வேலைப்பாடமைந்த உடை அவளுடைய தந்த நிறச் சருமத்தின் மென்மையை எடுத்துக்காட்டியதோடு, முழுக்கப் பொன்னால் போர்த்தப்பட்டது போன்ற ஜ்வலிப்பும் தந்தது.

கடை வெளிச்சத்தில் பளபளத்த அதை வாங்க மறுத்தாள்.

'ரொம்ப இறுக்கமாய் இருக்கும் போல...'

'கணவன் வாங்கித் தந்தால் போடலாம் - தப்பில்லை- பின் போடுங்க' என்று விட்டான்.

எல்லாம் மெர்வினின் வருகைக்காக... பொறுமையுடனேயே பரிசைப் பெற்றுக் கொண்டான்!



கழுத்தின் இறக்கம் தெரியாதளவில் துப்பட்டாவைக் கவனமாய் மேலே இட்டாள்.

ஆனால் வந்த மெர்வினைச் சந்தித்து, சற்றே அவருடன் பேசியதில் இவளுக்குமே அந்தக் குண்டான, பரிவான முக மனிதரைப் பிடித்துத் தான் இருந்தது.

இவளைப் பார்த்ததும் மீண்டும் குணாவின் கைகளைப் பற்றி வேகமாய்க் குலுக்கி - 'அதி அதிர்ஷ்டக்காரன்' - என்றவனைப் பாராட்டியவர், தன் குண்டு விரல்களைச் சிரமப்பட்டுக் குவித்து, 'வணக்கம்!' என்றார் இவளிடம்.

வீட்டின் ஒதுக்கமாய் அமைந்திருந்த விருந்தினர் பகுதியில் அவர் தங்கியிருந்ததால் அதிகம் பார்க்க முடியாதபடி வேலையில் மும்முரமாயிருந்தார்.

'இந்த சனிக்கிழமை இரவு நாம் வெளியே போய்ச் சாப்பிடறோம் நிம்மி - என் வீக் - எண்ட்ஸ் குடும்பத்தோடுதான். இந்தியாவில் என் குடும்பம் நீங்கள்தான்.'

இன்று சனிக்கிழமை - தயாராகி நின்றாள். ஊரிலிருந்து அன்றுதான் திரும்பிய அம்ருதாவின் கண்கள் ஓரகத்தியைக் கண்டதும் உருண்டன!

"வாவ்... கோவாவில் உலக அழகிப் போட்டி நடக்குதா என்ன? கிரீடம் நிச்சயம் உனக்குத்தான் நிம்மி!"

"ரொம்ப இறுக்கமா இருக்குதோ இந்த டிரஸ்?"

சங்கோஜத்துடன் நெளிந்தாள் நிர்மலா.

"நாங்க பொறாமைப்படற அளவு ஸ்லிம் உடம்புக்கு எப்படி உடுத்தினாலும் விகல்பமாய்த் தெரியலை... விதுவிற்கு இன்னும் ரெண்டு மாசமேனும் நான் பாலூட்டணும் - பிறகு செம டயட்டிங்... கூடவோர ஜாக்கிங்... நிம்மிக்கா கூட வருவியா?"

ஒரு மிடறுப் பானத்தை உள்ளிறக்கிய பின், செருமியபடி பேச்சைத் தொடர்ந்தார். அவரது பனி நீல விழிகள் இவளை ஊடுருவிப் பார்த்தபடி-

"நேர்மையும் நியாயமுமான இந்தப் பையனை எங்களுக்கு மிகப் பிடித்திருக்கிறது - கூடவே வேகம் நிரம்பிய இளம் முகம்... இப்போது அந்த முகம் மாறியிருக்குது - சாதனையின் உரம், எதிர்காலத்திற்கான திட்டமிடல்னு சற்றுக் கடுமையாய்... கொஞ்சம் கனிவும் சேர்ந்தால் உன் தோற்றம் மேலும் கவர்ச்சியாயிருக்கும் குணா..." சீண்டினார்.

இவள் அச்சத்துடன் தன் கணவனைப் பார்த்தாள்.

எதிர்பார்த்த அலட்சியத் தோள் குலுக்கலுக்குப் பதிலாகத் தன் இருக்கையை மேலும் இவள் பக்கமாய் நகர்த்தியவன் நிர்மலாவின் தோளில் கை போட்டுப் புன்னகைத்தான்.

"குட்! அருமையான ஜோடி. குணா, நீ இதுவரை வியாபாரத்தில் செய்ததெல்லாம் ஒன்றுமில்லை... இந்தச் சின்னப் பெண்ணின் மனசை நீ முழுசாய் ஜெயிக்கணும். அதுதான் முழு வெற்றி... புரியுதா?"

குணாவிடமிருந்து பதில்லை. ஆனால் தோளிலிருந்த அவனது பிடி இறுகியது.

"அதற்காக, நிம்மிப் பெண்ணே! உன் புருஷனது சாதனைகளையும் சாதாரணமாய் எடை போட்டுடாதே. எனக்குப் பிடித்த அரேபியப் பழமொழி இது.

"அதிர்ஷ்டம் ஒருவனை நைல் நதியில் தள்ளினால் தப்பிக் கரையேறுபவன் அதிர்ஷ்டசாலி. அப்படிக் கரையேறும் போது ஒரு மீனைக் கவ்வியபடி வெளியேறுபவன் உழைப்பாளி.

"பலர் குணாவை அதிர்ஷ்டக்காரன்னுவாங்க... அந்த அதிர்ஷ்டத்திற்காக அவன் கடுமையாய் உழைச்சிருக்கான். சாப்பிட



உறங்க நேரம் பார்க்காத உழைப்பு. கூடவே நாணயத்தை அடகு வைக்காத நேர்மை - அதெல்லாம் உனக்குத் தெரியுமா?"

"ம்ம்... அத்தை சொன்னாங்க..."

"என் வினியும் உன்னைப் போலத்தான் - அதிகம் பேச மாட்டா. ஆனாலும் அவளில்லாத வெறுமை ரொம்பக் கஷ்டமாய் இருக்குது...." துக்கத்தை விழுங்க மறுபடி கோப்பையைக் கையிலெடுத்தார். "உன்னை முதன் முறையாய்ச் சாப்பிட நாங்க அழைத்து வந்தது இங்கேதான் - இல்லையா குணா... ? இப்ப அவளில்லை... இப்படி திடீர்னு என்னை விட்டுட்டுப் போவான்னு நான் நினைக்கவில்லை..."

"மரணத்தின் மீது யாருக்கும் அதிகாரமில்லையே... அந்த சக்தி இருந்திருந்தால் உங்க மனைவி நிச்சயம் உங்களைப் பிரிஞ்சிருக்க மாட்டாங்க..."

இதமான குரலில் வந்த ஆறுதலைக் கண்மூடி அனுபவித்தார். "உண்மைம்மா... நீ அதிகம் பேசலைன்னாலும் உணர்ந்து பேசறே... இப்படி புரிந்து இதமாய்ப் பேசும் மனைவி கிடைக்க நீ கொடுத்து வச்சிருக்கணும், குணா."

யோசனையுடன் தன் அருகிருந்தவளைப் பார்த்தான் குணசீலன். எதையோ இவளிடம் சொல்லலாமா வேண்டாமா என்று அல்லாடியது அவனது பார்வை.

குழந்தையாகவே எண்ணிப் பழகியிருந்தான் மனைவியை. முதலில் கல்யாணத்திற்கு மறுத்ததின் காரணமும் அதுதானோ?

நிர்மலாவை அறியாப் பேதையாக, தான் சுமந்து போக வேண்டிய சுமையாய்க் கருதினானே ஒழிய, வழித்துணையாய், தோளில் கைபோட்டு வாழ்க்கை முழுதுக்கும் உடன்வரும் தோழியாய் அல்ல.

வீடு திரும்பித் தன் அறைக்குப் போனவள், கண்ணாடியில் தெரிந்த தன் பிம்பத்தில் சில கணங்கள் மயங்கினாள்.

இன்று முகமெங்கும் ஒரு விசேஷ சோபை... கணவனின் அருகில் அமர்ந்து ஒரு மாலைப் பொழுதைக் கழித்ததால் சேர்ந்த சௌந்தர்யமா?

உடை மாற்றுவதற்காய் முதலில் துப்பட்டாவை விலக்கிய போது, கதவு திறந்து நுழைந்தான் குணசீலன்.

'அந்தச் சல்வாத் துணி இல்லாமல்தான் நீ பிரமாதமாய் இருக்கறே..' என்றான் ஒரே பார்வையில்.

அவசரமாய்த் துப்பட்டாவை எடுத்துப் போர்த்திக் கொண்டாள்.

கொண்டவன் என்றாலும், இப்போது அவன் அந்நிய ஆண் போலவே தோன்றியதால் ஏற்பட்ட நாணம்.

"இந்தச் சில நாட்களில் நீ மெருகேறித் தெரியறே, நிம்மி. இந்தக் கடற்காற்று, காலை நேர நீச்சல் எல்லாம் உனக்கு ஒத்துப் போகுது..."

"சென்னையிலும்... எங்க வீடு கடலோரமாய்த்தான்.."

"ஓ... அப்ப இந்த மெருகுக்குக் காரணம் நான்! அதாவது கணவனின் அண்மை-ம்ம்?"

இப்படிச் சல்லாபமாய்ப் பேசுபவனை ஆச்சரியமாய்ப் பார்த்தாள். இது போல யோசிக்க, அதைச் சொல்லவும் கூடத் தெரியுமா இவனுக்கு? முக்கியமாய் அதைச் சொல்ல நேரமுண்டா?

"என்ன அப்படிப் பார்க்கறே? நானும் இன்னைக்குக் கவர்ச்சியாய் புதுசாய்த் தெரியறேனா?"

கேட்டபடி அருகே வந்தவனை ஒருவிதப் பதட்டத்தோடு தவிர்க்க நினைத்தாள்..

"கோவா உனக்குப் பிடிச்சிருக்கில்லையா?"



"கிடைச்சது போதுங்கற மனப்பான்மையை..."

"இன்னும் எதுவுமே கிடைக்கலையே... எப்படிப் போதுங்கறே?" மிக அருகே நின்றவனை நிமிர்ந்து பார்வையால் வருடும் திராணியில்லை... மீண்டும் புதுப்பெண் ஆகி விட்டது போலொரு வெட்க வெடவெடப்பு.

"நாம் எதிர்பார்க்காத நீண்ட இடைவெளி விழுந்திடுச்சு, நிம்மா..."

அவனது சுட்டுவிரல் அவள் மோவாயைத் தொட்டுத் தாடையை அளவெடுத்தது.

அந்நேரம் இடுப்பிலிருந்து அவனது 'செல்' சிணுங்க, "ம்ப்ச்.." என்றபடி, அவன் அதைக் கையில் எடுத்தது அவளுக்குப் பிடித்திருந்தது.

முக்கிய நேரத்தில் ஏனிப்படிக் குறுக்கிடுகிறாய் என்ற அலுப்பு, தனிமைக்கு இடையூறு என்ற எரிச்சல் அந்தத் தொனியில் வெளிப்பட்டது இன்பமாயிருந்தது.

ஆனால் பேசியவனின் முகம் ஆர்வமானது.

"ஓ... மயூரா... இங்கதான் இருக்கியா... இல்லை... நோ ப்ராப்ளம். ஒரே நிமிஷத்தில் வரேன்.."

இவளிடம் ஏதும் விளக்கம் சொல்லாமலேயே குணா விரைய, இவள் விலகிய அவனது அகன்ற முதுகையே வெறித்து நின்றாள்.

வியாபாரத்தில் நுணுக்கமான திறமைகள் உள்ளவன் தாம்பத்தியத்தில் ஏனிப்படிக் கோட்டை விடுகிறான்?

'மயூரா இன்ன விஷயமாய்ப் பேசுகிறாள் - அஞ்சே நிமிஷத்தில் வந்துடறேன், செல்லம்!' என்று கொஞ்சலாய் ஒரு விளக்கம் தந்து விட்டால் மனைவிக்குள் குழப்ப அலைகள் புரள ஆரம்பிக்காது.

# 17

ஞாயிறு ஆலய ஆராதனை முடிந்து வெளியே வந்து நின்ற நிர்மலா, தன் மாமியாரைத் தேடினாள். காத்திருந்த 'சோனாட்டா' காலியாகவே நின்றது - ஓட்டுனர் ஓடி வந்து,

"பெரியம்மா... அந்தப் பக்கம் போயிருக்காங்கம்மா!" என்று சுட்டிய திசையில் நடந்தாள்.

பக்கவாட்டிலும் ஆலயத்தின் தோற்றம் கம்பீரமாகவே இருந்தது. கோவாவில் 200,300 ஆண்டுப் பழமையான அழகு ஆலயங்கள் ஏராளம். ஒவ்வொன்றின் நேர்த்தியும் கண்ணைக் கட்டி நிறுத்தும்.

மனிதன் தன்னைப் படைத்தவரை மதித்து நேசிக்கிறான்தான் இல்லையெனில் இத்தனை மெனக்கெட்டுத் தன் திறமையெல்லாம் திரட்டி இப்படியான வழிபாட்டு ஸ்தலங்களை உருவாக்குவானா? மனிதக் கைவேலையில் உருவான பல வியத்தகு கட்டடங்கள் மாளிகைகள் அழிந்து போக, பயமோ பக்தியோ இத்தகு ஆலயங்களை ஓரளவு காப்பாற்றி வைத்திருக்கிறது.

படைத்தவர் முன்பேனும் இன்னும் மனிதன் சற்றுப் பணிந்தே நிற்பதின் அறிகுறியாய் இது பட, இவளுக்குள் சற்று ஆறுதலான மகிழ்வு. மனிதனின் நம்பிக்கை பொய்யல்ல எனும் அந்த நம்பிக்கையைத் தானும் பற்றிக் கொண்டதால் விளைந்த நிம்மதி.

ஆலயத்தின் பின்புறம் சீரான வரிசையில் கல்லறைகள். நீலநிறப் பளிங்குக் கற்களில் இறந்தவர்களின் பெயர், பிறந்த,



இறந்த தேதிகளுடன் அவரவர் குடும்பத்தின் இரங்கற் செய்தியும் செதுக்கப் பட்டிருந்தது.

வெளுப்பு அல்லது கறுப்புப் பளிங்கு கற்களுடாகத், தன் அத்தையைத் தேடி நடந்தாள்.

ஏன் தன்னிடம் ஏதும் சொல்லாமல் வந்து விட்டார்கள்? மாமாவின் கல்லறை இங்குதான் உள்ளதோ?

எதிர்பார்த்தபடியே ஒரு ஓரத்துக் கறுப்புக் கல்லறையின் முன் நின்றிருந்தது... அத்தைதான். விரல்கள் வேண்டுதலில் இறுகப் பிணைந்திருந்தன... நெருங்க, அம் முதிய சிறு உடல் நடுங்கிக் கொண்டிருப்பது புலனாகியது...

ஆழ்ந்த பிரார்த்தனை போலும்... புருவங்கள் முடிச் சிட்டிருந்தன. மௌனத்தைக் கலைக்காமல் உடன் நின்றாள்.

பளிங்கில் வெட்டெழுத்துக்கள் உள்ளே புதையுண்டிருப்பது ராபர்ட் சீலன் என்றன.

தேதிகளைக் கணக்கிட அவர் தன் நாற்பத்து நான்காம் வயதில் இறந்திருப்பதும் தெரிய வந்தது.

சாகும் வயதில்லை.

குருத்தான தன் பிள்ளைகள் தன் தோளை மிஞ்சி எழும்புவதைக் கண்டு பெருமிதம் கொள்ள வேண்டிய பருவம் - தன் கனவுகளை நனவாக்கும் முயற்சியில் முனைந்து, அதை அனுபவிக்க ஆரம்பிக்கும் காலம்...

இவரை உலகிலிருந்து வெட்டி எடுத்துப் போனது எது? வியாதியா அல்லது விபத்தா?

இதுவரை யாரும் அது குறித்துப் பேசிக் கேட்டதில்லை.

ஒருதரம் அப்பாவோடு பேசும் போது குணாவின் அப்பாவின் மரணம் பற்றிய பேச்சைத் தொட, அப்பா நழுவியது போலத் தோன்றியது - அல்லது அது இயல்பான பேச்சு மாற்றம் தானா?

ஒரு நீண்ட பெருமூச்சு அத்தை இவ்வுலகிற்கு மீண்டு வந்ததைத் தெரிவித்தது.

விழித்த கண்கள் அருகிருந்த மருமகளைச் சற்று வியப்புடன் பார்த்தன.

"உங்களைக் காரில் காணலையேன்னு தேடி வந்தேன், அத்தை..."

"போலாமா?"

"ம்ம்.. நான் மா.. மாமாவின் கல்லறைக்கு இதுவரை வந்ததே இல்லையே... வருஷத்தில் நாலைந்து முறையேனும் சென்னையில் அம்மாவின் கல்லறைக்குப் போவோம்... அப்பாவும் இப்படி ஒரு பூச்செண்டை வைத்துக் கைகட்டி அமைதியாய் நிற்பாங்க..."

"ம்ம்... இறந்தவங்க அமைதியாய் உறங்குவதாய்த்தான் நினைக்கிறோம்.. ஆனால்..."

"சொல்லுங்க..."

"ஒன்றுமில்லை நிம்மி - போவோம்..."

மனம் திறந்து பேச விரும்பவில்லை - மாமாவின் சாவில் ஏதும் மர்மம் உண்டோ?

கொலை?

பொருள் அல்லது சொத்திற்காக இவரைக் கொல்லுமளவு பெரும் பணக்காரரில்லை.

வேறேதும் தகராறு கொலை வரை முற்றி விட்டதா?



அல்லது குடித்தே வயிறு புண்ணாகி அவர் இறந்ததைத்தான் மறைக்கிறார்களா?

"நீங்க வரும்போது கையில் பூ எடுத்து வந்ததாய் எனக்கு நினைப்பில்லை, அத்தை"

என்ன சொல்கிறாய் என்பதாய்ப் பார்த்தார் மூத்தவர்.

"கல்லறையில் ஒரு லில்லிப் பூச்செண்டு..."

"அது நான் வைத்ததில்லை - டாக்டர் கமால் எப்பவும் லில்லிப் பூக் கொண்டு வருவார்.. அப்பப்ப வருவார்.. சிறுவயதிலிருந்தே இருவரும் ஃபிரண்ட்ஸ்... ஆனா அவரும் கூட இப்படியாகும்னு எதிர்பார்க்கலை."

அதன் பிறகு மௌனம் - இனியும் ஏதும் சொல்லிவிடக் கூடாதே என்ற ஜாக்ரதையான மௌனம்.

ஆனால் அதுவே நிர்மலாவிற்குப் போதுமானதாய் இருந்தது. இப்படி ஒரு வழி இருக்கிறது என்று தெரிந்து விட, வேறு கேள்வி ஏதுமின்றி மாமியாருடன் நடந்தாள்.

மாலை நேரம் காலார நடந்தது நிர்மலாவிற்குப் புது அனுபவம். 'மதியம் நிறையச் சாப்பிட்டுட்டேன், அத்தை - கொஞ்சம் நடந்துட்டு வரேனே!' என்று மாமியார் துணைக்கு யாரையேனும் அனுப்பும் முன் கிளம்பியாயிற்று.

டூரிஸ்ட் புழக்கமுள்ள பகுதியே என்பதால் சுவாரஸ்யமாய் அக்கம் பக்கம் பார்த்தபடி நடந்தாள்.

கடற்காற்று சாமரம் போலில்லாமல், சற்று அழுத்தமாகவே வீசியது. அதில் பறந்த 'சாரங்' எனும் சின்ன லுங்கி போன்ற வர்ண உடையையும், கூந்தலையும் சமாளித்தபடி நடந்த ஐரோப்பியப் பெண்களை ஆர்வமாய்ப் பார்த்தாள் - ஆனால் அவர்கள் எவரையும் சட்டை செய்யவேயில்லை.

களில் போகும் போது சுமிடமாய்த் தோன்றும் இடங்கள் நடந்து போகையில் தொலைவில் இருப்பதாய்ப் பட்டது.

ஆனால் இப்படிக் கால், கையை வீசி நடப்பது உடம்பிற்குப் பயிற்சி தந்து பேசவும் யோசிக்கவும் போதிய அவகாசம் கிடைத்ததே.

'எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது?'

'என்னென்ன கேட்கலாம்?' என்பதாய் மும்முரமாய் யோசிப்பு.

'ஹோட்டெல் ரெசிடோர' என்ற பச்சைப் பலகையைக் கண்டதும் அவள் கால்கள் சுறுசுறுப்பாயின.

வீட்டை நெருங்கியாயிற்று.

அவர் வீட்டில் இருக்க வேண்டுமே...

ஃபோன் மூலம் தகவல் சொல்லிவிட்டு வந்திருக்கலாம் - அவரது 'பேஜ்' என் முக்கிய எண்களில் ஒன்றாய்க் குறிக்கப்பட்டு வீட்டிலுண்டு.

ஆனால் அவரைச் சற்றே திகைக்கப் பண்ணி, மனிதர் சுதாரிப்பதற்குள் தன் கேள்விக் கொக்கிகளை வீசி அவரிடமிருந்து சில பதில்களையேனும் பெற்றுவிடலாம் என்பதே நிர்மலாவின் திட்டம்.

ஒருவேளை நோயாளிகளைப் பரிசோதித்துக் கொண்டிருப்பாரோ? என்றும் யோசித்தபடி டாக்டர் வீட்டின் வளைவில் திரும்பிய அவள் கால்கள் திகைத்துத் தயங்கின.

டாக்டரின் வீட்டு வாசலில் நின்றது அந்த கான்டெஸ்ஸா. எல்லா கான்டெஸ்ஸாக்களும் குணசீலனுடையவை அல்லவே... தனக்கே சமாதானம் சொன்னபடி நெருங்கியவளின் இதயம் சற்று நின்றது.

அதே கார் எண்தான்!

டாக்டரின் வீட்டிற்குப் போகவா... வேண்டாமா?



இதயம் துடித்துத் துடித்துக் கேட்டது.

காலார நடக்கும் பழக்கம் இல்லாதவள் என்னவென்று சொல்லி மழுப்புவது? குணசீலன் தான் மருத்துவரின் வீட்டிற்கு வந்தது பற்றி என்ன விளக்கம் கூறுவான்?

'இங்கே போகிறேன்' - 'இன்ன நேரம் திரும்புவேன்' - என்று இதுவரை கணவன் தன்னிடம் சொன்னதேயில்லை.

செய்வதறியாது சுற்றுச்சுவரில் சாய்ந்து நின்றவளுக்கு ஏனோ மூச்சு வாங்கியது.

முதற்கணியம் கோவாவிற்கே தான் வந்திருக்கக் கூடாது!

அப்பாவையும் இழந்து அநாதரவான நிலையில் போக்கிடமற்று இங்கு அடைக்கலம் போலத் தஞ்சமடைந்தது தவறு.

இவள் வேறெங்கு போவாள் என்ற திமிருடன்தானே தன் சம்மதம் கூடக் கேட்காமல் குணா தனக்கும் சேர்த்து விமான டிக்கெட்டுகளை வாங்கினான்.

'ஆண்களில் பலருக்குத் தங்கள் பிரியத்தை வார்த்தைகளில் வடிக்கத் தெரியாதுடா!' என்பார் அப்பா.

வார்த்தைகளை விடப் பிரியமான ஒரு பார்வை, ஒரு தோள் தட்டல், இதமான முத்தம் அன்பை அழகாய் வெளிப்படுத்துமே.

இங்கு வந்ததிலிருந்து குணா தன்னைத் தேடவேயில்லை - என்பது கடுப்புடன் நினைவிலாடியது. பல மாதங்களின் பிரிவிற்குப் பின்பும் இவளைப் பொருட்படுத்தவில்லை அவன்.

அவர்கள் சேர்ந்திருந்த முதல் மாதங்களில் எத்தனை இரவுகள் மோகத் தீயாய் கதகதத்திருந்தன - வெறியான இச்சையில் வெந்து தணிந்திருந்தன...!

அத்தனை வேகமும் இப்போது எங்கே?

கேட்டவளின் கன்னத்தில் அறைவது போல நினைவிற்கு வந்தது முந்தின இரவு மயூரா குணாவிற்குத் தந்த முத்தம்!

ஆத்திரத்திலும் ஆற்றாமையிலும் உடம்பெங்கும் ரத்தம் கொதிப்பாய் ஓடியது.

அந்த வேகத்தில் டாக்டர் வீட்டின் படியேறினாள்.

அஞ்சிப் பதுங்குவதில் இனி அர்த்தமில்லை...

அவர்கள் கேட்கும் முன்பே தான் தன் கேள்விகளை அவர்களிடம் வீசி விட வேண்டியது!

'குணா, நம் கார் இங்கே நிற்கிறதே... இங்கு ஏன் வந்தீர்கள்? உங்கள் உடம்பிற்கு என்ன...?' - இப்படி!

தெத்தாய் நுழைந்து கம்பீரமாய்க் கேள்விகளைக் கேட்க விரும்பினாலும் கால்கள் ஏகமாய்த் தயங்கின. மிருதுவாய்ப் படியேறித் தாழ்வாரத்தில் நின்றவளுக்குப் பேச்சுக் குரல் கேட்டது.

முதலில் குணாவினது

"நீங்க என்ன சொன்னாலும், எனக்குத் திருப்தியில்லை..."

"சில விஷயங்களைக் காலத்தின் கையில் விட்டுடணும், குணா - இன்னும் சரியாச் சொல்லணும்னால் கடவுளின் கையில். அவரை மிஞ்சி எதுவும் நடந்திடுமா என்ன?"

"அப்படின்னா அப்பாவின் மரணம்?"

"பழைய கணக்குகளைக் குடையாதேப்பா- கடவுளின் எல்லாக் கணக்குகளும் மனுஷனுக்குப் புரியணுங்கற அவசியமில்லை. [illegible] உங்கப்பாவிற்கு அப்படியொரு முடிவு நேர்ந்ததால்தான் நீ வெளியூர்க் கனவை உதறி வாழ்க்கையில் நீந்த ஆரம்பிச்சே... இப்ப வெற்றிக் கரையிலும் சேர்ந்தாச்சு. ஆக நடந்ததெல்லாம் நன்மைக்கே. இறந்த என் வனிதாவுக்காக ஏங்க ஆரம்பிச்சேன்னா



எனக்குத் துளி நிம்மதி மிஞ்சுமா? உங்க வேதம் அருமையாய்ச் சொல்லுதே.

'கடவுளை நம்புகிறவர்களுக்கு ஒரு நன்மையும் குறையாது. தீமையும் கூட அவர்களுக்கு நன்மைக்கானதாய் மாறும்!' நடந்தது துக்கம்தான்... ஆறாத இழப்புதான்... ஆனால் அதுவும் நம் நன்மைக்கான அடிப்படையாய் இருந்ததுன்றதை மனசில் வை... எதிர்காலத்தைப் பாரப்பா..."

"எதிர்காலத்தைப் பற்றிய பயத்தில்தான் உங்களிடம் வந்திருக்கேன், பெரியப்பா..."

"ஆக இப்படியே அஞ்சி இழுத்தடிக்கப் போறே? அந்தப் பொண்ணு முகத்தில் அருளே இல்லப்பா."

"அவ நிம்மதியாய் இருந்தாப் போதும்."

"இப்படியொரு வாழ்வில் அவளுக்கு நிம்மதி கிட்டாது - பெண் பாவம் பொல்லாதது..."

"எது பாவம், பொல்லாப்புன்றதை..."

தொலைபேசி வீரிட்டு அவர்களது சம்பாஷணையை அறுத்தது. மருத்துவர் அழைத்த நோயாளியுடன் பேச,

"வரேன் பெரியப்பா..." என்றபடி குணா வெளியேற, இவள் அங்கே நின்ற பெரிய பூந்தொட்டியின் பின்னே ஒடுங்கினாள்.

கார் கிளம்பும் வரை மூச்சும் கூட இயல்பாய் இழையவில்லை. யாரைப் பற்றிப் பேசினார்கள்...?

பேசியது ஒரு பெண்ணைப் பற்றி... அது நிச்சயம் மயூரா அல்ல. அவளை யாரும் வஞ்சித்து அவள் பாவம் அல்லது சாபத்தை வாங்கிக் கட்ட நேராது. எதையும் சமாளிக்கக் கூடிய சாமர்த்தியசாலி.

இது வேறு ஒரு அபலை...

அவளுக்கும் குணாவிற்கும் என்ன தொடர்பு? இத்தொடர்பில் டாக்டருக்குள்ள சம்பந்தம் என்ன?

டாக்டர் அந்தப் பெண்ணிற்காக ஏன் பரிந்து பேச வேணும்? ஒரு வேளை கர்ப்பிணியாக்கி... கைவிட்டு... ச்சே! குணசீலன் அப்படிப் பட்டவனல்ல.

இனியும் பொறுக்க முடியாது.

டாக்டரிடமே கேட்டு விடுவது.

தொலைபேசியில் பேசி முடித்து தட்டப்பட்ட கதவிற்கு வந்த டாக்டர் குமாரின் முகத்தில் சற்றே அதிர்ச்சியான ஆச்சரியம்.

ஆனாலும் சுதாரித்து வரவேற்றார்.

"வாம்மா... வா..."

இவள் மௌனமாய் உள்ளே நுழைந்தாள்.

"எப்படி வந்தே? கார் சத்தமே கேட்கலை...?"

"நடந்து வந்தேன்... உங்களைப் பார்க்கலாம்னு..."

"ஒரு ஃபோன்கால் நானே வந்திருப்பேனம்மா... அப்படியே உங்க சமையல்காரச் சக்கரபாணியின் மீன் வறுவலையும் சாப்பிட்டிருப்பேன்... அல்வாத் துண்டாட்டம் வறுத்திடுவானே..."

முயன்று சிரித்தார்.

நிர்மலாவிற்குள் குழப்பம் - குணசீலன் இப்போது வந்து போனதைப் பற்றிக் கேட்கலாமா... அல்லது தான் வந்ததற்கான காரியத்தை மட்டும் கவனிப்பதா?

அவளது பெண் புத்தி கணவனையும் அவர்கள் பேசிக் கொண்ட அப்பெண் யார் என்பதையுமே கேட்கத் துடித்தது.

அப்படி ஒருத்தி இருக்கப்போய்த்தான் தன்னைப் பொருட்படுத் தாமல் அலுக்காமல் இப்படி ஒதுங்கி இருக்க முடிகிறது குணாவால்.



"என்னம்மா... சாயா குடிக்கிறியா? என் சமையல்காரருக்கு அது மட்டும்தான் ஓரளவு சுமாராய்ப் போட வரும்..."

"ம்ம்..."

வந்த தேநீரைப் பருகிய இருவரும் சிரமத்துடன் சம்பாஷணையை நகர்த்தினார்கள். விரைவில் இருட்டி விடு மென்பதால் அரைமணி நேரத்திற்கு மேல் அமர்ந்து அளவளாவ முடியாதென்பதை உணர்ந்தாள்.

கேட்க வந்த விஷயத்தையேனும் கேட்டுத் தெரிந்த பின்பே இன்று வீடு திரும்புவது.

ஆக... ஆரம்பித்தாள்.

"இன்னைக்குக் காலைல சர்ச் போயிருந்தோம் - அத்தை மாமாவின் கல்லறைக்குப் போக... இன்றுதான் நானும் அங்கு முதல் முறையாய்ப் போனேன்."

"ம்ம்."

"பளிங்கு மேடையில் வில்லிப் பூச்செண்டு இருந்தது - அத்தை அது நீங்க கொண்டு வைத்ததாய் இருக்கக் கூடும்னாங்க..."

"ஆமம்மா... ரெண்டு நாளைக்கு முன்னே போயிருந்தேன் - சீலனோடு எனக்கு அலாதி நெருக்கம். நான் ஒரு வயசுக்கேனும் மூத்தவனாய் இருந்தாலும் ஒரே பள்ளி. கபடி டீமில் நாங்க ரெண்டு பேருமே கில்லாடி ஆட்டக்காரங்க... கோவன் பசங்களுக்குத் தமிழ்க் காரங்கன்னா இளப்பம். அதைப் போக்கணுங்கற வெறியோடு ஆடுவோம்... அப்படி ஆரம்பிச்ச நட்பு..."

"அவங்க அப்படி இறக்கலைன்னா... உங்க நட்பு தொடர்ந்திருக்கும் - இல்லையா, மாமா?"

தன்னை நிர்மலா உறவு கொண்டாடியதில் டாக்டருக்கு நெக்குருகிப் போனது. அக்கண்களின் கனிவிலிருந்தே தெரிந்தது.

இப்படி நாசுக்காக அவள் வீசிய தூண்டிலும் தப்பவில்லை. பெருமூச்சுடன்-

"ஆமம்மா.. இப்படிச் சாவை அவனே தேடிப் போவான்னு யார் நினைச்சா.. பெண்டாட்டி பிள்ளைக மேல பாசமாய் இருந்தவன்.." கை விரித்தார்.

நம்ப முடியவில்லை.. இது இவள் நினைக்காத கோணம்! ஆக குணாவின் தந்தை தற்கொலை செய்து கொண்டவர். திகைத்து அமர்ந்திருந்தாள்.

---

## 18

இவளுக்கு யாரிடமேனும் பேச வேண்டும் போலப் பரபரத்தது. 'என்னை ஏமாற்றிக் கட்டிக் கொடுத்து விட்டார்கள்!' என்று புலம்பித் தள்ள அல்ல. பொதுவாகவேனும் ஏதேனும் பேசினால் மனம் ஆறும் போன்றதொரு தவிப்பு.

இக்குடும்பத்தின் தலைவர் தற்கொலை செய்து மறைந்தவர் என்ற உண்மை தன்னிடம் திருமணமாகி ஒன்றரை ஆண்டாகியும் சொல்லாமல் மறைக்கப்பட்டதில் நெஞ்சில் வலித்தது.

இக்குடும்ப அங்கத்தினராய்த் தன்னை யாரும் ஏற்கவில்லையே என்ற முள் குத்தல்.

அவ்வப்போது வேலு சங்குவோடு பேசுவது உண்டென்றாலும், இம்மன நிலையில் அவர்களோடு பேசத் தோன்றவில்லை.. நர்ஸ் கமலம்மா இதமாகப் பேசக்கூடியவர்.. ஆனால் அவர் வீட்டில் தொலைபேசி கிடையாது.



பிரசாத்..!

எப்படி மறந்தாள் அந்த நல்ல நண்பனை..?

அவள் வீட்டில் இல்லாத நேரம் அவன் இருமுறை அழைத்ததாகவும் சொன்னார்கள். பாவம்! தான் அவனைத் தவிர்ப்பதாய் நினைத்து ஒதுங்கியிருப்பான்.

அழைத்துப் பேசாதது தன் தப்புதான்..

அப்பாவிற்குத் தான் பிரசாத்தோடு பழகுவதில் உடன்பாடில்லை.

'ஊர் தப்பாய்ப் பேசும்மா!' என்று காரணமும் சொன்னார். பிரசாத் தன்னை மிக நெருங்கி வந்த போதும், விவாகரத்து பற்றிப் பேசியதிலும் உள்ளே எச்சரிக்கை மணி ஒலித்ததால் இப்படி ஒதுங்கி இருந்தாளோ என்னவோ?

ஆனால் போகிற போக்கைப் பார்க்க விஷயம் விவாகரத்தில் தான் முடியும் போல.. குணசீலனுக்கு வேண்டிய பிற பெண்கள் இருப்பதால் மனைவியை வேண்டியிருக்கவில்லை..

துரதிர்ஷ்டமாய்த் தந்தையின் நிறுவனமும் இப்பொழுது முழுவதுமாய்த் தன்னிடமில்லை. பழங்கால 'வின்டேஜ்' காரையும் அப்பா மருமகனுக்குத் தன் பரிசாய்த் தந்து விட்டிருந்தார். தேடிப் போய் மருமகனிடம் தன் கம்பெனியின் பாதிப் பங்கை அப்பா ஏன் தந்தார்..?

தம்பதியை இப்படியேனும் இணைத்து விடலாம் என்பதான யுக்தியா அது? யோசித்து மண்டை காய்வதை விடப் பேசி ஆற்றிக் கொள்ளலாம் என்று பிரசாத்தைப் 'பேசி'யில் அழைத்தாள்.

அவன் குரலின் உற்சாகம் இவளையும் தொற்றிக் கொள்ள, அளவளாவினார்கள்-

மீண்டும் கரிசனையைக் கேட்டான்-

"நிம்மி, எப்படியிருக்கே?"

"ம்ம்.. அங்கே அங்கிள், ஆன்ட்டியெல்லாம் நல்லா யிருக்காங்களா? கேட்டதாய்ச் சொல்லு."

"அம்மா அடிக்கடி உன்னைப் பத்திப் பேசுவாங்க-கடைக்குப் புது ரகப் புடவை வந்தால் உனக்குன்னு இன்னும் எடுத்து வச்சுடறாங்க. உன்னைப் பார்க்கணுமே, நிம்மி.. எப்படி?"

"நானே சென்னைக்கு வர்றேன், பிரசாத்..." என்றவள் இங்குள்ள குடும்பத்தினர், முக்கியமாய் விக்கியைப் பற்றி நிறையப் பேசி, விடைபெற்றுக் கொண்டாள்.

குணசீலனின் இறுகிய முகமும் குரலும் தன்னையும் அடக்கி விடுவது போலில்லாது இப்படிச் சரளமாய்ப் பேசியது அவளை ஆசுவாசப் படுத்தியிருந்தது.

சும்மா இருந்து சாத்தானின் உலைக்களமாய்ப் புத்தியை மாறவிடக் கூடாது.. ஏதேனும் செய்யலாம் எனில்..

முதலில் இங்குள்ள அலுவலகத்திற்குப் போனால் என்ன?

திருமணமான புதிதில் சிறு வரவேற்பிற்காகப் போனதுதான்.

வீட்டு வாசலில் எப்போதும் ஓட்டுனரோடு வாகனம் இருக்கும்.

பளிச்சென்று ஒரு பருத்திப் புடவைக்கு மாறினாள். வாரத்திற்கு இரு முறை தன் சென்னை அலுவலகத்திற்குத் தொலைபேசியில் பேசி நிலவரம் அறிய முனைந்ததில் குணசீலன் அதை முழுக்கத் தன் ஆதிக்கத்தின் கீழ் அடக்கி விட்டிருந்தது புரிந்தது.

'புது ஆர்டர் கிடைக்குதா?'

"பாங்க் வட்டியைக் கவனமாய்க் கட்டிடணும்."



'நான் வரவா?' என்ற இவள் கேள்வி விசாரணைகளுக்கு- 'எல்லாம் சின்னவர் பார்த்துக்கறார்மா. அவர் அனுப்பிய மானேஜர் சாமர்த்தியசாலி- ஆக நீங்க கவலையே பட வேண்டாம்!'- என்றே பதில் வந்தது.

தயாநிதி பற்றிய இவள் கேள்விகளுக்கான பதில்கள்தான் சோர்வு ஏற்படுத்தின. அவரைப் பற்றித் தகவல்கள் இதுவரை இல்லை. குடும்பத்தார் அவரைப் பற்றித் தெரியவில்லை என்று கை விரித்தாலும், பதறிக் கலங்காததால் அவர்களுக்கும் திருட்டில் பங்கு இருப்பது தெளிவு. 'பாப்பா', 'குழந்தை' என்று பாசங்கு காட்டியபடி இப்படிக் காலுக்குக் கீழே குழி பறித்துக் கொண்டிருந்தார் என்பது வேதனை.. பெரிய ஏமாற்றம்.

தயாநிதியின் ஏமாற்று எத்தனை பெரியது என்பது பற்றிய தகவல்கள் தனக்கு மறைக்கப்படுகிறதோ என்பதில் ஏற்பட்ட குமுறல்.

ஆக இப்போது குணசீலனின் அலுவலகத்திற்கு இவள் கிளம்பியது ஒரு வித வீம்பில்-

நீ என் தட்டில் கைவைத்தாய் அல்லவா? எனக்கும் உன்னதில் பங்குண்டு எனும் சில்மிஷம் அது!

ஆனால் அது தன் நிம்மதிக்கு மேலும் வேட்டு வைக்கப் போவது அறியாமல், உற்சாகமாகவே காரில் ஏறினாள்.

"ஃபாக்டரிக்கு விடுப்பா.."

ஓட்டுனர் சற்று வியப்புடனேயே கேட்டார் - "எந்த யூனிட்டுக்கம்மா?"

"ஐயா இப்ப எங்கே இருப்பாங்களோ.. அங்கே."

"இப்ப தபால் பார்க்க மெயின் ஆஃபீஸில் இருப்பாங்க."

குணாவின் நீலக் கார் அலுவலக வாசலில் நின்றது - பெரிய அரை வட்ட வடிவான நுழைவு வாசல்.

தன் நிறுவனத்திற்கு ஒரு இளவரசியின் தோரணையில் போய் இறங்க, காவலாள் பவ்யமாய்க் கதவு திறந்து விட்ட ஞாபகம் உள்ளே உறுத்தியது. இங்கே சற்று மறைவாய், திட்டுவானோ என அஞ்சி வந்து இறங்கும் அவலம்.

"ஐயா வாராரும்மா."

ஆவலாய் ஏறிட்டாள்.

குணசீலனின் நடையின் கம்பீரத்தை ரசித்த கண்கள் அவளருகே ஜோடியாய் வந்தவளில் பதிந்து சுடுத்தன.

மிக மென்ன அன்னமாய் நடந்தவளின் முன்னே போய், கார் கதவை அவளுக்காய்த் திறந்து காத்திருந்தான். இவளது கணவன்!

காரில் ஏறப் போகும் போது பக்கவாட்டுத் தோற்றத்தில்தான் அப்பெண்ணின் தோற்றம் முழுதுமாய்த் தெரிந்தது- கர்ப்பிணி! மெல்லிய உயர்ந்த உடல்வாகு என்பதால் எடுத்த எடுப்பில் தெரியாத வயிறு. நீண்ட சடைப்பின்னல். அதற்கு ஒத்தாற்போல நீள் வட்ட முகம். அமைதியான அழகு.

அவள் பேசுவதைக் கவனமாய்க் கேட்ட குணசீலன் அவள் காரில் ஏறியதும் பவ்யமாய்க் கதவடைத்து, பின் காரையும் ஓட்டிப் போக, இவள் ஏதோ சொப்பனக் காட்சி அது என்பது போலக் கண்டிருந்தாள்!

பெண்பாவம் பொல்லாப்பு என்று டாக்டரும் குணாவும் பேசிய பெண் இவள்தானா?

மயூராவோடு பேசும் போது குணாவின் முகம் வேறு மாதிரியிருக்கும். இவளோடு மிகப் பணிவும் பரிவுமாய் நடந்து கொண்டது...

ஒருவேளை கர்ப்பிணியான அவளைக் கைகழுவும் முன்னான பிரிவு உபசாரமோ?



சதித்திட்டம், சில்மிஷமெல்லாம் போய், வீடு போய்ப் படுத்தால் போதும் என்றிருந்தது!

❖ ❖ ❖

மதியம் அதிசயமாய் உணவிற்காய் வீடு வந்திருந்தான் குணசீலன். அவன் குரல் கீழே கேட்டும் இவள் அசையவில்லை.

ஐந்தாம் நிமிடம் வேலைக்காரப் பெண் வந்து அழைத்தாள். "ஐயா உங்களையும் சாப்பிட வரச் சொல்றாங்கம்மா."

"எ.. எனக்குப் பசிக்கலை."

"காலைல ஒரே டோஸ்ட்தானேம்மா உண்டீங்க?"

"வேணாம்... ப்ளீஸ்.."

மெல்ல மூடிய கதவு மறுநிமிடம் படாரெனத் திறந்தது.

"சாப்பிட வா, நிம்மி!"- உத்தரவுத் தொனியிலான அழைப்பு.

"பசிக்கலை."

"பசி மறக்குமளவு என்னாச்சு?"

"ஒன்றுமில்லை.... ஜடமாய்த்தானே கிடக்கறேன்... அதான் பசிக்கலை."

ஒரு நிமிட மௌனத்திற்குப் பிறகு அவன் குரல் மிக அருகே கேட்டது.

"ஆஃபீஸ் வந்திருந்தியாமே...?"

"ஆமா... ஆனால் உடனே திரும்ப வேண்டியதாயிடுச்சு..."

"அப்படியென்ன பயங்கரத்தை அங்கே பார்த்தே?"

"ஒரு மனைவிக்கு அ... அது... பயங்கரந்தான்."

"இப்படித் திரும்பி என்னைப் பார்... பிறகு விளக்கமாய்ப் பேசு."

"எனக்கு உங்களைப் பார்க்கப் பிடிக்கலை." துணிவைத் திரட்டிச் சொல்லி விட்டாள்!

"பாவம் மோர்வின். நீ என்னை மிக நேசிப்பதாய்ச் சான்றிதழே தந்தவர். இதைக் கேட்டால் ஏமாந்து போவார்."

"நான் ஏமாந்து போனதை அவரிடம் சொல்றேன்." குரலை உயர்த்தினாள்.

"ஷ்... கத்தாதே. மோர்வின் நாளை நம்மை 'ப்ரஞ் ஃபோர்ட்'டிற்கு விருந்துக்கு அழைச்சிருக்கார்..."

"அவனையே கூட்டிட்டுப் போங்க."

சொன்ன பிறகு இவளுக்கே 'சுருக்' கென்றது.

"யாரை?" - கேள்வி கடுமையாய் வந்தது.

"காலைல காரில் பவ்யமாய் ஏற்றி அழைத்துப் போனவனை..."

"டேம் யூ... உளறாதே..." குரலை உயர்த்தவில்லையெனினும், அதில் கொப்பளித்த கோபத்தில் அயர்ந்து போனாள்.

இதுவரை அவனிடம் நிறைய அலட்சியம் பார்த்தாகிவிட்டது... இத்தனை ஆத்திரம் அபூர்வம்.

ஆனால் இவளும் விடுவதாயில்லை.

"யார் அவன்? எங்கே போனீங்க?"

"வேற? நீ பிரசாந்தோடு இனிக்க இனிக்க அரைமணி நேரம் பேசியது கூடத்தான் எனக்குத் தெரியும்..."

"இப்ப மனம் விட்டுப் பேச எனக்கிருக்கும் ஒரே ஆள் அவன் தான்... முன்பு அப்பாவோட நிறையப் பேசுவேன்... இப்ப... இப்ப..."



"நிறையப் பேசுபவர்களுக்குச் செயலில் திறமை கம்மி."

"நீங்க... எங்கப்பாவை மட்டம் தட்ட வேணாம்."

"பொதுவாய்ச் சொன்னேன்... நிறையப் பேசினீங்க... அதே போல நாதன் கம்பெனியில் நிறையக் கையாடலும் நடந்திருக்குது!"

"நிறையன்னா?"

"கோடி வரையில்."

திகைப்பு இவள் வாயை அடைத்தது.

"எல்லாம் என்னால்தான்... விவரம் தெரியாமல்..."

"இல்லை - என் ஆடிட்டர்ஸ் சொற்படி கையாடல் பல காலமாய் நடந்து வருது - தயாநிதி இரு வேறு கணக்குப் பதிவேட்டை வைத்திருந்தார்-ஒன்றிலிருந்து மற்றொரு கணக்கிற்குப் பணத்தைப் புனல் வைத்து மாற்றும், மறைக்கும் வித்தை அவருக்குத் தெரிந்திருந்தது. சமீபமாய்ச் சுரண்டிப் பதுக்கும் வேகம் அதிகம் என்று சொல்லலாம் - இதைக் கண்டு பிடிக்கவே திறமையான கணக்கர்களுக்கு இத்தனை நாள் ஆனது எனும் போது தயாநிதியின் சாமர்த்தியம் புரிகிறது... அடுத்த பணத்தை எப்படிப் பதுக்கியிருக்கிறார் என்பதையும் கண்டுபிடிக்கணும்... கண்டு பிடிச்சுடலாம்."

இவளுள் இயலாமை சுட்டது.

சரி... தயாநிதி ஏமாற்றுவதில் நரியாகவே இருந்து விட்டுப் போகட்டும். ஆனால் தாங்கள் இத்தனை முட்டாளாய் இருந்திருக்கத் தேவையா? அதுவும் குணசீலன் வந்து கண்டுபிடிக்கும் வரை...?

தயாநிதியின் மகள்களின் திருமணத்தை எப்படிக் கோலாகலமாய் நடத்தினார் அப்பா... அந்த அன்பிற்கும், பெருந்தன்மைக்கும் கிடைக்கும் பதில்... இந்த அவமானம் தானா...?

"ஆக நாங்க வியாபாரம் செய்ய லாயக்கில்லை - குடும்பம் நடத்தவும் தெரியாது - நீங்க செய்த ஒரே தவறு இந்த ஏமாளிக் குடும்பத்தில் பெண் எடுத்ததுதான்..." வெடித்தாள்.

அவன் அவளை வெறுமே பார்த்து விட்டு வெளியேறினான்.

---

## 19

"மனதில் போதிய பிரியமுள்ள ரெண்டு பேர் ஒரு புளிய இலையில் கூடச் சேர்ந்து படுத்துடலாம் - வாஞ்சை இல்லாதவர்களுக்கு வாழை இலையும் கூடப் போதாது."

ஆணித்தரமாய்ச் சொன்னாள் நிம்மி.

சொன்னவளை ஒரு கணம் பார்த்தவன் சொன்னது-ஒரே வார்த்தை.

"வெட்டிப் பேச்சு!"

அதில் நிர்மலாவின் முகம் மட்டுமல்லாது. அந்த உணவு மேஜையில் அமர்ந்திருந்த மற்றக் குடும்பத்தினரின் முகங்களும் கன்றின.

அபூர்வமாய்க் குறுக்கிட்டார் மாமியார்.

"குணா, இது ஜெய்யும் அம்ருதாவுமாய்ச் சேர்ந்து எடுக்க வேண்டிய முடிவு நம் விருப்பு வெறுப்புக்கு இடமில்லை."

மூத்த மகன், சிறிது வியப்புடனும் தாய்க்கும் தன் நல்லெண்ணம் புரியவில்லையே என்ற அலுப்புடனும் முறைத்தான்.



"அம்மா, நான் சொல்றது தம்பியின் வசதிக்காக. மும்பையின் அதே ஃபிளாட்டில் நானும் நிம்மியும் இருந்தோம். சரி - ஆனா நாங்க ரெண்டே பேர் - ஜெய்க்கு ரெண்டு பிள்ளைகள் - கூடவே முழுநேர ஆயா, சமையல்காரர் - தொட்டில், ராக்கர், ஊஞ்சல்னு மற்றப் பொருட்கள் - அத்தனைக்கு வசதி போதாது."

"புரியுது அண்ணா. சில மாதங்களில் வேற வசதியான வீடு அமையும் வரைதானே...?"

"அது வரையுமே ஏன் சிரமப் படணும்? அம்ருதா குழந்தைகளோடு இங்கே இருக்கட்டும்..."

இப்போது அம்ருதா பொரிந்தாள்.

"எனக்கு ஜெய்யை விட்டுட்டுத் தனியே இருக்க முடியாது..."

"தனியே? இங்கே அம்மா, நிம்மி எல்லாரும்..."

"உங்களுக்குப் புரியாது, அத்தான். மனைவியைப் பிரிந்து உங்களால் மாசக்கணக்கில் இருக்க முடியும் - இப்பவும் நிம்மியின் அப்பா இறக்கலைன்னா உங்க பிரிவு மேலும் நீண்டிருக்கும்... ஆக உங்களுக்குப் புரியலை..."

"ஷ்... அம்ரு உஷ்ணத்தில் உளறாதே..."

"மன்னிச்சிடுங்க..."

பேச்சு மேலும் தொடரும் முன் நிர்மலா எழுந்து விட்டாள்.

"ஒரு ஃபோன் பண்ணணும்." என்ற முனகலுடன்.

"ஸாரி நிம்மி... நான்..."

"எனக்குப் புரியுது, அம்ரு... அவருக்குப் புரிஞ்சால் சரி."

குணசீலனின் முகத்தைப் பார்க்கும் துணிவு யாருக்குமில்லை. தாயின் கண்கள் மட்டிலும் பரிவோடு குடும்பத்தை நிமிர்த்தப் பாடுபட்ட தன் மூத்த மகனில் பதிந்தன.

"ஜெய் சின்னவன்தான்... ஆனா அவனும் இப்ப ஒரு குடும்பத்தின் தலைவனாச்சில்லை...? அவங்க வசதிபோல் செய்யட்டும்ப்பா..."

"சரி..."

"டேசிம்மா.. எனக்கு மிக்கி கப் வேணும்."

சூழலைச் சகஜமாக்க என்பதே போல, விக்ரம் அலமாரியின் மேலிருந்ததைச் சுட்டிக் காட்ட, நிர்மலா அவசரமாய் அலமாரியை நெருங்கினாள்.

ஜெயசீலன் தன் குடும்பத்துடன் வியாபார நிமித்தமாய் மும்பையில் தங்க முடிவெடுக்க, அதில் மூத்தவன் குறுக்கிட்டதால் நேர்ந்த சூடான சம்பாஷணை இத்தனையும்.

பெரிய வீட்டில் வசதியாய் அவர்கள் குடியேறட்டும் என்று குணா நிர்ப்பந்திக்க, மற்றவர்கள் அதற்கு எதிர் பேச, நிலைமை ரசாபாசமாய்ப் போனது.

விக்கி கேட்ட குவளையை எடுக்க முயன்றவளுக்கு அது எக்கு எட்டவில்லை.

நுனிக்காலில் எம்பியும், துழாவிய விரல்களுக்குச் சிக்கவில்லை.

ஒரு முக்காலியை எடுத்துப் போட்டு எடுக்கலாமா என்றவள் யோசித்த வேளை, குணாவின் கை இவளது தலை மேலே உயர்ந்தது. இவளை நகரச் சொல்லாமலேயே அவன் அக்கோப்பைக்காக முயல, அலமாரிக்கும் அவன் உடம்பிற்கும் இடையே இறுக்கப் பட்டாள்!

அவன் வலிய தேகம் இவளது மெல்லிய மேனியை அழுத்திடாது, அந்த இறுக்கத்தில் இவளது கண்கள் மயங்கின.

ஆனால் இதென்ன, பொருளை நொடியில் எடுக்காமல் இன்னுமா துழாவுகிறார் என்ற வெட்கக் கடுகடுப்பும் கூட...



இவள் வளைவுகளில் அவன் உடல் உராய, மூச்சு விட இம்சையாய் இன்பமாய்த் திணறினாள்.

ஒரு யுகம் போலவும் கணம் போலவும் தோன்றிய காலத்திற்குப் பின் கையில் குவளையுடன் குணா சாவகாசமாய் விலக, இவளும் சிவந்த முகத்துடன் நகர்ந்தாள்.

தனது அறைக்குள் புகுந்து சற்று நேரமான பிறகும் கூட அத்தீண்டலின் துள்ளல் அடங்காது திமிறியது.

கதவு தட்டப்பட கட்டிலின் விரிப்பைச் சரி செய்பவள் போலக் குனிந்து, 'வரலாம்' என்று குரல் தந்தாள் – அறைக்குள் வந்தது எதிர் பார்த்தது போலக் குணசீலன் அல்ல – அம்ருதா.

"தாங்க்ஸ் நிம்மி – எங்களுக்காய்ப் பரிந்து பேசி வாங்கிக் கட்டிக்கிட்டே. அதே சமயம் வேறு மாதிரியான கட்டளையும் நாங்க பார்க்க நேர்ந்தது!"

ஓரகத்தியின் கண் சிமிட்டலில் கன்னம் சிவந்தாள்.

"ஏதேனும் உளறாதே, அம்ரு..."

"இல்லை – உண்மையாய்ச் சொல்லணும்னால் நாங்க மும்பை போறது உங்களுக்காய்த்தான்..."

"வியாபார சம்பந்தமாய்...?"

"அதை அத்தானை விட நேர்த்தியாய் வேறு யார் கவனிக்கக் கூடும்? மனைவியைக் கவனிக்கிறதில்தான் ஐயா சற்றுக் கோட்டை விட்டுடறார்! உங்களை அத்தையின் மேற்பார்வையில் கோவாவிலேயே வைத்திருக்க, நெருக்கம் அதிகமாகுன்னு தோணுச்சு.. மெர்வின் போலச் சில விருந்தினர்கள் வர, நீங்களும் வெளியே போய் வரன்னு... தவிர அத்தான் மனைவியை முழுக்கக் கோட்டை விட்டதாயும் தெரியலை.. விக்கியின் கப்பை எடுக்கும் சாக்கில் உங்களை நல்லாவே கட்டிப் பிடிச்சார்..."

"ச்சேச்சே..."

"பார்க்கக் கூடாதுன்னுதான் முயற்சி பண்ணினேன்... ஆனா அந்த நெருக்கத்தில் உங்க கண்ணில் தெரிஞ்ச மயக்கமும், அத்தானில் இருந்த மோகமும் ஒரு கவிதை போல இருந்தது... அதான்... ஸாரி."

கவிழ்ந்த நிர்மலாவின் முகத்தை நிமிர்த்தி வாஞ்சையாய்க் கேட்டான்.

"இப்போ உங்களுக்குள் எல்லாம் சரியாயிடுச்சு! நீங்க இருவரும் அருமையான நபர்கள்... அற்புதமான ஜோடியாய் அமைய வேண்டியவங்க... நிம்மி, நீ கொஞ்சம் பொறுமையாய்... அத்தானைப் புரிஞ்சு நடந்துக்கிட்டா..."

"அவரைப் புரியறது சிரமம், அம்ரு... நான் பெரிதாய் ஏதும் எதிர்பார்க்கலை... கேட்கறது ஒரு சராசரி வாழ்க்கையைத்தான்."

"அப்ப நீ ஒரு சராசரி ஆணைத் தேர்ந்தெடுத்திருக்கணும்!" வந்த பதில் இவளது பொட்டில் அறைந்தது.

நிஜம்தான். குணசீலனைச் சராசரி வர்க்கத்தில் சேர்க்கவே முடியாது. அத்தனை பேரிலும் தனித்து நின்ற அவன் ஆளுமை தானே அவளை முதன் முதலாய் ஈர்த்தது?

புலிபோன்ற வேகமும் கம்பீரமும்தானே அவன்பால் இவளைக் கட்டி இழுத்தன? அந்தப் புலியைக் கூண்டில் அடைத்து வேடிக்கை காட்ட முடியுமா?

அது சம்சாரக் கூண்டாகவே இருந்த போதிலும்?

"அம்மாவுக்கு ஃபோன்"- கதவின் வெளியே இருந்து அழைப்பு வந்தது.

"யாருக்கு?"



கார்ட்லெஸ் தொலைபேசி நிர்மலாவிடமாய் நீட்டப்பட்டது.

"நிர்மலா பேசறேன்."

உற்சாகமாய்ப் பதில் வந்தது.

"நிம்மி, பிரசாத் ஹியர் - எப்படியிருக்கே?"

"ம்ம்... நீ... வீட்டில் எல்லாரும்..."

"ஃபைன். நாளை நான் உனக்கு ஃபோன் செய்து எங்கம்மா எப்படியிருக்காங்கன்னு உன்னைக் கேட்கப் போறேன்..."

சிரித்தாள்... - "ஏன் பிரசாத் குழப்பறே?"

"அம்மா நாக்பூருக்கு ஒரு கல்யாணத்திற்காகக் கிளம்பி, அப்படியே உன்னையும் பார்த்துட்டுத் திரும்புவதாய்த் திட்டம் போட்டிருக்காங்க..."

❖ ❖ ❖

"அதுவும் நல்ல சேதிதான் - ஆன்ட்டி ஃப்ளைட்டில்தானே வர்ராங்க?"

விமான எண், அது கோவா வரும் நேரம் எல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டவள், அத்தையிடம் அனிதா ஆன்ட்டி வரப் போவதைச் சொல்ல, உடனடியாகவே மாடியில் ஒரு அறை தயாரானது. என்ன உணவு சமைக்கப்பட வேண்டும், எந்தக் கார் விமான நிலையத்திற்குப் போக வேண்டுமென்பதெல்லாம் கவனமாய்த் திட்டமிடப்பட, தன் விருந்தினருக்கு அத்தை காட்டிய முக்கியத்துவத்தில் நிர்மலா மேலும் உற்சாகமானாள்.

அதில் காலை உணவின் போது நேர்ந்த கட்டமான சம்பாஷணை மறந்தே போனது... ஆனாலும் கணவனின் ஸ்பரிசத்தின் வெப்பம் தணியவில்லை.

'ஸ்பரிசமோ துளி விஷம்
நாளில்லை என் வசம்!'

சுடப் படவின் உணர்வு உருக்கம் புரிந்தது.

அந்தத் தொடுதல் நற்செயலா அல்லது குணாவின் திட்டமிடலா?

மனைவியைத் தொட என்ன திட்டமிடல் வேண்டியிருக்கிறது. அறையின் தனிமையில் முழு இரவும் அருகிருந்தும் தீண்டாதவன் பிறர் முன்பு இழைய வேண்டிய அவசியமென்ன?

ஆனால் அந்தக் கிளர்ச்சியான நெருக்கம் இன்னும் தனக்குக் குணாவின் மீதுள்ள ஈர்ப்பு மிக அதிகம் என்பதைக் கோடிட்டு விளக்கியது.

அவனுக்கும் அதே நிலைமைதானா?

❖ ❖ ❖

மறுநாள் மதியம் பிரசாந்தின் தாயான அனிதாவை விமான நிலையத்தில் கண்டவளின் உற்சாகம் உச்சத்தைத் தொட்டது. அழைத்து வந்து, பரிமாறி, விருந்தாளி சற்று ஓய்வு எடுத்ததும் சிறு பெண் போலத் தன் வீட்டைச் சுற்றிக் காட்டினாள்.

"அடேயப்பா... சுற்றி நடந்ததில் காலே ஓய்ஞ்சிடுச்சு. நிம்மி ராணிபோட்டம் நீ வாழறதில் எனக்கு ரொம்பப் பெருமை..."

மெய்யான வாத்சல்யத்துடன் இளையவளை உச்சி முகர்ந்தாள் அனிதா... "ஆனா..."

"என்ன ஆன்ட்டி...?"

"மாளிகையில் இருக்கிற பெண் தினம் ஒண்ணொண்ணு புதுசா உடுத்தினால்ல அழகு? கடையிலேருந்து உனக்குப் பொருந்தும்னு நினைக்க சில புடவைகளை எடுத்துட்டு வந்திருக்கேன் - வா."



தந்த சேலைகளை ஆர்வமாய் வாங்கியவள் பிரித்து அழகு பார்த்தாள்.

"பிரமாதமான தேர்வு ஆன்ட்டி... நான் அதிகம் கடைக்குப் போய்ச் சேலை எடுத்ததில்லை - அப்பா பரிசளிப்பாங்க... அதற்கு அடுத்து நீங்க..."

"பின்னே? புடவைக் கடை நடத்தறோம் - ஷிபான், கிரேப்பெல்லாம் பார்க்க ஆசைதான் - ஆனா என் வயசுக்கு அது சரிவராது - உடுத்திக் கண்ணாரப் பார்க்க எனக்குப் பொண்ணும் பிறக்கலை... இதோ இந்தப் பிங்க் க்ரேப்பை நீ கட்டினால் தேவதையாட்டமிருப்பே... இப்ப உன் அழகு கூடியிருக்கு நிம்மி..."

"ம்ம்.... குணா கூடச் சொன்னார்.... அதாவது உடம்பு தேறியிருக்கு... -ன்னு!" கூச்சமாய்ச் சிரித்தாள்.

"கல்யாணமானதும் பெண்களுக்கு வர்ற தனி சோபை இது நீங்க சேர்ந்ததில் எங்களுக்கெல்லாம் அத்தனை நிம்மதி, சந்தோஷம்... எல்லாம். ஆனா இதுவரை பிள்ளை நீ எப்படியிருக்கியோன்ற நெருடல். பெரிய இடம்... ஃபோனில் இஷ்டத்திற்கு அழைத்துப் பேசவும் தயக்கம். உன் அத்தை தங்கமானவங்க... இனி தாராளமாய்க் கூப்பிட்டுப் பேசுவேன்... பிரசாந்துக்கும் உன்னைப் பற்றிக் கவலை... இப்ப, உன்னை நேரில் பார்த்ததும் தெரியுதே... எந்தப் பிரச்னையும் இல்லைன்னு..."

மடை திறந்தது போன்ற பாசப் பேச்சில் இவளுள் உணர்வுகளும் மடை உடைத்தன.

உதடுகள் துடித்து விழிகள் தளும்பின.

அதைக் கண்ட அனிதா பதறினார் - "என்னம்மா, நிம்மி... என்னாச்சு?" பதறிய அந்தப் பரிவுத் தோளில் கேவலுடன் சரிந்தாள் சின்னவள்.

## 20

சூடான ஏலக்காய்த் தேநீரைத் தன் விருந்தினருக்கு வழங்கிய டாக்டர் கமால், அவர்கள் அதைப் பருகும் வரை கோவாவின் மக்கள், மழை நிலவரம், உணவு பற்றிப் பொதுப்படையாய்ப் பேச்சை நகர்த்தினார்.

வேலைக்காரன் பிங்கான் கோப்பைகளை அப்புறப்படுத்தியதும், 'இனி வந்த விவரத்தைச் சொல்லலாம்.' என்பதாய் இரு பெண்களையும் பார்த்திருந்தார்.

வந்த இருவரின் முகமும் இயல்பாயில்லை.

எப்படி ஆரம்பிக்க, என்னவெல்லாம் பேச... அதற்கான பதில் என்னவாயிருக்கும் என்ற கலவரம் இருவர் முகங்களிலும் அப்பட்டம்.

மூத்த பெண் பேச்சை ஆரம்பித்தார்.

"குடும்பம் அணைக்கட்டு போல டாக்டர்... அதில ஏற்படும் சிறு துளையையும் நாம் கவனியாமல் விட்டால் அணைக்கே ஆபத்தாயிடும்."

"நிஜந்தாம்மா... நீங்க நிர்மலாவிற்கு எப்படிச் சொந்தம்?"

"சொந்தமில்லை மாமா... எங்க குடும்ப நண்பர்கள் - என் ஃபிரண்ட் பிரசாந்தின் அம்மா... ரொம்ப வருஷமாய்ப் பழக்கம்."

நிர்மலா விளக்கினாள்.

"நல்லதும்மா... தாம்பத்தியம் கத்தரிக்கோல் போலம்பார் என் வாப்பா. புருஷனும் மனைவியும் இணைஞ்சே இருக்கணும்...



ஆனா அவர்களிடையே வரும் எதையும்... அதாவது எவரையும் வெட்டி விட்டுறணும்னு..."

அனிதா முயன்று கோபத்தைத் தவிர்த்தார்.

"நிர்மலாவும் குணாவும் நிறைவாய் வாழ்ந்தால் நான் குறுக்கிட வேண்டிய அவசியமில்லையே, டாக்டர். உங்களுக்கிடையே ஆன பிரச்னையை நீங்களே சமாளிங்கன்னு நாம ஒதுங்கிக்கும் அளவு பிரச்னை சின்னதாயும் தெரியலை.... இது கத்தரிக்கோலால் வெட்ட முடியாத கற்பாறை..."

தெளிவாயும் துணிச்சலாயும் அனிதா பேசுவதைச் சிறு அச்சத்துடனேயே பார்த்திருந்தாள் நிர்மலா.

டாக்டரின் முகத்தில் சிறு சங்கடச் சுழிப்பு.

"ஓங்கிப் பத்தடி அடித்த பிறகுதான் பாறை பிளக்கிறதுன்னாலும் முதல் ஒன்பது அடி வீண்ன்னு சொல்ல முடியுமா? பாவம், நிம்மி முயன்றாலும்... பெரிய பாறையை இந்தச் சின்னப் பெண்ணைத்தனியே நின்று தகர்க்கச் சொல்வது சரியாய்ப் படலை. அதற்கு நம்ப... முக்கியமாய் உங்க உதவி வேணும்."

டாக்டர் தன் சின்னத் தாடியை யோசனையாய் நீவினார்.

"பெரியவங்க நாம சேர்ந்து குட்டையைக் குழப்பிடாமல் இருக்கணும்..." என்றார் ஒரு பெருமூச்சுடன்.

"இப்பதான் எல்லாம் குழப்பமாய் இருக்குது, மாமா... நீங்க தெளிவுபடுத்துவீங்கன்னு... வந்தோம்."

"என்னம்மா தெளிவாகணும்?"

"முதல்முறை இங்க... உங்க வீட்டிற்கு வந்தபோது குணா உங்களோடு பேசிட்டிருந்தார்."

யோசனையாய் நெற்றியைத் தடவியவர் தலையாட்டினார்.

"ம்ம்"

"அப்போது ஒரு பெண்ணைப் பற்றிப் பேசினீங்க... 'அவள் பாவம் - பெண்பாவம் பொல்லாதது'ன்னு ஏதோ...'"

"உண்டு அது யாருனு குணாவிடமே கேட்கலாமே நீ?"

புன்னகைத்தார்.

"பயங்கரமாய்ச் சீறினாரே! பேச்சை மாற்ற எங்கப்பா மேல் பழி போட்டார்"

"அந்தப் பெண்... நீதாம்மா நிம்மி!"

அரை நிமிடம் இரு பெண்களும் சிலையாய் அமர்ந்திருந்து பின் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"என்... என்னைப் பற்றி என்ன?"

"உனக்குக் குழந்தை வேணுங்கற ஆசை இருக்குமேம்மா...?"

தலையை மட்டும் ஆட்டினாள்.

"குணாக்கு அது இல்லை!"

இப்போது தலையை ஆட்டும் திறனுமற்று அமர்ந்திருந்தாள்.

"குணாவின் தகப்பனார் ராபர்ட் சீலன் தற்கொலை செய்து கொண்டது உனக்குத் தெரியும்..."

"யாருமே என்னிடம் அதுபற்றிச் சொல்லலை, மாமா - எங்கப்பா கூட. நீங்க சொல்லித்தான் விவரமே தெரியும்..."

"ம்ம்... உனக்கும் தெரிய வேண்டியதுதான் - வாழ்வில் பங்கெடுக்க வந்தவளிடம் எதற்கு ரகசியம்...?"

அனிதா இடைபுகுந்தாள்.

"தற்கொலைக்கான காரணம் என்ன?"



"முதிர்மன நோயம்மா - மெடிக்கல் டேர்ம்மில் அதை ஃபங்க்ஷனல் சைக்கோஸிஸ் என்போம். இந்த மனச்சிதைவின் அறிகுறிகள் மாயத் தோற்றமும் குரல்களும்தான். வாலிபப் பிராயத்தில் சீலன் என்னிடம் அப்பப்ப சொல்வான்.

"சுமாலு, கடல் ராஜா அந்த உசந்த அலைல நின்னு வர்ரது உனக்குத் தெரியுதா? என்னை வரச்சொல்லி சைகை காட்டறார். அதுவுந் தெரியலியா - என்னைக் கூப்பிடற குரலாவது உனக்குக் கேட்குதாம்பான்... நான் ஏதோ வேடிக்கை காட்டறான்னு நினைச்சுத் தட்டி விட்டுட்டேன் - மருத்துவத்தில் மூணுமாசம் மனநலம் பற்றிப் படிக்கும் போதுதான் சீலனும், சைக்கோஸிஸ் நோயாளிங்கறது புரிஞ்சது. அதை மருந்தால் குணப்படுத்தலாம்ன்றதும்...'

"மருந்து மாத்திரையில் குணமாகுமா, மாமா?"

"நிச்சயமா. மூளையிலுள்ள டோப்பமைன் என்ற ரசாயனப் பொருளில் நேரும் மாற்றங்களின் விளைவு இது - பரம்பரையும் ஒரு முக்கிய காரணம். நம்ப குடும்பத்து முன்னோர்களுக்கு இந்தக் குறைபாடு இருந்தால் நம்மிலும் இந்த ரசாயன மாற்றம் எளிதில் நேரும்..."

"ஓ...?"

"அதிகமாய்க் கஷ்டப்படுபவர்களுக்கும் ரீ... அலட்டுபவர்களுக்கும் இந்நோய் தாக்க அதிக வாய்ப்பு. சீலன் கூச்ச சுபாவி. கஷ்ட ஜீவனம். மூன்று பிள்ளைகளையும் நல்லபடி வளர்க்கணுமேங்கற பயம் எல்லாமுமாய்ச் சேர, அவன் நிலைமை மோசமானது."

"நீங்க மாமாக்கு மருந்து ஏதும் தரலையா?"

"தராமலா? தந்ததை அவன் முறையாய் முழுங்கலையேம்மா. தன் மனைவியிடம் கூடத் தன் நோய் பற்றி, அதற்கான மருந்தைப் பத்திப் பேசலை... இந்தப் போராட்டத்தின் நடுவே சீலனின்

அண்ணன் இறந்துட்டன் - ஆக, சீலனுக்கு வாழ்வின் நிலையாமை மீது ஒரு விதமான ஆங்காரம்... மரணம் நாம் எதிர்பாராத வேளையில் வந்து நம்மைப் பிடுங்கிப் போவதென்ன, நாமே அதைப் போய்ச் சந்தித்தால் என்ன என்பதான ஒரு வீம்பு."

"கடல்ராசா வந்தென்னைக் கன்னியமாய் அழைக்கப்பார் - பாரு'ன்னு பிதற்றியவன்... அவனே கடலில் மூழ்கி முடிஞ்சுட்டான்..."

"கடவுளே... இது பரம்பரைக் குறைபாடுன்னால்... குணசீலனுக்கும்..." அஞ்சிய தொனியில் அனிதா ஆரம்பிக்க, டாக்டர் தொடர்ந்தார்.

"அதுதான் இப்ப குணாவின் பயம்... கலக்கம்னு வைங்க - ஆனால் உழைத்து இத்தனை சாதிச்சவனுக்கு இந்தக் குழறுபடி நேர வாய்ப்பில்லைன்னு..."

"ரசாயன மாற்றம்னு சொன்னீங்களே..."

"அதற்கான மருந்துகளும் இப்ப முன்னேறியிருக்கே. நவீன வைத்தியம் கோளாறை முளையிலேயே கிள்ளிடும் - ஆக அவன் தனக்காக மட்டுமல்ல, தன் சந்ததிக்காகவும் பயப்படத் தேவையில்லை. இருதய நோய், கொலஸ்ட்ரால், புற்று இதெல்லாம் உங்க பரம்பரையில் இருந்தால் சற்றுக் கவனமாய் இருங்கன்னு ஆலோசனை சொல்வோமே தவிர, பிள்ளையே பெற்றுக் கொள்ள வேண்டாம்னா தடைபோடறது?"

நிர்மலாவிற்குள் புதிய புரிதல்.

தன் தம்பியின் குழந்தைகளைக் கூட ஆசையோடு அள்ளிக் கொஞ்சாமல் குணா யோசனையோடு பார்க்கும் காரணம் புரிந்தது.

தங்கை கர்ப்பிணியானதில் பதட்டப்பட்டதின் அர்த்தம் விளங்கி மனம் சற்று லேசானது போன்ற ஆசுவாசம்...



ஆனால் குணா தெளிந்து இயல்பான வாழ்விற்கு மீளுவானா? மழலை வேண்டாமென முடிவெடுத்தவன் மனைவியைத் தொட்டிருக்கக் கூடாது... அத்தனை மோகமும் வேகமுமாய்த் தன்னை ஆக்கிரமித்தது ஏன்... எப்படி?

நினைப்பை அவள் முகம் காட்டியது போலும்.

"தம்பி, தங்கை காதலித்தது குணாவிற்கு அதிர்ச்சி - ஆனால் அவர்கள் கல்யாண வாழ்வு சந்தோஷமாய் அமைந்தது அவனுள்ளே ஒரு ஜன்னலைத் திறந்து விட்டது. பிறகுதான் ஆசைப்பட்ட உன்னை மணக்கத் துணிந்தான். நிச்சயமான பிறகு என்னை நூறு கேள்விகளால் பயல் புரட்டித்தான் எடுத்தான்.

"சரி, உனக்காய்த் திருப்தி வரும்வரை குழந்தை வேண்டாம்னு சில கருத்தடை முறைகளையும் அவனுக்கு விளக்கினேன்..."

சொன்னவர் மருத்துவர் என்பதால் இயல்பாய்ச் சொல்ல, கேட்ட இரு பெண்களும் கூசி நெளிந்தனர்.

அதை உணர்ந்தவர் பேச்சை நிறுத்தி வைத்தார்.

தங்கள் தாம்பத்தியத்தில் எந்தக் கருத் தடை முறையும் கையாளப்படவில்லையே... இருந்தும் அந்தச் சில மாதங்களில் தான் கருத்தரியாதது ஏன்?

தன்னிடம் ஏதோ குறையோ?

அதே சமயம் சிந்தனை, குரங்கு போல, அன்று அலுவலகத்தில் குணாவுடன் கண்ட கர்ப்பிணியிடமாய்ப் பாய்ந்தது.

"மாமா, அப்படின்னா அந்தப் பொண்ணு?"

"மயூரா அவனது பிஸினெஸ் தோழியம்மா - அவங்க கல்யாணம் செய்துக்கப் பிரியப்பட்டிருந்தா யார் தடுப்பா? 'ஜாம் ஜாம்'னு நடந்திருக்குமே!"

"இல்லை. நான் கேட்டது மயூராவை இல்லை.'' அசைமனதாய் மறுத்தவனின் மனதுள் முந்திய இரவின் முத்தக் காட்சி ஓடியது.

"இது... அது ஒரு கர்ப்பிணிப் பெண்... அவரோடு காரில்... ஆபிஸில்...'' அனிதாவின் வெளிறிய முகத்தைக் கண்டவளுக்கு மேலும் விவரிக்கத் தெரியவில்லை.

இப்போது டாக்டரின் முகம் சுருங்கியது.

"தெரியலையேம்மா - நேரே உன் வீட்டுக்காரனிடம் கேள். மனம் விட்டுப் பேசுங்க... குணா உன்னைக் குழந்தைன்னு நினைக்கிறான் - நீயும் நாலு விஷயங்களைப் பத்தி நிதானமாய்ப் பேசினால்... அவனும் மனம் திறந்து பேசக்கூடும்... பேச வைக்கணும் நீ.''

"அவர்... எதையும் பேசறதேயில்லை... அதுதான் பிரச்னை - ஆக எனக்கவரைப் புரியவுமில்லை...''

"எடுத்ததும் புரிஞ்சால் வாழ்வில் சுவாரஸ்யம் ஏதம்மா? குணா நல்லவன் - பொறுப்பானவன் - அது மட்டும் தெரியும் - மத்த தெரியாத பக்கங்களை நீ புரட்டிப் படிக்கத்தான் உன் வாழ்நாள் முழுதும்.''

அவர் சொன்ன விதத்தில் இவளுக்குத் தெம்பேறியது. கணவனின் கோணல் நடத்தைக்கான ஒரு காரணம். கோணம் புரிந்தது போல மற்றதும் புரியும்... என்ற நம்பிக்கைத் துளிர்.

"வேட்டாயிடுச்சு நிம்மி - உன் அத்தை நம்மைக் காணலைன்னு கவலைப் பட்டிடக் கூடாது.''

அனிதா சொல்ல, இருவரும் எழுந்தனர் -

"நன்றி மாமா... வரோம்.''



"ஃபீஸ் தந்திட்டுப் போம்மா.''

சிரித்தவரை ஏறிட்டாள்.

"என்ன... எவ்... எவ்வளவு?''

"இப்போதைக்கு எனக்கு ஒன்னு போதும்.'' என்றார் அவர் - சுட்டு விரலால் தன் கன்னத்தைத் தட்டியபடி - "மற்றதை உன் வீட்டுக்காரனுக்குத் தந்து அவனைச் சமாளிக்கப் பாரு.''

பெரியவரின் குறும்பை ஏற்றவள் எம்பி அவர் கன்னத்தில் லேசாய் முத்தமிட்டாள்.

"கவலைப்படாதீங்கம்மா - உங்களிடம் ஃபீஸ் கேட்க மாட்டேன்.''

அனிதாவிடம் அவர் சொல்ல, அப்பெண்மணி அவசரமாய் வெளியே ஓடியதில் அவரது சிரிப்பு ஓங்கியது.

ஆனால் காரில் பயணப்பட்ட அனிதாவின் முகம் ஆழ்ந்த யோசனையில் இருந்தது -

"என்ன ஆன்ட்டி? அதிர்ச்சியான தகவல்கள்தான் - இல்லை?''

"அதில்லைடா... இப்ப பாதிக் கிணறைத்தான் தாண்டியிருக்கோம் - இதுல கரை சேர முடியாதே - மறு பாதியை எப்படித் தாண்டலாங்கற யோசனை.''

வீடு சேரும் வரை அவர்களிடையே பேச்சில்லை.

## 21

அனிதாவை விமான நிலையத்தில் விட்டு, கையாட்டிப் பிரிந்தவருக்கு முகத்திலும் நடையிலும் சுரத்தில்லை.

பிரசாந்தின் தாய் தன்னைத் தேடி வந்ததும், உடன் தங்கிய இரு நாட்களும் நிர்மலாவிற்கு மிகத் தெம்பூட்டியிருந்தது - மனம் விட்டுப் பேசவும், ஆலோசனை தரவும் யாருண்டு என்று ஏங்கியவளாயிற்றே.

மயூரா பற்றியும், ஒரே முறை கணவனோடு பார்த்த கர்ப்பிணிப் பெண்ணைப் பற்றியும் கோடி காட்ட,

"தம்பதிகளிடையே சந்தேகம் ஆரோக்கியமானதில்லையே, நிம்மி" என்றே தீர்மானமாய்ப் பதில் வந்தது.

மயூரா தன்னவனை முத்தமிட்டதை எல்லாம் சொல்லக் கூசினாலும், நிர்மலாவின் ஆற்றாமைக்கு அனிதாவின் பதில் சுருக்கமாகவே இருந்தது.

"அப்படி நெருங்கிப் பழகினவங்க கல்யாணம் செய்துக்க நினைத்திருந்தால் தடையென்ன, நிம்மி? பெற்றோரின் அனுமதிக்காகக் காத்திருக்கும் விடலைகள் இல்லை அவங்க. ஆனா உன் பயம் அநாவசியம். தவிர கள்ள உறவுகளில் ஒளிவு மறைவிருக்கும். இவங்க வெளிப்படையாய்ப் பழகுறாங்க..."

ஏறக்குறைய டாக்டர் கூறல் சொன்னதை ஒட்டியே அனிதாவும் பேசினாலும், நிர்மலாவிற்குச் சமாதானமாகவில்லை.



மனதுள் குமைய வெகு பவ்யமாய், பிரியமாய் அந்தக் கர்ப்பிணிப் பெண்ணைத் தன் காரில், முன்னிருக்கையில் ஏற்றிப் போன காட்சி அழுந்தி நின்றதே காரணம்.

தன் குடும்பப் பெண்களின் மசக்கையையும் கூட அநாவசியக் கற்பனை, அலட்டல் என்று எள்ளுபவன், யாரோ ஒருத்திக்கு சிசுருஷை செய்ததேன்?

'சிறு பொறிதான் பெருந்தீயாய்ச் சிறந்தோங்கும்' - என்று பாரதி சொன்னதற்கொப்ப சந்தேகப் பொறி கிளர்ந்து புத்தி முழுவதையும் பொசுக்கிக் கொண்டிருந்தது.

தன் தந்தையின் மனநோய், தற்கொலையைப் பற்றி மறைத்தது, அசுரத்தனமான உழைப்பு, தாமரையில் நீர் போல ஒட்டாத தன்மை, முக்கியமாய் குழந்தைகள் மீதான பிடிப்பின்மை- இவையெல்லாம் டாக்டரிடம் பேசி ஓரளவு விளக்கம் பெற்றது போல, இப்போது தன்னுள் கிளறும் சந்தேகத் தீயை யாரேனும் பேசியே போக்கி விட மாட்டார்களா என்ற ஏக்கம்.

அன்பான தம்பதிகளிடையே ஊடல்களுக்கு, செல்லக் குற்றச்சாட்டுகளுக்கு அனுமதி உண்டு!

'நீங்க அவளைக் கண்டால் ரொம்பத்தான் வழியறீங்க.'

'சதா அவ பேச்சுதானா - எனக்குப் பிடிக்கலை!' என்று முறுக்கிக் கொள்ளலாம்.

அது போன்ற ஊடல்கள் வழுவழுத்த கூழாங்கற்கள் - அவை கிணற்றில் விழ, எழும்பும் சிலுசிலுப்பில் ஆனந்தம் கிடைக்கலாம். ஆனால் பெருங்கற்கள் தொடர்ந்து விழ, கிணறு தூர்ந்தே போகுமே!

அனிதா எடுத்துச் சொன்னதின் உண்மை புரிந்தாலும் உள்ளம் ஆறி விடவில்லை.

வீடு வந்ததுமே நிர்மலா தன் மாமியாரைத்தான் தேடினாள்- காணாமல் சமையலறைக்குப் போனவள், தனக்கு ஒரு காபியை வாங்கியபடி "அத்தை எங்கே?" என்று வினவ.

"பின்புற நீல அறையிலே இருக்காங்கம்மா - அம்மாவைப் பார்க்க கேசவன் வந்திருக்கு - இப்பத்தான் காபி கொடுத்துட்டு வரேன்" - பதில் வந்தது.

யாரது கேசவன். என்ற யோசனையுடன் அந்த அறை நோக்கி நடந்தாள்- பின்புறமாகவே வீட்டுள்ளே நுழையக் கூடிய பகுதி அது - அப்படி நுழைந்த ரகசிய விருந்தாளி யார்..?

"அப்ப நான் வரேன்மா.."

"வந்ததும் கிளம்பறியேப்பா - குணா வந்துரட்டும்..."

"இருக்கட்டும்மா. குழந்தை பிறந்த சேதியை உங்களிடம் சொல்லணும்னு வந்தேன் - தங்கச்சி இனிப்பு வாங்கிட்டுப் போகச் சொல்லுச்சு.. ஆனா.. வாங்கிக்கலை நான்.. இந்தச் சேதி நல்லதா கெட்டதாங்கற குழப்பத்தில் இருக்கேன்.."

"பிறந்த சிசு மேல அபவாதம் சுமத்தக் கூடாதப்பா. அது கடவுளின் கவு- அருமை. பெருமையாய் வளர்க்கணும்."

"ஆகட்டும்மா.. உங்க ஆசீர்வாதம் நீங்க இல்லைன்னா கவிதா உடைஞ்சு போயிருப்பா.. வரேன்"

"நல்லதுப்பா.. நாளையே குழந்தையை வந்து பார்க்கறேன் - கவிதாட்ட சொல்லு."

யாரது கவிதா? இந்த இளைஞனையும் இதுவரை பார்த்ததில்லை என்றாலும் ஏதோ பரிச்சயமான சாயலில் இருக்கிறான் -

புத்தியைத் தேய்த்துக் கொள்ள.. வெளிச்சம் வந்தது.



அன்று குணாவுடன் காரிலேறிய கர்ப்பிணியின் ஜாடை! மெல்லிய உயர்ந்த தேகம். அதற்கேற்ற நீண்ட முகம், சாந்த விழிகள் என்று.. ஆக அந்தப் பெண்தானா கவிதா?

அவள் பிள்ளையைப் பெற்று விட்டாள்.. அந்தச் சேதியை அவளது சகோதரன் இப்படித் துக்கமாய் வந்து தெரிவிப்பானேன்?

நிர்மலாவின் அடிவயிறு கலங்கியது.

அப்படியானால் அன்று விழுந்த சிறு பொறி, பெரும் நெருப்பிற்கான ஆரம்பம்தானா?

அவளுக்குப் பிறந்திருப்பது குணாவின் குழந்தை!

அதை வெளியே மகிழ்வாய்ச் சொல்ல முடியாத அவலம்!

அத்தைக்கு மட்டுமல்ல, வேலைக்காரர்களுக்கும் கூடக் கேசவனைத் தெரிந்திருக்கிறது!

அவமானப் புழுக்கள் இவளைக் குடைந்து தின்றன.

தொழிலுக்குக் கை கொடுக்க மயூரா..

குழந்தையும் பெற்றுத் தருமளவில் ஒரு கவிதா..

அந்தஸ்து, கௌரவத்திற்காய் மட்டும்தானா?

அத்தையும் இதெல்லாம் தெரிந்தும் -

'குணா நல்லவன்ம்மா!' என்று பரிந்துரைப்பது ஏன்? இனியு இந்த நாடகத்தைத் தொடர விடக் கூடாது. கண்டிப்பாய் இவர்களி பொய்ம்முகமூடிகளைக் கழற்றித் தோலுரிக்க வேண்டும்.

'வாழறதுக்கு உடல், வழிகாட்டப் புத்தி' என்று ஆண்டவ மனிதனைப் படைத்திருப்பதாய் அப்பா அடிக்கடி சொல்வார் -

இனியும் உணர்வுகளின் கீழே நசுங்கிக் கிடப்பதில் அர்த்தமில்லை. புத்தியைப் பயன்படுத்தி இந்தப் போலிகளைக் கூண்டிலேற்ற வேணும். அதற்குச் சாட்சி வேண்டுமே..?

இந்தப் பெண்களுக்கு அதில் வேறு சில கழுதைகளும் இருக்கக் கூடும். குணாவுடனான தொடர்பிற்கான சான்றுகள்..

புகைப்படம், கடிதம் என்று.. குணசீலன் யாருக்கும் காதல் ரசம் வடியும் கடிதங்களை எழுதக் கூடியவனல்ல.. கசப்பாய் நினைத்தாள்! ஆனால் ஏதேனும் தடயங்கள் சிக்கலாம் -

அதனுடன் சென்னை திரும்பி விட வேணும்.

அம்ருதா கூட ஒரு வார்த்தை விடவில்லையே. பொருமலுடன் தங்களின் அறையை அடைந்தாள். ஒரு சிறு அறையிலேயே குணாவின் படுக்கை, தங்கல் எல்லாம். விசாலமான படுக்கையறையில் உள்ள அவனது சுவரை வியாபித்த மர அலமாரிகள் பூட்டியே கிடக்கும் - காலை எட்டுமணிக்குள் இவள் குளித்துத் தயாராகிக் கீழிறங்கி விட, பிறகு அது அவன் சாம்ராஜ்யம் - அங்கிருக்கும் கோப்புகளையோ, அலமாரிகளையோ இவள் குடைந்து ஆராய்ந்ததில்லை.

முன்னறை மேசையிலிருந்த கோப்புகளிலிருந்து ஆரம்பித்தாள். எல்லாம் கணக்கு வழக்குகள் - இவளது தலை சுழன்றது. இதை எல்லாம் சிரத்தையுடன் வியாபாரத்தை நிர்வகிப்பது போதாது போல ஏன் தன்னுடைய நாதன் கம்பெனியையும் பிடுங்கி, அதில் பாகஸ்தனாகி அதன் பாரத்தையும் சுமக்கிறான்?

கஞ்சன் காசு சேர்த்து அதைத் தடவித் தடவி மகிழ்வது போலத்தான். இத்தனை நிர்வாகங்கள் தன் கீழ் செயல்படுகின்றன என்றும் ஜம்பம்! கப்பல் வடிவிலிருந்த அத்தனை சாவிகளையும் உருவியவள், பெரிய அலமாரிகளைத் திறக்க முயன்றாள்.



முதலாவதை எளிதில் திறந்து விட்டாள் -

முழுக்கக் துணிமணிகள்தான் - மடிப்புக் கலையாத அடுக்கில் பிறரை எதிர்பாராமல் அதையும் அவனே செய்து விடுவான் -

ஊருக்குப் போகும் போது பெட்டி அடுக்குவதிலும் அவன் யாரையும் சார்ந்திருப்பதில்லை. சில உடைகளின் கீழே கை விட்டுத் துழாவியபின் ஏமாற்றாய்ப் பூட்டினாள்.

மறு அலமாரியைத் திறக்கப் பல சாவிகளை மாறி மாறிச் செருகி முயல வேண்டியிருந்தது-

அது பத்தாம் நிமிடம் திறந்த போது.. உடம்பு முழுக்க மரத்தாற் போலாகித் திகைத்து நின்று போனாள்..

❖ ❖ ❖

"அவளுக்கு எல்லாம் தெரிஞ்சாச்சு, குணா - மனைவியிடம் எதையும் நீ மறைச்சிருக்கவும் கூடாது."

மார்பின் குறுக்காய்க் கைகளை கட்டியிருந்தவனின் முகத்திலும் உணர்வுகள் கட்டவிழ்க்கவில்லை.

"அப்பாவைப் பற்றியா?"

"சீலனுக்கு மனநோய் இருந்தது - அவன் அதற்குத் தேவையில்லாத ஒரு முடிவைத் தேடிகிட்டான் - இதில் அவமானப் பட என்ன இருக்குதுப்பா.."

"எனக்கு... எங்களுக்கு இப்ப குழந்தைகள் வேண்டாம்னு நினைச்சேன்.. அவ்வளவுதான்."

"உன் குழந்தைக்கும் அதே மனப்பாதிப்பு வரும்னு அஞ்சறே - குழந்தைகள் தாத்தா பாட்டியைக் கொண்டு பிறக்குன்றது

வளர்த்ததும் - உங்கம்மாவின் சர்க்கரை நோயும் வாதமும் கூடத் தாக்கலாம்னு பயந்தால்.. யாருமே பிள்ளை பெத்துக்க முடியாதே."

"பதினைந்து சதவீத வாய்ப்புண்டுன்னு சொன்னீங்க."

"நோயின் அறிகுறி தெரிஞ்சதுமே அதை முறிக்க இப்போ மருந்துண்டு. ஆனா உனக்கான சிகிச்சையை அவங்களே ஆரம்பிச்சுட்டாங்க."

குணாவின் புருவங்கள் உயர்ந்தன. "உன் அனாவசியப் பயமே ஒரு மனவியாதின்னு கண்டுபிடிச்சவங்க. அதற்கு மாற்றையும்.."

உறுமலாய் இடைமறித்தான்.

"யார்? யாரைப் பத்திப் பேசறீங்க?"

"பிரசாந்தின் அம்மாவைச் சொல்றேன்."

"அவங்களும் ஒரு டாக்டர்னு எனக்குத் தெரியாதே.."

"அதானே... பார்த்தேன் - உன் நக்கலை இன்னும் காணலியேன்னு! லட்டு மாதிரியான சம்சாரத்தை ஒதுக்கிட்டு சந்நியாசிபட்டம் நீ வாழறது தெரிஞ்சதுமே, அவங்க அந்த முடிவை எடுத்துட்டாங்க."

"பெண்களோட பேசிப் பேசி நீங்களும் சுத்தி வளைக்கிறீங்க."

"அவங்க சுத்திவெல்லாம் வரலைப்பா குணா - நேரே 'நச்' சுன்னு விஷயத்துக்கு வந்துட்டாங்க - எனக்குத்தான் 'திக்'குன்னுது - ஆனாலும் ஒரு பெண் பிள்ளையின் வாழ்வு வீணாய்ப் போகக் கூடாதுன்னு நினைக்கறப்ப, முடியாதுன்னு அடம் பண்ண, அவங்க வேற வழி தேடிக்க வேண்டியதுதானே.. அதுல தப்பென்ன?"

"அதென்ன வேற வழி?"

டாக்டர் விளக்கமாய்ச் சொல்லச் சொல்ல, குணசீலனின் முகம் காணச் சகிக்காததாய் மாறிக் கொண்டே போனது.



புடவையின் சரசரப்புக் கேட்ட குணாவின் தாய் பின்னிக் கொண்டிருந்த கம்பளிக் குல்லாவை வைத்து விட்டு நிமிர்ந்தார் -

"வாடா, நிம்மி.. அடடே.. புதுப் புடவையா?"

"எப்படித்தை கண்டு பிடிச்சீங்க?"

"அனிதா உனக்கு வாங்கி வந்ததை முதல்ல எங்கிட்டதாம்மா காட்டினாங்க... தவிர புதுசு கட்டும் போது பெண்களுக்குத் தனிக்களை சேருதே.."

"பொருத்தமான ரவிக்கை இல்லைன்னாலும், கட்டணும்னு ஆசையாய் இருந்தது."

தன்னருகே ஆவலுடன் அமர்ந்த மருமகளின் தலையைப் பரிவுடன் வருடிய மாமி, இளையவளின் நெற்றியில் சிலுவை வரைந்தார்-

மளுக்கென இவளுக்கு விழிகளில் நீர் கட்டி விட்டது.

"என்னடா?"

"அப்பா கூட இப்படித்தான்.. விசேஷ நாட்களின் போது ஆசீர்வதிப்பார்.. இதே போல என்னடான்னு பாசமாய்க் கூப்பிடுவாங்க."

"இனி நாங்க இருக்கோம்டா.. அப்பாவை நினைச்சுக் கலங்கக் கூடாது.."

"ம்ம்.. இவர் எப்ப வருவார்..?"

"என்னிடமும் சொல்லிட்டா போறான்?" மிருதுவாய்ப் புன்னகைத்தார்-

"இல்ல.. மெர்வினோடு வெளியே போகணும்னு சொன்னார்.. ஆனா நான் ரெண்டு நாளாப் அனிதா ஆன்ட்டியோடு இருந்ததால் என்னை வற்புறுத்தி அழைக்கலை.. இன்று வேணும்னா வெளியே போகலாம்னு.."

கேட்ட காலடி ஓசையில் இரு பெண்களுமே ஆவலுடன் திரும்பினர் -

"அடடே.. உனக்கு நூறு ஆயுசப்பா, குணா... வா - நிம்மி உன்னோட வெளியே போகணும்னு புதுப் புடவை கட்டிட்டுத் தயாராய் இருக்கறா."

தனக்காக அலங்கரித்துக் காத்திருக்கும் மனைவியைக் கண்ட மகிழ்வில்லை அவன் விழிகளில்.. மாறாக ரௌத்திரச் சிவப்பு!

"என்ன குணா?"

"என்ன விசேஷம்னு இப்ப புதுசு கட்டியிருக்கா?"

பேச்சு மொட்டைக் கத்தியாய் வெட்டியது.

"பிரசாத்தின் அம்மா ஆசையாய்த் தந்த புடவை.. அதான்.."

ஆவேசமாய் நெருங்கியவன் கசங்கிய தோளைத் தட்டி விடுவதைப் போல அவள் தோளில் வழிந்த மெல்லிய ரோஜா நிறத் துணியைத் தட்ட.. அது நழுவியது. நெகிழ்ந்த ஆடையை அவசரமும் அச்சமுமாய் அழுந்தப் பற்றிக் கொண்டாள்.

"குணா, என்னிது?" என்ற தாயின் சன்ன அதட்டலைக் கவனியாமல் கத்தினான் -

"வெட்கமாயில்லை.. உடனே இதை அவிழ்த்தெறி... தன் மகனைக் கட்டிக்க அச்சாரமாய் இதைத் தந்தாள் அத்தனை அவசரமாய் இத்தனை தூரம் ஓடி வந்தாங்களா அந்தம்மா? நீயும் துணிச்சலாய் அதைக் கட்டிட்டு என் முன்னே.. ச்சே.."

புடவையை உருவ முயன்ற அவன் கைகளில் யாரும் தடுக்கக் கூடாத வெறி!

நடுங்கிய உடம்புடன் சுருண்டு குறுகினாள். ஆனால் அவன் வெறி அவளைப் பிய்த்தெறிந்தது - கன்னத்தில் ஓங்கி அறை விழுந்த பிறகே அவன் வேகம் குறைந்தது. ஓய்ந்த கைகள் அடிபட்ட தன் கன்னத்தைப் பற்றித் திகைத்தன -



அடித்த தாய், இதுவரை அவளிடம் அடிபடாத அந்த மகன், அதிர்ந்த மனைவி, மூவருமே அடுத்துச் செய்வதோ, சொல்வதோ அறியாமல் திகைத்திருக்க.. அச்சூழலைத் தாளக் கூடாமல் முதிய தேகம் தளர்ந்து சரிந்தது-

---

## 22

"அம்மா உன்னைப் பார்க்கணுங்கறாங்க, குணா.." டாக்டர் கமாலின் இறுகிய குரல் மகனை அச்சுறுத்தியது.

"அம்மா.. எப்.. எப்படியி.."

"உன்னைப் பார்க்கணுமாம்."

மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அவன் நுழைகையில், வெளியே தவித்திருந்தாள் நிர்மலா -

ஒரு நாளின் ஒரே மணி நேரத்திற்குள்ளாய் எத்தனை திருப்பங்கள், மாற்றம்!

எத்தனை பூரிப்புடன் புதுசை எடுத்து உடுத்தினாள்..

இனித் தன் வாழ்வில் எந்தக் குறையுமில்லை.. தடுமாற்றம் சந்தேகங்களில்லை என்று நிச்சயிக்க, 'பழைய குருடி கதவைத் திறடி' என்பதாய், ஏன் மறுபடி இந்தக் குழப்பம், ஆத்திரம், கணவனின் மூடி மறைக்கும் நடவடிக்கை?

சற்றுத் தொய்ந்த நடையுடன் திரும்பிய குணசீலனைப் பார்க்கப் பரிதாபமாய் இருந்தது-

ஓடிப் போய்ச் சேர்த்தணைத்து -

'நானிருக்கிறேன் உங்களுக்கு - இனி எப்போதும்!' என்று ஆறுதல் கூறத் துடித்த தன்னை அடக்கினாள். தவிர அவன் கோபத்தைக் கிளறிய புடவையை மாற்ற நேரமில்லாததால் இன்னும்அதிலேயே இருந்த தயக்கம்.. மருத்துவமனையில் ஏதும் ரசக்குறைவாய் நடந்து விட்டால்.. ஒடுங்கி நின்றாள்.

டாக்டர் கமால் ஜாடை காட்டி நடக்க, பின் தொடர்ந்தான்-
"அம்மாக்கு பெரிய ஆபத்துன்னு இல்லை - அதிர்ச்சி. ஆனால் வயசான உடம்பின் உயிரை எடுக்க அதுவே கூடப் போதும்.."

"ஐயோ மாமா.. அப்படிச் சொல்லாதீங்க.. அப்பாவைப் பறி கொடுத்த மறுமாசமே இப்படின்னா.. என்னால தாங்கவே முடியாது.." உடைந்து அரற்றினான்.

நெற்றியில் சிலுவை வரைந்து ஆசீர்வதித்த இந்த அன்பு உறவும் தன்னை நிரந்தரமாகப் பிரிந்து விடுமா?

தோளை ஆதரவாய்த் தட்டினார் டாக்டர்.

"கடவுளை வேண்டிக்கோ, நிம்மி - இன்னும் சில மணி நேரத்துக்கு அம்மா தூங்கணும் - மனசு அமைதிப்படட்டும் - அதற்கான மருந்து கொடுத்திருக்காங்க - நீங்க ரெண்டு பேரும் வீடு போய்.. மனசு விட்டுப் பேசுங்க."

"அத்தையை.."

"நான் இங்கேயே இருப்பேன்.. தவிர முழு நேர நர்ஸ்கள் கூடவே இருக்காங்கல்ல? இப்ப உங்களுக்கான சிகிச்சைதான் தேவை மூலமந்திரம், கண்ட கற்பனைன்னு ரெண்டு பேர் மனசுமே கறைபட்டாச்சு. பேசி அத்தனையையும் கழுவிக்கோங்க.. புது வாழ்வு ஆரம்பிக்குமளவு சுத்தமாய்.. அன்பாய்.."

"பேச.. என்ன பேசணும் மாமா..?" தயங்கினாள் - சற்று முன் கண்ட கணவனின் ஆங்காரம் மருட்டியது.



"கர்ப்பிணியான அந்தப் பொண்ணு யாருனு என்னிடம் - சிலம்பு தூக்கிய கண்ணகியாட்டம் - ஆவேசமாய்க் கேட்டியேம்மா, அதிலேருந்து ஆரம்பி! கிளம்புங்க."

அதற்கு மேல் மருத்துவமனையின் வாசலில் நின்று வாதம் செய்வது முறையல்ல என்று பட, காரினுள் ஏறினாள் -

கணவனின் சோர்ந்த முகமும் தளர்ந்த தோளும் இவளை நெகிழ்த்த.

"நீங்க ஓய்வெடுங்க.. நான் எதையும் கேட்கலை.." என்றாள் இதமாய். காரைச் செலுத்தியவன் மனைவியைத் திரும்பிப் பார்த்தான் - அவனது கண்கள் முற்றிலுமாய் மாறியிருந்தன.. சற்று முன் அதில் கொப்பளித்த ரௌத்திரம் எங்கே வடிந்தது என்று வியக்குமளவிலான மாற்றம்.!

"கேளு நிம்மா.. பேச வேண்டிய அத்தனையும் பேசிடலாம்." யாரந்தக் கர்ப்பிணி?"

"அது.. வந்து.. கேசவன்னு ஒருத்தர் அத்தையைப் பார்க்க வந்தார்.. தன் சகோதரிக்குக் குழந்தை பிறந்ததாய்ச் சொல்ல.."

"ம்ம்.."

"அந்தப் பெண்ணைத்தான் உங்களோடு அன்று ஃபாக்டரி வாசலில் பார்த்தேன்.."

புரிந்தது என்பதான சிறு தலை அசைப்புடன் பேசினான் -

"ம்ம்.. கவிதா இப்ப நம்ப ஸ்டாஃப் - அவள் அண்ணன் மட்டுமில்லாமல் அரவிந்தனும் கூட நம்மிடம் பணி புரிந்தவர்கள்."

"அரவிந்தன்..?"

"கவிதாவின் கணவன்.. அவன் இறந்து ஆறு மாசமாச்சு."

மனம் குட்டியது! 'ஒரு இளம் விதவையையா சந்தேகித்தாய்?' என்று!

"கடவுளே!" - அரற்றினாள் -

"கொடுமைதான் நிம்மி - நம் நிறுவனத்தில் 'பேக்கிங்' பொறுப்பாளன் அவன் - ஏற்றுமதிக்கான பொருட்கள் மிகச் சுத்தமாய்ப் பொதிந்து அனுப்பப்படலைன்னா ரிஜெக்ட் ஆயிடும். பிறகு லட்சக் கணக்கில் நஷ்டம்தான் - அந்தப் பொறுப்பான வேலையைப் பொறுப்புடன் செய்தான் அரவிந்தன் - ஃபாக்டரி கழிவுகளுக்கான ஒரு புதுக் குப்பைக் குழி வெட்டப்பட்டதை மேற்பார்வை செய்தவன் கையில் சிறு சிராய்ப்பு ஏற்பட்டு... அதுவே டெட்டனஸாய் முடிந்து..."

"ஐயோ... ரொம்பக் கொடுமையான மரணமாச்சே அது...!"

"ம்ம்... துடிச்சு அவன் இறந்தபோது கவிதா கர்ப்பிணி - கணவனின் ஒவ்வொரு அங்கமாய் அடங்கி வாய் கூடத் திறக்க முடியாதபடி உடம்பு இறுகி இறந்ததைப் பார்த்திருக்க வேண்டிய அவலம்."

அதிர்ச்சியில் உறைந்த நிர்மலாவின் முதுகை நீவி ஆசுவாசப்படுத்தினான்.

"திருமணமாகி ஐந்து வருடங்களுக்குப் பிறகே ஆசையாய்க் குழந்தை பெற்றுக் கொள்ள இருந்தார்கள் - தன் குழந்தை ஒரு குறையும் இல்லாமல் வளரணும்னு பணத்தைச் சேமித்தவன்... ப்ச்... கவிதா உளவியல் பட்டதாரி - அவள் மனதைத் திசை திருப்பித் தேற நம் நிறுவன ஊழியர்களுக்கு ஆலோசனை தர... ஆதரவாய்ப் பேசி வழிநடத்தன்னு அவளுக்கும் இங்கேயே வேலை தந்தேன்... கணிசமான சம்பளம்."

"நல்லதுங்க... அவங்களுக்கும் ஒரு மாற்றம்..."

"அன்று வயிறு வலிக்கிறது - வீட்டிற்குப் போகணும்னு கவிதா பெண் ட்ரைவரிடம் சொல்ல, அவன் என்னிடம் அனுமதி



கேட்டான் - அப்பதான் நானே அவளை முதலில் டாக்டரிடம் கூட்டிட்டுப் போய் ஏதும் பயமில்லைன்னு ஆனதும் வீட்டிற்குப் போய் விட்டேன்..."

"அப்படின்னா ஏன்... டாக்டர் கமாலுக்கு அது பற்றி ஏதும் தெரியலை...?"

"ஏன்னா நான் கவிதாவை அழைச்சிட்டுப் போனது ஒரு லேடி டாக்டரிடம் - டாக்டர் மேரி டிஸொஸா!"

"ஸாரி......" இவளும் பதிலுக்குச் சற்றுச் சங்கடமாய் முறுவலித்தாள்.

"இதுவும் நல்லதுக்குத்தான் நிம்மா... எனக்குத் திருப்தியாய்க் கூட இருக்குது - என்னுடன் காரில் ஒரு பெண் ஏறினதைக் கூடத் தாள முடியாமல் உனக்குப் பொறாமைன்னா... உனக்கும் எம்மேல் நிறையக் காதல் இருக்கணும்...?"

துடித்த உதடுகளை அழுந்தக் கடித்தாள்.

"எனக்கு... எனக்கு எப்பவுமே... முதன் முதலாய் உங்களைப் பார்த்ததிலிருந்து... நிறையக் காதல்தான்..."

"எனக்கும் அது நிறைய இருந்ததைத்தான் சற்று முன் என் காட்டுமிராண்டித்தனமான நடத்தை காட்டியது நிம்மா... ஸாரிடா... எனக்கு ஏன் அத்தனை ஆத்திரம்னு... ம்ப்ச்... தெரியலை. டாக்டர் பெரியப்பா நல்லா ஊதி விட்டிருந்த பொறாமைத் தீ, உன்னைப் பிரசாத்தின் அம்மா தந்த புடவையில் பார்த்ததும் என்னைப் பொசுக்கி மிருகமாக்கிடுச்சு..."

"அப்படி டாக்டர் மாமா என்னதான் சொன்னாங்க...?"

குணாவினுள் அத்தனை வெறியேறும்படி என்ன சொன்னார் என்ற பதைப்புடன் கேட்டாள்.

"அது... அதாவது... நீ என்னை விவாகரத்து செய்துட்டு... பிரசாந்தைக் கல்யாணம் பண்ணுவது பற்றி அவளின் அம்மா பேசியதாய்..."

"ச்சே... இதென்ன பேச்சு...? ஆன்ட்டியா இப்படி உளறியது?" பதறினாள்.

"நம்மிடையே சுமுக... இயல்பான உறவில்லைன்னும் தெரிஞ்சதால்... விவாகரத்து எளிதாய்க் கிடைத்திடும்... அதாவது நான் ஆண்மையற்றவன் என்ற அடிப்படையில்..."

இவளுக்குக் கண்களை இருட்டியது...

இதென்ன தான் நம்பிய இருவரும் தனக்கு எதிராய்ச் சதியாலோசனை நடத்தியது போல...

ஆன்ட்டி சொல்ல, டாக்டர் இதையெல்லாம் கேட்டு... மீண்டும் குணாவிடமே அத்தனையையும் சொல்வதென்றால்...?

"இது ஒருமாதிரியான அதிர்ச்சி வைத்தியம் நிம்மி! என் பிசகிய புத்தி நேராகணும்னால்... இப்படி... என்னை உலுக்கினால்தான் சரின்னு முடிவிற்கு வந்து..."

ஆன்ட்டியிடம் கூடத் தன் அந்தரங்கத்தை வெளிப்படுத்தியிருக்கக் கூடாது... ஏதோ தாளாமல் புலம்பியதால் அல்லவா இப்படி ஒரு பேச்சு...? பேச்சுக்குத் தடுமாறாமல் ஒவ்வொரு வார்த்தையையும் அத்தனை கச்சிதமாய் எடுத்துத் தொடுத்துப் பேசும் குணா இப்படித் தடுமாறுவதைக் கண்டதில் மனம் வெம்பியது...

ஆற்றாமையைக் கொட்டினால் ஆறுதல் கிடைக்கும் என நினைத்து இப்படிக் குரங்காய் முடிந்து விட்டதே....!

"நான்... நானும் பிரசாத்தும் நல்ல நண்பர்கள்ன்றதைத் தவிர..."



"ஏதும் சொல்ல வேண்டாம் நிம்மா... என் பொறாமை அநாவசியம்... நீங்க என்னையும் மயூராவையும் போலப் பழகியிருக்கீங்க... சரிதானே?"

இப்போது இவளுக்குப் பொறுக்கவில்லை... சொல்லி விட்டாள்- "ஆனா நாங்க.... அதாவது நானும் பிரசாத்தும் முத்தம்.... முத்தமிட்டதெல்லாம் இல்லை..."

"நான் அப்படி ஏதும் பழி சொல்லலையே!"- என்றவனின் பார்வையில் ஆச்சரியம் கலந்த குழப்பம்.

"தொட்டுப் பழகறதும் கூடக் கிடையாது..." என்றாள் விடாமல்.

"சரி... "என்றவன் முகத்தில் சிரிப்பு ஏறிப் பின் விரிந்தது- "தவிர இந்தக் கோபத்தால்தான் அன்றிரவு அப்படி இறால் மீனாட்டம் சுருண்டு படுத்துத் தூங்கினது போல நடிச்சியா?"

வீடு வந்துவிட, இருவரும் ஒருவரையொருவர் உரசியபடி படியேறினார்கள் - பெரியம்மாவின் உடல்நிலை பற்றி விசாரித்த பணியாளர்களிடம் பயப்படாமல் இருக்கச் சொல்லியவன், இருவருக்குமாய் ஆப்பிள் ஜூஸுடன் தங்களின் தனி அறைக்குப் போனான்.

கழுத்து டையைத் தளர்த்தி அமர்ந்திருந்தவள் பழரசத்தை வாங்கி ஒரு மிடறு பருகியபின் குறும்பாய்க் கேட்டாள்.

"என்ன... அது நடிப்புதானே?"

இவள் மீண்டுமாய் நடித்தாள் - "எது?"

"மெர்வினோடு விருந்து முடிஞ்சு வந்ததும், மிக இளகியிருந்தவள், மயூராவின் ஃபோன் வந்ததும், மறுபடி இறுகிட்டே... ஜன்னல் வழியே வேவு பார்த்தே... அதானே?"

"நர்சேயாய்க் கண்ணில் பட்டது தோட்டத்துல பகல் போல வெளிச்சம்... தன் புருஷனுக்கு வேறொருத்தி... ராத்திரி... தனியாய் முத்தம் தர்றதைப் பார்த்தபின் ஏதும் நடக்காதது போல... எப்படி... எப்படி...?"

---

## 23

குழந்தை போலக் கோபித்தவனின் இளம் முகத்தைத் தன் கைகளில் ஏந்திக் கொண்டாள்.

பாதி விரிந்த தாமரையை ஏந்தியது போன்ற அழகு...

"அது நன்றி நவிலல் முத்தம். நிம்மா - மயூராவுக்கு அவங்க வீட்டுல மாப்பிள்ளை தேடிட்டு இருக்காங்க... மிட்டல்ங்கற பையனை அவங்க ஏறக்குறைய முடிவே பண்ண, மயூக்கு அவனை அத்தனை பிடிக்கல... 'அவன் கண் சரியில்லை, குணா - என்னிடம் பேசும் போதும் கூடப் பார்வை எங்கேயோ மிதக்குது - விசாரி,' என்றாள்."

"போதை மருந்துப் பழக்கம் இருக்குமோ?"

"சரிப் அதேதான் - விசாரித்துச் சம்சார சாகரத்தில் மயூரா முழ்கிடாமல் காப்பாற்றியதற்கான பரிசுதான் அந்த முத்தம் - மறுநாள் அவங்க அண்ணன்மார் அப்பா எல்லாம் வந்து நூறு நன்றி சொன்னாங்க... அவ்வளவுதான்..."

"என்னதான் இருந்தாலும்... கல்யாணமாகாத ஒரு பொண்ணு..."

"கல்யாணமான பெண் நீ... நீயே சமீபத்துல ஒரு நாடிக்காரனுக்கு முத்தம் தந்ததாய்க் கேள்விப்பட்டேன்... அது எதுல சேர்த்தி?"



அதுவரை இதமாயிருந்த அவன் தொனி சற்று அதட்டலாய் வர விழித்தாள்.

"ச்சே... நானா... யார் இது மாதிரியான பொய்யெல்லாம் சொன்னது?"

"நம்ப டாக்டர்தான் - உனக்கான தகவலைச் சொன்னதுக்குப் பரிசாய் உன்னிடமிருந்து ஒரு முத்தம் கிடைத்ததாய்ப் பீற்றிக்கிட்டாரே?"

இணைந்து சிரித்தார்கள்.

'புரிந்தது' என்பது போலக் கணவனை மேலும் ஒட்டி அமர்ந்தாள்.

"டாக்டரோடு பேசினேன்... அது அனிதாம்மா எனக்குத் தந்த அதிர்ச்சி வைத்தியமாம்..."

"ஓ... அதாவது விவாகரத்து... பிறகு பிரசாந்தை எனக்கு..."

"ஷ்ஷ்... அப்படியெல்லாம் பேசக் கூடாது..." என்றவள் உதட்டில் விரல் வைத்துத் தடுத்தவன் மிருதுவாய் இதழ் வருடினான்.

"ஆக எளிதில் பேசித் தெளிந்திருக்கக் கூடிய விஷயத்தை நாம் விபரீதமாய்க் கற்பனை செய்திருக்கிறோம்..."

"ம்ம்... அதிகம் பேசாத எங்கம்மா கூட இப்ப என்னிடம் அதிகம் பேசறாங்க... இப்ப மருத்துவமனையில் கூடக் கவிதையின் சாயலில் மிக அழகாய் ஒரு விளக்கம் தந்தாங்க..."

"அத்தைக்கு எப்படியிருக்குன்னு ஒரு ஃபோன் போடுங்களேன்."

மறுபேச்சின்றி அவன் சொன்னதைச் செய்தான்.

"நிம்மதியாய்த் தூங்கறாங்களாம் - பல்ஸ் நார்மல்."

"ம்ம்... சொல்லுங்க..."

"அம்மாவுக்கு... அது... அதாவது உன் புடவையை உருவ நான் கையை நீட்டியது பெரிய அதிர்ச்சி அது பிரசாந்தின் தாய் உனக்குத்

தந்த திருமண நம்பிக்கையின் அச்சாரம்னு எனக்குத் தெரிந்ததால் விளைந்த ஆத்திரம் அதுங்கறதை அம்மாவிடம் விவரிச்சேன்... நீ என்னை விட்டு விலகி... ஒரு வேளை அவனைக் கல்யாண..."

இம்முறை அவன் உதடுகளை இவளது மெல்லிய விரல்கள் அழுத்தமாய்த் தடுத்தன! பின்னர் அதே விஷமத்துடன் வருடின.

"பேசி முடிச்சிடுவோமே, நிம்மா..." கொஞ்சலாய்க் கெஞ்சினான்.

"அதிகம் பேசறவங்க செயலில் பூஜ்யம்னு இயா முன்பு சொன்னதுண்டு!" - சீண்டினாள் -

"அளவாயேனும் பேசணும்ங்கறது இப்பதானே புரியுது... இப்படி முன்னமே உட்கார்ந்து பேசியிருந்தால்... இத்தனை மனக்கசப்பு... பிரிவு, வேதனை எல்லாம் இல்லையே..."

மன்னிப்புக் கோருவது போல ஒரு முத்தமிட்டவனின் அணைப்பு இறுக இவள் எடுத்துக் கொடுத்தாள் -

"அந்த ஏதோ அழகான விளக்கம் தந்ததாய்ச் சொன்னீங்க..?"

"ம்ம்.. 'எவ்வளவுதான் மழை பொழிந்தாலும் மலர்கள் மழைத் துளிகளைத் தேனுக்குள் கலக்க விடுவதில்லை... வண்டுகளுக்கே வைக்கின்றன - முட்டாள் மகனே... நீ மட்டும்தான் நிம்மி எனும் மலர்க்கான வண்டு'ன்னு..."

"வண்டு - நீதான் வண்டு!' ச்சே.. அந்தை அசத்திட்டாங்க!"

"உண்மையிலேயே அசந்துட்டேன், நிம்மா - எனக்குப் பழக்கமாப் பார்க்க, பழக பல சந்தர்ப்பங்கள்... அதில் தடுமாறாத ... கல்யாண வீட்டில் சந்தனத்துடன் நின்ற உன்னைப் பார்த்ததும் படியாய் விழுந்துட்டேன்... உனக்கும் அதே போல ஒரு ஈர்ப்பு ... உன் வாழ்வில் கலக்கும் உரிமை என்னைத் தவிர வேறு ... இல்லைன்னு புரிஞ்சது..."



"அந்த நேரம் எப்.. எப்படி இருந்தது?"

"அதான் விஷயம் முழுமையாய்ப் புரிஞ்சதுன்னேனே..."

"அச்சோ.. பாப்பா.. அதில்லைப்பா... என்னை முதன் முதலாய்ப் பார்த்த போது எப்படி..."

"அதான் மறுநாளே உன்னைத் தேடி வந்தேனே..."

"வேண்டாம்னு விட்டுட்டு ஓடியும் போனீங்களே?"

"நீ என்னை விட்டியா..? விட்டிருந்தாலும் மறுபடி தானாமல் உன்னைத் தேடி வந்திருப்பேன்னு தோணுது நிம்மாக் குட்டி.. என்னா எம்மனகல சந்தனமாய் நீ ஒட்டிட்டே... ஒரே காதல் வாசனை... வேறு எதிலும் வசிக்க முடியாதளவு வாச ஆக்ரமிப்பு!"

மனைவியின் கழுத்தில் முகம் புதைத்து ஆழ மூச்செடுத்தான். மனம் விட்ட பேச்சு... உள்ளத்து ஆசையை வார்த்தைப் பூக்களாக்கிப் பூஜிக்கும் நேசம்.

அந்த உன்மத்தத்தில் குழறினாள் -

"அந்த... அந்தப் படத்தைப் பார்த்தேன்..."

"இதென்ன அடுத்த சந்தேகமா? எந்தப் படம்?" - நிமிர்ந்தான்-

மறுபடி இழுத்து அவனை அணைத்தவள் முடியைக் கோதினாள்-

"என் படம்தான்... சந்தனக் கும்பாவுடன் நான்... உங்களைக் கண்ட அந்த முதல் கணம்... அற்புதமான படம் குணா அது... நான் அத்தனை அழகான்னு நானே மலைச்சுட்டேன்..."

"அத்தனை அழகும் உனக்கு வந்தது என்னைப் பார்த்ததும் தான்..

"இருக்கட்டும்... அந்தப் புகைப்படம் எங்கே கிடைச்சது? யார் உங்களுக்குத் தந்தது? அதுவும் அத்தனை பெரிசுபடுத்தி உங்க

அலமாரியை நிரப்பினது போல ஒட்டியிருந்தீங்களா.. திறந்ததும் உள்ளே யாரோ ஒருத்தி நிற்பதாய் ஒரு கணம் திகைச்சுட்டேன்.. அத்தனை தத்ரூபம்..."

அவனது பிடரியில் கோலமிட்டபடியே பேசினாள்.

"யார் தருவா? அந்தக் கல்யாண ஃபோட்டோகிராபரைத் தேடித் தூக்கிப் பிடிச்சேன்! உன் முதல் காதல் பார்வை அதில் அழகாய்ப் பதிவாகியிருந்தது.. ஆனா கூடவே சில பெண்கள்.. அசட்டுச் சிரிப்புடன்.. அவங்களை விலக்கி, உன்னை மட்டும் பெரிசு படுத்தச் சொல்லி வாங்கினேன்.. 'சார்! பெரிய இடத்துப் பெண்.. தெரிஞ்சா என் தலை உருளும்.'னு பயப்பிடியே பயல் என்னிடமிருந்து நிறையப் பணத்தைக் கறந்துட்டான்..!"

"சரி.. இதை மட்டும் நீங்க என்னிடம் முன்னமே காட்டியிருந்தால் எப்படிப் பூரிச்சிருப்பேன்..! அந்தப் பெருமையில் இந்தச் சின்னச் சின்னச் சந்தேகமெல்லாம் அடிபட்டுப் போயிருக்குமே, குணா?" - குறைப்பட்டாள்.

அவளைச் சற்று எட்டி வைத்து ஆசை ததும்பப் பார்த்தான். "காட்டாத காரணத்தைச் சொன்னால் நீ நம்ப மாட்டே, நிம்மா..."

சொன்ன உதடுகளில் தெறித்த குறும்பு அவளை ஈர்க்க, தாளாமல் நெருங்கி முத்தமிட்டாள்.

"ம்ம்.. பிறகு பேசலாம் நிம்மி..." என்றபடி அவளை அள்ளித் தூக்கினான்.

"ஊஹூம்.. சொன்னால்தான்.."

"சொன்னால்தான்.. என்ன?"

"என்னைத் தூக்கலாம்!" - சிரித்தவள் காலை உதறிக் கொண்டு [illegible]னாள்.



"பரவாயில்லை.. சரசப் பேச்சில் ரொம்பத் தேறிட்டே.. ஏறக் குறைய ஒன்னரை வருஷம்... இது மாதிரியான இன்பமெல்லாம் இல்லாமல் போயிடுச்சே, நிம்மா..."

"விஷயத்திற்கு வாங்க... ஏன் உங்க அலமாரியில் ஆளுயரத்திற்கு நிற்கும் என் படத்தை முன்னமே எங்கிட்ட காட்டலை?"

ஆர்வத்தால் அழுந்தவே கேட்டாள்.

"கூச்சம்தான்!"- நிஜமான கூச்சத்துடன் பதில் வர, இவளுள் ஆனந்தமும் ஆச்சரியமுமான சிரிப்பு குமிழிட்டது.

"முப்பத்திரண்டு வயசில் இதென்ன விடலைப் பையன் போல அலைகிறாய்னு - எனக்கே என் செயல் கூச்சமாயிருந்தது... உன்னிடம் காட்டினால் நீ கேலி பண்ணுவேன்னு..."

"நாம ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சுக்கவே இல்லை...." பெருமூச்சுடன் சொன்னவள் தயக்கமாய்த் தொடர்ந்தாள்.

"நாம முக்கிய விஷயத்திற்கு இன்னும் வரவேயில்லை, குணா..."

"தெரியும் - அதையும் தெளிவுபடுத்திடறேன் - கல்யாணமான பிறகும் மரபணுக்கள்.... எங்கப்பாவின் மனநோய் பற்றிய பயமெல்லாம் எனக்கு முழுதாய்ப் போகலை.. அதிலும் சின்னப் பெண்ணான உன்னையும் என் சகதியில் இழுத்து விட்டுட்டேனோன்ற பயம்.. ஆக முதல் சில வருடங்களேனும் நமக்குக் குழந்தை வேண்டாம்னு முடிவெடுத்தேன்.."

"அப்ப.. அப்படீன்னா.."

வாய் பேச முடியாததை எல்லாம் நிர்மலாவின் கண்கள் பேசின போலும்..

"சரி... நிம்மா... உன்னை விபசாரிக்குக் கூசாமல் ஒப்பிட்டதை... அப்ப கூசலியா... தயக்கமில்லையேன்னு குற்றம் சாட்டறே... அப்படித்தானே?"

கண்களைத் தாழ்த்தியவள் பதிலுக்காய்க் காத்திருந்தாள். அந்த நாளின் நினைவில் அவன் முகமும் வெளுத்திருந்தது. உதவும் முகமாய் இவளே எடுத்துத் தந்தாள்.

"டாக்டர் மாமா... சொன்னாங்க... கருத்தடை முறைகளைப் பற்றி விலாவாரியாய்த் தன்னிடம் கேட்ட உங்களுக்கு விவரங்களைத் தந்தாய்... ஆனால் நீங்க அதில் எதையும் கடைப்பிடிச்சதாய்..."

"ரொம்பக் கடுமையாய்க் கடைப்பிடிச்சதால்தான் நீ கோபிச்சுக்கிட்ட நிம்மா..." பரிதாபமாய்ச் சொன்னான்.

"தெளிவாய்ச் சொல்லுங்கப்பா..."

"கருத்தரிக்கக் கூடிய நாட்கள். அந்த ஆபத்தில்லாத நாட்கள் எது எதுன்னு சொன்னார்..."

இவளுள் 'பளிச்' சென்ற புரிதல் வெளிச்சம்! "ஓஹோ... அதான் முதலிரவன்றே அந்தக் கேள்வியா?"

சிறுபையன் போலத் தலையாட்டினான்!

"என்ன ஏதென்று விளக்காமல், எடுத்ததுமே வியாபாரப் பேரம் பேசுவது போல நீங்க என் 'நாட்க'ளைப் பற்றிக் கேட்டதும் மிரண்டுட்டேன்..."

"என்ன எதற்குன்னு உனக்கு விளக்கினால் நீ 'இல்லை, நமக்கு உடனே குழந்தைகள் வேணும்'னு அடம் பிடிக்கக் கூடும் - என்னை முதலிரவிற்குக் கைகுலுக்கி அனுப்பி வைத்த உங்க அப்பாவும் - 'மறுவருஷம் இந்நேரம் என் துணைக்குப் பேரனோ, பேத்தியோ வேணும் மாப்பிள்ளை!'ன்னே வாழ்த்தினார்... தவிர..."

"ம்ம்... சொல்லுங்கப்பா..."



அவன் விரல்களோடு தன்னதைக் கோத்து இறுக்கினாள். "நீ கேட்கும் எதையும் மறுக்கும் திராணியில்லை, நிம்மா... உனக்காக எதையும் தர, செய்யச் சித்தமாயிருந்தாலும்..... கூடவே சிறுவயதிலிருந்து என்னோட வளர்ந்த என் பயம்..... மற்றக் கருத்தடை முறைகளிலும் அதே சோதனை... அதாவது..."

"நான் உடன்படாத சோதனை..."

"ம்ம்.... உண்டென்பதால்தான் நான் 'ஆபத்தான' சில நாட்களைத் தவிர்க்கும் முறையைத் தேர்ந்தெடுத்தேன் - ரோஜாக்களால் நீ நம் படுக்கை அறையை அலங்கரித்த அன்று..."

"ஏற்ற நாளில்லை... அதாவது கருத்தரிக்க ஏற்ற நாள்?"

"ஏற்கெனவே உன்னை விட்டுட்டு ஐந்து நாள் சிங்கப்பூர் போகணுமேன்னும் தாபத்தில் இருந்த எனக்கு... அந்த ரம்யமான மோகமான சூழலை... உன்னை விலக்குவது மகா சிரமமாய்ப் போனது. அந்தச் சிரமம் தாளாமல்தான் வார்த்தைகளால் உன்னைக் குதறினேன். ஸாரிடா..."

அவள் உள்ளங்கையை மலர் போலப் பிரித்து அதில் மன்னிப்புக் கோருவதாய் முத்தமிட்டான்.

"நான் அப்படிச் சொல்லாமல் கிளம்பினதும் தப்புதான்..."

"உன் காயம் எனக்குப் புரிஞ்சது... அதான்..."

"பிறகாவது அப்பா வீட்டிற்கு நீங்க வந்திருக்கலாமே? ஃபோனில் ரெண்டு வார்த்தை? இத்தனை மாசங்களின் பிரிவு... அதிலும் நம்ப மனசில் இத்தனை அன்பைத் தேக்கியபடி..."

பெருமூச்செறிந்தாள்

"நான் உடனே போனது உளவியல் நிபுணரிடம்! இனியும் இந்த நாடகத்தைத் தொடர்வது ஆபத்துன்னு புரிஞ்சு, ஆலோசனை, சிகிச்சை எடுத்துக்க முனைந்தேன் - அவரும் பிற வைத்தியர்களும்

என் கற்பனைப் பயம் அதீதமானது... என் அபத்தம்னு கூடச் சொன்ன பிறகு ஓரளவு சமாதானப்பட்டேன்..."

"அப்படின்னா நான் இங்கே வந்த பிறகு ஏன் என்னை ஓரங்கட்டி ஒதுக்கி வச்சீங்க? இந்த... இந்த அணைப்புக்காக எத்தனை ஏங்கினேன் தெரியுமா? அப்பாவும் போன பிறகு எனக்குன்னு இருக்கறது நீங்க மட்டும்தானே...!"

"ஆமடா..." வகிட்டில் முத்தமிட்டவன் தொடர்ந்தான்- "மாமா, அதாவது உங்கப்பா இறந்து ஒரு மாசங்கூடப் பூர்த்தியாகாத நிலையில் உன்னைத் தொடறது தப்போன்னு பட்டது. ஆறுதலான அணைப்பு வேறு மோக முரட்டுத்தனத்திற்குப் போக, நீ என்னை மறுபடி 'காட்டுமிராண்டி'ன்னு அருவருத்து ஒதுக்கிடுவியோன்ற தயக்கம்... அதான் விலகியிருந்தேன்..."

"அப்ப நாம் மெர்வினோடு விருந்துக்குப் போய்த் திரும்பிய இரவு...?"

குற்றம் சுமத்த என்றில்லாமல் எல்லாச் சந்தேகக் கறைகளையும் துடைத்து விட வேணுமென்ற ஆர்வப் பரபரப்பில் கேட்டாள்.

"அன்று... ம்ம்... உன்னிலே ஒரு மாற்றம் தெரிஞ்சது... உன்னை நெருங்கி நான் அமர்ந்தபோது... உன் உடம்பு நான் எதிர்பார்த்தது போலக் கோபத்தில் விரைக்கலை... கன்னம் குழைய என்னையே ஒட்டியிருந்தே... தவிர மெர்வினும் நம் காதலை உணர்ந்ததாய்ச் சொன்னது புது உத்வேகம் தர... அந்த... எதிர்பார்த்திலதான்... ஆனா... அராவசியமாய் ஒரு நன்றி முத்தத்தைத் தந்து மயூரா அதையும் கெடுத்திட்டா..."

"நல்லவேளைப்பா... இப்பவாவது பேசினோம்... ம்ம் - கல்யாணமான புதுசில் ஒரு விழாவில் என்னை மறந்து விட்டுட்டுப் போனீங்க"



"மறப்பேனா... நடிப்புதான் - மறந்தேன்ற கோபத்துல ஒருவாரம் ஒதுங்கியிருப்பியே... தவறெல்லாம் என்னுதுதான் நிம்மி - உன்னை அராவசியமாய் அலைக்கழித்து... நாமும் நிம்மதிப் படாமல்..."

"தயாநிதி காசோடு தலைமறைவானதும் கூட ஒரு விதத்தில் நல்லதுக்குத்தான்... இல்லைன்னா நான் கம்பெனியை விட்டு... சென்னையை விட்டுக் கிளம்பியிருக்க மாட்டேன்... நம்பினவர் செய்த நம்பிக்கைத் துரோகம் தாளாமல்... யாரை நம்பறதுன்னு தெரியாமல்தான் உங்க பின்னே... அத்தையை நம்பிப் புறப்பட்டேன்..."

"தயாநிதி இருக்குமிடம் தெரிஞ்சாச்சுன்னு தகவல் வந்தது... இனி மனுஷனை மடக்கிப் பெரும்பாலான பணத்தை மீட்டுடலாம்..."

"அதெப்படி?"

"செலவழிச்சது போக மற்றப் பணத்தை நிலம், வீடுன்னு சொத்தாய் மாற்றியிருக்கார் மனுஷர்... சூது, குடின்னு சின்ன கெட்ட பழக்கங்கள் ஏதுமில்லாததால்... அதிகம் செலவாகலை..." - கண் சிமிட்டினான்.

"நீங்க கிடைச்சதே போதும்னு மனசு நிறைஞ்சிடுச்சு..."

"பரவாயில்லை. அந்தச் சொத்துக்களும் உன் பெயருக்கு மாற்றப்படும். பெயருக்கு என்னிடம் பத்து சதவீதம் மட்டும்... மற்றப்படி உன் நிறுவனம் உனக்கே உனக்கு... சரிதானா?"

"நான் கேட்டேனா...? இனி உங்களைத் தவிர வேறெதுவுமே பொருட்டில்லை... குணா..."

"பிரச்னைகள் அலை அலையாய் வந்தது போலவே, மறைந்தும் போயிடுச்சில்ல, நிம்மா?"

"ம்ம்..." என்றவளின் விழிகள் அவனை அள்ளி விழுங்கின...

"என்னடா முறைக்கிறே?"

"உங்களைப் புதுசாய்ப் பார்க்கிறது போலிருக்கு."

"பல மாதங்களுக்கு முன்பே உனக்குத் தாலி கட்டினதால்.. இப்படி மறந்து போயிடலாமா?"

"ச்சே.. பகல் பொழுதுன்னாலும் பனி மூட மசமசப்பாய் மறைஞ்சிருக்கும்.. இப்பத்தானே பனி விலகின பகலைப் பார்க்கிறேன்.."

"பார்ப்பதோட நிறுத்திட வேண்டாமே.."

இரு ஜோடிக் கைகளும் சளைக்காமல் மற்றவரை ஆரத் தழுவிக் கொண்டன.

❖❖❖